www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka

JUDE

பக்கம் 20

11/00

දිනමුරසු වාරමලර්

செப்.07-13,1997

# வாரமலர்
# தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 221

# போரும் பொதியும்



## வெளிவருகிறது களக் காட்சிகள் உண்மைகள்





## கண்காணிப்பில் காதல் இளவரசன்

சூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

படிப்பகம்

www.padippakam.com

# முரசம்

## மறந்ததும் துறந்ததும்

அன்புள்ள உங்களுக்கு
வணக்கம்.

டிசம்பர் மாதத்தில்தான்
அரசியல் தீர்வுத் திட்டம்
முன்வைக்கப்படும் என்று
ஜனாதிபதி அவர்கள் கூறியுள்ளார்.

'பானையில் இருந்தால்தான்
அகப்பையில் வரும்!'
எவை-காலவரையறைகள்
மாறிக் கொண்டிருக்கும்
என்பது எதிர்பார்க்கப்பட்டதுதான்!
முன்பே நாம் கூறியதும்தான்!

எதிர்பாராத உரையொன்றையும்
அநுராதபுரத்தில் ஆற்றியிருக்கிறார்
மேதகு ஜனாதிபதி.

"சிறிலங்கா சிங்கள பௌத்த நாடு"
என்று ஜனாதிபதி தெரிவித்திருக்கிறார்.

அரசியல் தீர்வுத் திட்டம்
எப்போது முன்வைக்கப்படும்
என்பது எவருக்கும்
தெரியாமல் இருக்கலாம்!

எப்படியான அரசியல் தீர்வை
முன்வைக்க நினைக்கிறார்கள்
என்பது தெரியாமல் இல்லை!
ஜனாதிபதியின் உரையும்
அதனை கோடிட்டுக் காட்டியுள்ளது!

"இனப்பிரச்சனைக்குத்
துணிச்சலான தீர்வைக் காண
முன்வந்த தலைவி" என்று
தமிழ் பேசும் அரசியல்வாதிகளால்
பாராட்டப்பட்டவர் ஜனாதிபதி.

பேரினவாதத்திற்கு எதிராக
ஜனாதிபதி சந்திரிக்காவும்
எதிர்நீச்சல்போட
முடியாதவராகியுள்ளார்
என்பதையே
அநுராதபுர உரை எடுத்துக்
காட்டுகிறது!

இலங்கைத் தீவு
பல்லின, பலமத நாடாகும்.
இலங்கைத் தீவு
சிங்கள, தமிழ் அரசர்களால்
மாறி மாறி ஆளப்பட்டிருக்கிறது.

சிங்கள மக்களும், தமிழ் மக்களும்
அந்நியர் வருகைக்கு முன்னர்
தமக்கென தனி இராச்சியங்களை
கொண்டிருந்தனர்.
தனிக்கொடியோடும், முடியோடும்
ஆட்சி நடத்திக் கொண்டிருந்தனர்.

அநுராதபுர உரையில்
பண்டைய சிங்கள மன்னர்களை
ஜனாதிபதி நினைவூட்டியிருக்கிறார்.
பழம் பெருமையை எடுத்துக்
காட்டியுள்ளார்.

ஜனாதிபதிமீது
எவ்வித குறையும் இல்லை.
வேதனைப்பட வேண்டியது
நாம் மட்டும்தான்.
தமிழ் பேசும் மக்களின்
பண்டைய வரலாறுகளை
எடுத்துப் பேச திராணியுள்ள
தலைமைகள் இல்லாமல் போயினவே!

பகிரங்க அரசியல் களத்தில்
தமிழ் பேசும் கட்சிகள் இருக்கின்றன.
ஆனால் தமிழ் பேசும் மக்களின் தரப்பாக
அவை இல்லை!

பண்டைய வரலாற்றை மட்டுமல்ல;
இனப்பிரச்சனையும்
இன்றைய யுத்தமும்
உருவான வரலாற்றைக்கூட
தமிழ் பேசும் கட்சிகள் மறந்துவிட்டன!

'சிங்கள பௌத்த நாடு'
என்று ஜனாதிபதி கூறியதை
வெகு அலட்சியமாக எடுத்துக்கொண்டு
மௌனமாக இருக்குமளவுக்கு
தமிழ் பேசும் கட்சிகள்
கையறு நிலையில் உள்ளன!

தாங்கள் யார் தரப்பு
என்பதையே மறந்துவிடுமளவுக்கும்
தம் மக்கள் நலனை
துறந்துவிடுமளவுக்கும்
சமாதி நிலையடைந்துவிட்டன
தமிழ் பேசும் கட்சிகள்.
அவற்றுக்கு முக்தி கிட்டட்டும்!

தமிழ் பேசும் கட்சிகள் மட்டுமல்ல,
தமிழ் பேசும் விமர்சகர்கள்.
தங்களை புத்தி ஜீவிகள் என்று
கூறிக்கொள்வோர் போன்றோரும்
மௌனமாகி விட்டனர்.

முன்னாள் மூத்த தலைவர்
ஒருவர் புத்தி கூறியிருந்தார்.
"அரசியல் தீர்வு யோசனையை
தயவு செய்து குழப்பாதீர்கள்!"
என தமிழ் மக்களுக்குப் போதித்தார்.

அன்னார் போதிக்க வேண்டியதும்
பொருத்தமான கூற்றுக்களை
எடுத்துரைக்க வேண்டியதும்
தமிழ் பேசும் மக்களுக்கல்ல!

அன்னார் இந்நாளில்
எங்கிருக்கிறார், என்ன செய்கிறார்;
எது சரி, எது தவறு
என்று ஆளும் தரப்புக்கும்
அவர் எடுத்துரைக்க மாட்டாரோ?

நமக்குத்தேவை போதிப்பவர்களல்ல;
நம் மக்கள் நலன்களுக்காக
போராடவும், வாதாடவும்
திராணியுள்ளவர்களே தேவை!

■ ■

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்

## ஆன்மீகம்

### துயரப்படுதல்

வாழ்க்கையில் முன்னேற எந்த வழியையும் பின்பற்றலாமென்று, தீய வழிகளில் உழைத்து, பேரோடு, புகழோடு, வாழ்க்கை அனுபவிக்கிறதற்காகவே இருக்கிறது என்று, எல்லா வழியிலும் சிற்றின்பத்தையும் சுக போகத்தையும் அனுபவித்து வாழ்கின்ற மனிதர்கள் பாக்கியமானவர்கள் என்று உலகம் கூறுகிறது.

ஆனால் தங்களுடைய பாவத்தையும் தீய சுபாவத்தையும் உணர்ந்து, ஒப்புக்கொண்டு, அதற்காக மனம் நொந்தவர்களாக, துயரப்பட்டவர்களாக, மனம் திரும்பி கடவுளுக்கு உகந்த வழியிலே வாழ வேண்டும் என்பதற்காக கஷ்டப்பட்டு, வியர்வை சிந்தி, களவு, பொய்யற்று உழைத்து வாழ்கின்ற மக்களையும் காணுகின்றோம். கடவுளுக்காக, தீமையை வெறுத்து, நன்மையைப் பற்றிக் கொள்ளும் இவ்வகையான மக்களையே, திருமறையானது பாக்கியவான்கள் என்று கூறுகின்றது.

"துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்; ஏனெனில் அவர்கள் ஆறுதல் அடைவார்கள்." (மத் 5:4)

கடவுளுக்குப் பிரியமற்ற காரியங்களில் நடந்து அதன் மூலம் கிடைக்கும் புகழுக்கும், மதிப்புக்கும் நம்மை மாய்த்துக் கொள்ளாதபடி, கடவுளுக்கு பிரியமான வாழ்க்கை வாழ்கின்றபோது வரும் துன்பங்களிலும் துயரங்களிலும் பங்குகொண்டு, ஆண்டவர் இயேசுவின் ஆறுதலையும் அரவணைப்பையும் பெற்று வாழ்வோமாக.

எஸ். யேசுநாதன், செங்கலடி.



### 'சூறா யாஸீனை' ஓதுவதால் ஏற்படும் சிறப்புக்கள்

சூறா யாஸீனுடைய சிறப்புக்களைப் பற்றி பல ஹதீஸ்களில் கூறப்பட்டுள்ளன. ஓர் அறிவிப்பில், "ஒவ்வொரு பொருளுக்கும் ஓர் இதயம் உண்டு. குர் ஆனுடைய இதயம் 'சூறா யாஸீனாகும்.' எவர் ஒருதடவை இதனை ஓதுகிறாரோ, அல்லாஹ் த ஆலா அவருக்கு பத்து குர் ஆன் ஓதிய நன்மைகளை வழங்கிவிடுவான்," என்று கூறப்பட்டுள்ளது.

மற்றோர் அறிவிப்பில், "பாவங்கள் மன்னிக்கப்பட வேண்டுமென்ற எண்ணத்தில் ஒருவர் 'யாஸீனை' ஓதினால் அவருடைய பாவங்கள் மன்னிக்கப்படும். பசியுடைய நேரத்தில் ஒருவர் 'யாஸீனை' ஓதினால் அவருடைய பசி தீர்க்கப்படும்.

மிருகங்கள் காணாமலாகிவிட்ட மனிதர் ஓதினால் அவற்றை அடைந்து கொள்வார். உயிர் பிரியும் தருணத்தில் இருக்கக்கூடிய மனிதருக்கு அருகில் இருந்து ஓதினால் அவரின் உயிர் இலேசாகக் கைப்பற்றப்படும். பிரசவ வேதனையில் சிரமப்பட்டுக் கொண்டிருக்கும் ஒரு பெண்ணுக்கருகில் இதனை ஓதினால் அவருக்கு சுகப்பிரசவம் ஏற்படும்."

மற்றும், எவரொருவர் அல்லாஹ்வின் திருப்தியை மட்டும் நாடி 'சூறா யாஸீனை' ஓதுகின்றாரோ அவருடைய முந்திய பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன. எனவே, அதனை உங்களில் இறந்து விட்டவர்களுக்காக ஓதுங்கள், என்றும் ஒரு ஹதீஸில் வந்துள்ளது.

தொகுப்பு: செல்வி பௌக்கியா மன்சூர், மருதமுனை-03.

## கவிதைப் போட்டி இல. 218



### பரிசுக்குரிய கவிதை

#### உடலும் மனமும்

அழும் சுவர் அருகமர்ந்து
அழுவதால் யாது பயன்?
மன உறுதி இல்லாத
உடல் உறுதி விலை போகா!

ப. தெய்வேந்திரன்- பெர்னாண்டோ
மாவத்தை, கொழும்பு-15.

இடம் உள்ளவரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்:

#### யார் தவறு?

போரோயாக் கொடுமையினால்
பொன்னிழந்து பொருளிழந்து
ஊரிழந்து உறவிழந்து
உயிர் பிழைக்க ஓடிவந்து
வேரிழந்த மரம் போல
வீணான இவ் வாழ்வுக்கு
தார்மீகப் பொறுப்பெல்லாம்
தலைவர்களின் தவறுகளோ?

சி.மு. சுந்தரேசன்- அரசினர்
வைத்தியசாலை, மஸ்கெலியா.

#### மீதி ஒன்று.....

இருண்ட தேசத்தில்
எத்தனை துன்பங்கள்!
இழந்த உயிர்களின்,
துயரத்தில் சிலையானேன்!
இழப்பதற்கு என்னில்
உயிர் ஒன்று தானிங்கு...!

ஏ. முகமட் முசாப் ரஸீன்-
நிந்தவூர்-03.

#### கதை சொல்லும் சிலை!

கல்லாகிச் சமைந்திடினும்,
என் மண்ணில் சிலையாவேன்!
பொல்லாத போர்க் கொடுமை
எல்லார்க்கும் சொல்லி வைப்பேன்!

ராஜேஸ்வரி கிருஷ்ணன்- வவுனியா.

#### எவ்விடம்....?

பிறந்தது ஓரிடம்,
இருந்தது வேறிடம்,
உறங்கியது தெருவிடம்,
இறப்பது எவ்விடம்....?

என்.பி. சாமிலா, அநுராதபுரம்.

#### வானகத்தில்?

கற்கால மனிதருக்கு கல்லிலே சிலை வடித்தான்;
போர்க்கால மனிதருக்கு புதைகுழியில் சிதை வைத்தான்;
வருங்கால மனிதருக்கு வானகத்தில் சித்திரமோ.....?

ப. ஈஸ்வரி- பள்ளிக்குடியிருப்பு, தோப்பூர்.

#### மனித மனம்...

கற்சிலைபோல்
கல்லா(கி)யிருந்து விட்டால் -
கவலையே இல்லையென்ற
கல்லுருவில்
மனிதமனம்!

ஏ. லோகநாயகி- மட்டக்களப்பு.

#### ஏங்கிடும் அகதி வாழ்வே!

வன்செயல் கொடுந்துயரால்
வாழ்வினை இழந்த தாலே
என் செய்வோம் இனியும் நாமே
ஏங்கிடும் அகதிவாழ்வே!

இரத்தினம் தவராசா-தேத்தாத்தீவு.

#### இன்றுவரை...?

1948-02-04
அன்று குந்தியவன்
அரை நூற்றாண்டாகியும்
இன்னும் எழவில்லையே!

அ. சந்தியாகோ- அசோகா
வித்தியாலயம், கண்டி.

#### அறிக்கைகள்!

மென்பட்டு மேனியை
சன்னங்கள் துளைக்கு முன்-எம்
புண்பட்ட இதயத்தை
நம்மவர் அறிக்கைகள்
குடைந்து விடுகிறதே!

சிறினிவாசன் சிவா- வட்டவளை.

#### ஏக்கமோ?

மாவுக்கும் விலை கூடி
மலைபோல உயர்வாச்சே!
நாளைக்கு உணவிற்கு
நானெங்கு போயுழைப்பேன்?

தர்ஷிக்கா கனகசிங்கம்- கல்லடி
வேலூர், மட்டக்களப்பு.

## கவிதைப் போட்டி இல.221



கவனியுங்கள்! எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள்.
அனுப்பப்பட வேண்டிய கடைசித் திகதி- 13.09.1997

முகவரி: கவிதைப் போட்டி இல.221
தினமுரசு வாரமலர், த.பெ. இல—1772, கொழும்பு.

---

இனிய முரசே!

வாரம்தோறும் தித்திக்கும் செய்திகளுடன் திகட்டாமல் திக்கெட்டும் பவனிவரும் 'முரசே!' உன்னில் அடங்கியுள்ள பல்சுவை அம்சங்கள் யாவும் படிக்கப் படிக்க சுவையாக அமைந்துள்ளன. அதிலும் அற்புதன் எழுதும் அரசியல் தொடர் தமிழ் உள்ளங்களில் நிலைத்து நிற்கும் ஓர் இனிய படைப்பாகும். ஈழப்போராட்டத்தினை நினைவில் நிறுத்தி தெளிவாக எடுத்து இயம்பும் அற்புதனுக்கு எனது அன்பு வாழ்த்துக்கள்.

ஏ. செபஸ்தியன், உக்குவளை.

■ ○

அபிமான முரசிற்கு,

ஒரு பணிவான வேண்டுகோள்! உன் எண்ணற்ற வாசகர்களுள் நானும் ஒருத்தி. பூலான் தேவியின் கதையை உன் மூலம் திரைப்படம் பார்ப்பது போன்று அருமையாக அறிந்துவரும் வேளை என்னை அறியாமலேயே அந்த முகம் தெரியா விக்கிரம் மல்லாமீது அளவு கடந்த மரியாதையும் அன்பும் ஏற்பட்டுவிட்டது. அந்த மல்லாவைக் கொலை செய்துவிட்டார்கள், என்று அறிந்ததும் ஏதோ ஒரு வேதனை இதயத்தைப் பிழிகிறது. பாவம் பூலானின் நிலை எப்படி இருந்திருக்கும்?! தயவு செய்து என் இனிய முரசே! மல்லா கொலை செய்யப்பட்டு ஆண்டுகள் பல கழிந்தாலும் நாம் இப்போதுதான் இதை அறிகிறோமாகையால் உன் ஊடாக பூலான்தேவிக்கு எனது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்து விடு.

ஜானகி தவராஜா, கொழும்பு-15.

■ ○

இனிய முரசே....!

உனது அரசியல் பற்றிய ஆராய்வுகள் பிரமாதம். மற்றும் உடைந்த இரவு, பூலான்தேவி, காதிலை பூ கந்தசாமி அருமையிலும் அருமை.

ச. சதானந்தன், மயிலிட்டி, யாழ்ப்பாணம்.

■ ○

முரசே!

'அமெரிக்காவின் அறிக்கைகளும் ஆயுதங்களும்' என்ற தலைப்பில் பிள்ளையையும் கிள்ளி தொட்டிலையும் ஆட்டிவிடும் அமெரிக்காவுக்கு கொடுத்த சாட்டையடி பலே!

எஸ். கிருஷ்ணன், கோளாவில்,அக்கரைப்பற்று.



அன்பின் முரசே!

நீ சுமந்து வரும் ஆக்கங்கள் அனைத்தும் இனிமை. அதிலும், 'அரசியல் தொடர்' புதைந்து போன உண்மைகளை வெளியில் கொண்டுவரும் வரலாற்றுத் தொடர்- அதனைத் தந்து வரும் அற்புதனுக்கு பாராட்டுக்கள்...

ஆனாலும் எனக்கொரு கவலை! இந்தத் தொடரை ஆரம்பத்தில் இருந்து படிக்கும் சந்தர்ப்பத்தை இழந்து விட்டேன். அந்தச் சந்தர்ப்பத்தை ஒரு நூல் வடிவில் படைத்து உதவுமாறு எனது அன்பின் முரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

மா. சுரேஸ், கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.

■ ○

ரசிகன் பூலான் தேவியின் கதையைக் கூறும் பாணியே தனி ரகம். விக்கிரம் மல்லா இறந்த செய்தி கேட்டு உண்மையிலேயே என் கண்கள் கலங்கிவிட்டன. பூலான் கட்டாயம் பழி வாங்கத்தான் வேண்டும். ஸ்ரீராம், லாலாராம், குசுமா மூவரையும் பந்தாட முன் கூட்டியே பூலானுக்கு நல் ஆசி கூறுகிறேன்.

எஸ். அன்புரோஸ் ரவி, வெலிஓயா
எஸ்டேட், ஹட்டன்.

■ ○

என் இதயத்தை கொள்ளை கொண்ட முரசே!

உன்னை வாரம் ஒருமுறை காணா விட்டால் என் கண்கள் உறங்க மறுக்கின்றன. மொத்தத்தில் நீ சுமந்து வரும் அனைத்து அம்சங்களும் தேன் பாகாய் இனிக்கின்றன. அதிலும் தொடர் கதைகள், காதிலை பூ கந்தசாமி, அதிரடி ஜயாத்துரை எல்லாம் வெகு பிரமாதமே!

வே. நிர்மலாதேவி, குலைவந்.

## வாசக(ர்)சாலை

### அன்றும்–இன்றும்

'உனக்கும் பெப்பே, உங்கப்பனுக்கும் பெப்பே' என்பது போலாச்சு தமிழ்க்கட்சிகளுக்கு ஏற்பட்டுவரும் அனுபவங்கள். 'கையது கொண்டு மெய்யது பொத்தி' நிற்கும் நிலையாச்சு. யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல வடக்கு-கிழக்கு முழுவதுமே தமிழ்க்கட்சிகள் அரசு கீறும் கோட்டுக்குள் நின்றேதான் அரசியல் செய்துகொண்டிருக்கின்றன. தந்தை செல்வா, ஜீ.ஜீ., அமிர்தலிங்கம் காலத்தில் சரியோ பிழையோ ஒரு கம்பீரமாயினும் அவர்கள் அரசியல் பாணியில் காணப்பட்டது. இன்று....?

க. கிருஷ்ணமூர்த்தி, வவுனியா.

### தவறே இல்லையா?

'இந்திய சுதந்திரம் வயது 50' ராஜதந்திரியின் அலசல் அருமை. வெறும் புகழ்ச்சியாகவும் இல்லாமல், தூற்றலாகவும் இல்லாமல் 'முரசின்' தனித்துவத்துக்கேற்ற அலசல். இலங்கைத் தமிழர் பிரச்சனையில் இந்தியத் தரப்பும் தான் பிடித்த முயலுக்கு மூன்றுகால் என்று நின்றதையும், மண்ணின் மைந்தர்களது கருத்தைக் கேட்க முயலாமையும் தவறென்பதை இராஜதந்திரி சுட்டிக்காட்டியிருந்தார். தமிழர் தரப்பும் இந்தியா தொடர்பான தனது அணுகுமுறைத் தவறுகளை திருத்திக்கொள்ள வேண்டும் எனவும் கோடிட்டுக் காட்டியிருந்தார். இந்தியா ஒரு தவறும் செய்யவில்லை; எல்லாத் தவறும் என்மீதுதான் என்பதுபோல இங்குள்ள அரசியல்வாதிகள் சிலர்கூட கூறிவருகிறார்கள். இவர்கள் இந்தியாவை நண்பனாக நோக்காமல் எஜமானாக நோக்குகின்றனர். எஜமான் சொன்னால் மறுபேச்சு எதற்கு? என்பதே இவர்கள் நிலை. இவ்வாறான நிலைதான் தாம் சொல்வதை கேட்டேயாகவேண்டும், கேட்பார்கள் என்ற நம்பிக்கை ஏற்படவும் காரணமாக அமைந்திருக்கலாம்.

த. புவனலோஜன், மட்டக்களப்பு.

### கற்பனையல்லவே

காதிலை பூ கந்தசாமியார் தந்த வினாக்கொத்து பிரமாதம். கற்பனை என்று நம் காதில் பூவைக்க வேண்டாம். கந்தசாமியார் சொல்வதெல்லாம் நடந்துவரும் உண்மைகள்தான். சிலர் கற்பனையை உண்மை என சொல்வார்கள். காதிலை பூ கந்தசாமியார் உண்மைகளை கற்பனை என்று தருகிறார்.

திருமதி பா. நிமலேஸ்வரி, கொழும்பு-09.

### செய் நன்றி கொன்றார்

முரசே! டாக்டர் ஞானசேகரன் தொடர்பாக அரசியல் தொடரில் அற்புதன் எழுதியிருந்தார். அத்தனையும் உண்மை. ஞானசேகரனை விடுதலை செய்யுமாறு கோரி ஊர்வலம் சென்றவர்களில் நானும் ஒருவன். ஞானா இன்று இருந்திருந்தால் திருமலை மண்ணுக்கு நல்ல தலைவர் ஒருவர் கிடைத்திருப்பார். இன்று தலைமை இல்லா வறுமையில் இருக்கிறது திருமலை. ஞானசேகரனை கொன்றவர்கள் ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தினர் என்பது முன்பே தெரிந்ததுதான். ஞானா ஈ.பி.ஆர்.எல்.எஃப். ஆதரவாளராக இருந்து உதவிகள் செய்தார் என்பதை தொடர்மூலம் அறிந்தேன். செய் நன்றி கொன்றனரே!

தி. மயிலைநாதன், திருக்கோணமலை.


படிப்பகம்

www.padippakam.com

# "வன்னி மண்ணில் திருப்பங்கள் தோன்றும்!"

## புலிகள் இயக்க பிரமுகர் பாலா தெரிவிப்பு!

**வ**ன்னியில் நடைபெறும் சமர் தொடர்பாக புலிகள் இயக்கப் பிரமுகரும், ஈரோஸ் இயக்க முன்னாள் தலைவருமான வே.பாலகுமார் கருத்து வெளியிட்டுள்ளார்.

அவர் தெரிவித்துள்ளதாவது: "விடுதலைப் போராட்ட வரலாற்றில் தீர்க்கமான சமர் ஒன்றைச் சந்திக்கும் பெரும் பொருதுகளமாக வன்னிமண் மாறிவிட்டது. விரைவில் பெரும் திருப்புமுனையை ஏற்படுத்திய மண்ணாக விதந்து பாராட்டப்படப்போகின்றது.

நிலப்பரப்புக்களை கைப்பற்றுவதன் மூலம் தமிழீழ மக்களின் மனப்பரப்பில் இருந்து புலிகளை அகற்றிவிடலாம் என சிறிலங்கா அரசு நினைக்கிறது. இது அவர்களது அறியாமை ஆகும்.

சிறப்பு கெரில்லா படையான புலிகள் திடீரென்று தோற்றம்மாறி கனரக ஆயுதங்களை கனகச்சிதமாக பயன்படுத்தும் மரபு வழிப் படையணியாக மாறிவிடும் இரட்டைப் பரிமாணம் கொண்டவர்கள்.

சின்னம்சிறு சிலந்தியின் வலைப் பின்னல்போல வன்னியிலே அவர்கள் பின்னுவது காப்பு வலை பின்னலாகும்." இவ்வாறு பாலகுமார் தெரிவித்துள்ளார்.

30.08.97 அன்று கிளிநொச்சியில் புலிகள் இயக்கத்தினருக்கும் படையினருக்கும் இடையே பாரிய மோதல் ஒன்று இடம்பெற்றது. ஒன்பது புலிகள் இந்த மோதலில் பலியானார்கள்.

கிளிநொச்சியில் புலிகளின் தாக்குதல் நடைபெறக்கூடும் என்று படையினர் உஷார் நிலையில் இருந்துவருகின்றனர்.

இந்நிலையில் புலிகளின் தாக்குதல் அணியைக் கண்டதும் படையினர் விரைந்து தாக்குதல் நடத்தியதால் புலிகளின் அணிகள் பின்வாங்கிச் சென்றன என்று தெரிவிக்கப்படுகிறது. படையினரிடம் இருந்து சில ஆயுதங்களை கைப்பற்றியதாக புலிகள் தெரிவித்துள்ளனர். எனினும் இம் மோதலில் புலிகள் தரப்பினருக்கே இழப்பு அதிகமாகும்.

கிளிநொச்சி பகுதியில் புலிகளின் வேவுபார்க்கும் அணிகள் நடமாடுவதாகவும் படைத்தரப்பு தெரிவித்துள்ளது.

# டயானாமீது ஈரான் தாக்குதல்!

## விலை உயர்ந்த புகைப்படம்

**வி**பத்துக்குள்ளான மேஸிடிபென்ஸ் 600 காரினுள் இளவரசி டயானா சிக்கித் தவிக்கும்போது அவ்வண்டியைத் துரத்திக் கொண்டு மோட்டர் சைக்கிளில் விரைந்த ஃபிரெஞ்ச் பத்திரிகைப் படப்பிடிப்பாளன் ஒருவன் படம் பிடித்திருக்கிறான். ஏற்கனவே டயானாவின் நடவடிக்கைகளைப் படம் பிடித்து வெளியிட்டுவரும் பத்திரிகை ஒன்றுக்கு இப்படத்தை விற்பதற்கு 200,000 ஸ்டேர்லிங் பவுண் விலை பேசி இருக்கிறான். இலங்கை மதிப்பில் 1 கோடியே 90 இலட்சம் ரூபாய்கள். ஆனால் அப்பத்திரிகையாளர்கள் அப்படத்தினை பெற்று தங்கள் பத்திரிகையில் வெளியிட மறுத்து விட்டனர்.

லண்டன் பத்திரிகை இப்படத்தைக் கொள்முதல் செய்ய மறுத்ததும் அமெரிக்க தினசரியான 'நாஷனல் என்குவைரரின்' ஆசிரியர் ஸ்ரீவ் கொஸ் என்பவரை அணுகி 10இலட்சம் டொலர் (5 கோடியே 90 இலட்சம் ரூபாய்கள்) தருமாறு கோரியிருக்கிறார். இவரும் இக்கோரிக்கையை நிராகரித்திருக்கிறார்.

இளவரசி டயானாவின் அகால மரணம் குறித்து உலகமே அனுதாபச் செய்திகளை வெளியிடுகிறது. பத்திரிகைகள், வானொலி, தொலைக்காட்சிகள் பலதரப்பட்ட செய்திகளையும் வெளியிடுகின்றன. இதேவேளை ஈரான் நாட்டின் அரச தொலைக்காட்சி டயானாமீதும் இளவரசர் சாள்ஸ்மீதும் வசைபாடியிருக்கிறது. "பிரிட்டிஷ் அரச குடும்பத்தில் கறை படிய வைத்த ஊழல் பேர்வழி டயானா" என்றும் "வேல்ஸ் இளவரசர் சாள்ஸ் அக்குடும்பத்தின் மதிப்பைக் கெடுப்பதற்கு பிறப்பெடுத்தவர்" என்றும் அத் தொலைக்காட்சி விபரித்துள்ளது.

# மரண தண்டனை!

**யா**ழ்ப்பாணத்தில் பெண் ஒருவருக்கு புலிகள் இயக்கத்தினர் மரண தண்டனை விதித்துள்ளனர். யாழ்ப்பாணம் தென்மராட்சியில் மீசாலைப் பகுதியைச் சேர்ந்த எம்.சரோ(36) என்பவருக்கே மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இப் பெண் சாவகச்சேரி சந்தையில் மரக்கறி வியாபாரம் செய்து வந்தார். நான்கு பிள்ளைகள் உள்ளனர். படையினருடன் தொடர்பு வைத்திருந்து தம்மைப் பற்றிய தகவல்களைக் கொடுத்து வந்தார் என்று கூறியே புலிகள் தண்டனை விதித்ததாகத் தெரியவருகிறது. 28.08.97 அன்று இச்சம்பவம் இடம் பெற்றது.

இதேவேளை புலோலி தெற்கு புத்தலைப் பகுதியில் 25.08.97 அன்று காணாமல் போன வைரவப்பிள்ளை சிவகணேசன் (25) மறுநாள் புத்தலைப் பிள்ளையார் கோவில் கிணற்றில் சடலமாக மீட்கப்பட்டார்.

# பெண் புலிகள் பலி!

**யா**ழ் குடாநாட்டில் மானிப்பாய்-சங்குவேலிப் பகுதியில் உள்ள வீடொன்றில் வயோதிப மாது ஒருவருடன் இரண்டு பெண் புலிகள் தங்கியிருந்தனர். அவர்களை இனம் கண்டு கொண்ட ஒருவர் படையினருக்கு தகவல் கொடுத்துவிட்டார்.

இதனையடுத்து 26.08.97 அன்று பெண் புலிகள் தங்கியிருந்த வீடு படையினரால் சுற்றிவளைக்கப்பட்டது. வீடு சுற்றிவளைக்கப்பட்டபோது பெண் புலிகள் இருவரிடமும் இரண்டு கைக்குண்டுகள் மட்டுமே இருந்தன. ஒரு கைக்குண்டை படையினரை நோக்கி வீசியெறிந்தனர். படையினர் முன்கூட்டியே தயார் நிலையில் இருந்தமையால் கைக்குண்டு வீச்சில் இருந்து தப்பிக்கொண்டனர். ஒரு சிப்பாய் காயமடைந்தார்.

தப்பிச்செல்ல முடியாது என்று தெரிந்ததும் தம்மிடமுள்ள ஒரு கைக்குண்டை வெடிக்கவைத்து இரண்டு பெண்புலிகளும் பலியாகினர். பலத்த துப்பாக்கிப் பிரயோகம் செய்தபடி உட்பிரவேசித்த படையினர் அவர்களது உடல்களை கைப்பற்றினர். பெண் புலிகள் தங்கியிருந்த வீட்டின் வயோதிப மாதான வீரசிங்கம் செல்லமுத்து (வயது 56) என்பவரும் துப்பாக்கிச் சூட்டில் பலியானார். எட்டிப்பார்த்தபோது சுடப்பட்டார் என்று படையினர் கூறியுள்ளனர்.

# வாழைச்சேனையில் மோதல்

**ம**ட்டக்களப்பு மாவட்டத்தில் வாழைச்சேனை சோதனை முகாம்மீது புலிகள் நடத்திய தாக்குதலில் படையினர் தரப்பில் ஆறுபேர் பலியாகினர். செவ்வாய்க்கிழமை அதிகாலை இரண்டு மணிக்கு ஆரம்பமான தாக்குதல் அதிகாலைவரை தொடர்ந்தது.

தாக்குதலின் காரணமாக சோதனை முகாமில் இருந்த இராணுவத்தினர் பின்வாங்கிச் செல்ல, அங்கிருந்த ஏ.கே.எல்.எம்.ஜி. துப்பாக்கி 01, ரி.56 ரகத் துப்பாக்கிகள் 05 என்பவற்றை புலிகள் கைப்பற்றிச் சென்றனர்.

# மூன்றாம் கட்ட ஈழப்போர்!

## விமான இழப்பு 270 கோடி ரூபாய்

## விசாரணையில் அதிர்ச்சியான தகவல்கள்!

**மூ**ன்றாம் கட்ட ஈழப்போர் ஆரம்பமாகி-1995 ஏப்ரல் முதல் 1997 வரை விமானப் படையைச் சேர்ந்த 19 விமானங்கள் இழக்கப்பட்டுள்ளன. இவற்றில் 5 விமானங்கள் மட்டுமே எல்.ரி.ரி.ஈ.யினரின் தாக்குதலினால் வீழ்ந்தன.

இவ்வாறு விமானங்கள் ஒன்றன்பின் ஒன்றாக விபத்துக்குள்ளானதற்கான காரணங்களை ஆராய்வதற்காக ஜனாதிபதியினால் ஒரு விசாரணைக் குழு அமைக்கப்பட்டது.

### அறிக்கை

மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் சி.ஆர்.டி. சில்வா, முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் டெனிஸ் பெரேரா, ஓய்வு பெற்ற விமானப்படை கொமாண்டர் எயார் வைஸ் மார்ஷல் பத்மன் மெண்டிஸ், முன்னாள் பொலிஸ் உயர் அதிகாரி சிறில் ஹெரத் ஆகியோரைக் கொண்ட இக்குழுவினர் மூன்று மாதங்கள் பலதரப்பட்ட விசாரணைகளை மேற்கொண்டு தங்கள் முடிவினை கடந்த 27-08-97 புதன்கிழமை ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவிடம் கையளித்தனர். இத் தகவலை 'சண்டே ரைம்ஸ்' வெளியிட்டுள்ளது. மேலும் அப்பத்திரிகை வெளியிட்டுள்ள தகவல்கள் வருமாறு:

விமானப் படைக்குரிய விமானங்கள் மற்றும் தளபாடங்கள் பிறநாடுகளிலிருந்து கொள் முதல் செய்வதில் கோடிக்கணக்கான ரூபா பணம் கையாடப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

யுத்தத்துக்கு வேண்டிய ஆயுதங்கள், வெடி மருந்துகள் ஆகியவற்றைக் கொள்முதல் செய்வதற்காகவும் உயிரிழக்கும் மற்றும் படுகாயமுறும் வீரர்களுக்கும் அவர் தம் குடும்பங்களுக்கு இழப்பீடுகளை வழங்குவதற்காகவும் பல கோடி ரூபா செலவு செய்யப்படுகிறது. ஆனால் இத் தொகையில் கணிசமான தொகை இடைத்தரகு வேலைகளிலீடுபடும் அதிகாரிகளின் சொந்தக் கஜானாவைச் சென்றடைந்து விடுகிறது.

இவ்வாறு தனிப்பட்டவர்களின் கைமாறிய தொகை எலிசபத் மகாராணி வசிக்கும் பக்கிங்ஹாம் மாளிகை போன்று பலமாளிகைகளைக் கட்டப் போதுமானதாகும் என்று ஓர் அதிகாரி கூறினாராம்.

### தரமற்ற விமானங்கள்

தரக்குறைவான விமானங்களும் ஹெலிக்கொப்டர்களும் வாங்கப்பட்டுள்ளன. அத்துடன் இவற்றைப் பராமரிப்பதிலும் உரிய கவனம் செலுத்தப்படவில்லை என்பன போன்ற குறைபாடுகளும் இவ்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

பிறநாடுகளிலிருந்து கொள்முதல் செய்யப்பட்ட விமானங்களின் உண்மையான விலை, அவற்றின் உழைக்கும் தரம் ஆகியவற்றைக் கண்டறிய பாதுகாப்பு செயலாளர் டி சில்வா உட்பட விமானப்படை உயர் அதிகாரிகள் சிலரும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளுக்கும் சென்று விமான விற்பனை முகவர்கள், தரகர்கள் ஆகியோரைப் பேட்டி கண்டு வந்துள்ளனர்.

சம்பந்தப்பட்ட-பெரும் பணம் கையாடிய உயர் அதிகாரிகள் பலர் இனங்காணப்பட்டிருப்பதாகவும் அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுப்பதற்கான சட்ட ஆலோசனைகள் இடம் பெற்றிருப்பதாகவும் தெரியவருகிறது.

### மொத்தப் பெறுமதி

சேதமடைந்த 19 விமானங்களின் மொத்தப் பெறுமதி ஏறத்தாழ 270 கோடி ரூபாய்கள் என்று கணக்கிடப்படுகிறது. (2.7 பில்லியன் ரூபா)

1A 52 ரக புக்காரா விமானம் 1997 மார்ச் 16ல் ஹிங்குராகொடை வானத்தில் வெடித்தது. இதனையிட்டு விசாரணை நடத்துவதற்கு பாதுகாப்பு அமைச்சு, இங்கிலாந்திலிருந்தும் ஃபிரான்சிலிருந்தும் இரு தனி நிபுணர்கள் குழுவினரை அழைத்திருந்தது. அவர்களுடைய ஆய்வுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போதே இவ் விமானப் பராமரிப்புத் தொடர்பான சகல ஆவணங்களும் மாயமாக மறைந்து போய் விட்டன என்று 'சண்டே ரைம்ஸ்' தெரிவித்துள்ளது.

# 'தண்டனைக்குப் பயந்தே சரணடைவு!'

## பொதுமக்களிடம் புலிகள் விவரிப்பு!

**ச**மீப சில நாட்களுக்குள் புலிகள் இயக்கத்தின் ஒரு சில உறுப்பினர்கள் (நிதிப்பொறுப்பாளர்கள் உட்பட) மட்டக்களப்பு மாவட்டத்தில் பாதுகாப்புப் படையினரிடம் சரணடைந்தனர் என்பது தெரிந்ததே.

இச் சம்பவங்களைத் தொடர்ந்து பொதுமக்களிடம் பல்வேறுபட்ட கதைகள் உலாவி வந்தன. இக்கதைகளை முடிவுக்குக் கொண்டுவரும் விதத்தில் பொதுமக்களுக்குத் தெளிவுபடுத்துவதற்காக புலிகள் இயக்கத்தினர் கூட்டமொன்றை ஏற்பாடு செய்தனர். அக் கூட்டம் மட்டக்களப்பு- பன்குடாவெளியில் நடந்ததாகக் கூறப்படுகிறது. ஒலிபெருக்கி மூலம் அப்பகுதியிலுள்ள பொதுமக்களைக் கூட்டத்திற்கு வருமாறு அழைத்திருந்த புலிகள் இயக்கத்தினர் "சிறிலங்கா அரச படையினரிடம் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த ஒரு சிலர் சரணடைவது எமது இயக்கத்தைக் காட்டிக் கொடுப்பதற்காக அல்ல, அவர்கள் தாம் செய்த சில தவறுகளுக்காக தம்மீது தண்டனை வழங்கப்படுவதை எண்ணிப் பயந்தே ஆகும். இதுவல்லாமல் பொதுமக்கள் மத்தியில் இதுபற்றிப் பலவாறும் பேசப்படுகிறது. ஆனால் உண்மை அதுவல்ல. எமது இயக்கத்தை விட்டுக் காணாமல் போனவரான யமுனா எங்கிருந்தாலும் எம்மிடம் மீண்டும் வரலாம்!" என்று புலிகள் இயக்கத்தினர் பொதுமக்களிடம் அறிவித்துள்ளனர்.

யமுனா என்றழைக்கப்படும் புலிகள் இயக்கத்தின் நிதிப் பொறுப்பாளரே சமீப சில நாட்களுக்கு முன்னர், ரூபா 28 இலட்சத்திற்கு மேற்பட்ட வசூல் தொகையுடன் விஷேட அதிரடிப் படையினரிடம் சரணடைந்தவராகும்.

# மது குடித்த மனித உயிர்கள்

**ம**ட்டக்களப்பில் மது அருந்திய 25க்கு மேற்பட்டோர் பரிதாபமாக மாண்டு போயினர். 40க்கு மேற்பட்டோர் ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர் என்று உடனடியாக கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன. பலியானவர்களில் மூன்று பேர் பெண்கள். ஏறாவூர் பிரதேசசபை உபதலைவர் டி.ரி.துரைரத்தினம் என்பவரும் பலியானவர்களில் ஒருவர்.

மட்டக்களப்பு ஹோட்டல் பார், கோட்டைமுனை பார்,புதுக்குடியிருப்பு பார்,எருவில் பார் ஆகியன ஒரே உரிமையாளராலேயே நடத்தப்பட்டு வருகின்றன. இவற்றில் மது அருந்தியோரே பலியாகியுள்ளனர். சாராயத்தில் கலப்படம் செய்யப்பட்டதே மரணமானதற்கு காரணம் என்று கூறப்படுகிறது. மதுபானசாலை உரிமை யாளர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த மதுபான சாலைகளின் உரிமையாளர் ஒரு மலையாளி இனத்தவர். பல பினாமி பெயர்களில் மதுபான கடைகள் வைத்திருக்கிறார். புதுக்குடியிருப்பு பார் நடத்தும் அனுமதிப்பத்திரத்தை மட்டக்களப்பில் உள்ள ஆளும் கட்சி அமைப்பாளர் ஒருவரே இவருக்கு பெற்றுக்கொடுத்தாராம்.

# யாழ் செல்ல 4 ஆயிரம் பேர் காத்திருப்பு!

## நிரம்பி வழிகின்றன நலன்புரி நிலையங்கள்!

**ம**ன்னார்த் தீவுப் பகுதியிலுள்ள யாழ் மாவட்ட அகதிகளை அனுப்பும் பணிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதற்காக தலைமன்னார், காங்கேசன்துறை கப்பல் சேவை இடம்பெற்று வருகிறது.

சில மாதங்களுக்கு முன் பேசாலைக் கடலில் வைத்து 'மிஷன்' என்ற கப்பலை புலிகள் தீ வைத்து எரித்ததைத் தொடர்ந்து மன்னார் ஊடாக அகதிகளை யாழ்ப்பாணம் அனுப்பும் பணிகள் தடைப்பட்டிருந்தன.

தற்போது அகதிகளை ஏற்றியிறக்கும் பணியில் ஈடுபட்டுள்ள 'தாரகி' கப்பலில் ஒரே தடவையில் 290 பேர் பயணம் செய்கின்றனர்.

மன்னாரிலுள்ள அகதிகளை அனுப்பும் பணி கடந்த 13.08.97 அன்று ஆரம்பமானது. தற்போது 28, 30ம் திகதிகளிலும் 02, 04, 06 ஆகிய தினங்களிலும் கப்பல் சேவை இடம்பெறும் திகதிகளாக அறிவிக்கப்பட்டிருந்தபடி சேவைகள் நடைபெறுகின்றன.

இதேவேளை மன்னாரில் சுமார் 4000 பேர் கப்பலில் பயணம் செய்வதற்காக காத்துக் கிடக்கின்றனர். பேசாலை நலன்புரி நிலையத்தில் மட்டும் மூவாயிரம் பேர் இருப்பதாக தலைமன்னார் காங்கேசன்துறை கப்பல் சேவையில் அகதிகளை அனுப்பி வைக்கும் தலைமன்னார் கிராம அதிகாரி திருமதி சபியா எமது நிருபரிடம் தெரிவித்தார்.

அகதிகளை ஏற்றி இறக்கி விட்டு வரும் கப்பலில் யாழ் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் மன்னார் ஊடாக வந்து வெளி மாவட்டங்களுக்குச் செல்கின்றனர். இதற்காக பயணக் கட்டணமாக ரூபா 750 அறவிடப்படுகின்றது.

யாழ்ப்பாணம் செல்வதற்காக வன்னிப் பகுதியிலிருந்து மன்னாருக்குள் வந்து குவியும் அகதிகளின் தொகையும் அதிகரித்து வருகிறது. அதேவேளை நலன்புரி நிலையங்களில் தங்கியிருப்போர் மத்தியில் தொற்று நோய்களும் பரவலான முறையில் அதிகரித்து வருகின்றன.

# குப்பைக்குள் ஆயுதங்கள்

**யா**ழ்ப்பாணத்தில் சூராவத்தை என்ற இடத்தில் குப்பைக் கிடங்கு ஒன்றுக்குள் இருந்த ஆயுதங்கள் படையினரால் கைப்பற்றப்பட்டன. 24.08.97 அன்று படையினருக்கு கிடைத்த இரகசிய தகவல் ஒன்றை அடுத்தே தேடுதல் நடத்தப்பட்டது. ரீ 56 ரகத் துப்பாக்கி 01, மகசீன் 01, ரவைகள் 15 ஆகியன குப்பைக் கிடங்கில் இருந்து கைப்பற்றப்பட்டன.

25.08.97 அன்று உடுவில் பகுதியில் கைவிடப்பட்ட வீடொன்றில் இருந்து நான்கு கைக்குண்டுகள் படையினரால் கண்டெடுக்கப்பட்டன.

# ரெலோ–ராசிக் குழுவில் முஸ்லிம் இளைஞர்கள்?

## ஆசிரியை மீது கோபம்–புலி என்று மாட்டிவிட்டனர்

**அ**ரச துணைப்படை என்று கிழக்கில் இராணுவத்தினருடன் இணைந்து இயங்கி வரும் ராசிக் குழுவிலும், ரெலோ இயக்கத்திலும் கடந்தவாரம் 5 முஸ்லிம் இளைஞர்கள் இணைந்து கொண்டனர். இதனையறிந்த இவர்களது பெற்றோர் விசனப்பட்டு படை உயரதிகாரிகளுக்கும், பொலிஸ் உயரதிகாரிகளுக்கும் முறைப்பாடு தெரிவித்ததையடுத்து ரெலோ இயக்கத்தில் சேர்ந்து கொண்ட ஏறாவூரைச் சேர்ந்த இரு இளைஞர்களும் விடுவிக்கப்பட்டனர்.

இதேபோல் கடந்த வாரம் ஏறாவூரைச் சேர்ந்த மூன்று முஸ்லிம் இளைஞர்கள் வை. றபீக், எஸ்.எம்.எம்.கடாபி, வி.லாபீர் ஆகியோர் இராணுவத் துணைப்படை என்று அழைக்கப்படும் ஈ.பி.ஆர்.எல்.எஃப். ராசிக் குழுவில் இணைந்து கொண்டனர். இவர்களை ராசிக் குழுவிலிருந்து விடுவித்துத் தருமாறு இவர்களது பெற்றோர் பொலிஸ் மற்றும் இராணுவ உயரதிகாரிகளிடம் முறையிட்டுள்ளனர்.

இதனிடையே படையினருடன் சேர்ந்து செயற்பட்டு வரும் ஈ.பி.ஆர்.எல்.எஃப். ராசிக் குழுவினர் பொதுமக்களிடம் அடாத்தாக முறையில் நடந்து கொள்வதாகப் பரவலாக் முறைப்பாடுகள் தெரிவிக்கப்படுகிறது. பொதுமக்களைப் பல்வேறு சந்தர்ப்பங்களில் மிரட்டியும் வற்புறுத்தியும் வாகனங்கள், தொலைக்காட்சிப் பெட்டி, ரேடியோ, டெக், மற்றும் பல பொருட்களையும், பணத்தையும் பெற்றுக் கொள்வதாகக் கூறப்படுகிறது. தாம் இவைகளைக் கொடுக்க மறுக்கும் பட்சத்தில் தம்மீது பழிவாங்கக் கூடும் என்பதனால் மக்கள் எதையும் மறுப்பதில்லையாம். ஆனால் பெரும் அச்சத்துடனும் பீதியுடனும் காலங்கழிக்க வேண்டியுள்ளதாக பொதுமக்கள் தெரிவிக்கிறார்கள். தனிப்பட்ட குரோதம் காரணமாகவும் பழிவாங்கப்படுகிறதாம்.

பாடசாலையில் தன்னை மூன்றுமுறை சித்தியடைய வைக்கவில்லை என்ற காரணத்தினால் தனது முன்னாள் ஆசிரியை அவரிடம் கற்ற மாணவன் (தற்போது ராசிக் குழு) காட்டிக் கொடுத்து கைது செய்ய உதவினாராம். குறித்த ஆசிரியையின் திருமணம் நடக்கவிருந்த முதல் நாளில்தான் இந்தக் கைது நாடகம் நடந்ததாம். எனினும் அவரது உறவினர்கள் உடனடியாக முயற்சி மேற்கொண்டதையடுத்து பின்னர் ஆசிரியை விடுதலையாகியுள்ளார்.

# எரிபொருள் கட்டுப்பாடு!

**ம**ட்டக்களப்பு-செங்கலடியில் படையினருடன் இணைந்து செயற்பட்டு வரும் ரெலோ இயக்கத்தினர் எரிபொருள் வழங்கலில் புதிய கட்டுப்பாடுகளை விதித்துள்ளனர். 5 லீற்றருக்கு மேல் ஒருவருக்கு மண்ணெண்ணெய் வழங்கக்கூடாது. டீசல், பெற்றோல் என்பவை கொள்கலன்களில் வழங்கக்கூடாது என்பதே அந்தக் கட்டுப்பாடுகள்.

கடந்தவாரம் செங்கலடியிலுள்ள தனியார் எரிபொருள் நிரப்பு நிலையமொன்றிலிருந்து 220 லீற்றர் டீசல் ஒருவருக்கு வழங்கப்பட்டதையறிந்து எரிபொருள் வாங்கியவரையும் எரிபொருள் நிரப்புநிலைய முகாமையாளரையும் அழைத்துச்சென்ற ரெலோ இயக்கத்தினர் அவர்களுக்குப் பாரதூரமாக அடி, உதை கொடுத்துத் தாக்கிவிட்டு பின்னர் விடுவித்தனர். கைப்பற்றிய 220 லீற்றர் டீசலையும் அதே எரிபொருள் நிலையத்தில் விற்று ரெலோ இயக்கத்தினர் பணத்தையும் பெற்றுக்கொண்டனர்.

கைப்பற்றப்பட்ட டீசல் பரல் புலிகளுக்கு எடுத்துச் செல்ல வைக்கப்பட்டிருக்கலாம் என்பதே ரெலோ இயக்கத்தினர் கூறும் குற்றச்சாட்டு.

# உழவு இயந்திரத்தில் சென்று புலிகள் மீது சூடு!

**ம**ட்டக்களப்பு- பதுளை வீதியிலுள்ள தம்பானம்வெளி என்னுமிடத்திற்கு கல்வாடிக்குச் செல்லும் பொதுமக்கள்போல் உழவு இயந்திரத்தில் பதுங்கியிருந்து மாறு வேடத்தில் சென்ற புளொட் இயக்கத்தினர் தம்பானம்வெளிச் சந்தியில் நின்றிருந்த புலிகள் இயக்க உறுப்பினர்கள் முன் திடீரெனத் தோன்றி சுட்டபொழுது ஸ்தலத்தில் ஒருவர் பலியானார். மற்றொருவர் காயங்களுடன் தப்பிவிட்டார். முற்றிலும் புலிகளின் ஆளுகைக்குள் உள்ள இப்பகுதிக்குள் மாற்று ஆயுதக் குழுவினர் இவ்விதம் திடீரெனப் பிரவேசித்து புலிகள் இயக்கத்தினரைச் சுட்டு அவரது சடலத்தையும் தாம் சென்ற உழவு இயந்திரத்தில் தூக்கிப் போட்டுக் கொண்டு செங்கலடிக்குத் திரும்பி வந்தனர். அப்பகுதியிலிருந்து கிடைத்த தகவலையடுத்தே புளொட் இயக்கத்தினர் இவ்வாறு சென்று தாக்கிவிட்டுத் திரும்பியுள்ளனர் என்று கூறப்படுகிறது. செங்கலடிச் சந்தியிலிருந்து 3 1/2 மைல்கள் தொலைவிலுள்ள புலிகளின் முழுக் கண்காணிப்பின் கீழுள்ள பகுதியிலேயே இச்சம்பவம் இடம்பெற்றது.

இதேவேளை கடந்த ஆகஸ்ட் மாத இறுதி வாரத்தில் இடம்பெற்றதான மற்றொரு சம்பவத்தில் மட்டக்களப்பு- கொம்மாதுறைப் பகுதியில் இரு புலிகள் இயக்கத்தினர் பொருட்கள் கொள்வனவுக்காக வந்திருக்கின்றனர் என்ற செய்தி ராசிக் குழுவினருக்கு எட்டியது. உடனடியாக கல்வாடிக்குச் செல்லும் உழவு இயந்திரத்தில் ராசிக் குழுவினர் சென்றனர். அப்பொழுது ஏற்கனவே அவ்விடத்தில் நின்றிருந்த புலிகள் இயக்கத்தினர் வழக்கமாகத் தமக்கு உதவி புரியும் பொதுமக்கள் இருவரை அழைத்துப் பொருட்களை வாங்கி அனுப்புமாறு கூறிவிட்டு அவ்விடத்திலிருந்து நகர்ந்து விட்டனர்.

பொருட்களை வாங்கிக் கொண்டு அவற்றைப் புலிகளுக்கு அனுப்பி வைப்பதற்காக உழவு இயந்திரத்தை எதிர்பார்த்திருந்த வேளை, எதிரே வந்த உழவு இயந்திரத்தை நிறுத்தி அவற்றில் எரிபொருள் கொள்கலன்களையும் மற்றும் பொருட்களையும் ஏற்ற முற்பட்ட பொழுது உழவு இயந்திரத்தின் உள்ளே பதுங்கியிருந்த ராசிக்குழுவினர், புலிகளுக்கு பொருட்கள் வாங்கி உதவிய இருவரையும் சுட்டுவிட்டனர். ஸ்தலத்திலேயே இருவரும் பலியாகினார்கள். சுடப்பட்ட இருவரில் ஒருவர் ஏ.கே. தருமன் என்று அடையாளம் காணப்பட்டுள்ளார்.

# திலீபனின் நினைவு தினம்

**உ**ண்ணாவிரதமிருந்து உயிர்நீத்த திலீபனின் ஞாபகார்த்தமாக புலிகள் இயக்கத்தினர் கிழக்கில் தமது ஆளுகைக்குள் உள்ள பகுதிகளில் கவிதைப் போட்டிகளையும், மற்றும் பல நிகழ்ச்சிகளையும் நடாத்தும் பதாகைகளையும் சுவரொட்டிகளையும் ஒட்டியுள்ளனர். கவிதைகளுக்கு வெகுமதியான பரிசில்களை வழங்கப்போவதாகவும் அறிவித்துள்ளனர். திலீபனின் நினைவுதினம் செப்டம்பர் 26ம் திகதியாகும்.


படிப்பகம்

www.padippakam.com

# யாழ் நாட்டுக்கான தபால் சேவை
## செஞ்சிலுவைச் சங்க உதவியுடன் ஏற்பாடு!

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரின் உதவியுடன் கப்பல் மூலமாக வட பகுதிக்கான தபால் சேவை தற்போது நடைபெறுகின்றது. நாட்டின் பிறபகுதிகளில் சேகரிக்கப்படும் வடபகுதிக்கான தபால்கள் திருக்கோணமலைக்கு எடுத்து வரப்பட்டு அங்கிருந்து கப்பல் மூலமாக அனுப்பப்படுகின்றன. அவ்வாறே குடாநாட்டிலிருந்து பிறபகுதிகளுக்கான தபால்களும் திருக்கோணமலைக்குக் கொண்டு வரப்பட்டே உரிய இடங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன.

செப்டெம்பர் மாதத்தில் 2,9,17,22,25,30 ஆகிய திகதிகளில் வடபகுதிக்குத் தபால்கள் எடுத்துச் செல்லப்படவுள்ளன. அதேபோல் 4,11,19,24,27, அக்டோபர் 2 ஆகிய தினங்களில் குடாநாட்டுத் தபால்கள் கொண்டு வரப்படவுள்ளன.

திருக்கோணமலையிலிருந்து யாழ்ப்பாணப் பகுதிக்குத் தபால்களை அனுப்புவோர், தபால்கள் செல்லவுள்ள தினங்களுக்கு முந்தைய நாள் காலை பத்து மணிக்கு முன்னர் தங்கள் கடிதங்களை தபாலிலிட்டால் தாமதமின்றிப் போய்ச் சேரும் என அஞ்சல் திணைக்கள உயரதிகாரி 'முரசு'க்குத் தெரிவித்தார்.

முத்திரைகள் போன்ற பெறுமதியான பொருட்கள் எடுத்துச் செல்லப்படும் தினங்களில் தபால் பொதிகளுடன் அஞ்சலதிபர் ஒருவரும் பயணம் செய்ய சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் அனுமதியளித்துள்ளதுடன் மாதாந்தம் கப்பல் சேவைத் தினங்களை தபால் திணைக்கள வசதிகருதி முன்கூட்டியே தருவதற்கும் இணங்கியுள்ளதாகவும் அவ்வதிகாரி கூறினார்.

# வீதியை புனரமைக்க கோரிக்கை!

மூதூரைச் சேர்ந்த பாலத்தடி கிராமசேவகர் பிரிவிலுள்ள பாரதி வீதியை உடனடியாகப் புனரமைக்குமாறு அப்பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இப்பாதை குடியிருப்புப் பகுதியிலிருந்து சுமார் நூறு ஏக்கர் வயல் நிலங்களை இணைக்கும் ஒரே பாதையாகும். அறுநூறு மீட்டர் நீளமுள்ள இப்பாதை ஆரம்பப் பகுதியில் சுமார் 33 அடி அகலத்தைக் கொண்டிருந்த போதிலும் வயல் நிலங்களை அண்மிக்கும் 200 மீட்டர் நிலப்பகுதி பத்து அடிக்கும் குறைவாகவே இருப்பதால் வயலுக்குப் பொருட்களை எடுத்துச் செல்லவோ வயலிலிருந்து உற்பத்திப் பொருளை வெளியில் கொண்டு வரவோ சொல்லொணாக் கஷ்டங்களை அனுபவிப்பதாக இவர்கள் கூறுகிறார்கள்.

இப்பகுதி அகலப்படுத்துவதற்கென மூதூர் பிரதேச சபை ஜனவரியில் ரூபா இருபதினாயிரத்தை ஒதுக்கீடு செய்துள்ள போதிலும் பொது நோக்கற்ற சிலரின் அத்து மீறிய செயலால் பணி தொடரப்படாமல் இருப்பதாகக் கூறப்படுகிறது.

மழைக்காலம் ஆரம்பமாகும் முன்னர் இப்பாதை சீரமைக்கப்பட்டால் இப்பகுதி விவசாயிகளுக்குப் பேருதவியாக இருக்கும் என அப்பகுதி மக்கள் தெரிவிக்கிறார்கள்.

# "தலையெடுத்து வருகிறது மலையக இலக்கியம்!"
## ஆய்வுக் கருத்தரங்கில் தெரிவிப்பு!

"யாழ் நகரில் 1974ம் ஆண்டு தை மாதம் இடம்பெற்ற நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டுத் துயரச் சம்பவம் இந்நாட்டில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி விட்டது. மலையகத்திலும் இவ்வாறான விழிப்புணர்ச்சி ஏற்பட்டதால் இங்கும் இவ்வாறான தமிழாராய்ச்சி மாநாட்டை நடாத்த ஆர்வம் ஏற்பட்டிருக்கின்றது: மலையக இலக்கியம் தலை தூக்குமா? என கேள்வி எழுப்பியவர்களுக்கு இன்றைய புத்துணர்வு நன்கு சான்று பகரும்."

கண்டி ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலய மீனாட்சி கல்யாண மண்டபத்தில் (23.8.97)ல் நடைபெற்ற மலையகத் தமிழாராய்ச்சி மாநாடு தொடர்பான ஆய்வுக் கருத்தரங்கிற்கு தலைமை தாங்கி உரையாற்றிய பேராதனைப் பல்கலைக் கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் க. அருணாசலம் மேற்கண்டவாறு கூறினார்.

மத்திய மாகாண கல்வி (தமிழ்) இந்து கலாசார வர்த்தக, வாணிப, சுற்றுலாத்துறை அமைச்சர் திரு வீ. புத்திரசிகாமணி அவர்கள் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட

(கண்டி நிருபர்)

இக்கருத்தரங்கை மேற்படி அமைச்சு ஒழுங்கு செய்திருந்தது.

மலையக எழுத்தாளர்கள், இலக்கிய ஆர்வலர்கள், பாடசாலை மாணவர்கள் பலரும் இதில் கலந்து கொண்டனர். அங்கு பேராசிரியர் அருணாசலம் மேலும் கூறியதாவது:

"இன்று மலையகத்தில் தமிழ்மொழி வளர்ச்சிக்காக பலபணிகள் நடக்கின்றன. 1960க்குப் பின்னர் வேகமான திடீர்ப் பாய்ச்சலூடாக இலக்கிய வளர்ச்சி மேம்பாடடையத் தொடங்கியது. இன்றைய அமைச்சர் இதன் பொருட்டு துடிப்புடன் செயற்படுகிறார். மலையகத் தமிழ் இலக்கியம் உலகமெல்லாம் பரவ இந்த ஆராய்ச்சிகள் காத்திரமான பங்களிப்பை வழங்கும்.

1983ல் ஏற்பட்ட துயரம் காரணமாக நொந்து போனபின் இன்று இத்துறையில் ஏற்பட்டுள்ள வேகம் குறிப்பிடத்தக்கது. மலையக தமிழறிவியல் என்ற தலைப்பில் 12அதிகாரங்களைக் கொண்ட நூலை நான் இப்பொழுது எழுதிவருகிறேன். நிச்சயமாக இந்நூல் மலையக மக்களின் தமிழுக்குரிய பங்களிப்பு எத்தகையது என்பதைப் புலப்படுத்தும்," என்று தெரிவித்தார்.

# எழுதுநர் சார்ந்த சேவையில் உள்ளோர்
## விபரங்களை அனுப்பக் கோரிக்கை!

எழுதுநரும், எழுதுநர் சார்ந்த சேவைகளிலும் உள்ள பட்டதாரிகள் விபரங்கள் அரசினால் திரட்டப்பட்டு வருகின்றன.

பொது எழுதுநர், தட்டெழுத்தாளர், சுருக்கெழுத்தாளர், கணக்குப் பதியுநர், சிறாப்பர், பண்டகசாலைக் காப்பாளர் ஆகிய சேவைகளைச் சார்ந்தோரின் விபரங்களையே அரசு கோரியுள்ளது.

மாதிரி விண்ணப்பப் படிவத்தின் மூன்று பிரதிகளில் சம்பந்தப்பட்டோர் பற்றிய தகவல்கள் பெறப்பட்டு அவை திணைக்களத் தலைவர்களினால் உறுதிப்படுத்தப்பட்டு ஒரு பிரதியை திணைக்களப் பாதுகாப்பில் வைத்திருப்பதோடு ஏனைய இரு பிரதிகளையும் தாபனப் பணிப்பாளர் நாயகத்துக்கு அனுப்பி வைக்க வேண்டுமென்றும் அரசு கேட்டுள்ளது.

அக்டோபர் 6ந் திகதிக்கு முன்னர் இவை அனுப்பப்பட வேண்டுமென்றும் பிந்தி வருபவை எக்காரணம் கொண்டும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது என்றும் வலியுறுத்தும் இவ்வறிக்கை மாகாண சேவை சார்ந்தோரின் விண்ணப்பங்கள் தலைமைச் செயலகூடாகச் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்றும் தெரிவித்துள்ளது.

# கொழும்பு–மன்னார் பஸ்சேவை?

(மன்னார் நிருபர்)

மன்னாருக்கும் கொழும்புக்கும் இடையிலான நேரடி பஸ் சேவை எதிர்வரும் செப்டம்பர் மாத பிற்பகுதியில் ஆரம்பிக்கப்படும் என மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் எஸ். மரியதாசன் குரூஸ் 'முரசு'க்குத் தெரிவித்தார்.

இதற்காக தற்போது பயன்படுத்தப்படும் மன்னார்-வவுனியா வீதி பயன்படுத்தப்பட மாட்டாது. பதிலாக மன்னார்- மதவாச்சி வீதி திறக்கப்பட்டு இவ்வீதி வழியாகவே போக்குவரத்துக்கள் இடம்பெறும் எனவும் அவர் சொன்னார்.

மன்னார்-மதவாச்சி வீதியை பொதுமக்களின் பாவனைக்காக திறந்து விடுவதற்கு துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதற்காக இவ்வீதியில் அமைந்திருக்கும் இருபாலங்களும் தற்போது திருத்தி அமைக்கப்பட்டுள்ளன. இப்பாலங்களை புலிகள் கடந்த 7 வருடங்களுக்கு முன்னர் குண்டு வைத்துத் தகர்த்திருந்தனர்.

தற்போது மன்னாரிலிருந்து வவுனியா ஊடாக வெளிமாவட்டங்களுக்குச் செல்வோர் மீது கோழிக்கூடு முகாமில் வைத்து இடம் பெறும் வீடியோ எடுத்தல் போன்ற நடவடிக்கைகள் இனி மேல் மன்னாரில் வைத்தே இடம்பெறவுள்ளன.

இதேவேளை மன்னார்- மதவாச்சி வீதி திறக்கப்பட்டபின் வாகனங்களுக்கு வழங்கப்படும் வழித்துணை நடைமுறையிலும் மாற்றங்கள் கொண்டுவரப்படவுள்ளதாகத் தெரிகின்றது.

# நூற்றாண்டு காணும் இந்துக் கல்லூரி
## முத்திரை வெளியீடும் இடம்பெறும்



(திருமலை நிருபர்)

திருக்கோணமலை இராமகிருஷ்ண சங்க ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி இவ்வாண்டு தனது நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுகிறது. 1897ல் சமூகப் பெரியவர்களால் தமிழ்-ஆங்கிலப் பிரிவுகளாக ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை, 1925ல் இராமகிருஷ்ண சங்கத்தாரிடம் கையளிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து சுவாமி விபுலானந்தர் 1925 ஜூன் தொடக்கம் 1930ஜூலை வரை அதிபராக இருந்து தாய்நாட்டில் முதலாவது கல்விப்பணி ஆற்றிய பெருமையை இப்பாடசாலை பெற்றது.

காலப் போக்கில் தமிழ்ப்பிரிவு புகழ்பூத்த ஸ்ரீ கோணேஸ்வரா வித்தியாலயமாகவும் ஆங்கிலப் பிரிவு இந்துக் கல்லூரியாகவும் பிரகாசித்தன. திருக்கோணமலையின் முதலாவது தேசியப் பாடசாலை தரத்தை அடையுமுகமாக சுவாமி ஆத்மகணானந்தாஜியின் அருளாசியுடன் கோணேஸ்வரா அதிபர் திரு.க.ஜீவரத்தினம், இந்துக் கல்லூரி அதிபர் திரு.சி. தண்டாயுதபாணி ஆகியோரின் நல்லெண்ணத்துடனும் இரு பாடசாலை அபிவிருத்திச் சங்கங்களின் முழுமனதான விட்டுக் கொடுப்புடனும், 1993ல் இராமகிருஷ்ண சங்க ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி என்ற புதிய பெயருடன் தேசியப் பாடசாலையாக உயர்ந்தது.

மாவட்ட, தேசிய மட்டங்களில் பல சாதனையாளர்களையும், நேர்மையான பல்துறை விற்பன்னர்களையும், சிறந்த சமூக சேவையாளர்களையும் தொடர்ந்து வழங்கிவரும் இக் கல்லூரியின் நூற்றாண்டு நினைவையொட்டி அரசும் முத்திரையொன்றை வெளியிடவுள்ளது.



## மட்டக்களப்பு மாந்திரீகம்

உங்கள் நிறைவேறாத
பிரச்சனைகளுக்குத் தீர்வு கண்டு
எதிர்கால வாழ்வில் மகிழ்ச்சியும்,
வெற்றியும் பெறுவதற்கு
மட்டக்களப்பு மாந்திரீக சக்தி
உதவி புரியும். பரம்பரை வைத்திய
நிபுணர் டாக்டர் 'குட்டி'
அவர்களுடன் விபரங்களுடன்
தொடர்பு கொள்ளுங்கள்.
இரகசியம் வெளியாகாது.

DR. A.P.S. KUTTY
50, THEATRE ROAD,
NINTAVUR-21
SRI LANKA.

## மலையாள மாந்திரிகம்





மலையாள மாந்திரிகத்தை இலங்கையில் திட்டவட்டமாக கற்றவர் பி.கே.சாமி அவர்களே. இதை ஒட்டி எத்தனை எத்தனையோ விருதுகள் பெற்றுள்ளார். இச்சேவையில் கெடுதலுக்கு இடமில்லை. நன்மைக்கே இடம். நிச்சயமாக ஒருவரை விரும்பினால் திருமணம் செய்வதென்று முடிவெடுத்தால் பரிபூரண உதவி செய்வார். காதலர்களை சேர்த்து வைப்பது பிரிந்த காதலை ஒன்று சேர்ப்பது, பிரிந்தவரை அழைத்து எடுப்பது, திருமண தோஷத்திற்கு சாந்தி பரிகாரம் செய்வது பிறந்த திகதி மாதத்தை வைத்து வாடிக்கையாளரை கண்ட மாத்திரத்தில் இதுதான் இவர்களின் பிரச்சனை என்று கூறுவதுடன் கணவன் மனைவி பிரச்சனை, தொழில் முன்னேற்றம், வெளிநாட்டுப் பிரயாண தடைநீங்க, இன்னும் மாந்திரிக வேலைகளுக்கும் ஜாதக வேலைகளுக்கும் வெளிநாட்டிலும் உள்நாட்டிலும் 33 வருட உண்மை சேவை புரிவதாலும் வாடிக்கையாளர் மனதை கோணாது செயல்படுவதாலேயும் இன் நிறுவனம் வரையறுக்கப்பட்ட நிறுவனமாக விஸ்தரிக்கப்பட்டுள்ளது. கடல் கடந்து செயல்படக்கூடிய எத்தனை எத்தனையோ வசிய யந்திரங்கள் உண்டு.
தேவையான வெளிநாட்டவர்கள் உங்கள் ஆடர்களை இலங்கை நேரப்படி காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரையே தொலைபேசி அல்லது பெக்ஸ் ஆடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

தேவைகளுக்கு உலக மாந்திரிக சக்கரவர்த்தி
பி.கே. சாமி J.D.G.A.N&JP
ஸ்ரீ துர்கா தேவி மாந்திரிக உச்சாட்ட பீடம்
இல. 162, கொட்டாஞ்சேனை வீதி,
மே பீல்ட் ரோட், கொழும்பு–13

வெளிநாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி
Fax-00941342464
Tel-00941431137
உள்நாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்-
342463-344831

## விளம்பரப் பகுதி

SPOKEN ENGLISH
WITH GRAMMAR
பிரதி செவ்வாய், வியாழன்
Batch I 9.00-10.00a.m
Batch II 4.00-5.00p.m
ADVANCED ENGLIH
5.00-6.00P.M
ஆரம்பம் 4.9.97
K.JAYAKUMAR
IEPI
316, GALLE ROAD,
BAMBALAPITIYA

## விற்பனையாகின்றன!

நவீன சிக்கன வெளியீடுகள்:
பொருளியல் கல்விக்கான வழிகாட்டி I+II
விலை ரூபா 270/-
* New syllabus
for G.C.E. (A/L) and G.A.Q.
* Text book
containing more than 600 model Questions and Answers (264 pages)
எல்லாம் புத்தகசாலைகளிலும் கிடைக்கும்
தபால் மூலம் பெறக் காசுக் கட்டளை அனுப்ப வேண்டிய முகவரி:
Mr. A. SHANMUGALINGAM
(ROYAL COLLEGE COLOMBO - 7)
56 A. ST. RITA'S ROAD,
MOUNT LAVINIA.

## சித்தர் மாந்திரீகம்

அதிஷ்டகரமான வாழ்க்கை அமைய வேண்டுமா? காதல் விவகாரம் கைகூட வேண்டுமா? தொழில் சிறந்திட வேண்டுமா? இல்லற வாழ்வு இனித்திட வேண்டுமா? இவ்விதமாக உங்கள் பிரச்சனைகள் எதுவாயினும் உடனடியாக பூரணவெற்றி பெற்றிட ஒரு தடவை மட்டக்களப்பு கோளாவில் மணி மாந்திரீகச் சித்தர் "சக்திசரவணா"வுடன் தொடர்பு கொள்ளுங்கள். சங்கடங்கள் தீர சக்தி சரவணாவை நாடுங்கள். சோதிட ரீதியாக உத்தரவாதமான எதிர்காலப்பலன்கள் எம்மிடம் அறியலாம். வெளிநாட்டு அன்பர்களுக்கான சிறந்த துரித விசேட சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. உங்கள் வெற்றியும், திருப்தியும் எமது குறிக்கோளாகும்.

1ந் திகதி முதல் 20ந் திகதி வரை தொடர்பு
SHAKTHY SARAVANA,
8/2, SRI SIDDARTHA ROAD,
KIRILAPONE, COLOMBO-5.
TELE PHONE: 823465.
(பொலிஸ் நிலைய எதிரில்)

21ந் திகதி முதல் 30ந் திகதி வரை தொடர்பு
SHAKTHY SARAVANA,
82, MANIKKAVASAGAR ROAD,
TRINCOMALEE.
TELE PHONE: 026-20347

வியாழன் விடுமுறை


## 1வது பிறந்தநாள் வாழ்த்து



சல்மா பேகம் 31.08.97

மரதன்கடவல ஏ.எல். மஹ்ரூப்-அக்ரூரணை புளுகொஹத்தன்ன நூர்ஜஹான் பேகம் தம்பதியினரின் செல்வப் புதல்வி சல்மா பேகம் 31.08.97 அன்று 1வது பிறந்த தினத்தை தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடினார்.

இவரை வல்ல அல்லாஹ்வின் அருளால் கலை பல கற்று, நலம் பல புரிந்து நானிலந்தன்னில் நல்லகுடி நற்பெண்மணியாய் எங்கள் கண்மணி வாழ வாழ்த்துவோர்

உம்மா, டடா, மமாவும்மா, சரீனா ஆன்டி, மாமாமார், மாமிமார், உக்குவளை சன்னா, சபீரா, மெனிக்கின்ன ஹஸ்னா, மதினிமார், புளுகொஹதன்ன அம்பி, ரின்வி, ரினாப், ரினாட், நானாமார், மரதன்கடவல டடாமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், நானாமார், தாத்தாமார், மாமிமார், மாமாமார், மச்சான்மார், மதினிமார், குலவட் சுலைதா ஆன்டி, பத்மா ஆன்டி மற்றும் உற்றார், உறவினர் வாஹிதான குழந்தையாக பல்லாண்டு காலம் நீடுழிவாழ வாழ்த்துகிறார்கள்.


AFTER A/L WHAT'S NEXT ?
SPECIALLY DESIGNED FOR SCHOOL LEAVERS

DIPLOMA IN COMPUTER STUDIES
Information Technology, Dos, Windows, Word, Excel, Programming Techniques, Turbo Pascal, Dbase & Clipper
காலம் : 4 மாதம் கட்டணம் : Rs 4,500/-

MICROSOFT OFFICE
Information Technology, Dos, Windows, Word, Excel, Powerpoint, Access
காலம் : 3 மாதம் கட்டணம் : Rs 6,000/-

COMPUTERISED ACCOUNTING
Information Technology, Dos, Windows, Ms Excel, Any One Of The Following Accounting Packages
ACCPAC PLUS, QUICK BOOKS, M.Y.O.B
காலம் : 3 மாதம் கட்டணம் : Rs 5,000/-

For Further Details Please Contact,
Suganthan or Sanjay ☎ 074 - 517390

U.K. CERTIFICATE WILL BE ISSUED ON REQUEST
INSTITUTE OF INFORMATION SYSTEMS
IIS 4C, First Floor, Fussels Lane, Colombo - 6.
Opposite Wellawatta Market - Near Galle Road

றெறாசோ ஷிப்ஸ்
(TERRAZZO CHIPS)
★ கலர்பவுடர் (Pigments)
(Holland, Germany)
★ வெள்ளை சீமெந்து (Asano)
ரூபா 9/- க்கு மேல்
றம்சன்ஸ்
443, பழைய சோனகத் தெரு,
கொழும்பு – 12.
தொலைபேசி – 431511, 434411

BRIGHT ன் தபால் மூலம் கல்வித்திட்டம்
மூன்றே மாதங்களில்
ஆங்கிலம்/சிங்களம் பேச, எழுத,
வாசிக்க கற்றுத்தரப்படும்
விபரங்களுக்கு கீழ்காணும்
விண்ணப்பத்துடன் தொடர்பு கொள்க
பெயர்: ........................
விலாசம்: ........................
BRIGHT TRAINING CENTRE
S-27, FIRST FLOOR, P.O. BOX. 162,
COLOMBO CENTRAL SUPER MARKET COMPLEX
COLOMBO 11. TEL: 434770

மனோதத்துவ வைத்தியம்
பிரபல மனோதத்துவ நிபுணர்
Dr. P. ஆறுமுகம் அவர்களை
கீழ்காணும் இடங்களில் சந்திக்கலாம்.
கல்முனை T. M. M. ரில் செப்டம்பர் 13, 14, 15, 16ம் திகதிகளிலும்
(கல்முனை T.P. 065-29329)
ஓட்டமாவடியில் செப்டம்பர் 6, 7ம் திகதிகளில்
Dr. முகைதீன் டிஸ்பென்சரி, ஓட்டமாவடி
கொழும்பில் அகமட் டூரிஸ்ட் இன்னில்
செப்டம்பர் 20 முதல் 30 வரையும் சந்திக்கலாம்.
கொழும்பில் முன்கூட்டியே பதிவு செய்யலாம்.
கொழும்பு நாட்களில் மட்டும் - 078/71101
போன் : 436383, 438390

தொழில் வாய்ப்புக்கள் நிறைந்த கம்ப்யூட்டர் பயிற்சி நெறி



தேசிய (NCCA, NIBM) சர்வதேச (ACS, IDPM) கம்பியூட்டர் பயிற்சி நெறிகளுக்கு இது ஓர் முன்பள்ளியாகும்.
மொழி மூலம் : தமிழ், ஆங்கிலம்.
Certificate In Computer Studies
காலம் : 3 மாதம் கட்டணம் : 1950.00
விண்ணப்ப முடிவு திகதி : 15-09-1997.
Certificate In Typesetting
காலம் : 3 மாதம் கட்டணம் : 4000.00
Internet & E-Mail Training Course
காலம் : 1 மாதம் கட்டணம் : 950.00
எமது ஏனைய சேவைகள் :-
○ தவணைக் கட்டண வசதிகள் உள்ளன.
○ கம்பியூட்டர் விற்பனை, பராமறித்தல், பழுது பார்த்தல்.
தரமான சேவை · நயமான கட்டணம்
MICS 36, Second Cross Street, Puttalam.
☎ 032 - 65370. E-Mail : Infak@slt.lk




படிப்பகம்

www.padippakam.com



# 'ஜயசிக்குறுய்' நகர்வும் – இலக்கும்!

## கணிப்பை பொய்யாக்கும் களம்

**ஆ**கஸ்ட் 19 செவ்வாய்க்கிழமை புளியங்குளத்தை கைப்பற்றும் பாரிய படைநகர்வு மீண்டும் ஆரம்பமானது. ஐந்து நாட் சண்டையில் ஒரு கிலோமீட்டர் தூரம்வரைதான் படையினரால் முன்னேற முடிந்தது.

புளியங்குளம் ரயில் நிலையப் பகுதியை அண்டியதாக நிலைகொண்டிருந்த 'ஜயசிக்குறுய்' படையினர் சனி, ஞாயிறு, திங்கள் ஆகிய மூன்று நாட்களும் ஓய்வெடுத்தனர்.

அந்த மூன்று நாட்களும் பாரிய மோதல்கள் இடம்பெறவில்லையாயினும் புலிகள் மோட்டார் ஷெல் தாக்குதல்களை நடத்திக்கொண்டிருந்தனர்.

மீண்டும் 26.08.97 செவ்வாய்க்கிழமை புளியங்குளம் ரயில் நிலையத்தை அண்டி நிலைகொண்டிருந்த 'ஜயசிக்குறுய்' படையினர் தரை நகர்வு முயற்சியில் இறங்கினர்.

புலிகளின் பதிலடி காரணமாக தரை நகர்வு முயற்சி கடும் தடையைச் சந்தித்தது. படையினரின் முன்னரங்க நிலைகள் நோக்கி புலிகள் ஏவிய மோட்டார் எறிகணைகள் பறந்து வந்து கொண்டிருந்தன.

முன்னேறிய படையினர் நடுவே எறிகணைகள் விழுந்து வெடித்துக் கொண்டிருந்தமையால் தரை நகர்வை கைவிட்டு தற்காப்புத் தேடவேண்டிய கட்டாயம் ஏற்பட்டுவிட்டது. அதனால் புறப்பட்ட இடமான புளியங்குளம் ரயில் நிலைய பகுதிக்கே படைகள் திரும்பின. இரண்டு டாங்கிகள் சேதமடைந்தன.

26.08.97 செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற தரைநகர்வு முயற்சியில் படையினர் எட்டுப்பேர் பலியானார்கள். 124 பேர் காயமடைந்தனர் என்று இராணுவத் தரப்புடன் தொடர்புள்ள வட்டாரங்கள் செய்தி தெரிவித்துள்ளன. புலிகள் தரப்பு செய்தியின்படி படையினர் தரப்பில் 25 பேர் பலியானதாகவும், தமது தரப்பில் 10 பேர் பலியானதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புளியங்குளத்தை கைப்பற்றுவதற்கு நீண்ட நாட்களும், அதிக பலப்பிரயோகமும் செலவிடப்பட்டுள்ளன. இதனால் புளியங்குளத்தை கைப்பற்றுவது என்பதை புலிகளின் கேந்திர நிலையொன்றை கைப்பற்றும் காரியமாக படைத்தரப்பினர் சித்தரிக்க வேண்டியிருக்கிறது.

வவுனியா-யாழ் தரைப்பாதையை கிளிநொச்சிவரை கைப்பற்றவேண்டுமானால் கிட்டத்தட்ட 71 கிலோமீட்டர் தூரம் படைகள் செல்லவேண்டும். அந்த 71 கிலோமீட்டரில் புலிகளின் எதிர்ப்பு இன்றி ஓமந்தை வரையான 10 கிலோமீட்டர் தூரத்தை சென்றடைந்தனர்.

எனவே யாழ் வவுனியா சாலையில் 61 கிலோமீட்டர் தூரத்தையும், புளியங்குளத்தில் இருந்து நெடுங்கேணியை இணைக்கும் 20 கிலோமீட்டர் தூரத்தை குறுக்காகவும் கைப்பற்றுவதே 'ஜயசிக்குறுய்' படைகளின் இறுதி இலக்காகும்.

**இலக்கை எட்டி, கைப்பற்றிய பகுதிகளில் நிலைகொள்ள வேண்டுமானால் மொத்தம் 90 கிலோமீட்டர் பரப்பளவில் படையினரின் பலம் முடங்கியிருக்க வேண்டும்.**

'ஜயசிக்குறுய்' படையினரின் தற்போதைய ஆட்பலம் அதற்கு போதுமானதல்ல.

புலிகளின் பலம் தொடர்பாக செய்யப்பட்ட அலட்சிய மதிப்பீடுதான் 'ஜயசிக்குறுய்' படை நடவடிக்கையை ஆரம்பிக்க தூண்டுகோலாக இருந்தது.

'ரிவிரெச', 'எடிபல' என்னும் இரண்டு பாரிய தரை நகர்வுகளை படையினர் மேற்கொண்டிருந்தனர். 'ரிவிரெச'வுக்கு புலிகளிடமிருந்து முதலில் மூர்க்கமான எதிர்ப்பு கிளம்பியிருந்தது.

ஆனால் வடக்கு-கிழக்கு யுத்தத்தில் அதுவரை இல்லாதளவுக்கு படைக்கல பிரயோகத்தை படையினர் மேற்கொண்டபோது புலிகள் அடையாள எதிர்ப்பை காட்டியவாறு தமது தளத்தை வன்னிக்கு மாற்றிக்கொண்டனர்.

**டாங்கிகளும், கவசவாகனங்களும், ஆட்டிலெறிகளுமே யாழ் குடாநாட்டுப் போரில் படையினரின் முன்னேற்றத்திற்கு பேருதவி புரிந்தன.**

யாழ் குடாநாட்டு போரில் படைத்தரப்பின் ஆட்பலம் களச் சண்டைகளில் இரண்டாம் பட்சமானதாகவும், கனரக படைக்கலப் பலமே பிரதானமானதாகவும் இருந்தது.

ரிவிரெசவுக்கு தலைமை தாங்கிய தளபதிகளில் ஒருவரான ஜானக பெரேரா, "ஆட்டிலெறிப் பிரயோகமே 'ரிவிரெச'வுக்கு பெரிதும் உதவின" என்று கூறியிருந்தார்.

**வவுனியாவில் இருந்து ஆரம்பமான 'எடிபல' மன்னாரை நோக்கி நகர்ந்தது. 'எடிபல' நகர்ந்த பாதையின் தரையமைப்பு புலிகளின் கெரில்லா எதிர்த்தாக்குதலுக்கு சாதகமாக இருக்கவில்லை. அதுதவிர, 'எடிபல' இராணுவ நடவடிக்கை மூலம் கைப்பற்றப்பட்ட பகுதிகளும் புலிகளுக்கு முக்கியத்துவம் உள்ள பகுதிகளாகவும் இருக்கவில்லை.**

உள்ளூராட்சி தேர்தலை முன்னிட்டு நடத்தப்பட்ட ஒரு இராணுவ நடவடிக்கையாகவே 'எடிபல' அமைந்திருந்தது.



சாதகமற்ற தரையமைப்பில், முக்கியத்துவமற்ற பகுதிகளை தக்கவைக்க தமது பலத்தை விரயமாக்கி சண்டையிட தேவையில்லை என்று புலிகளின் அணிகள் ஒதுங்கிக் கொண்டன.

ஆனால் 'ரிவிரெச'வும், 'எடிபல'வும் தாங்கள் குறித்த இலக்கை எட்டியதால் புலிகளின் பலம் தொடர்பாக குறைத்து மதிப்பிட்டதுடன், வன்னியின் புவியியல் சூழலையும் கணக்கில் எடுக்காமல் விரைவான வெற்றி பற்றிய கனவுடன் 'ஜயசிக்குறுய்' நடவடிக்கையில் குதித்தனர் படையினர்.

டாங்கிகள், ஆட்டிலெறிகள் சகிதம் அதிகளவான ஆட்பலத்துடன் முன்னேறினால் வெற்றி உறுதி என்ற சூத்திரத்துடன் படையினர் களத்தில் இறங்கினர்.

'ஜயசிக்குறுய்' படையினரின் பிரதான நோக்கங்கள் பின்வருமாறு:

**1. புலிகளின் வன்னித் தளத்தின் இதயமான முல்லைத்தீவை புவியியல் முற்றுகைக்கு உள்ளாக்குவது.**

**2. புலிகளின் பலத்தை வன்னியில் குவியச்செய்து புலிகளின் அணிகளை சண்டைக்கிழுத்து அவர்களது ஆட்பலத்தை அழிப்பது.**

**3. வடபகுதிக்கான படை விநியோகத்துக்கான தரைப்பாதையை திறப்பது.**

**4. 'ஜயசிக்குறுய்' படை நடவடிக்கை வெற்றியை அரசியல் மூலதனமாகக்கொண்டு தென்னிலங்கையில் அரசின் செல்வாக்கை உயர்த்துவது.**

**5. புலிகளின் பலம் வன்னியில் பெருமளவு அழிக்கப்பட்டு புலிகள் ஓரம்கட்டப்பட்ட பின்னர், எதிர்ப்புக்காட்டத் தயங்கும் தமிழர் தரப்பு முன்பாக தமக்கு தோதான தீர்வுத்திட்டம் ஒன்றை முன்வைப்பதும், அதன்மூலம் உள்நாட்டிலும், உலக அரங்கிலும் பாராட்டுப் பெறுவது.**

மேற்கண்டவற்றில் முதல் மூன்றும் இராணுவ நோக்கங்களாகும். மிகுதி இரண்டும் ஆளும் தரப்பின் அரசியல் நோக்கங்களாகும். இராணுவ நோக்கங்கள் நிறைவேறுவதில்தான் அரசியல் நோக்கங்களின் வெற்றி தங்கியிருக்கிறது.

ஜயசிக்குறுய் ஆரம்பமாகி செப்டம்பர் நாலாம் திகதியுடன் 114 நாட்களாகிவிட்டன. 'ஜயசிக்குறுய்' இராணுவ நடவடிக்கையின் நோக்கங்களில் ஒன்றுகூட நிறைவேறவில்லை.

'ஜயசிக்குறுய்' நடவடிக்கையின் இராணுவ நோக்கங்களுடன் ஒப்பிட்டால், புளியங்குளத்தை கைப்பற்றுவது என்பது ஒரு மைல்கல்லாக கொள்ளப்படலாமே தவிர, அதுவே பிரதான வெற்றி என்று கொள்ளப்பட முடியாது.

ஆனால் புவியியல் நிலை, புலிகளின் மனோபலம், தாக்குதல் திறன், படையினரிடமிருந்து புலிகளிடம் சென்றுள்ள ஆட்டிலெறிகள், மோட்டார்கள், போதுமான எறிகணைகள், டாங்கி எதிர்ப்பு ஆயுதங்கள் என்பவை கொடுத்துள்ள படைக்கலப் பலம் என்பவற்றால் களநிலவரம் படையினரின் கணிப்புக்கு மாறாகிவிட்டது.

**இந்த உண்மையை ஒப்புக்கொள்வது தமது பலவீனமாகக் கருதப்படும் என்பதால், புளியங்குளத்தை கைப்பற்ற மேற்கொள்ளும் கடினமான முயற்சிகளுக்கு 'அது தமது கேந்திர நிலை என்பதால் புலிகள் கடுமையாக எதிர்க்கிறார்கள்' என்று படைத்தரப்பு பேச்சாளர் காரணம் கூறவேண்டியிருக்கிறது.**

ஆனால், புளியங்குளத்தை படையினர் கைப்பற்றினால்கூட அதற்கடுத்த கட்டமாக மேற்கொள்ளவேண்டிய நகர்வுகளுக்கு புலிகள் காட்டும் எதிர்ப்பு மேலும் உக்கிரமாகவே இருக்கும். ஏனெனில் புவியியல் அமைப்பு மேலும் செல்லச் செல்ல கெரில்லாக்களுக்கு சாதகமானதாக மாறிக்கொண்டிருக்கும்.

**படையினர் பிரதானமாக நம்பியிருந்த டாங்கிகள் வன்னிக் களத்தில் எதிர்பார்த்த பயன்கொடுக்கவில்லை. யாழ்குடா நாட்டில் கடகடவென்று உருண்டு சென்ற டாங்கிகள் வன்னிக் களத்தில் ஆமைபோல நகர்கின்றன.**

யாழ்குடாநாட்டு புவியியல் அமைப்புக் காரணமாக முன்னேறும் படைகளை நெருங்கி டாங்கிகளைக் குறிவைத்து தாக்க புலிகளால் இயலாமல் போனது.

ஆனால், வன்னியில் நகரும் படைகளின் பக்கவாட்டில் அடர்காடுகளின் மறைப்புக்குள் புலிகளின் அணிகள் நெருங்கி நிற்கின்றன. படை நகரும் தடம் அறிந்து தாக்குகின்றன.

டாங்கிகளை ஆர்.பி.ஜி. ரொக்கட் லோஞ்சர்களால் புலிகள் தாக்குவதாக கூறப்படுகிறது. ஆனால் ஆர்.பி.ஜி. ரொக்கட் லோஞ்சர் மட்டுமல்ல, டாங்கிகளை தகர்த்தெறியக்கூடிய டாங்கி எதிர்ப்பு கிரனைட் லோஞ்சர்களையும் புலிகள் பயன்படுத்துகின்றனர்.

அத்தகைய கிரனைட் லோஞ்சர்களில் பெரும்பாலானவை 'ஜயசிக்குறுய்' படைகள் மீதான ஊடறுப்பு யுத்தங்களில் புலிகளால் எடுத்துச் செல்லப்பட்டவையாம்.

ஆட்டிலெறிகளின் உபயோகமும் நினைத்த பலனை கொடுக்கவில்லை.

படையினரின் ஆட்டிலெறி வீச்சுக்கள் தான் அவர்களின் பிரதான பலங்களில் ஒன்று என்பதால், அவற்றில் இருந்து தப்பிக்கொள்ளக்கூடிய பாதுகாப்பு அரண்கள் துரிதகதியில் புலிகளால் நிர்மாணிக்கப்பட்டன.

**எனவே டாங்கிகளையும், விமானப் படையினரையும் நம்பியே 'ஜயசிக்குறுய்' படையினரின் தரைநகர்வு முயற்சிகள் முன்னெடுக்கப்படவேண்டியுள்ளன.**

ஆனால், விமான எதிர்ப்பு ஆயுதங்கள் புலிகளிடம் இருப்பதால் விமானப்படை விமானங்கள் தாழப்பறந்து இலக்குகளை துல்லியமாக அறிந்து குண்டு வீசுவது இயலாமல் இருக்கிறது. விமான எதிர்ப்பு ஏவுகணைகள் எட்ட முடியாத உயரத்தில் பறந்தபடி இலக்குகளை கண்டறிந்து தாக்குவது முடியாத காரியம்.

விமானப் படையினர் மத்தியிலும் தயக்கங்கள் தோன்றியிருக்கின்றன. கொண்டு செல்லும் குண்டை போட்டுவிட்டு வந்தால் போதும் என்று எங்காவது தள்ளிவிட்டு வந்துவிடக் கூடும். வன்னியில் தேவாலயங்கள்மீது குண்டுகள் போடப்பட்டதும் அவ்வாறுதானோ என்று தோன்றுகிறது.

**புலிகளின் விமான எதிர்ப்பு ஏவுகணையில் தப்பிவந்ததாகக் கூறிய விமானப் படையினருக்கு பாராட்டு விழா நடத்தினார்கள். விமானப் படையினருக்கு உற்சாகம் கொடுத்தாகவேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருப்பதையே அது காட்டுகிறது. இந்நிலையில் குறி தவறிய குண்டுவீச்சுக்கள் பற்றி உண்மையான விசாரணை நடத்துவதோ, நடவடிக்கை எடுப்பதோ சாத்தியமான விடயங்கள் அல்ல என்பதையும் கவனத்தில் கொள்ளவேண்டும்.**

'ரிவிரெச', 'எடிபல' இரண்டிலும் படையினர் நிலைகொண்ட பின்னர் தமது அரண்களை வலுப்படுத்த முடிந்தது. 'பண்ட்' கட்டும் தந்திரம் மூலமாக யாழ் குடாநாட்டில் புலிகளின் ஊடுருவலை படையினர் தடுத்துக் கொண்டிருக்கின்றனர்.

ஆனால் வன்னிக் களம் காடு சார்ந்த களம் என்பதால் 'பண்ட்' கட்டினாலும் புலிகள் அவற்றை உடைத்துக்கொண்டு உட்புகக்கூடியதாக இருக்கும்.

எனவே- முன்னேறும்போது மட்டுமல்லாமல், நிலைகொண்டிருக்கும்போதும் புலிகளின் தாக்குதலுக்கு முகம் கொடுத்தாக வேண்டிய களமாக இருக்கிறது.

**புலிகளைப் பொறுத்தவரை படையினரின் ஒவ்வோர் அடிவைப்பையும் கடுமையாக எதிர்த்து நிற்க கங்கணம் கட்டியுள்ளனர்.**

படைகளை முன்னேற அனுமதித்துவிட்டு, அடர்ந்த காட்டுப்பகுதிகள் சார்ந்த களத்தில் வைத்து தாக்காமல், முன்னேறும் படைகளை எதிர்த்து புலிகள் ஏன் போரிடுகிறார்கள்? என்ற கேள்வி எழலாம். அதாவது பொறிவைக்கும் தந்திரத்தை மேற்கொள்ளாமல், முன்னேறும் படைகளுடன் பொருதுவதால் என்ன இலாபம்? என்று கேட்கலாம்.

முன்னேறும் படைகளை எதிர்த்து சண்டையிடுவதால் ஆட்பலத்தையும், படைக்கலப் பலத்தையும் மட்டும்தான் அழிக்கலாம்.

பொறிவைத்து தாக்குவதால் ஆட்பலத்தை அழிப்பதோடு படைக்கலங்களையும் கைப்பற்றலாம்.

ஆனால் படையினரை தமது தளப்பகுதியை முற்றுகையிட அனுமதிப்பதாலும், தரைப்பாதை திறக்க அனுமதிப்பதாலும் அரசியல், இராணுவரீதியில் புலிகளுக்கு சில பாதகங்கள் ஏற்பட்டே தீரும்.

வன்னியில் உள்ள மக்களுக்கு அரசு வலைவீசலாம். வடபகுதி இராணுவ முகாம்களுக்கான விநியோகத்தை சீராக்கலாம். புலிகளின் தளப்பகுதிக்கு அச்சுறுத்தல் விடுத்துக்கொண்டே இருக்கலாம். புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேச அளவு குறுக்கப்பட்டுவிடும்.

**மிக முக்கியமாக படையினரை சுலபமாக முன்னேற அனுமதித்தால் படையினரின் உளவியல் பலமும் உற்சாகமும் பன்மடங்காகிவிடும். அது போரில் பிரதிபலிக்கும்.**

சேதமே இல்லாமல் படையினர் முன்னேறி நிலைகொண்டால் ஆட்பலம், ஆயுத தளபாடபலம் என்பவையும் உயர் நிலையில் இருக்கும்.

அவ்வாறான நிலையில் பொறிவைத்து தாக்குவது என்பது கடினமான காரியமாகிவிடும். பலத்த சக்தியை பிரயோகித்தே புலிகளின் அணிகள் சண்டையிட வேண்டியிருக்கும்.

சுலபமான வெற்றியைக் காட்டி புலிகளின் பலம் என்று ஒன்றும் கிடையாது என்று கூறி அரசியல் ரீதியில் புலிகளை ஓரம்கட்டவும் அரசுக்கு வாய்ப்பு ஏற்படும்.

எனவேதான் முன்னேறும் படையினரை தடுத்து நிறுத்துவதிலும் புலிகள் தமது பலத்தை செலவிட வேண்டியிருக்கிறது.

உதாரணமாக, புலிகளின் எதிர்ப்பையும் மீறி புளியங்குளத்தை படையினர் கைப்பற்றிவிட்டாலும்கூட புலிகளின் எதிர்ப்பின்றி கைப்பற்றுவதைவிட, கடும் எதிர்ப்பின் பின்னர் கைப்பற்றுவதில் படையினருக்கு பாதகமான அம்சங்கள் உள்ளன.

அந்தப் பாதகமான அம்சங்கள் பின்வருமாறு:

1. ஆட்பல இழப்புக்கள்.
2. படைக்கல இழப்புக்கள்.
3. கடும் சண்டை காரணமாக களைப்பு, சோர்வு.
4. வன்னியில் நீண்டகால முடக்கத்தால் ஏனைய பகுதிகளில் புலிகளின் பரம்பலை தடுக்கும் நடவடிக்கைகளுக்கு படைபலம் போதாமை.
5. புலிகளின் தொடர் ஊடறுப்புக்களால் ஏற்பட்டுள்ள உளவியல் தாக்கங்கள்.

'ஜயசிக்குறுய்' படைகளை எதிர்த்து இதுவரை நடைபெற்ற சண்டைகள் ஊடாக புலிகளுக்கும் ஆட்பல இழப்புக்கள் ஏற்பட்டுள்ளன. நிச்சயமாக அந்த இழப்புக்கள் புலிகளுக்கு தாக்கம் உடையவைதான்.

ஆனால் 'ஜயசிக்குறுய்' படையினரை வன்னிக்களத்தில் சுலபமாக முன்னேற அனுமதித்துவிட்டு பின்னர் சண்டையிடுவதென்றால், மனோபலம், படைக்கலம் நிலையாய் உள்ள படையினருடன் ஏற்படும் மோதல்களில் பாரிய ஆட்பல இழப்பு ஏற்பட்டிருக்கும்.

இதுவரை நடைபெற்ற 'ஜயசிக்குறுய்' படையினருடனான சண்டைகளில் புலிகளுக்கு ஏற்பட்டுள்ள சாதகங்கள் பின்வருமாறு:

1. **மரபுப் படையை எதிர்த்து சண்டையிடுவதில் அனுபவம்.**
2. **ஒவ்வொரு சண்டையிலும் படையினரை தடுத்து நிறுத்தக்கூடியதாக இருந்தமையால் புலிகளின் அணிகளுக்கு ஏற்பட்டுள்ள தன்னம்பிக்கை.**
3. **ஊடறுப்பு சமர்கள் மூலம் பெற்றுள்ள உற்சாக மனநிலை.**
4. **டாங்கி எதிர்ப்பு மற்றும் கனரக படைக்கலப் பிரயோகத்தை எதிர்கொள்ளும் போர்முறையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம்.**
5. **ஊடறுப்புக்களில் கைப்பற்றப்பட்ட நவீன ஆயுதங்கள், எறிகணைகள் மூலமாக மரபுச் சண்டைக்குரிய படைக்கல சக்தி.**
6. **படையினரை களைக்க வைத்திருப்பதும், பலத்த சேதங்களை உருவாக்கியுள்ளமையும்.**
7. **புலிகளை புறக்கணித்துவிட்டு அரசியல் தீர்வு காணமுடியாது என்பதை அரசு மறுக்கமுடியாமல் உள்ளது.**

எனவே புளியங்குளத்தை படையினர் கைப்பற்றினாலும் சரி, நகர்வுகளை முன்னெடுத்தாலும் சரி 'ஜயசிக்குறுய்' ஆரம்பித்தபோது படைத்தரப்பில் இருந்த பலமும், மனோநிலையும் குறைவடையச் செய்வதில் புலிகள் வெற்றி பெற்றுள்ளனர்.

**அந்த வெற்றியானது படையினரை நோக்கிய மேலும் உக்கிரமான தாக்குதலுக்கு புலிகள் உந்துதலாகக் கொள்வர்.**

எனவே புளியங்குளத்தைவிட பாரிய களங்களாகவே வன்னியில் இனிவரும் களங்கள் அமையும் என்பது திண்ணம்.

புளியங்குளத்தை கைப்பற்றுவதை பெரிய வெற்றிப் பிரசாரமாக முன்னெடுக்கலாம். ஆனால் 'ஜயசிக்குறுய்' நடவடிக்கையின் அரசியல், இராணுவ நோக்கங்கள் என்று பார்த்தால் இதுவரை கிடைத்தது கையளவு என்ற நிலைதான் களநிலவரம்.

**நாரதர்**

### முகப்பில்

முரசின் முகப்பில் உள்ள படம் புளியங்குளம் சண்டையில் புலிகளால் தாக்கப்பட்ட டாங்கி ஒன்று எரியும் காட்சியாகும்.

# அதிரடி அப்பாத்துரை



**நல்லைக் கந்தன்** திருவிழா கோலகலமாக நடந்து முடிஞ்சுபோச்சு. வழக்கமாக திருவிழாக் கூட்டத்தில் திருடர்களும் கலந்திருப்பார்களோ என்று ஒரு கண்வைத்திருப்பதுண்டு. இம்முறை பக்தர்கள்மீதும் பச்சைத்தரப்பார் பல கண் வைத்திருந்தவையாம். அர்ச்சனைத் தட்டுகளும் துருவப்பட்டனவாம். நாலு திக்கும் தடைபோடப்பட்டு சோதனையின் பின்னரே அனுமதியாம். ஆயுதங்களுடன் ஒவ்வொருவராக போய் ஒன்று திரண்டு விட்டால் என்ன செய்வது என்ட முன் எச்சரிக்கையாம். திருவிழாவில் பெண் பக்தர்கள்தான் அதிகமாம். சரிபாருங்கோ கந்தனிடம் என்ன கேட்டிருப்பினம் பக்தர்கள்? "சோதனைமேல் சோதனை போதுமடா சாமி!" என்னதான் சோதனை இருந்தும் ஒருத்தர் மட்டும் ஆயுதத்துடன் உலா நடத்தினாராம். யார் எண்டு கேட்கிறியளோ? சாட்சாத் கந்தன்தான். கையிலே வேல்.

**இம்முறை நல்லூர் திருவிழாவில்** பச்சை உடை அதிகாரிகள் வேட்டி சகிதம் கலந்துகொண்டவையாம். கண்டி நடனமும் நடந்ததாம். கலாசார பரவல்தான். எல்லாம் கிடக்க, பொயிண்டுகளில் நிண்டவர்களுக்கு நல்லாப் பொழுது போச்சுதாம். சின்னதாக கிண்டல்களும் இடம் பெற்றதாம். கண்டல்கள் கேட்டிருப்பினமாக்கும்.

**குடாநாட்டில்** நீதி வழங்கும் ஒருவர் எதற்கெடுத்தாலும் இரண்டாயிரம் ரூபா அபராதம் விதிக்கிறாராம். சோடா களவெடுத்துப் பிடிபட்ட சிலருக்கும் தலா இரண்டாயிரம் அபராதமாம். உப்பளத்தில் உப்பைக் களவாக அள்ளியவருக்கும் ரூபா இரண்டாயிரம் அபராதமாம். மனுசன் வாயைத் திறந்தால் இரண்டாயிரத்துக்கு ஒரு சதம் குறையாது எண்டு பேச்சாம்.

**திருவான மலையில் நகரத் தலைவரை** ஒரு கைபார்க்க வேணும் எண்டு, அவர் முன்னர் இருந்த கட்சியினர் தீர்மானம் செய்துள்ளார்களாம். கடந்தவாரம் அங்கு நடந்த இரகசியக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டதாம். ஏற்றக்கூடாதவர்களை ஏற்றிவைப்பானேன்? பின்னர் இறக்கிவைக்க முடியாமல் இடறுப்படுவானேன்?

**மாப்பிள்ளைப் பொடியன்** கொழும்பில் இருந்து கூறைச் சேலையும், தாலிக்கொடியும் கைகளில் ஏந்தி வவுனியா புறப்பட்டாராம். அங்குதான் மணமகள் இருக்கிறாவாம். தலைநகர சோதனை அரணில் சோதனை போட்டவர்களுக்கு சந்தேகம் வந்திட்டுது. "இரண்டெழுத்தாருக்கோ கொண்டு போகிறீர்?" எண்டு கேட்டிருக்கினம். மாப்பிள்ளை சளைக்காமல் கொடுத்த விளக்கம் சரிப்பட்டுவரவில்லை. மாமியார் வீட்டுக்கு கொண்டுபோய் வைக்கப்போட்டினம். அதாகப்பட்டது கம்பிக்கு பின்னால் போட்டுட்டினம். பின்னர் உண்மையான மாமியார் வீடான மணமகளின் பெற்றோர் மணமகனை தேடியிருக்கினம். உள்ளே இருப்பது தெரியவர பழக்கமான பெரிய அதிகாரி ஒருவருடன் பேசி மணமகனை மீட்டெடுத்தவையாம். கூறைச்சேலை, தாலிக்கொடிக்கும் இரண்டெழுத்தாருக்கும் என்ன சம்பந்தம்? விழிப்பாக இருக்கலாம். இப்படி பழிப்பாக நடக்கலாமோ?

**கொழும்புக்கு புதிதாக வரும்** எங்கள் ஆட்களுக்கு பல விதமான புது அனுபவங்கள் ஏற்படுவதுண்டு. சமீபத்தில் நண்பரின் மனைவி ஒருத்தருக்கு ஏற்பட்ட அனுபவம் இது: சந்தைக்கு மீன் வாங்கப்போய் விலை கேட்டிருக்கிறா. நூறு ரூபா எண்டு சொல்லப்பட்டது. மனுசிக்கு கொள்ளாத சந்தோசம். "போடு ஒரு கிலோ" எண்டாவாம். போடப்பட்டது. நூறு ரூபாவை நீட்டியிருக்கிறா. "என்ன இது? இரு நூறு ரூபா தரவேணும்" எண்டதும் மனுசிக்கு புரியேல்லை. "நூறு ரூபாய் எண்டுதானே சொன்னனீர்?" எண்டாவாம். "அது அரைக்கிலோ விலை" எண்டாராம் மீன் வியாபாரி. மனுசிக்கு தலை சுற்றிப்போட்டுது. மூச்சுக் காட்டாமல் நீட்டிப்போட்டு வந்திட்டுது. ஒரேயடியாக விலையைச் சொல்லி பயமுறுத்தாமல் அரைக்கிலோவுக்கு விலை சொல்லுறதுதான் கொழும்பு மீன் வியாபாரிகளின் வியாபார தந்திரமுங்கோ. தெரியாமல் கிலோக் கணக்காக வாங்கிப்போட்டு முழிக்கக்கூடாது.

**சந்தனக் கடத்தல் வீரப்பன்** காட்டில் இருந்தாலும் இலங்கைப் பிரச்சனையை அக்குவேறு ஆணிவேறாக தெரிஞ்சு வைத்திருக்கிறானாம். வீரப்பன் புத்தகங்களும் படிப்பதுண்டாம். வீரப்பன் படிக்கும் புத்தகங்களின் பட்டியல்: 'மகாபாரதம்', 'இராமாயணம்', நெடுமாறன் எழுதிய 'பிரபாகரனின் கதை'.

**டயானாவை ஒரு யானை** என்றால் நம்புவியளோ? யானை இருந்தாலும் ஆயிரம் பொன். இறந்தாலும் ஆயிரம் பொன். டயானா இருக்கும் போதும் அவரை எடுத்த இரகசியப் படங்களுக்கு செம கிராக்கி. இறக்குமுன் காரில் ஏறும்போது எடுத்த படத்துக்கும் பயங்கரவிலையாம். எந்த அலைவரிசையை திருப்பினாலும் டயானாவின் மரணச் செய்தியும், மலரும் நினைவுகளும் பார்க்க முடிந்தது. எங்கள் நாட்டு ரி.வி. வானொலியும் புளியங்குளத்தைப் பற்றி சொல்லிச் சொல்லி புளிச்சுப்போன வாயால் டயானா புராணம் பாடியதும் புதுமையாக இருந்தது. கிளிண்டன் முதல் எங்கள் மேடம்வரை அனுதாபச் செய்தி விட்டவை. ஏனோ தெரியாது தமிழ்க் கட்சிகள் மட்டும் நல்லதோர் அனுதாப அறிக்கைவிடும் சந்தர்ப்பத்தை கைநழுவ விட்டுப்போட்டினம். அதுவும் புதுமைதான்.

**இவ்வாரப் பொன் மொழி:** டும் டும். டும்

**"கடன் கொடுத்தவனுக்கு<br>கோபம் கூடாது!<br>கடன் வாங்கியவனுக்கு<br>ரோசம் கூடாது!"**



படிப்பகம்

www.padippakam.com

## அரசியல் தொடர்



அற்புதன் எழுதுவது

# பொதுப்பட்டியலுக்குள் போட்டி கூட இருந்தே வெட்டிய குழி!

ஈரோஸின் வெகுஜனப் பிரிவான ஈழவர் ஜனநாயக முன்னணி சார்பாக நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்கள் அனைவருக்கும் புலிகள் எச்சரிக்கை கடிதம் அனுப்பியிருந்தனர்.

ஈழவர் ஜனநாயக முன்னணியின் பட்டியலில் போட்டியிட்ட ஈரோஸ் உறுப்பினர்கள் சிலர் தவிர ஏனையோர் போட்டியிலிருந்து விலகுவதாக அறிவிக்கத் தொடங்கிவிட்டனர்.

இக்கட்டத்தில்தான் பிரபாவின் பிரதிநிதியாக ஈரோஸ் தலைவர் பாலகுமாரை சந்தித்தார் பொட்டம்மான். புலிகளின் யாழ் மாவட்ட இராணுவத் தளபதியாக அப்போது இருந்தவரும் பொட்டம்மான்தான்.

'தேர்தலில் போட்டியிடலாம்' என்று பிரபா பச்சைக்கொடி காட்டிய பின்னரும் எச்சரிக்கைக் கடிதம் அனுப்பப்பட்டிருக்கிறதே?' என்று பொட்டம்மானிடம் கவலை தெரிவித்தார் பாலகுமார்.

"நாடாளுமன்றத் தேர்தலில் ஈரோஸின் பெயரில் புலிகள் போட்டியிடுவதாக ஏனைய இயக்கங்கள் பிரசாரம் செய்துவருகின்றன. அதனால்தான் எச்சரிக்கைக் கடிதங்கள் அனுப்பியதோடு, தேர்தலில் போட்டியிடுபவர்கள் துரோகிகள் என்றும் புலிகள் இயக்கம் அறிவிக்கவேண்டியும் ஏற்பட்டது. சில வாரங்கள் உங்கள் தேர்தல் வேலைகளை நிறுத்திவையுங்கள். நாங்கள் எங்கள் முடிவை தெரிவிக்கிறோம்." என்றரீதியில் தமது நிலைப்பாட்டைக் கூறினார் பொட்டம்மான்.

அதன்பின்னர் கிட்டத்தட்ட ஒரு மாத காலமாக ஈரோஸின் தேர்தல் பிரசார நடவடிக்கைகள் ஒத்திவைக்கப்பட்டிருந்தன. புலிகளின் முடிவுக்காக ஈரோஸ் காத்திருந்தது.

சிறிலங்கா நாடாளுமன்றத் தேர்தலை தமது இயக்கம் நிராகரிப்பதாக புலிகள் விடுத்த அறிக்கைகள், வேட்பாளர்களுக்கு விடுக்கப்பட்ட எச்சரிக்கைகள், வேட்பாளர்களின் ராஜினாமாக்கள் பற்றிய செய்திகள் பத்திரிகைகளில் முக்கியத்துவம் இன்றியே வெளிவந்தன.

பத்திரிகைகளாக செய்த இருட்டடிப்பு என்று நினைத்துவிடவேண்டாம். இந்தியப் படையினரும், இந்தியத் தூதரக வட்டாரங்களும் தமது செல்வாக்கையும், அதிகாரத்தையும் பயன்படுத்தி முன்கூட்டியே செய்த ஏற்பாடு அது.

தேர்தலை பாதிக்கக்கூடிய செய்திகள் எதனையும் முக்கியத்துவம் கொடுத்து வெளியிடவேண்டாம் என்று தமிழ்ப் பத்திரிகைகளுக்கு முன்கூட்டியே கூறப்பட்டு விட்டது.

### தப்புக் கணக்கு

ஈரோஸின் பெயரில் புலிகள் தேர்தலில் போட்டியிடுவதாக ஈ.பி.ஆர்.எல்.எஃப். போன்ற இயக்கங்கள் விழுந்தடித்து பிரசாரம் செய்தன. ஆனால் இந்தியப் படையினரும், இந்திய அரசும் புலிகள் போட்டியிட்டால் போட்டியிடட்டும். அதுவும் நல்லதுதான் என்றே கருதினர்.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கம் ஒரு தப்பான கணக்குப் போட்டிருந்தது. தன் பலம், தன் எதிரியின் பலம் அறியாமல் போடப்பட்ட தப்பு கணக்காக அது அமைந்தது.

ஈரோசின் பட்டியலில் புலிகள் போட்டியிடுவதாக அம்பலப்படுத்திவிட்டால் மக்கள் வாக்களிக்கமாட்டார்கள் என்று ஈ.பி.ஆர்.எல்.எஃப். நினைத்து விட்டது.

ஈ.பி.ஆர்.எல்.எஃப்., ஈ.என்.டி.எல்.எஃப். இயக்கங்களின் நடவடிக்கைகள், இந்தியப் படையினரின் அத்துமீறல்கள் தொடர்பாக வடக்கு-கிழக்கில் மக்கள் கடும் அதிருப்தி கொண்டிருந்தனர்.

அந்த அதிருப்தியானது புலிகளுக்கு சார்பான ஆதரவு அலையாக மாறியிருந்தது. தங்கள் மீதான அடக்குமுறைகளை நேரடியாக எதிர்க்க முடியாத மக்கள், தம்மை அடக்குவோருக்கு எதிரான புலிகளின் தாக்குதல்களை மனதுக்குள் பாராட்டி வரவேற்றுக் கொண்டிருந்தனர்.

ஈரோசுக்கும் மக்களிடம் கெட்ட பெயர் இருக்கவில்லை. ஈரோஸ் பட்டியலில் புலிகள் போட்டியிடுகிறார்கள் என்று ஏனைய இயக்கங்களே பிரசாரம் செய்த போது, ஈரோசுக்கு இருந்த நல்ல பெயரும், புலிகளுக்கு இருந்த ஆதரவு அலையும் ஒன்று சேர்ந்துவிட்டது.

தமது பட்டியலில் புலிகள் இயக்க ஆதரவாளர்கள் போட்டியிடுவதையோ, தாம் புலிகளின் அனுமதியைப் பெற்றுக் கொண்டதையோ ஈரோஸ் பகிரங்கமாக கூறமுடியாமல் இருந்தது. அவ்வாறு கூறுவது தமக்கு சாதகம் என்றால்கூட, அவை இரகசியங்கள் என்பதால் வெளியிட முடியாத நிலையில் இருந்தது ஈரோஸ்.

ஈ.பி.ஆர்.எல்.எஃப்., ஈ.என்.டி.எல்.எஃப். போன்ற இயக்கங்கள் ஈரோசுக்கு குழிபறிப்பதாக நினைத்துக் கொண்டு செய்த பிரசாரங்கள் ஈரோசுக்கும் புலிகளுக்கும் உள்ள தொடர்பை மக்களுக்கு வெளிச்சம்போட்டு காட்டிவிட்டன. அதனால் ஈரோசுக்குத்தான் பலத்த சாதகம் ஏற்பட்டது.

தங்கள் பிரசாரம் மூலமாக தங்கள் தலையிலேயே ஏனைய இயக்கங்கள் மண் அள்ளிப்போட்டன. உண்மையில் ஈரோஸ் பட்டியலில் போட்டியிட்டவர்களுக்கு ஆதரவு தேடிக்கொடுத்த பெருமை ஈ.பி.ஆர்.எல்.எஃப்., ஈ.என்.டி.எல்.எஃப்., ரெலோ இயக்கங்களுக்கே சேரும்.

இப் பிரசாரங்களை இந்திய அரசு வேறு ஒரு கோணத்தில் பயன்படுத்திக் கொண்டது. வடக்கு-கிழக்கில் புலிகளும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுகிறார்கள் என்றால், அந்தளவுக்கு அங்கு ஜனநாயக சூழலை ஏற்படுத்தியிருக்கிறோம் என்று நினைக்கப்படட்டும் என்றே இந்திய அரசு கருதியது.

அதனால் ஈரோஸ் தேர்தலில் போட்டியிடுவதற்கு இந்திய அரசினதோ, இந்தியப் படையினதோ இடையூறுகளை ஏற்படுத்தலாம் என்று ஏனைய இயக்கங்கள் போட்ட கணக்கும் தப்புக் கணக்காகிப் போனது.



ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தால் கொல்லப்பட்ட ஈரோஸ் உறுப்பினர்கள்

### கிடைத்தது அனுமதி

சிறிலங்கா நாடாளுமன்றத் தேர்தல் 1989 பெப்ரவரி 15ம் திகதி நடைபெறவிருந்தது. (சென்றவாரம் 1988 என்று ஆண்டைத் தவறுதலாக குறிப்பிட்டுவிட்டேன்.)

தேர்தல் பிரசார நடவடிக்கைகளை இடைநிறுத்தி வைக்கும்படி ஈரோஸ் தலைவருக்கு புலிகள் கூறியிருந்தார்கள் அல்லவா.

தேர்தல் நெருங்கும் நேரத்தில் புலிகளிடமிருந்து மறுபடி ஈரோஸ் தலைவருக்கு தகவல் வந்தது.

"தேர்தல் வேலைகளைச் செய்யுங்கள். நாங்கள் இடையூறு செய்யமாட்டோம்" என்று தெரிவித்துவிட்டனர் புலிகள்.

மறுபடியும் தீவிரப் பிரசாரங்களில் குதித்தனர் ஈரோஸ் இயக்கத்தினர். ஈழவர் ஜனநாயக முன்னணியின் பெயரில் பிர சார நடவடிக்கைகள் சூடுபிடிக்கத் தொடங்கின.

ஈழவர் ஜனநாயக முன்னணியின் பொறுப்பாளரும், யாழ் மாவட்ட வேட்பாளர் பட்டியலில் தலைமை வேட்பாளருமான எட்வேர்ட் செபஸ்தியாம்பிள்ளை தேர்தல் பிரசாரத்துக்காக பருத்தித்துறைக்குச் சென்றிருந்தார்.

பிரசாரத்தை முடித்துக்கொண்டு தனது வாகனத்தில் அவர் திருமபிவரும்போது இருபாலையில் வைத்து அவரது வாகனம் மறிக்கப்பட்டது.

வாகனத்தை மறித்தவர்கள் ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தினர். ஆயுதங்களுடன் வாகனத்தை சுற்றிவளைத்தனர்.

'அப்படியே சுட்டுத்தள்ளப் போகிறார்களோ?' என்று பயந்துபோனார் எட்வேர்ட் செபஸ்தியாம்பிள்ளை.

"உங்களோடு பேசவேண்டும். முகாமுக்கு வாருங்கள்" என்றனர். அவரது வாகனத்திலேயே புத்தூரில் உள்ள தமது முகாமுக்குக் கொண்டு சென்றனர்.

ஈரோஸ் பட்டியலில் உள்ள வேட்பாளர்கள் பற்றிய பின்னணி விபரங்களை அவரிடமிருந்து கறப்பதுதான் கடத்திச் சென்றதின் நோக்கம். விபரங்களை கறந்துவிட்டு சுட்டுத்தள்ளிவிடலாம் என்று திட்டமிட்டிருந்தனர்.

எட்வேர்ட் கடத்தப்பட்ட செய்தி ஈரோஸ் தலைமைப்பீடத்துக்கு எட்டியது. உடனடியாக இந்தியப் படை அதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்தனர்.

துரித விசாரணைகள் மூலம் எட்வேர்ட் எங்கு கொண்டுசெல்லப்பட்டுள்ளார் என்பதை இந்தியப் படையினர் கண்டுபிடித்து விட்டனர்.

புத்தூரில் இந்தியப்படை முகாமில் இருந்து மேஜர் தர அதிகாரி தலைமையில் மூன்று ஜீப் வண்டிகளில் இந்தியப் படையினர் புறப்பட்டு ஈ.பி.ஆர்.எல்.எஃப். முகாமுக்கு சென்றனர்.

ஈரோஸ் முக்கியஸ்தர்கள் சிலரையும் தம்முடன் அழைத்துச் சென்றனர்.

அத்தனை விரைவாக இடத்தைச் கண்டுபிடித்து இந்தியப் படையினர் தமது முகாமை முற்றுகையிடுவர் என்று ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தினர் எதிர்பார்க்கவில்லை.

ஆனால் அந்த முகாமில் இருந்த ஈ.பி.ஆர்.எல்.எஃப். உறுப்பினர்கள் புத்திசாலிகள். உடனே சமயோசிதமாகச் செயற்பட்டனர்.

எட்வேர்ட்டை கொண்டுவந்து முகாமின் முன்பக்கத்தில் இருத்தினார்கள். 'கடத்திவரவில்லை, கதைக்க அழைத்தோம்' என்று கூறுவதற்கு வசதியாகவே அப்படிச் செய்தனர்.

எட்வேர்ட்டிடம் ஒருத்தர் கூறினார்; "இங்கே பாரும் ஐசே, அவர்கள் கேட்டால் கதைக்க அழைத்ததாகச் சொல்ல வேண்டும். கடத்தல் கிடத்தல் என்று சொன்னால், இங்கேயே எல்லோருக்கும் சமாதிகட்டி விடுவோம்."

எட்வேர்ட் பயந்துபோனார்.

ஈரோஸ் பிரமுகர்கள் சகிதம் இந்தியப் படை அதிகாரி முகாமுக்குள் சென்றார். முன்னால் இருந்த எட்வேர்ட்டைக் கண்டதும் 'இவர்தான்' என்று ஈரோஸ் பிரமுகர்கள் வாய்திறக்க முன்னரே, ஈ.பி.ஆர்.எல்.எஃப். உறுப்பினர்கள் முந்திக்கொண்டனர்.

"வாருங்கள் சேர்" என்று வரவேற்றதுடன், "இவர்தான் எட்வேர்ட் செபஸ்தியாம்பிள்ளை. இந்தப் பக்கமாக வந்தார். பேசிக்கொண்டிருக்கிறோம்" என்று போட்டார்கள் ஒரு போடு.

பொய் சொல்லுகிறார்கள். தெரிந்தாலும் பிரச்சனையாக்க விரும்பவில்லை இந்தியப் படையினர். எட்வேர்ட்டும் எதுவும் பேசவில்லை. அதனால் எட்வேர்ட்டை தம்முடன் வந்த ஈரோஸ் பிரமுகர்களிடம் ஒப்படைத்து விட்டுச் சென்றுவிட்டனர்.

அதன்பின்னரும் யாழ்ப்பாணம் நாவாற்துறையில் இருந்த எட்வேர்ட் வீட்டுக்கு பல தடவை சென்று அவரைத் தேடினார்கள் ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தினர்.

தமது அலுவலகத்தில் எட்வேர்ட்டை பாதுகாப்பாக வைத்திருந்தனர் ஈரோஸ் இயக்கத்தினர்.

### கிளிநொச்சியில்

வன்னியில் தேர்தல் பிரசாரத்துக்காக ஈரோஸ் தலைவர் பாலகுமாரும், ஈரோஸ் இயக்கத்தினரும் மூன்று வாகனங்களில் சென்று கொண்டிருந்தனர்.

கிளிநொச்சியில் வைத்து அவர்களை வழிமறித்தனர் ஈ.என்.டி.எல்.எஃப். இயக்கத்தினர். தமது முகாமுக்கு கொண்டு சென்றனர்.

ஈ.என்.டி.எல்.எஃப். உறுப்பினர்களிடம் மாட்டிக்கொள்ளாமல் ஒரு வாகனத்தில் இருந்த ஈரோஸ் உறுப்பினர்கள் தப்பிச் சென்று இந்தியப் படை முகாமுக்கு போய் விட்டனர்.

தமது தலைவரும் உறுப்பினர்களும் ஈ.என்.டில்.எல்.எஃப். இயக்கத்தால் கடத்தப்பட்ட தகவலை தெரிவித்தனர்.

உடனடியாக செயலில் இறங்கினர் இந்தியப் படையினர். ஈ.என்.டி.எல்.எஃப். முகாம் நோக்கி இந்தியப் படையினரின் வாகனங்கள் விரைந்து சென்றன.

அதற்கிடையே ஈ.என்.டி.எல்.எஃப். முகாமில்வைத்து ஈரோஸ் தலைவர் பாலகுமாரை தாக்கத் தொடங்கிவிட்டனர். தமது தலைவர் தாக்கப்படுவதைப் பொறுக்கமாட்டாமல் தில்லைநாதன் என்ற ஈரோஸ் உறுப்பினர் குறுக்கே விழுந்து தடுத்தார்.

அதனால் தில்லைநாதனைப் பிடித்து அடிக்கத் தொடங்கினார்கள். அடி தாங்காமல் அவர் மயங்கிப்போனார். அப்படியிருந்தும் ஏறி மிதித்தார்கள்.

ஈ.என்.டி.எல்.எஃப். முக்கியஸ்தரான முஸ்தபா என்றழைக்கப்படும் ராமராஜ் என்பவர்தான் அத் தாக்குதலுக்கு தலைமை தாங்கிக் கொண்டிருந்தார்.

ஈரோஸ் உறுப்பினர்கள் சென்ற வாகனங்களும் அடித்து நொறுக்கப்பட்டன.

தில்லைநாதன் உயிர்போகும் கட்டத்தில் இருக்க, மறுபடி பாலகுமார் தாக்கப்பட்டார்.

பாலகுமாரின் நல்ல நேரமோ என்னவோ இந்தியப் படையினர் வந்து சேர்ந்து விட்டனர். அதனால் உயிர்தப்பினார் பாலகுமார்.

ஆபத்தான நிலையில் இருந்த தில்லைநாதன் உடனடியாக மருத்துமனைக்கு கொண்டுசென்று காப்பாற்றப்பட்டார்.

கிட்டத்தட்ட 25 நிமிடங்கள் பாலகுமார் மீதும், ஈரோஸ் உறுப்பினர்கள்மீதும் தாக்குதல் நடந்தது. ஈரோஸ் உறுப்பினரான நாதன் தாக்குதலில் பலியானார்.

இறுதியாக பரந்தன் ராஜன் தமது உறுப்பினர்களின் செயலுக்காக மன்னிப்புக் கேட்டார்.

பாலகுமாருக்கு தாங்கமுடியாத கோபம். செய்வதையும் செய்துவிட்டு மன்னிப்புக் கேட்கிறார்கள் என்று எரிச்சலாகி விட்டார். பாலகுமார் சொன்னார்; "உங்களுக்கு புலிகள் தான் சரி."

### பொதுச் சின்னம்

தமிழர் விடுதலைக் கூட்டணியின் பெயரில், உதயசூரியன் சின்னத்தில் ஈ.பி.ஆர்.எல்.எஃப்., ரெலோ, ஈ.என்.டி.எல்.எஃப். வேட்பாளர்களும் போட்டியிட்டனர் அல்லவா.

அந்தப் பொதுப்பட்டியலில் இருந்த கூட்டணி வேட்பாளர்களை எப்படியாவது தோற்கடிக்கவேண்டும் என்று திட்டமிட்டனர் ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தினர். ஈ.என்.டி.எல்.எஃப்., ரெலோ இயக்கத்தினருக்கும் அதிலே பரிபூரண உடன்பாடு இருந்தது.

இந்திய அரசின் நிர்ப்பந்தம் காரணமாக பொதுப்பட்டியலுக்கு உடன்பட்டாலும், கூட்டணியை மீண்டும் புத்துயிர் பெறவிடக் கூடாது என்பதில் மூன்று இயக்கங்களும் உறுதியாக இருந்தன.



கொல்லப்பட்ட ஈரோஸ் உறுப்பினர் உடம்பில் சித்திரவதை காயங்கள்

கொழும்பில் இருந்து ஈ.பி.டி.பி. இயக்கத்தினர் பொதுப்பட்டியலில் போட்டியிட்ட வேட்பாளர்களை ஆதரித்து வீரகேசரிப் பத்திரிகையில் முழுப்பக்க விளம்பரங்களை வெளியிட்டிருந்தனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிட்ட கூட்டணிச் செயலதிபர் அமிர்தலிங்கத்தை ஆதரித்து வெற்றிபெறச் செய்யுமாறும், பிரதேச வாதங்களுக்கும், வடக்கு-கிழக்கு பிரிப்பு முயற்சிகளுக்கும் முடிவு கட்டுமாறும் ஈ.பி.டி.பி. வெளியிட்ட விளம்பரத்தில் கோரப்பட்டிருந்தது.

தாம் தேர்தலில் போட்டியிடா விட்டாலும் பொதுச்சின்னத்தில் போட்டியிட்ட வேட்பாளர்களை ஆதரிப்பது என்று ஈ.பி.டி.பி. முடிவு செய்திருந்தது.

திருக்கோணமலையில் ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் பொதுச்சின்னத்தில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து சுவரொட்டிகள் ஒட்டினார்கள்.

ஈ.பி.டி.பி.யின் சுவரொட்டிகளைக் கண்ட ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தினருக்கு பொறுக்கமுடியவில்லை.

தமக்கும் சேர்த்துத்தான் ஈ.பி.டி.பி. பிரசாரம் செய்கிறது என்பதைவிட, ஈ.பி.டி.பி. இப்படியே வளர்ச்சிகாணத் தொடங்குகிறதே என்பதுதான் ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தினருக்கு உறுத்தியது.

திருமலையில் எவ்வித பாதுகாப்பும் இன்றியே ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் தங்கியிருந்தனர். இந்தியப் படையினருடனும் அவர்களுக்கு தொடர்புகள் இருக்கவில்லை.

இரவோடு இரவாக ஈ.பி.டி.பி. உறுப்பினர்களை கடத்திச்சென்று தமது முகாமில் வைத்துத் தாக்கினார்கள். ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் தங்கியிருந்த பகுதி மக்கள் கடத்தலுக்கு எதிராக குரல் கொடுத்தனர். அதனால் கடத்தப்பட்ட ஈ.பி.டி.பி உறுப்பினர்களை எச்சரிக்கை செய்துவிட்டு விடுவித்தது ஈ.பி.ஆர்.எல்.எஃப்.

"ஈ.பி.டி.பி. தலைதூக்க நாங்கள் ஒரு நாளும் விடமாட்டோம். இயக்கம் நடத்தும் யோசனை இருந்தால் விட்டு விடுங்கள். ஈ.பி.டி.பி. என்று இனிமேல் எந்த நடவடிக்கையிலும் இறங்கக்கூடாது." என்று எச்சரித்துவிட்டே அவர்களை விடுவித்தனர்.

### பிரசாரத்துக்குத் தடை

மட்டக்களப்பு மாவட்டத்தில் கூட்டணிச் செயலதிபர் அமிர்தலிங்கம் பிரசாரம் செய்வதற்கும் ஈ.பி.ஆர்.எல்.எஃப்., ரெலோ இயக்கங்கள் பல இடையூறுகளைச் செய்தனர்.

வடக்கு-கிழக்கில் கூட்டணி, ஈ.பி.ஆர்.எல்.எஃப்., ரெலோ, ஈ.என்.டி.எல்.எஃப். வேட்பாளர்கள் பொதுப்பட்டியலில் போட்டியிட்டாலும், அந்தந்த மாவட்டங்களில் யாருக்கு அதிக விருப்பு வாக்கு கிடைக்கிறதோ அவர்கள் தான் பாராளுமன்ற உறுப்பினர்களாக தெரிவு செய்யப்படுவர் என்று முடிவு செய்யப்பட்டிருந்தது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் அமிர்தலிங்கம் தலைமையில்தான் பொதுப்பட்டியல் வேட்பாளர்கள் போட்டியிட்டனர்.

ஆனால், பொதுப்பட்டியலில் உள்ள ஏனைய வேட்பாளர்களைவிட அமிர்தலிங்கம் குறைந்த விருப்பு வாக்குகளைப் பெற்றால் பாராளுமன்ற உறுப்பினராக முடியாது.

அமிர்தலிங்கத்தை தோற்கடிப்பதில் முன்னின்ற ஈ.பி.ஆர்.எல்.எஃப்., ரெலோ இயக்கங்கள் அவருக்கு எதிரான மறைமுகமான பிரசாரங்களிலும் ஈடுபடத் தொடங்கின.

"யாழ்ப்பாணத்தில் போட்டியிடப் பயந்து மட்டக்களப்பு மக்களின் பிரதிநிதித்துவத்தை அபரிக்க வந்துவிட்டார்" என்றுகூடப் பிரசாரம் செய்யப்பட்டது.

யாழ் மாவட்டத்தில் போட்டியிட்ட வேட்பாளர்களுக்கு ஆதரவாகப் பிரசாரம் செய்வதற்கு சென்றிருந்தார் அமிர்தலிங்கம்.

அவரை யாழ்ப்பாணம் அசோகா ஹோட்டலில் தங்கவைத்தனர். பிரசாரம் செய்யச் செல்வதற்கு மட்டும் அனுமதிக்கவில்லை. பாதுகாப்புக் காரணங்கள் கூறப்பட்டன. புலிகள் கொல்லத் திட்டமிட்டிருக்கிறார்கள் என்று பயம் காட்டினார்கள்.

பிரசாரம் செய்யமுடியாத நிலையில் மனம் உடைந்து திரும்பினார் அமிர்தலிங்கம். அமிர்தலிங்கத்தை பிரசாரம் செய்ய அனுமதித்தால் தங்கள் ஆட்களைவிட கூட்டணியினருக்கு விருப்பு வாக்குகள் அதிகமாகக் கிடைத்துவிடும் என்று நினைத்தே தடுத்துவிட்டனர்.

யாழ் மாவட்டத்தில் மட்டுமல்ல, திருமலை, வன்னி மாவட்டங்களில் போட்டியிட்ட கூட்டணி வேட்பாளர்களையும் போதிய, பிரசாரம் செய்ய முடியாமல் தடுத்துவிட்டார்கள்.

பொதுப்பட்டியலுக்குள் கூட இருந்தே நடைபெற்ற இந்த குழிபறிப்புக்களால் அமிர்தலிங்கம் மனவேதனை அடைந்தார்.

தேர்தல் முடிவு எப்படியாக அமையப்போகிறது என்பதை முன்கூட்டியே புரிந்தும் கொண்டார்.

எனினும் மட்டக்களப்பு மாவட்டத்தில் தனது வெற்றி உறுதி என்றே கருதினார்.

உண்மையில் மட்டக்களப்பு மாவட்ட மக்கள் பிரதேச பேதங்கள் எதுவும் இல்லாமல் தமிழர் தலைவர் என்றரீதியில் அமிர்தலிங்கத்தை ஆதரிக்க முன்வந்திருந்தனர்.

1989 பெப்ரவரி 15ல் வாக்களிப்பு தொடங்கியது. மட்டக்களப்பு மாவட்டத்தில் ஈ.பி.ஆர்.எல்.எஃப்.,ரெலோ இயக்கங்கள் செய்த குளறுபடிகள் முடிவை மாற்றின.

அந்தக் குளறுபடிகள் பற்றியும், எதிர்பாராத திருப்பங்களையும் வரும் வாரம் தருகிறேன். (தொடர்ந்து வரும்)

## அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை



படிப்பகம்

www.padippakam.com

# அலசுவது- இராஜதந்திரி

# வெற்றி வரும் முன்னே! தீர்வு வரும் பின்னே!

## எதிர்பார்ப்புக்களும்-காலவரையறைகளும்

வன்னி மாவட்டத்தில் எண்ணிலடங்காத உயிர்களை ஏப்பம் விட்டுவரும் அகோர யுத்தம் சூடுபிடித்துள்ள இத்தருணத்திலேயே, அதனை அடுத்துள்ள அநுராதபுரம் மாவட்டத்தில் ஜனாதிபதி சந்திரிகா சமாதானத்துக்காக அழைப்புவிடுத்து "நாம் இலங்கையர்! ஒரே தேசம்; ஒரே மக்கள்" என்ற கோஷத்தையும் முன்வைத்திருந்தார்.

சாந்தி, சமாதானம், சமத்துவம் என்ற கோஷங்களே இலங்கையில் அரசியல் தலைவர் பொதுமேடைகளில் குறிப்பிடும் வார்த்தைப் பிரயோகங்களாக இருந்து வருகின்றன. இருந்தபோதிலும் இவை முற்றிலும் 'வெட்டிப்பேச்சு'க்களாகவே இருக்கின்றன.

எந்தவொரு அரசியல் தலைவராலும் நேர்மையாக வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்ட விதத்தில் மக்கள் நலன்களைப் பற்றிச் சிந்திக்க முடியாதுள்ளதையே இலங்கையின் கடந்தகால, நிகழ்கால அரசியல் நிலவரங்கள் புலப்படுத்தி வருகின்றன.

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு ஆட்சிப் பீடத்தில் மூன்றாண்டு காலத்தைப் பூர்த்தி செய்துள்ள நிலையில் அநுராதபுரத்தில் ஜனாதிபதி சமாதானத்துக்காக அறைகூவல் விடுத்திருந்தார்.

ஜனாதிபதியின் இந்த அறை கூவலை உற்று நோக்கும்போது எவ்வளவுதூரம் அவர் தாம் குறிப்பிடும் சமாதானத்தில் விசுவாசமாக இருக்கிறார்? என்பதே பிரதான கேள்வியாக விளங்குகின்றது.

**சமாதானம் என்பது இலங்கையின் அரசியலாளர்களைப் பொறுத்தவரை சர்வசாதாரணமான வார்த்தைப் பிரயோகமாகவே உள்ளது. ஆனால் ஒரு முழுமையான அமைதியை ஏற்படுத்துவது குறித்து நடைமுறைச் சாத்தியமான பணிகளை மேற்கொள்ள முன்வரும்போது சமாதானம் என்பது எண்ணிப்பார்க்க முடியாததாகவே இருக்கின்றது.**

எனவே சமாதானம் என்ற வார்த்தையை ஆட்சியாளர்கள் தம்மைப் பாதுகாத்து கொள்வதற்கான ஒரு கவசமாகவே உச்சரிக்கின்றனரே தவிர நாட்டுமக்கள் மத்தியிலிருந்து சமாதானம் வெகு எட்டத்திலேயே இருக்கின்றது.

இத்தகைய சூழ்நிலையிலேயே ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க "நாம் இலங்கையர்; ஒரே தேசம்; ஒரே மக்கள்" என்ற கோஷத்தை அநுராதபுரத்தில் முன்வைத்திருந்தார்.

கேட்பதற்கு அழகாக இருக்கும் இக்கோஷத்தை ஜனாதிபதி அநுராதபுரத்தில் அன்று குறிப்பிட்ட போதிலும், "இலங்கை ஒரு பௌத்த நாடு, சிங்கள் மக்களே பெரும் பான்மையினர்" என்ற தமது உள்ளார்ந்த உணர்வையும் அவர் அங்கு குறிப்பிடத்தவறவில்லை.

ஜனாதிபதியின் இந்த உள்ளார்ந்த உணர்வே அவரது மூதாதையர்களிடமும் இருந்தது. அதுவே நாட்டைச் சின்னாபின்னமாக்க வழிவகுத்தது.

**எனவே அந்த குறுகிய சிந்தனையிலிருந்து சமாதானம், சமத்துவம் என்பவை பற்றிப் பேசும் ஜனாதிபதி கூட எவ்விதத்திலும் விடுபடவில்லை என்பதையே அவரது அநுராதபுரம் உரை வெளிப்படுத்தியிருந்தது.**

இலங்கையில் இன்று நிலவும் நிலைமைகளை அவதானிக்கும்போது, எந்தவொரு துறையிலும் பௌத்த, சிங்கள வாதமே உறுதிபெற்றுள்ளது.

நிர்வாகத்துறை, ஆயுதப்படைகள் என்பவை அனைத்திலுமே நூற்றுக்கு நூறுவீதம் பெரும்பான்மைச் சிங்கள மக்களே ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர். இலங்கையின் ஆட்சியதிகார விடயங்கள் அனைத்திலுமே பெரும்பான்மை மக்களே முழு அளவில் ஆதிக்கம் செலுத்துகின்றனர்.

பெரும்பான்மை இனத்தவர்களின் பிரதிநிதிகளான ஆட்சியாளர்கள் எடுக்கும் முடிவுகளிலேயே ஏனைய. இனத்தவர்களின் நலன்கள் தங்கியிருப்பதையும் காணமுடிகின்றது.

தமிழ்பேசும் மக்களின் மொழி, அரசியல் பிரதேச தனித்துவம் குறித்த ' கோரிக்கைகள் தட்டிக் கழிக்கப்பட்டு வந்திருப்பதுடன். தற்போது இராணுவ ரீதியான நடவடிக்கைகளே தமிழ்பேசும் மக்களின் அரசியல் கோரிக்கைகள் குறித்த விடயத்தில் முனைப்படைந்துள்ளன.

**அரசியல் தீர்வு தொடர்பான காலவரையறை இராணுவ வெற்றி தொடர்பாக எதிர்பார்க்கப்படும் காலவரையறையை ஒட்டியதாகவே பின்தள்ளப்பட்டுவருகிறது.**

'ஜயசிக்குறுய்' இராணுவ நடவடிக்கையின் வெற்றி வரும் முன்னே, தீர்வுத்திட்டம் வரும் பின்னே என்பதுதான் அரசு வெளியே சொல்ல விரும்பாத இரகசியம்.

அப்படி வரப்போகும் தீர்வுத்திட்டம் எப்படி அமையும் என்பதை ஜனாதிபதியின் உரையும், அரசின் நடவடிக்கைகளும் நன்கு உணர்த்தி வருகின்றன.

இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு முயற்சிகள் என்பது இலங்கைத்தீவு பல்தேசிய இனங்களையும், இரு தேசங்களையும் கொண்ட ஒரு நாடு என்ற அடிப்படையில்தான் ஆரம்பிக்கப்படவேண்டும்.

**நாடு (Country) என்பதும் தேசம் (Nation) என்பதும் ஒரே அர்த்தமல்ல. ஒரு நாட்டில் பல தேசங்கள் இருக்கலாம். ஒரு தேசமே ஒரு நாடாகவும் இருக்கலாம்.**

தேசம் என்றால் என்ன என்பதற்கும் வரைவிலக்கணம் உண்டு. பொதுக் கலாசாரம், பொதுப் பொருளாதாரம், பொதுமொழி, பொதுவான பிரதேசம் என்பவற்றை கொண்டதே ஒரு தேசிய இனமாகும். அந்த தேசிய இனம் வாழும் பகுதியே தேசமாகும். அங்கு பிற இனங்களும் வாழலாம். அவை தேசிய இனத் தன்மை கொண்டவையாக இருக்கமாட்டா. ஒரு தேசத்தில் ஒரு தேசிய இனம்தான் இருக்கும்.

இலங்கையில் வடக்கு-கிழக்கு பகுதிகளில் தமிழ்த் தேசிய இனமும், மொழிரீதியில் ஒன்றுபட்ட, ஆனால் மதரீதியான கலாசாரத்தால் வேறுபட்ட முஸ்லிம் சமூகமும் வாழ்கின்றன. முஸ்லிம்கள் சிறுபான்மையினராக உள்ளனர். வடக்கு-கிழக்கு பிரதேசங்கள் தமிழ், முஸ்லிம் மக்களின் பாரம்பரிய தாயகமாகும். அதாவது வடக்கு-கிழக்கு ஒரு தேசமாக உருப்பெற்றிருக்கிறது.

இலங்கை ஒரு நாடாக இருக்கவேண்டுமானால் சிங்கள தேசமும், தமிழ்பேசும் மக்களின் தேசமும் சமஷ்டி ஆட்சி முறையின்கீழ் இணைந்திருக்கலாம். அவ்வாறான இணக்கம் ஒன்றுக்கு சிங்கள அரசியல் தலைவர்கள் முன்வர மறுத்தமையாலும், தமிழ்பேசும் தேசத்தை குடியேற்றங்கள் மூலம் சிதைக்க முற்பட்டமையுமே வாழு வாழவிடு என்ற கோட்பாட்டின் பிரகாரம் தனிநாடு கேட்கும் நிலைக்கு தமிழ்பேசும் மக்களை தள்ளிவிட்டது.

**தமிழ்பேசும் மக்கள் தாம் ஒரு தேசமாக இருக்கவேண்டும் என்று விரும்பி நிற்பது எவ்வகையிலும் பிரிவினை நோக்கமாக் அமையாது. தமது தனித்துவத்தை காத்து நிற்கின்ற, சரிசமமான மக்களாக தலை நிமிர்ந்து வாழ்கின்ற, தமது மொழியை, கலாசாரத்தை, பொருளாதாரத்தை, தங்கு தடையில்லாமல் வளர்த்துச் செல்லுகின்ற விருப்பமே அதுவாகும்.**

அதனை பிரிவினை நோக்கம் என்று முலாம்பூசி தனித்துவங்களையே அழிக்கின்ற வகையில் திட்டமிட்ட குடியேற்றங்கள், பொருளாதார ரீதியான புறக்கணிப்புக்கள் போன்றவற்றை தென்னிலங்கை ஆட்சியாளர்கள் கட்டவிழ்த்துவிட்டனர். இவ்வாறான நிலையில் தங்கள் தேசிய இனத் தன்மையையும், தேசத்தையும் பாதுகாக்க பிரிந்துசெல்வதே வழி என்ற முடிவுக்கு தமிழ் தேசிய இனம் செல்லவேண்டி ஏற்பட்டது.

எனவே பிரிவினைக்கான காரணங்களை இல்லாதொழித்து, இரு தேசங்களும் ஒன்றாக, சமமாக ஐக்கியப்பட்டு இருக்கமுடியும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தவேண்டியது தென்னிலங்கை ஆட்சியாளரதும், அரசியல் கட்சிகளதும் தலையான பணியாகும்.

அந்தப் பணியை செவ்வனே நிறைவேற்றிய பின்னர்தான் 'நாம் இலங்கையர், ஒரே மக்கள்' என்ற கோஷத்திற்கு உண்மையான பெறுமதி ஏற்பட முடியும்.

ஆனால் இராணுவ முனைப்பை முன்னெடுத்துக் கொண்டு அதன் அடிச்சுவட்டில் சென்று அரசியல் தீர்வை தேடும் முயற்சியானது வண்டிக்கு பின்னால் குதிரையை கட்டிவிடுவது போன்றதாகும்.

இவ்வாறான முயற்சி காரணமாக இனப்பிரச்சினை மட்டுமல்லாமல், யுத்தம்கூட இனங்களுக்கிடையிலான யுத்தமாக மாறிக்கொண்டிருக்கிறது.

சிங்கள இனத்தை கொண்ட முப்படைகள் மூலமாக நடத்தப்படும் யுத்தத்தில் வெற்றியைப் பெற்றுவிட்டு, தமிழ்பேசும் மக்களுக்கு திருப்தியான தீர்வைக் கொடுக்கலாம் என்பது கற்பனைக்கும் எட்டாத ஒரு காரியமாகவே இருக்கிறது. ஜனாதிபதி சந்திரிகாவே விரும்பினால்கூட அவ்வாறான ஒரு காரியத்தை செய்ய இயலாது.



**இராணுவ வெற்றி ஒன்று பெறப்படுமானால் அந்த வெற்றிக்கோஷத்தின் ஆரவாரங்களுக்கிடையே முதலில் காணாமல்போவது. தமிழ்பேசும் மக்களின் அரசியல் கோரிக்கைகளாகவே இருக்கும்.**

இன்று இனப்பிரச்சனை ஒன்று இருக்கிறது என்று ஜனாதிபதி சந்திரிகா கூறுகிறார் என்றால், அதற்கு உதாரணமாகவும், விளைவுகளாகவும் பிரபாகரனையும், புலிகளையுமே அவர் சுட்டிக்காட்டி வருகிறார்.

கடந்த பொதுத் தேர்தலிலும், ஜனாதிபதி தேர்தலிலும்கூட இனப்பிரச்சினைக்கான தீர்வு காணப்படவேண்டும் என்பதை சந்திரிகா அவர்கள் வலியுறுத்தியபோது, புலிகளின் இராணுவ பலத்தைத்தான் தனது வாதங்களுக்கு சாதகமாக முன்வைத்திருந்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் 17 வருடகால ஆட்சியில் புலிகளை வெல்ல முடியாமல் போனதும், யுத்தம் தீவிரமானதுமே இராணுவ தீர்வு சாத்தியப்படாது என்று கூறிய சந்திரிகாவின் கருத்தை மக்கள் ஏற்கக் காரணமாக அமைந்திருந்தது.

ஆனால் இப்போது அதே சந்திரிகா அவர்களே ஜனாதிபதியாகவும், முப்படைகளின் தலைவியாகவும் இருந்து இராணுவ வெற்றி நிச்சயம் என்ற நம்பிக்கையை மக்களிடம் ஏற்படுத்த வேண்டியவராகவும், அந்த இராணுவ வெற்றியையே தமது ஆட்சி அதிகாரத்தை தொடர்ந்து தக்கவைக்கும் அரசியல் மூலதனமாக்வும் நம்பியிருக்க வேண்டியவராகியுள்ளார்.

ஜனாதிபதி விரும்புகிறபடி ஒரு இராணுவ வெற்றி பெறப்படுமானால் மற்றொரு நிர்ப்பந்தத்தில் அவர் சிக்கிக்கொள்ள வேண்டியிருக்கும்.

முப்படைகளும் யுத்த வெற்றிக்காக செய்த தியாகங்களுக்கு துரோகம் இழைக்காத ஒருவராக அவர் தன்னை நிரூபித்தாக வேண்டி இருக்கும்.

வடக்கு-கிழக்கு இணைந்த தீர்வு என்பதை பேரினவாதிகள் நாட்டுப் பிரிவினையாகவே இப்போது சித்தரிக்கின்றனர். 'அப்படியல்ல, ஒரு தீர்வை வழங்காவிட்டால்தான் நாடு பிரிவினையாகும் ஆபத்து இருக்கிறது' என்று இப்போது சுட்டிக்காட்ட முடியும். காரணம்; புலிகளின் பலம் உதாரணம் காட்டப்படக்கூடியதாக இருக்கிறது.

**புலிகள் பலவீனமாகிவிட்டால் பேரினவாதிகளின் குரல் உரத்தெழும். வடக்கு-கிழக்கு இணைந்த தீர்வைக் கொடுப்பதோ, தமிழ்பேசும் மக்களுக்கு அதிக அதிகாரங்களைக் கொடுப்பதோ மறுபடி பிரபாகரன்கள் உருவாகக்கூடிய தளத்தை தோற்றுவிக்கும். முப்படைகள் செய்த தியாகத்தை விரயமாக்குவதா? இதற்காகவா அவர்கள் உயிர்த்தியாகம் செய்தனர்? தமிழ்பேசும் மக்களின் வாக்குகளைப் பெறுவதற்காக நாட்டை தாரைவார்த்துக் கொடுப்பதா? என்றெல்லாம் பேரினவாதிகள் குரல் எழுப்புவர்.**

யாழ் குடாநாடு கைப்பற்றப்பட்டபின்னர்; 'இனப்பிரச்சினையே இங்கு கிடையாது' என்று பௌத்த மதகுருமார் சிலர் கூறியிருந்ததும் நினைவு கொள்ளத்தக்கதாகும். பேரினவாதிகளை திருப்திப்படுத்த யாழ்ப்பாணத்தை 'யாப்பா பட்டுன' என்று அரசுகூட பெயர் சூட்டி அழைத்ததும் குறிப்பிடத்தக்கதாகும்.

எனவே- புலிகளை வெற்றி கொள்ளல் என்பது, இனிமேல் இனப்பிரச்சினை என்று என்ன இருக்கிறது? என்ற எண்ணத்தை தோற்றுவிப்பதாகவும் மாறும்.

அவ்வாறான சூழலில், பெறப்பட்ட இராணுவ வெற்றிக்கு தொடர்ந்து உரிமை கோரத்தக்க வகையில் தமது அணுகுமுறைகளை மேற்கொள்ளும் நிர்ப்பந்தமே அரசுக்கு ஏற்படும்.

'தமிழ் பேசும் மக்களுக்கு அப்படி ஒன்றும் அதிகமாகக் கொடுத்துவிடவில்லை' என்பதை சிங்கள மக்கள் நம்பும்படியான குறைந்தபட்ச தீர்வையே முன்வைக்கக்கூடியதாக இருக்கும்.

அவ்வாறான தீர்வுடன்தான் சர்வஜன வாக்கெடுப்பையும் அரசு சந்திக்கத் துணியும்.

**புலிகளை இராணுவரீதியில் வெற்றிகொண்டால் அடுத்த கட்டமாக தனது அரசியல் எதிரியான ஐக்கிய தேசியக் கட்சியை ஓரம்கட்டி முடிப்பதில் ஆளும் தரப்பின் கவனம் திரும்பும். ஐக்கிய தேசியக் கட்சி தன்மீது பேரினவாதிகளை தூண்டிவிட முடியாத அரசியல் தீர்வைத்தான் ஆளும் தரப்பு கையில் எடுக்கும். ஐக்கிய தேசியக் கட்சி குறைகூற முடியாத தீர்வாக அமையவேண்டுமானால், அத்தீர்வைவிட குறைந்த பட்ச தீர்வு வேறு எதுவும் இல்லை என்றளவில்தான் அமைந்திருக்கவேண்டும்.**

சகல கணக்குகளையும், கணிப்புக்களையும் மனதில் கொண்டுதான் அரசியல் தீர்வு, சர்வசன வாக்கெடுப்பு இரண்டும் அடுத்த வருட முற்பகுதிவரை தள்ளிவைக்கப்பட்டுள்ளது என்பதை நோக்க முடிகிறது.

தனக்கு தோதான தருணம் வரும்வரை ஒரே தேசம், ஒரே மக்கள் என்ற ஆரவாரமான பிரசார கோஷம் மூலம் காலத்தை கடத்திச் செல்வதும் ஆளும் தரப்பின் புத்திசாலித்தனமான காரியம்தான்.

**அரசியல் தீர்வு தொடர்பாக கூறப்படும் ஒவ்வொரு காலவரையும் நெருங்கும்போது புதிய கோஷங்கள் மூலம் மற்றொரு காலவரையறை கூறப்படுவதும் வழக்கமாகிவிட்டது.**

முதலில் பொக்ஸ் முயற்சி பற்றிய பிரசாரம். பின்னர் தமிழ் மொழி அமுலாக்கல் உத்தரவு அறிவிப்புக்கள். இப்போது 'ஒரே தேசம், ஒரே மக்கள்' பிரசார இயக்கம்.

கௌரவமான அரசியல் தீர்வு என்பது இவ்வாறான அணுகுமுறைகளால் பெறப்படப்போவதில்லை. மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் ஒன்றின் முன்பாக அரசும், புலிகளும் பகிரங்கப் பேச்சை தொடங்குவதற்கு ஏற்ற தருணமாக இதனைக் கொண்டால் மட்டுமே உருப்படியான பலன்களைக் காண முடியும்.

அவ்வாறு செய்வதற்கு நாட்டு நலன் கருதி சில அரசியல் இலாபங்களை தியாகம் செய்ய அரசும், எதிர்க்கட்சியும் முன்வரவேண்டும். ஆனால் அதுதான் முயற்கொம்பாக இருக்கிறது.

## களக்காட்சிகள்



01.08.97 ஓமந்தையில் இடம்பெற்ற 'ஜயசிக்குறுய்' படையினர் மீதான மூன்றாவது ஊடறுப்பு தாக்குதலுக்கு புறப்பட முன்னர் புலிகளின் அணிகள்.



ஓமந்தையில் 01.08.97 ஊடறுப்புசமரில் புலிகளால் கைப்பற்றப் பட்ட ஆயுதங்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.



ஓமந்தையில் படையினரைச் சந்தித்து அடுத்தகட்டம் பற்றி ஆராய்கிறார் பிரதிபாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் ரத்வத்த.



படிப்பகம்

பாகம் 2

# கொள்ளை ராணி பூலான்தேவி



பூலான்

60

தருவது ரசிகன்

**கடந்த வாரம்**

பூலான் தேவியை கிராமத்தினர் முன்பாக நிர்வாணமாக நிறுத்தி வதைக்கிறார்கள். பின்னர் ஒரு குடிசைக்குள் போட்டு உணவோ, தண்ணீரோ கொடுக்காமல் வைத்திருக்கிறார்கள். குடிசைக்குள் வருகிறான் ஒருவன். பூலானுக்கு உதவி செய்யவந்ததாக அவன் கூறுகிறான். இனி....

குடிசைக்குள் வந்தவனுக்கு நடுத்தர வயதிருக்கும்.... திடகாத்திரமான உடம்பு. குடிசைக் கதவை உட்புறமாய் தாழிட்டு விட்டு பூலானை நெருங்கினான்.

தன்னை வேட்டையாடத்தான் வருகிறான் என்று பூலான் நினைத்தாள். இப்போது அவள் கால்களும், கைகளும் கட்டப்பட்டிருக்கவில்லை.

மூன்றுநாள் பட்டினியால் பூலான் வாடிப்போன செடிபோல துவண்டு கிடந்தாள். வந்தவன் பூலானின் கோலத்தைப் பார்த்ததும் கண்களில் ஒரு பரிவு தோன்றியது போலிருந்தது.

பூலானின் பக்கத்தில் வந்து இரகசியம் பேசுவதுபோன்ற குரலில், "பயப்படாதே, உனக்கு உதவத்தான் வந்திருக்கிறேன். என் பெயர் பண்டிதர். கேள்விப்பட்டிருக்கிறாயா?" என்றான்.

பூலானுக்கு அவன் சொன்னதெல்லாம் ஏதோ கனவில் கேட்பதுபோல காதில் விழுந்தது. 'பண்டிதர்' என்ற பெயரை எங்கோ கேட்டிருக்கிறாள். எங்கே கேட்டோம் என்று யோசிக்கக்கூட இயலாமல் இருந்தது.

"நான் மல்லாவின் நண்பன். என் மகன்தான் சிவரூப். மல்லாவுடன் இருந்து பொலிசாருடன் சண்டைபோட்டு செத்துப் போனான்," என்றார். அதைச் சொல்லும் போது அவரது குரல் கம்மியது.

பூலான் அசைவற்றுக் கிடந்தாள். அவனை நம்பலாம் என்று அவள் உள்ளுணர்வு சொல்லியது. பூலானை யார் ஏமாற்றினாலும் உள்ளுணர்வு மட்டும் அவளை ஏமாற்றியதே இல்லை.

"மல்லா நல்லவன். எனக்குத் தெரியும். முதுகிலே குத்திவிட்டார்கள், துரோகிகள். என் மகன் செத்தபோது கூட நான் இத்தனை வேதனைப்பட்டதில்லை. மல்லாவைக் கொன்றுவிட்டார்கள் என்று அறிந்ததும் எப்படித் துடித்துப்போனேன் தெரியுமா? மல்லாவைப் போல் ஒருத்தன் இனிப் பிறக்கப்போவதில்லை." சொல்லி விட்டு பெருமூச்சுவிட்டார் பண்டிதர்.

பூலானின் கண்களில் இருந்து தாரை தாரையாக கண்ணீர் வடிந்து கொண்டிருந்தது. 'மல்லாவை இனிமேல் எங்கே காண்பேன்?' என்று மனது துடித்தது.

பூலான் கண்ணீர் சிந்துவதை அவர் கண்டுவிட்டார். "அழாதே! இனி ஆக வேண்டியதைப் பார்க்கலாம். உன்னை தப்பவைக்க வேண்டியது என் பொறுப்பு. கவலைப்படாமல் இரு. வருகிறேன்; வருவேன்."

பண்டிதர் கதவைத் திறந்துகொண்டு போய்விட்டார். வெளியே காவலுக்கு இருந்தவர்களிடம், "ராட்சசி, இப்போது கூட திமிர் அடங்கவில்லை. கவனமாய்ப் பார்த்துக் கொள்ளுங்கள்!" என்று சொல்லி விட்டுப் போனார்.

ஸ்ரீராம் பண்டிதரைக் கண்டதும் "எப்படி இருக்கிறாள் சிறுக்கி?" என்றான்.

"அவளை ஏன் சுட்டுக்கொல்லாமல் விட்டு வைத்திருக்கிறீர்கள்?" என்றார் பண்டிதர்.

ஸ்ரீராம் விகாரமாய்ச் சிரித்தான். "கிராமம் கிராமமாக இழுத்துச் சென்று காட்ட வேண்டாமா? எல்லோரும் அவளை அனுபவித்துப் பார்க்கட்டும். பின்னர் அவளாகவே செத்துப் போவாள்," என்றான்.

"அதுதான் சரி, இன்று இரவு என்வீட்டில் உங்களுக்கெல்லாம் விருந்து, ஞாபகம் இருக்கிறதல்லவா? அவளையும் கொண்டுவாருங்கள். எனக்கும் விருந்து வேண்டாமா?" பண்டிதர் கண்களைச் சிமிட்டிவிட்டு சென்றுவிட்டார்.

பண்டிதர் வீட்டுக்கு பூலானை அழைத்துச் செல்வதற்காக ஸ்ரீராம் வந்தான். அவள் கட்டிக்கொள்வதற்காக உடைகளும் கொடுத்தான்.

"பெரிய மனிதர் வீட்டில் இன்று விருந்து நடக்கப்போகிறது. நீதான் அவருக்கு விருந்து கொடுக்கப் போகிறாய். அங்குவந்து உன் திமிரைக் காட்டினால் மறுபடியும் நிர்வாண ஊர்வலம்தான். ஒழுங்காக நடந்துகொள்!" எச்சரித்துவிட்டு நெஞ்சில் தடவினான். தண்ணீர் மட்டும் கொடுத்தார்கள்.

பண்டிதர் வீட்டுக்கு அழைத்துச் செல்லும்போது பூலானின் கைகளை பின்புறமாகக் கட்டித்தான் கூட்டிப் போனார்கள். நடக்க முடியாமல் கஷ்டப்பட்டாள். கால்கள் சோர்ந்து போயிருந்தன. தலை சுற்றியது.

வழியில் பலரும் கூடிநின்று பூலானை வேடிக்கை பார்த்தார்கள். பெண்களும் இருந்தனர். யார் கண்ணிலும் பரிவு உணர்ச்சி இல்லை. யார் முகங்களிலும் அனுதாபச் சாயல் இல்லை. பூலான் அதனைக் கவனிக்கத் தவறவில்லை.

அடுத்த கிராமத்தில்தான் பண்டிதர் வீடு இருந்தது. அத்தனை தூரம் நடந்ததில் பூலானுக்கு மயக்கமே வந்துவிடும்போல இருந்தது. தண்ணீர் குடிக்கவேண்டும் போல இருந்தது. நடக்கமுடியாமல் அப்படியே தரையில் அமர்ந்துகொள்ளலாம் போலவும் இருந்தது.

தன் மன வலிமையால் உடலின் பலவீனத்தை சமாளித்தாள் பூலான். யாரிடமும் இரக்கக்கூடாது. எது வந்தாலும் தாங்கிக் கொள்ளவேண்டும். மனதை திடப்படுத்திக் கொண்டுதான் சென்றாள்.

பண்டிதர் வீட்டில் ஸ்ரீராம் குழுவினரை தடபுடலாக வரவேற்றார்கள். பூலானைக் காட்டி ஸ்ரீராமிடம் ஏதோ சொன்னார் பண்டிதர். ஸ்ரீராம் தன் பழுப்பேறிய பற்கள் தெரிய இளிப்பதை பூலான் அவதானித்தாள்.

பூலானை பண்டிதர் வீட்டின் தனியறை ஒன்றுக்குள் கொண்டு சென்றார்கள். பண்டிதர்தான் அந்த அறையைக் காட்டி, பூலானை அங்கு பாதுகாப்பாக பூட்டி வைக்கலாம் என்று ஸ்ரீராமுக்கு யோசனை கூறினார்.

பூலானுக்கு பின்னரல் இன்னொருவனையும் அந்த அறைக்குள் தள்ளிவிட்டார்கள். அவன் கைகளும் பூலான் போலவே பின்புறமாகக் கட்டப்பட்டிருந்தன.

அப்போதுதான் பூலான் அவனைப் பார்த்தாள் மல்லாவின் விசுவாசிகளில் ஒருவனான பிக்கு என்பவன்தான் அவன்.

மல்லாவை சுட்ட பின்னர் பிக்குவை பிடித்து வைத்திருந்தார்கள். ஆனாலும் பூலானின் கண்ணில் அதுவரைபடவில்லை. அவனைத் தனியாக வைத்திருந்தார்கள்.

மல்லா தனது பணத்தையோ, நகைகளையே எங்காவது புதைத்து வைத்திருக்கலாம் என்று ஸ்ரீராம் சந்தேகப்பட்டான். அதனால் மல்லாவின் விசுவாசிகளில் ஒருத்தனையாவது உயிரோடு வைத்திருந்து அந்த இரகசியத்தை கறக்க எண்ணினான். அதனால்தான் பிக்குவை விட்டு வைத்திருந்தான்.

தனியாக விடப்பட்ட பூலானும், பிக்குவும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். பிக்குவைப் பார்க்க பூலானுக்கு பரிதாபமாக இருந்தது. அவன் முகமெல்லாம் அடிபட்டு வீங்கியிருந்தது.

பிக்குவுக்கு பூலானைப் பார்க்க பரிதாபமாக இருந்தது. இருவருமே ஒருவரை ஒருவர் அனுதாபப் பார்வை பார்த்துக் கொண்டனர். எதுவும் பேசவில்லை. பேசுவதற்கான சக்தியும் உடம்பில் இல்லை.

வெளியே ஒரே இரைச்சலாக இருந்தது. குடிவெறியில் ஸ்ரீராம் குழுவினர் கும்மாளமிட்டுக் கொண்டிருந்தார்கள்.

ஸ்ரீராமுக்கும் குசுமாவுக்கும் தனியான அறையொன்றை ஒதுக்கிக்கொடுத்தார் பண்டிதர். ஸ்ரீராம் நிறை வெறியில் தள்ளாடினான். குசுமாவையும் குடிக்கச் சொன்னான்.

குசுமா முதலில் மறுத்தாள். பின்னர் அவளுக்கும் 'குடித்துத்தான் பார்ப்போமே' என்று ஆசை வந்துவிட்டது. முதலில் குடித்த போது புரைக்கேறியது. அவள் தலையில் அடித்து ஆசுவாசப்படுத்தினான் ஸ்ரீராம்.

மது உள்ளே இறங்க அந்தரத்தில் மிதப்பதுபோல சுகமாக இருந்தது. புதிய சுகம் இதமாக இருந்தது. அந்த மணம்தான் கொஞ்சம் உறுத்தியது. மூக்கைச் சுளித்தபடி குடித்தாள். போதை ஏறியதும் அந்த மணமும் பழக்கமாகிவிட்டது. ஸ்ரீராம் ஊற்றிக் கொடுக்கக் கொடுக்க குடித்தாள்.

"மல்லாவை பழிவாங்கிவிட்டேன். மல்லா... காதகா.... இந்த உடம்பையா வேண்டாம் என்றாய்? மல்லா... செத்துப் போனாயேடா பாவி..." குடிவெறியில் குசுமா உளறியதை ஸ்ரீராம் கேட்டான். நிறைவெறியிலும்கூட குசுமாவின் உளறல் அவனுக்கு தெளிவாய் புரிந்துவிட்டது.

குசுமா ஸ்ரீராமின் கழுத்தைக் கட்டிக் கொண்டு அவன் உதடுகளை தன் உதடுகளால் கவ்வினாள். அப்படியே ஸ்ரீராமை கட்டிலில் தள்ளி அவன்மேல் புரண்டாள்.

குசுமாவுக்கு ஸ்ரீராம் மல்லாபோல தெரிந்தான். ஸ்ரீராமை மல்லாவாக கற்பனை செய்தபடி அணைத்துக்கொள்வதில் அவளுக்கு ஆனந்தம் மிகுந்தது. ஸ்ரீராமுக்கு மூச்சுத்திணறியது. ஸ்ரீராமின் உடைகளை குசுமா களைந்தெறிந்தாள். அவன்மேல் அப்படியே கவிழ்ந்து கொண்டாள்.

மல்லாவைப் பற்றி குசுமா உளறியது ஸ்ரீராமுக்கு எரிச்சலாக இருந்தாலும் குசுமாவின் தழுவலும், அவள் செயற்பாடும் அந்த எரிச்சலை சுத்தமாகத் துடைத்தெறிந்துவிட்டன.

குசுமாவின் ஆவேசத்தைக் கண்டு ஸ்ரீராம் பயந்துபோனான். அவளின் அணைப்பில் தன் உயிரே போய்விடுமோ என்று பயந்துபோனான். குசுமாவுக்கு எதுவும் தெரியவில்லை. மல்லா... மல்லா... இவன்தான்....மல்லா என்று ஆவேசமான நினைப்பு அவள் உடம்பெங்கும் பரவி ஆக்கிரமித்திருந்தது.

குசுமாவும் ஸ்ரீராமும் இருந்தகோலத்தை இரண்டு கண்கள் ஜன்னல் வழியாக நோக்கிக் கொண்டிருந்தன. ஸ்ரீராமின் தவிப்பைக் கண்டு அந்தக் கண்கள் சிரித்தன. ஸ்ரீராம் 'குசுமா...குசுமா' என்று பிதற்றத் தொடங்கியிருந்தான். குசுமா அவன் தலைமுடியை பற்றிப் பிடித்தாள். குசுமா வெறிபிடித்தவளானாள்.

ஜன்னலில் இருந்து திருப்தியாய் விலகின அந்தக் கண்கள். அந்தக் கண்களுக்குரியவர் பண்டிதர். இதுதான் அவர் எதிர்பார்த்த தருணம்.

ஸ்ரீராமின் ஆட்கள் மூக்கு முட்டக் குடித்துவிட்டு தரையில் புரண்டு கொண்டிருந்தார்கள். மதுப்புட்டிகள் அவர்களின் கைகள் அருகேயும், கால்கள் இடையேயும் உருண்டு கிடந்தன.

பண்டிதர் நேராக பூலான் இருந்த அறைக்குள் சென்றார். அவர் கையில் இரண்டு உணவுப் பொட்டலங்கள் இருந்தன.

அறைக்குள் சென்றவர் கதவை உட்புறம் தாழிட்டுவிட்டு பூலான் அருகே வந்தார். அவளது கைக் கட்டுக்களை அவிழ்த்தார்.

பூலானின் கண்கள் நன்றி சொல்லின. பூலானுக்கு அந்த மனிதரின் கால்களில் விழுந்து வணங்கவேண்டும்போலிருந்தது. பொத்தென்று காலில் விழுந்துவிட்டாள்.

"என்ன இது? இந்தா இதைச் சாப்பிடு. வேண்டாம். இங்கே வேண்டாம். தப்பிச் செல்லும்போது எங்காவது வைத்து சாப்பிட்டுக் கொள்ளுங்கள், இரண்டுபேரும். இதிலே கொஞ்சப் பணம் இருக்கிறது. வைத்துக் கொள்."

பிக்குவின் கட்டுக்களையும் அவிழ்த்து விட்டார். அந்த அறைக்குள் மூட்டைகள் அடுக்கிவைக்கப்பட்டிருந்தன. அந்த மூட்டைகளுக்குப் பின்புறமாக இருவரையும் அழைத்துச் சென்றார். அந்த அறைக்குப் பின்புறம் ஒரு வழி இருந்தது. பின்புற வழிக்கு உறுதியில்லாத கதவு போடப்பட்டது நல்லதாகப் போயிற்று.

'அக் கதவை தன் உடம்பால் மோதி உடைத்தார் பண்டிதர். கதவு இரண்டாகப் பிளந்தது.

பூலானும் பிக்குவும் தாமாகத் தப்பியோடி விட்டார்கள் என்று ஸ்ரீராமை நம்பவைக்கத்தான் அந்தப் பாடு படுகிறார் பண்டிதர் என்பது பூலானுக்குத் தெரிந்துவிட்டது.

மூட்டைகள் மத்தியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த துப்பாக்கியொன்றை பண்டிதர் எடுத்துவந்தார். அதற்கான ரவைகளையும் பூலானிடம் கொடுத்தார்.

பூலானுக்கு நடப்பதெல்லாம் கனவா நனவா என்று சந்தேகம் வந்துவிட்டது. தாம் நம்பும் துர்க்கையம்மன்தான் பண்டிதர் வடிவில் வந்து உதவுவதுபோல இருந்தது.

"போய் வாருங்கள், ஆண்டவன் எப்போதுமே நீதியின் பக்கம்தான் இருப்பான்!" என்று வழியனுப்பிவைத்தார் பண்டிதர்.

பூலானுக்கு புதுப்பலம் வந்துவிட்டது போல இருந்தது. உடம்பெல்லாம் புல்லரித்தது. தனக்கு உதவ இத்தனை முயற்சி எடுக்கும் மனிதர்களும் இருக்கிறார்களே என்ற நினைப்பே ஆயிரம் யானைப் பலத்தைக் கொடுத்ததுபோல உணர்ந்தாள்.

அந்த உணர்ச்சி வேகத்திலேயே பூலான் சொன்னாள்: "கட்டாயம் உங்களை மறுபடி சந்திப்பேன். இப்படியே அல்ல. இந்த மிருகங்களை சுட்டுவிட்டு புகை கக்கும் துப்பாக்கியை உங்கள் காலடியில் வைப்பேன்!"

அவரை இனிமேல் சந்திக்கப்போவதில்லை என்பதை பூலான் அறியவில்லை.

பிக்குவும் பூலானும் தப்பிச் சென்று கொண்டிருந்தனர். நதியைத் தாண்டிப் போனால்தான் ஸ்ரீராம் குழுவின் பிடியில் இருந்து தப்பலாம்.

நதிக்கரைக்கு போனவர்களுக்கு அதிர்ச்சி காத்திருந்தது.

(தொடர்ந்து வரும்)

## மறுபிறவி கொடுத்த காதல்



**'வா**ழவைக்கும் காதலுக்கு ஜே' அனுபவித்துப் பாடுகிறார் சிங்கப்பூர் இளைஞர் ஞானசேகரன். அபூர்வமான காதலுக்கு சொந்தக்காரர்.

சிங்கப்பூரில் வசிக்கும் ஞானசேகரனுக்கு சாலை விபத்தொன்றில் இரண்டு கால்களும் செயலிழந்து போயின. மோட்டார் சைக்கிள் விபத்தில் அவர் சிக்கியபோது 18 வயது. மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

வாழ்வே மாயம் என்று சோகமாகிப் போனார். ஆனால் வசந்தம் வந்தது சாந்தினி தேவி என்ற பெண் உருவில். சாந்தினிதேவி அந்த மருத்துவமனையில் தாதியாக பணியாற்றினார். அவருக்கு 25 வயது. ஞானசேகரனை பரிவுடன் கவனிக்கத் தொடங்கினார். சாந்தினியின் அபாரமான கவனிப்பில் உடல் நலம் தேறினார் ஞானசேகரன். கால்கள் இல்லா விட்டாலும் வாழ்ந்து காட்டலாம் என்ற நம்பிக்கைக்கு நீரூற்றினார் சாந்தினி தேவி.

இது நடந்து நான்கு ஆண்டுகள் சென்றுவிட்டன. மருத்துவமனையில் இருந்து வீடு திரும்பிய ஞானசேகரனை அடிக்கடி சென்று பார்த்தார் சாந்தினி. தோழமையாக தொடர்ந்த நட்பு காதலாக வளர்ந்தது.

ஞானசேகரன் எழுதுவினைஞராக வேலை பெற்றார். உற்சாகமாக வேலை செய்கிறார். தனது மறுபிறவிக்கு காரணம் காதல்தான் என்கிறார். ஞானசேகரனின் பெற்றோர்தான் முதலில் தயங்கினார்களாம். சாந்தினி தேவியின் மன உறுதியைப் பார்த்ததும் பெற்றோரும் சம்மதித்துவிட்டனர்.

"எனக்கு எல்லாம் சேகரன்தான். நான் ஒரு தாதி. அவரால் என்ன இயலும், என்ன இயலாது என்று எனக்குத் தெரியும். எனக்கு அவரே போதும். நான் எப்போதும் சேர்ந்திருக்க விரும்புவது அவரோடுதான்" என்கிறார் சாந்தினிதேவி.

காலம் பூராவும் சக்கர நாற்காலியில் காலம்தள்ள வேண்டிய ஒருவரை மனதாரக் காதலித்து உயிராக நேசிக்கும் சாந்தினிதேவியை பாராட்டலாம். விரைவில் திருமணம் நடக்கவிருக்கிறது.

## கதையை மாற்றுங்கள்

**டெ**ன்னிஸ் உலகில் பெண் ரசிகைகளை கவர்ந்த கவர்ச்சி அழகர் என்று பெயரெடுத்தவர் அன்ட்றே அகாசி. ஹொலிவுட் படவுலக கவர்ச்சித் தாரகை புரூக்ஷீல்ட்-



அகாசி காதல் விவகாரம் முன்னர் ருசிகரமாக அடிபட்டது. அவர்கள் திருமணம் செய்து கொண்டுள்ள பின்னரும் சுவாரசியமான செய்திகளுக்கு பஞ்சமில்லை.

சில ஆண்டுகளுக்கு முன்னர் 'புளூ லகூன்' (நீல ஏரி) என்ற ஆங்கிலத் திரைப்படம் இலங்கையிலும் திரையிடப்பட்டது. ஒன்று மறியாத ஒரு சிறுவனும் சிறுமியும் மனித சஞ்சாரமற்ற தீவில் தனித்து விடப்படுகின்றனர். இவர்கள் வளர்ந்து பருவமடைந்ததும் இவர்களுக்கு ஒரு குழந்தை பிறக்கிறது. இதுதான் கதை. இதில் அப்பாவிச் சிறுமியாக விருந்து தாய்மை எய்தும் பாத்திரத்தில் புரூக் ஷீல்ட்ஸ் நடித்தார்.

புரூக் ஷீல்ட்ஸ் அமெரிக்கத் தொலைக் காட்சி தொடர்களில் நடித்து வருகிறார். 'சடிண்லி சுசான்' என்ற தொடரிலும் நடித்து வந்தார். இதற்கிடையில் அன்ட்றே அகாசியை காதலித்துத் திருமணமும் செய்துகொண்டார். ரீ.வி. தொடர் தயாரிப்பாளர்களுக்கு புரூக் ஷில்ட்ஸின் திருமணம் பெரும் தலையிடியை ஏற்படுத்திவிட்டது. தங்கள் தொடர் முடியுமுன் உடல் பருத்துவிடுமோ- கர்ப்பமுண்டாகி விடுவாளோ என்று பயந்தனர். அவ்வாறு எதுவும் நடக்காது என்று கணவனும் மனைவியும் உத்தரவாதம் தந்தனர்.

'நீல ஏரி'யில் தாய்மை எய்திய பெண்ணாக நடித்த காலத்திலிருந்தே புரூக் ஷீல்ட்சுக்கு குழந்தை பெறும் ஆசை இருந்து வந்தது. அகாஸிக்கும் குழந்தைக்கு அப்பாவாகும் ஆசை இருந்தது. இருவருடைய ஆசைக்கு ஏற்ப புரூக் கர்ப்பமுண்டாகி விட்டார். அகாஸியும் மகிழ்ச்சியில் துள்ளிக்குதிக்கிறார். தொடர் தயாரிப்பாளர்கள் தலையைப் போட்டுப் பிய்க்கிறார்கள். தடுமாறிய அவர்களிடம் அகாஸி- "தொடருக்கான கதையை மாற்றி அமையுங்கள். புரூக் கர்ப்பமுற்றுள்ளதாகக் காட்சிகளை மாற்றி அமைத்து- குழந்தை பெறுவது போலெல்லாம் கதையில் மாற்றம் செய்வது ஒன்றும் பிரமாதமான காரியமில்லையே!" என்று சர்வ சாதாரணமாகக் கூறிவிட்டாராம்.

## படம் எடுக்க பணம் குவிந்தது

**அ**கில உலக சூப்பருக்கு சூப்பரான மொடல் அழகி சிண்டி கிராஃபோர்ட். இந்த அழகிக்கு சுவாரசியனமான பொழுது போக்கு யாதெனில்: அடிக்கடி ஆண் நண்பர்களை மாற்றிக் கொள்ளுதல்.

டயானாவின் புத்திரர் இளவரசர் வில்லியம்சும் சிண்டிமீது பைத்தியமாக அலைகிறார் என்பது பரகசியம்.

ரிச்சர்ட் சியர், மற்றும் 'பேட்மேன்' புகழ் வால் கில்மர் என்று சிண்டியின் காதலர் பட்டியல் வால்போல நீண்டு செல்கிறது.

இறுதியாக சிண்டியின் சுண்டுவிரல் அசைவில் வீழ்ந்திருப்பவர் ரேண்டி கெர்பர் என்னும் கட்டிளம் காளை.

சிண்டியும் அவரும் பூங்காக்கள், கடற்கரைகள் என்று சுற்றித்திரிய, அவர்கள் பின்னாலேயே சுற்றித்திரிந்து புகைப்படம் எடுத்து தள்ளிவிட்டார் ஒரு படப்பிடிப்பாளர்.

அந்தப் புகைப்படங்களை விற்றதில் ஒரு தலைமுறைக்கே பணம் சேர்த்துவிட்டாராம். அப்படி என்னதான் இருந்தது அந்தப் படங்களில்? முக்கால் நிர்வாணம், முழு நிர்வாணம் என்று விதம் விதமான போஸ்களில், விதம் விதமான நிலைகளில் காணப்படுகிறார்களாம் சிண்டியும், அந்தக் கட்டிளம் காளையும்.



புதிய காதலருடன் சிண்டி

## கலக்கத்தில் டயானா

**தொ**ழிலதிபர் டோடிஃபயட்டுடன் டயானா காதல்வயப்பட்டிருப்பது தெரிந்த செய்தி. டயானாவும் சாள்ஸும் விவாகரத்து செய்து ஒரு ஆண்டு உருண்டோடிவிட்டது.



இந்த ஒரு வருடத்துக்குள் மூன்று காதலர்களை பெற்றிருந்தார் டயானா. சாள்ஸ் என்ன செய்கிறார்? தனது காதலி ஸ்கொட்லாந்தில் பால்-மோரால் என்ற இடத்தில் உள்ள ஆடம்பர மாளிகையில் தங்கியிருக்கிறார். அவரது நீண்டநாள் காதலியான சாமிலா பார்க்கர் அங்கு அடிக்கடி வந்து செல்லுகிறார். சாள்ஸுக்கு இப்போது 48 வயது. டயானாவுக்கு 36 வயது.

சாள்ஸ்-டயானா ஜோடி பிரிந்த பின்னரும் அவர்கள் மவுசு குறையவில்லை. இருவரதுசெய்திகளும் பரபரப்பாக அடிபட்டுக் கொண்டுதான் இருக்கின்றன.

சமீபத்தில் ஃபிரான்ஸ் பத்திரிகை ஒன்று டயானாவை பேட்டி கண்டது: "நான் பிரிட்டனைவிட்டு வெளியேறி இருப்பேன். என் மகன்களுக்காகவே தங்கி இருக்கிறேன்" என்று கூறியிருக்கிறார். டயானா உல்லாசமாக இருப்பதுபோல தெரிந்தாலும் தன் வருங்காலத்தை நினைத்து உள்ளூர கலக்கமடைந்துள்ளார் என்று எழுதியுள்ளது ஃபிரான்ஸ் பத்திரிகை.




www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

# அபூர்வ சந்திப்பு



இன்றுவரை உலகில் அதிகூடிய உயரமானவர் ஹொஜி முகமட் ஆலம் சன்னா (வயது 41) என்பதும், அவரது உயரம் 7 அடி 7¼ அங்குலம் என்பதும் 'முரசு' வாசகர்களும் அறிந்த செய்திதான். அந்த உயரமான மனிதரையும், இரண்டு சின்ன சின்ன (உயரத்தில்) மனிதர்களையும் சந்திக்க வைத்தனர். இலண்டனில் உள்ள ஒரு சங்கம்தான் இந்த ஏற்பாட்டைச் செய்ததாம். மேலும் கீழும் பார்த்துப் பார்த்தே பார்வையாளரின் கண்கள் களைப்படைந்துவிட்டதாம். மலையும், மடுவும்.



# தகவல் பெட்டி

## வாழ்ந்து பார்க்கிறார்கள்



லீதிகோ



மோர்டன்சன்

←122 வயதுவரை குத்துக்கல்லாட்டம் இருந்துவிட்டு இறந்துபோனார் ஃபிரான்ஸ் நாட்டு பெண்மணி ஜூன் கோல்மண்ட். கின்னஸ் புத்தகத்தில் இடம் பிடித்தவர். (முரசிலும் இடம்பெற்றவர்) அவரது மறைவின் பின்னர் அந்த இடத்தைப் பிடிப்பதில் பலத்த போட்டி. இரண்டு பெரிசுகள் களத்தில் குதித்துள்ளனர்.

ஒருவர் ஆண். இன்னொருவர் பெண். இன்று உலகில் ஆயுள் அதிகமான ஆண் மகன் இவர்தான். வயது 115 பெயர்: கிறிஸ்டியன் மோர்டன்சன். பிறந்தது டென்மார்க்கில். வசிப்பது அமெரிக்காவில். மாமிசம் தொடமாட்டார். சுருட்டுப்பிடிப்பார். மகிழ்ச்சியான வாழ்க்கையே ஆயுளின் இரகசியம் என்கிறார்.

உலகில் அதிக வயதான இந்தப் பெண்மணியின் பெயர் லீ.தி.கோ. வியட்நாமில் ஹோசிமின் நகரில் வசிக்கிறார். வயது 117. இவரது முத்த மகனுக்கு 65 வயதாகிறது. வாழ்க பல்லாண்டு.

## நூலைப்போல சேலை...

↑ தாயும் வெள்ளை, குட்டியும் வெள்ளை. நூலைப்போல சேலை, தாயைப்போல பிள்ளை என்பது சரிதான். காண்டாமிருகமும், அதன் வெள்ளைநிறக் குட்டியும் கண்களுக்கு விருந்தாக இருக்கிறதல்லவா. பிறந்த இரண்டுமாதம்கூட ஆகாத குட்டியை பத்திரமாக தன் நிழலில் வைத்திருக்கிறது தாய். சிங்கப்பூர் விலங்கியல் பூங்காவில் எடுக்கப்பட்ட படம் இது. தாய் பெயர் டோன்சா. குட்டியின் பெயர்: ஹிமா.

# ஓயும்வரை ஓட்டம்

## இதயம் கவர்ந்த இளவரசி



டோடி ஃபயட்டின் முதலாவது காதல் துணைவி சுஷேன்-ஒன்றாய் எட்டு மாத வாழ்க்கை



டயானாவிற்கு முன்னரான காதல் துணைவி கெல்லி ஃபிஸெர்.

உலக மக்களின் இதயம் கவர்ந்த அழகுத் தேவதையை இத்தனை விரைவாக மரணம் கவரும் என்று யார்தான் எதிர்பார்த்தார்கள்!

டயானா...டயானா...டயானா... செய்தி உலகத்தின் கற்பகதரு. அவர் செல்லுமிடம் எங்கும் கமராக்கள் துரத்தின.

ஒருகாலத்தில் கமராக்களுக்கு சளைக்காமல், மாறாத புன்னகையோடு போஸ் கொடுத்துக் கொண்டிருந்தவருக்கு ஒரு கட்டத்தில் கமரா வெளிச்சங்களைக் கண்டாலே அலர்ஜி ஆகிவிட்டது. கமராக்காரர்களிடமிருந்து தப்பிக்கொள்ள ஓடினார்... ஓடினார்.... இறுதியாக வாழ்க்கையின் ஓரத்திற்கே ஓடிவிட்டார்.

புகழ்வெளிச்சம் டயானாமீது படவைத்ததும் கமராக்காரர்கள்தான். இறுதியாக மரண இருளுக்குள் தள்ளியதும் கமராக்காரர்கள்தான். இப்போது ஆழ்ந்த கவலையில் இருக்கிறது செய்தி உலகம். இன்னமும் குறைந்தது 20 வருடங்களாவது செய்தி உலகுக்கு பரப்பரப்பான தீனிபோடக்கூடிய தேவதையை அல்லவா செய்தி உலகம் பறிகொடுத்துவிட்டது!

டயானாமீது என்னதான் சர்ச்சைகள், விமர்சனங்கள் இருந்தாலும் பிரிட்டிஷ் மக்களின் பெரும்பாலோர் டயானாமீது பிரியம் கொண்டிருந்தனர். டயானாவுக்காக கண்ணீர் சிந்தியபடி மலர்வளையத்தை மலையாக குவித்துவிட்டனர்.

டயானாவின் தவறுகளுக்கு அவர் மட்டும் காரணமல்ல. சாள்ஸ்சும், அரச குடும்பமும்கூட காரணம் தான் என்பது பிரிட்டிஷ் மக்கள் பெரும்பாலோரது எண்ணமாம். டயானா தேவதையாக வீட்டில் இருக்க, வேறு பெண் துணையை தேடிச் சென்றார் சாள்ஸ். டயானாவின் மனச் சிதைவுக்கு அதுவும் ஒரு காரணம்.

டயானாவின் காதலர்கள் பட்டியலில் பலர் இருந்தாலும், மரணத்திலும் டயானாவோடு இணைந்துவிட்டவர் டோடி அல் ஃபயட்.

டோடி அல் ஃபயட் உல்லாசி. பல அழகுப் பெண்களுடன் சல்லாபம் கண்டவர். டயானா அவரை நம்பியதுதான் பலருக்கு ஆச்சரியமாக இருந்தது. சில வாரங்களுக்கு முன்னர்தான் டோடி அல் ஃபயட்டின் முன்னாள் காதல் துணைவியான மொடல் அழகி கெல்லி ஃபிஸெர் அழுதழுது பேட்டியளித்திருந்தார். ஃபயட் தன்னை ஏமாற்றிவிட்டார் என்று புலம்பியிருந்தார். சமீபத்தில் டோடி ஃபயட்டும், டயானாவும் உல்லாசமாக இருந்தபோது எடுக்கப்பட்ட புகைப்படங்கள் உலகெங்கும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தன. அதனால்தான் புகைப்படக்காரர்களிடமிருந்து தப்புவதற்காகவே காரில் அந்த ஓட்டம் ஓடினார்கள் டயானாவும் டோடி ஃபயட்டும். அது மரண ஓட்டமாகிவிட்டது.

(டயானாவின் மரணத்தின் முன்னரான செய்தி 8ம் பக்கத்தில் உள்ளது. அச் செய்தி அச்சாகும்போதே டயானாவின் மரணச் செய்தி கிடைத்தது.)

டயானாவின் உயிர்பிரிந்துவிட்டது. ஆனால் டயானா பற்றிய கதைகளும், நினைவுகளும் உயிர்வாழ்ந்துகொண்டேயிருக்கும். டயானாவுக்கு மறைவில்லை.



இளவரசி டயானாவைக் கண்டதும் முன்னும் பின்னுமாக துரத்துகிறார்கள் கமராக்காரர்கள். அவர்களிடமிருந்து தப்பி ஓடுகிறார் டயானா. இப்புகைப்படம் இலண்டனில் எடுக்கப்பட்டது. அன்று கால்களால் ஓடினார் இறுதியாக காரில் ஓடினார்.



→ டயானா-டோடி ஃபயட் ஜோடி உல்லாசமாய் இருந்தபோது ஒளிந்திருந்து எடுத்த புகைப்படம்



படிப்பகம்

www.padippakam.com

## தபு தேடிய நடிகர்

'அவ்வை சண்முகி' இந்திப்படத்தில் கமலின் ஜோடியாக நடித்துக் கொண்டிருக்கிறார் தபு. ஃபெப்சிக்கு ஆதரவாக கமல் நிற்பதை பாராட்டி மாலைபோட நடிகர்கள் சத்யராஜ், நெப்போலியன், விஜயகுமார் என்று ஒரு பட்டாளமே சென்றது. அவர்களை தபுவுக்கு அறிமுகம் செய்துவைத்தார் கமல். தபுவின் கண்கள் யாரையோ தேடினவாம். கடைசியாக வாய்விட்டுக் கேட்டே விட்டாராம்: "அஜித்குமார் எங்கே?" தபு அப்படிக் கேட்டதும் நடிகர்கள் முகம் சுருங்கிவிட்டது. நடையைக் கட்டினார்கள். திரையுலகப் பிரச்சனையில் அஜித்குமாரும் கமல் பக்கம்தான்.

## எபியா-அப்பாஸா?

பிரபல தயாரிப்பாளர் குஞ்சுமோனின் செல்லப் புத்திரர்தான் எபி. அது என்ன பேரோ தெரியவில்லை. அப்பாஸ்மீது உள்ள கோபத்தால் அவருக்கு போட்டியாக தன் மகனையே நடிக்க வைத்துள்ளார் குஞ்சுமோன். இங்கே அப்பாஸ் படம், எபி படம் இரண்டும் உள்ளன. அப்பாசுக்கு போட்டியாக எபி வருவாரா என்று பார்த்துச் சொல்லுங்கள்.

சண்டைப் பயிற்சி, நடனப் பயிற்சி என்று சினிமாவுக்கு தேவையான சகல பயிற்சிகளையும் எபிக்கு கற்றுக் கொடுத்திருக்கிறார் அப்பா குஞ்சுமோன். 'ரட்சகன்' படம் முடிவடைந்ததும் கோடீஸ்வரன் படப்பிடிப்பு பிரமாண்டமாகத் தொடங்குமாம்.

## கமலைச் சாடுகிறார் சரத்

திரைப்படத் தொழிலாளர்களுக்கு ஆதரவாக கமல் நிற்கிறார். படைப்பாளிகள் பக்கம் விஜயகாந்த் அணியில் இருக்கிறார் சரத்குமார். தனது பேட்டி ஒன்றில் கமலஹாசனை மறைமுகமாக சாடியிருக்கிறார் சரத்குமார்.

"தொழிலாளர்கள்தான் என் மூச்சு என்று இன்னைக்கு ஒரு நடிகர் குரல் கொடுத்திருக்கிறார். பத்திரிகையில் படிச்சேன். அந்த நடிகர் தொழிலாளருக்காக என்ன செய்திருக்கிறார்? நான் தைரியமாவே கேட்கிறேன். விஜயகாந்த்தோ நானோ செய்தமாதிரி யாராவது தொழிலாளர்களுக்கு நல்லது செய்திருக்கிறார்களா? நல்லது பண்ணாமலே குரல் கொடுத்துக் கொண்டிருக்கிறார்." என்று கமலைச் சாடியிருக்கிறார் சரத்குமார்.

திரையுலக மறுபக்கம் 19

மித்ரவாசு

# கண்காணிக்கப்பட்ட கா[...] சங்கீத நடிகையை மனை[...]

இன்றைய முன்னணி ஏழு ஹீரோக்களில் ஒருவர். முன்பு காதல் இளவரசனாக இருந்தவர். இவரோடு கிசுகிசுக்கப்பட்ட காதல் நடிகையர் ஏராளம். முதன் முதலாக கிசுகிசுக்கப்பட்டவர் ஜெயம் கண்ட சுதா நடிகை. இவர்களது நெருக்கம் இவர்கள் நடித்த படங்களின் காதல் காட்சிகளிலேயே தெரிந்தது. நடிகை தெலுங்கு படங்களின் பக்கம் போனதும் இவர்களது காதலுக்கு சுபம் போட்டாயிற்று.

அடுத்து நடிகரின் பிரியத்துக்கு உடன்பட்டவர் ஒரு நான்கெழுத்து நடிகை. இவர் மலையாளப் படங்களில் நடித்தார். மலையாளப் படத் தயாரிப்பாளர் ஒருவரை மணந்து பிரிந்தவர். நடிகர் பிற நடிகையரை விரும்பியதுபோல் நடிகைகள் நடிகரை விரும்பியதும் உண்டு.

"இந்த நடிகரை நானும் காதலித்தேன் அவரும் என்னை விரும்பினார். திருமணம் செய்து கொள்வதாகக்கூடச் சொன்னார். ஆனால் திடீரென்று வேறொரு நடிகையை திருமணம் செய்து கொண்டு விட்டார்" என்று அந்த நான்கெழுத்து ஸ்ரீநடிகை சமீபத்தில் ஒரு ஆங்கிலப் பத்திரிகைக்கும் பேட்டியளித்திருந்தார். அந்த நடிகை கர்நாடகப் பாடகியின் மகள்.

நடிகர் வேறொரு நடிகையை திருமணம் செய்துகொண்ட பின்னரும், பிற நடிகையர்மீது காதல் வசப்படுவது நின்றபாடில்லை. சமீபத்தில் இந்தி தயாரிப்பாளரின் மனைவியாகிவிட்ட நடிகையை மணந்து கொள்ளப் போவதாகவும் முன்னர் செய்திகள் அடிபட்டன. எந்த நடிகையுடன் நடித்தாலும் அவர்கள் தோளில் கைபோட்டபடி நடிகர் சர்வசாதாரணமாகப் பழகுவார்.

நடிகருக்கு அசைவ உணவுகள் என்றால் மிகவும் பிடிக்கும். ஆனால் மனைவிக்குப் பிடிக்காது. அதற்காக நடிகர் ஹோட்டலுக்கு செல்ல விரும்பமாட்டார்.

திருமணத்தின் பின்னரும் நட்புத் தொடர்ந்த 'பிரிய'த்துக்குரிய நான்கெழுத்து நடிகையின் வீட்டுக்கு அவ்வப்போது சென்று அசைவ உணவு வகைகளை சாப்பிட்டுவிட்டு வருவார். தன் காரில் செல்லாமல் மேக்கப்மேனின் காரில்தான் போவார்.

### மனைவி சந்தேகம்

இந்த நான்கெழுத்து நடிகையோடு காதல் இளவரச நடிகருக்கு ஆழமான நட்பு இருப்பதாக நடிகரின் மனைவி சந்தேகித்தார். தனது காரில் சென்று அந்த நடிகையின் வீட்டை உளவு பார்த்தார். நடிகர் மேக்கப்மேனின் காரில் சென்று வருவதை நடிகரின் மனைவி எப்படியோ கண்டு பிடித்துவிட்டார். அதனை வெளிப்படையாகக் காட்டிக் கொள்ளாமல் அன்றிரவே வலுக்கட்டாயமாக அசைவ உணவைச் சாப்பிடச் சொல்லி நட்சத்திர ஹோட்டல் ஒன்றுக்கு அழைத்துச் சென்றார்.

இப்படியே நான்கைந்து நாட்கள் மனைவியோடு சென்ற நடிகருக்கு ஹோட்டல் சாப்பாடு பிடிக்காமல் போனது. ஒரு மாதிரியாக ஹோட்டலுக்கு செல்வதை நிறுத்திவிட்டார்.

ஆனால் அதற்குப் பின்னர் பிற்பகல் நேரங்களில் 'பிரிய'த்துக்குரிய நடிகையின் வீட்டில் இருந்து படப்பிடிப்பு நடக்கும் இடங்களுக்கு அசைவ உணவு வகைகள் வரத்தொடங்கின. அதனால் தன் வீட்டில் இருந்து அனுப்பப்பட்ட சைவ

உணவு வகைகளை ப[...]

என்றாலும் மனை[...]
தகவல் சொல்பவர்க[...]
ஆத்மார்த்தமான நட்[...]
தொடர்பும் கிடையா[...]
மணந்து கொண்டு [...]
பேசவே செல்கிறேன்.[...]
இருப்பதால் சாப்பிடு[...]

சா[...]

எம்.ஜி.ஆரை சி[...]
எடுத்துக்கொள்கின்[...]
சங்கீத நடிகைமீது அ[...]
ஆட்டுவிக்கிறது. அவ[...]
நடிகையான தன் ம[...]
"இதோ பாரும்ம[...]
மீண்டும் சூப்பர் வெ[...]
பண்ணிக்கிட்டபின்ன[...]
இரண்டாம் கல்யாண[...]
முதலமைச்சராகிற [...]
சொல்லுது." என்ற[...]
அழைத்துச் சென்று[...]



இந்திரஜா
படம் தடயம்



எபி
படம் கோடீஸ்வரன்

## கமல் கூந்தல்

'மருதநாயகம்' படத்தை படு பிரமாண்டமாக கமல் எடுக்கப் போகிறார் என்பது யாவரும் அறிந்ததே. படம் பற்றிய யாருமே அறியாத விஷயங்கள் பலவற்றை இரகசியமாக வைத்திருக்கிறாராம் கமல். படத்துக்கு படம் வித்தியாசம் காட்டும் கமல் மருதநாயகத்தில் தன் முடியை நீளமாக வைத்து அள்ளி முடித்துக் கொண்டை போட்டுக் கொள்ளப்போகிறாராம். அதற்காக முடி வளர்க்காமல் வித்தியாச 'விக்' வைத்துக் கொள்ளப் போகிறாராம்.

கமல் பற்றி மற்றொரு தகவல்: 'அவ்வை சண்முகி' யை இந்தியில் எடுக்கிறார் அல்லவா. படப்பிடிப்பை மும்பையில் நடத்தச் சென்றாராம் கமல். படத்தின் இயக்குநரை கமல் திடீரென்று தூக்கியதற்கு கடும் எதிர்ப்பாம். யாரும் ஒத்துழைக்க மறுத்ததால்தான் சென்னையிலேயே படப்பிடிப்பை நடத்தத் தொடங்கினாராம்.

## கனகா தனியாக

நடிகை தேவிகாவின் மகள் நடிகை கனகா முன்பு எங்கே போனாலும் தாயார் பாதுகாப்பாக செல்வார். இதனால் படப்பிடிப்பு ஓய்வு நேரங்களில் கனகா சக நடிகர்களையோ, இயக்குநர்களையோ அனுசரித்துப் போவது கஷ்டமாக இருந்தது. கனகா சரளமாகப் பழகினாலும் தேவிகாவும் இருப்பதால் பழைய நடிகையாச்சே என்ற மரியாதை காரணமாக இளம் நடிகர்கள் ஒதுங்கிப் போய்விடுவார்கள். இதனால் கனகாவுக்கு பட வாய்ப்புக்களும் குறைந்து போய்விட்டன.

தேவிகாவும் பழம் பெரும் அனுபவம் உள்ளவர் என்பதால் நிலவரத்தை புரிந்துகொண்டார்.

இப்போது கனகா தனியாகத்தான் படப்பிடிப்புக்களுக்கு செல்கிறார். இனி வாய்ப்புக்கள் குவியலாம்.



ரகுமான-சுபாஜு
படம் போர் முழக்கம்

## நடிப்பதில் நம்பிக்கை

நடனத்தை மட்டும் நம்பியிருந்தால் கோவிந்தாதான்: நடிக்கவும் வேண்டும் என்று பிரபுதேவா திட்டவட்டமாக தீர்மானித்துவிட்டாராம். வி.ஐ.பி. படத்தில் பிரபு தேவாவின் நடிப்பை பாராட்டாதவர்கள் இல்லையாம். அதனால் தன்னம்பிக்கை வந்துவிட்டதாம்.

வி.ஐ.பி. படத்தின் வெற்றிகரமான ஓட்டம் பிரபுதேவா பக்கம் மறுபடி அதிஷ்டக்காற்று வீச வைத்திருக்கிறது. தொடர் தோல்விகளால் பிரபுதேவா துவண்டிருந்தபோது தூரவிலகிய நடிகைகள் சிலர் இப்போது பிரபுதேவாவைச் சந்திக்க அலைகிறார்கள்.

'லவ் பேர்ட்ஸ்' தோல்விக்குப் பின்னர் பிரபுதேவாவுடன் முகம் கொடுத்து பேசாத நக்மா இப்போது தனது சகோதரிக்காக பிரபுதேவாவிடம் சிபாரிசு செய்தாராம். 'பார்க்கலாம்' என்று ஒரே வார்த்தையில் சொல்லி பேச்சை 'கட்' பண்ணிவிட்டாராம் பிரபுதேவா.




விட்டு தி[...]
முடிவுக்கு காரண[...]
பிரிந்து வந்துவிட்டாராம்.
ஊர்வசி.


படிப்பகம்

www.padippakam.com

# ...ல் இளவரசன் ...க்க ஜோசியம்

...டப்பு குழுவில் உள்ளவர்களுக்கு கொடுத்துவிடுவார். ... சந்தேகம் தீரவில்லை. அதை நிறுத்தவும், மனைவிக்கு - ...வாயை அடைக்கவும் "எனக்கும் அந்த நடிகைக்கும் ...விர என் மனைவி சந்தேகப்படுவதுபோல வேறெந்த ...ரவிலேயே அந்த நடிகை சிங்கப்பூரிலி ருக்கும் நபரை ...கயே செட்டிலாகிவிடுவார். பரஸ்பரம் மனம்விட்டு ...கையால் சமைக்கும் அசைவ உணவு களுக்கு தனிரு சி ...ள்." என்று தன்னிலை விளக்கமளித்தார்.

## நடிகையும் கிராமராஜனும்

...வறான முன்னுதாரணங்களுக்கும் அவ்வப்போது ... அவர்களில் ஒருவர் பசுநேசன். நான்கெழுத்து ...காண்டிருக்கும் மோகம் அவரை எப்படியெல்லாமோ ...ணந்துகொள்ள முன்வந்து முன்னாள் நளினமான ...யைக்கூட சரிசெய்துவிட்டார்.

...ன் இன்னொரு கல்யாணம் பண்ணிக்கிட்டாத்தான் ... வருவேனாம். எம்.ஜி.ஆர். இரண்டாம் கல்யாணம் ...ன் பெரிய நடிகரானார். நானும் அவர்போல ... பண்ணிக்கிட்டா அரசியலிலும் பெரிய ஆளாகி ...யும் இருக்கு என்று என் ஜாதகக் குறிப்புக்கள் ...ாட்சிக்கு ஜோசியர் ஒருவரையும் மனைவியிடம் ...யாட்டவைத்தாராம்.

ஜோசியத்தில் நம்பிக்கை உள்ள மனைவியும் சம்மதித்தாராம். இதைச் சங்கீத நடிகைமிடம் சொன்னதோடு, சங்கீத நடிகைபற்றி தனக்குத் தகவல் சொல்ல ஒரு ஆள் வேண்டுமென்று தனது உதவியாளரையே நடிகையின் டச்சப் பையனாக போட்டுவிட்டார்.

அந்த உதவியாளர் நடிகையின் நடவடிக்கைகளை பசுநேசனிடம் தெரிவித்துவந்தார். நடிகை தற்போது நடித்துவரும் படத்தின் இயக்குநருடன் நடிகை சிரித்துப் பழகியதை அத் தகவல் பசுநேசனுக்கு வந்தது. பசுநேசன் இப்போது டென்ஷனாகி நடிகையின் அடுத்த கட்ட நடவடிக்கைகளை அறிய காதுகளை கூர்மையாக்கி வைத்திருக்கிறார்.

பி.கு. நடிகரை கிராமராஜன் என்றும்அழைப்பர். எம்.ஜி.ஆர். பாணியில் கிராமப்படங்களில் நடித்து பிரபலமானவர். அட. ராமா, ராமா.

# காதோடு சொல்லுகிறோம்

**மீ**ன் நடிகை சீனாவுக்கு சென்றிருக்கிறார். தனியாக அல்ல. சமீபகாலமாக மீன் நடிகையைச் சுற்றிவரும் ஒரு தொழிலதிபருடன்தான் பறந்து சென்றிருக்கிறார். தமிழ்ப்பட உலக இழுபறிகளால் தொழிலாளர்கள்தான் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். மூலதனம் போட்ட தயாரிப்பாளர்களும் பெருமூச்சுவிட்டுக் கொண்டிருக்கிறார்கள். நடிக, நடிகையர்கள் மட்டும் தங்கள் தங்கள் திறமைகளுக்கேற்ப ஓய்வை அனுபவித்துக் கொண்டிருக் கிறார்கள்.

**ச**த்யமான நடிகருடன் ஒரு காலத்தில் மிக நெருக்கமாக இருந்தவர் ரஞ்சித நடிகை. உயரப் பொருத்தமும் இருந்ததால் பல படங்களில் ஜோடியாகவும் நடித்து நட்பை இறுக்கிக் கொண்டனர். திரையுலகப் பிரச்சனையில் சத்ய நடிகர் ஒருபுறமும், நடிகை எதிர்ப்புறமும் நிற்கின்றனர். நடிகரின் பெயரைச் சொல்லி "அவரது வண்டவாளம் எனக்கா தெரியாது? ஒவ்வொன்றாக எடுத்துவிட்டால் என்னாகும் தெரியுமா?" என்று பேசி தனது தரப்பு நடிகர்களை குஷிப்படுத்துகிறாராம் ரஞ்சிதமான நடிகை.

**சி**ம் நடிகைக்கு ஐஸ்கிரீம் என்றால் மாளாத ஆசையாம். படப்பிடிப்பு நேரங்களில் அப்பாஸ் ஐஸ்கிரீம் வாங்கிக் கொடுப்பாராம். இதனையறிந்த வேறு சில நடிகர்களும் படப்பிடிப்பில் ஐஸ்கிரீம் வாங்கிக் கொடுத்து தங்கள் அன்பை தெரிவிக்கிறார்களாம். இப்போது ஐஸ்கிரீம் நடிகை என்று பட்டமே சூட்டி விட்டார்கள்.

'ரட்சக' நாயகியான முன்னாள் அழகிக்கு படப்பிடிப்பு தள்ளிப்போனதால் வருத்தமே இல்லையாம். காரணம், நாட்கள் போனதே தெரியவில்லையாம். 'நாக' நடிகரின் கவனிப்பில் நட்சத்திர விடுதியில் தங்கியிருப்பதால் பொழுது பயனுறக் கழிக்கிறதாம். நடிகரின் மனைவிதான் மிக்க சோகத்தில் இருக்கிறார். கண்கண்ட கணவரைக் கண் ணால் கண்டே பல வாரங்கள் ஆகிவிட்டதாம். 'ரட்சக' தயாரிப்பாளர்தான் ஏகப்பட்ட செலவாகிவிட்டது என்று புலம்பிக்கொண்டிருக்கிறார். முன்பு போல மீசையை முறுக்க முடியவில்லையாம்.

# தடைபோட்டார் ரம்பா

தொப்புளில் பம்பரம் விடுவதில் ஆரம்பித்து தொப்புள் காட்சிகள் பல்வேறு விதமாக அரங்கேறத் தொடங்கின. சுகன்யா முதல் ரம்பாவரை தொப்புள் காட்சிகளில் துணிந்து நடித்தனர்.

இப்போது ரம்பா தொப்புள் காட்சிகளில் நடிக்கவே மாட்டேன் என்று வீரசபதம்(?) செய்திருக்கிறார். அதற்கான காரணத்தை ரம்பாவே இயம்பியிருக்கிறார்.

"தொப்புளில் கோலிக்குண்டு விளையாடுவதாக நான் ஒரு படத்தில் நடித்தேன். அதைப் பார்த்துவிட்டு எட்டுவயது சிறுமி ஒருத்தி தன்னுடைய ஃப்ரெண்டைக் கூப்பிட்டு தொப்புளில் கோலிக்குண்டு விளையாடச் சொல்லியிருக்கா. ஒரு கோலியை தொப்புளில் பதிச்சு வைச்சு இன்னொரு கோலியால் அதை அடிக்கிற மாதிரி விளையாட்டு. விளையாட்டு சுவாரசியத்தில் கோலியை வேகமாகவீச, அது குறி தவறி அந்தச் சின்னப் பெண்ணோட தொண்டைக் குழியில போய் வேகமாகப் பட்டுடிச்சு.

அந்தப் பெண்ணுக்கு திடீரென்று பேச்சே நின்றுபோய் சாகற நிலைக்கு போயிடுச்சாம். அதைக் கேள்விப்பட்டதில் இருந்துதான் நான் இப்படி ஒரு முடிவுக்கு வந்தேன்" என்கிறார் ரம்பா.



வினீத்-செளந்தர்யா
படம் காதலிச்;கலாம் வா



முகப்பில்
மீனா
மதுபாலா



"மாமரத் தோப்பினில்
வண்டு பறந்துவரும்
மாம்பழச் சாறினில்
வந்து மயங்கிவிழும்
மீறிய போதையில்
தன்னை மறந்திருக்கும்
போனது போகவும்
மிச்சம் சுவையிருக்கும்"

அப்பாஸ்-அமுல்யா
படம் இதுதான் காதல்

# மினி சினி

* இந்தியில் தயாராகும் 'நாட்டாமை' படத்திற்கு 'புல்லந்தி' என்று பெயரிடப்பட்டுள்ளது. தமிழில் விஜயகுமார் நடித்த வேடத்தை 'புல்லந்தி'யில் ரஜினி நடிக்கிறார். 'புல்லந்தி' என்றால் தமிழில் 'சிகரம்' என்று அர்த்தம்.

* 'வி.ஐ.பி.' படத்தில் சிம்ரான் நடித்த வேடத்தில் முதலில் நடிப்பதாக ஒப்பந்தமாகி பின்னர் நீக்கப்பட்டவர் புதுமுகம் லைலா. இவர் அண்மையில் 'சந்திப்போமா' என்ற படத்தில் கதாநாயகியாக ஒப்பந்தமானார். ஏனோ தெரியவில்லை இந்தப்படத்திலும் லைலாவை நீக்கிவிட்டு சிம்ரானை நடிக்க வைத்துள்ளார்கள்.

* சூப்பர்குட் ஃபிலிம்ஸ் நிறுவனம் தயாரிக்க, ஈரோடு சவுந்தர் இயக்கும் 'சிம்மராசி' படத்தில் பிரகாஷ்ராஜ் கதாநாயகனாக நடிக்கவிருக்கிறார். இந்தப் படத்தின் மூலம் முதன் முதலாக பிரகாஷ்ராஜ் இரட்டை வேடத்தில் நடிக்கிறார்.

* 'பூவே உனக்காக' தெலுங்கில் வெற்றிகரமாக ஓடியதால் அதில் நடித்த மந்த்ராவுக்கு தெலுங்கில் நல்ல வரவேற்பு. மூன்று தெலுங்குப் படங்களில் கதாநாயகியாக நடித்து வரும் மந்த்ரா, அங்கு ராசி என்ற பெயரில் நடித்து வருகிறார்.

* அப்பாஸ்-சிம்ரான் நடிக்கும் 'பூச்சூடவா' படத்தை இயக்குபவர் உதயசங்கர். இவர் 'அண்ணாமலை', 'பாட்ஷா' படங்களை இயக்கிய சுரேஷ் கிருஷ்ணாவிடம் உதவி இயக்குநராகப் பணியாற்றியவர்.

* 'நெஞ்சங்கள்' படம் மூலம் குழந்தை நட்சத்திரமாக அறிமுகமாகி, தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய நான்கு மொழிகளிலும் இதுவரை 99 படங்களில் நடித்துள்ளார் மீனா. 'பொற்காலம்' இவருக்கு 100வது படம்.

* இளையராஜாவின் மகள் பவதாரணியைத் தொடர்ந்து. இன்னொரு இசையமைப்பாளரின் மகளும் பின்னணிப் பாடகியாகப் போகிறார். அவர் யார் தெரியுமா? தேனிசைத் தென்றல் தேவாவின் மகள் சங்கீதா.

* அஜித்-விக்ரம் இணைந்து நடித்த 'உல்லாசம்' படம் தெலுங்கில் மொழிமாற்றப்பட்டு வருகிறது. 'இந்தியன்' படத்தைத் தயாரித்த ஏ.எம். ரத்தினம் இப்படத்தை தெலுங்கில் தயாரிக்கிறார்.

* 'பாஞ்சாலங்குறிச்சி' படத்தை இயக்கிய சீமான் தற்போது பிரபு நடிக்கும் 'இனியவளே' படத்தையும், கார்த்திக் நடிக்கும் 'ஆனந்தம்' படத்தையும் இயக்குகிறார். இவை முடிவடைந்ததும் விஜய் நடிக்கும் படமொன்றை இயக்கவுள்ளார்.

* 'வி.ஐ.பி.' படத்தில் பிரபுதேவாவின் கார்ச்சாரதியாக நகைச்சுவை வேடத்தில் நடித்திருப்பவர் அனுமோகன். இவர் 'நினைவுச் சின்னம்', 'மேட்டுப்பட்டி மிராசு' போன்ற படங்களை இயக்கியவர்.

# நிருபர் கலக்கம்

முழுச் சுதந்திரம் கொடுத்தேன். புகுந்து விளையாடிவிட்டார் பாண்டியராஜன் என்று நிருபர் ஒருவரிடம் சொன்னாராம் ரசிகா. நிருபர் கதிகலங்கிப்போனார். உடனே சுதாகரித்துக்கொண்ட ரசிகா, "முதலில் உங்கள் நினைப்பை துடைத்து எறியுங்கள். நான் சொன்னது கவர்ச்சி காட்டுவதில். பாண்டியராஜன் கதாநாயகன் மட்டுமல்ல, 'கபடி கபடி'பட இயக்குநரும் அவர்தான். அதுதான் ஆடைத்தெரிவில் அவரை சுதந்திரமாக அனுமதித்தேன்." என்று விளக்கமளித்தாராம் ரசிகா.

# ஊர்வசி ஒத்திவைப்பு

மலையாள நடிகர் ஜெயனை திருமணம் செய்ய இருந்தார் ஊர்வசி. இருவரும் நீண்ட காலக் காதலர்கள். திருமணத்திற்கு எல்லாமே ரெடி. ஏற்பாடுகள் பூர்த்தி. திடீரென்று ஊர்வசி பின்வாங்கி விட்டாராம்.

...ாஞ்சக் காலம் போகட்டும். ஜெயனை இன்னமும் புரிந்துகொண்டு ...ணம் செய்யலாம் என்று முடிவெடுத்துள்ளாராம். ஊர்வசியின் ... அவரது சகோதரியாம். தனது கணவரின் கொடுமை தாங்காமல் ...க்கும் அந்தமாதிரி நிலை ஏற்பட்டுவிடக்கூடாது என்று நினைக்கிறாராம்

# 'விவரமான ஆளு'

தமிழ்ப்படவுலக மோதல்களால் புதிய படப் பூஜைகள் குறைந்திருக்கின்றன. சில படங்கள்தான் புதிதாக பூஜைபோடப்பட்டுள்ளன. பார்த்திபன் நடிக்கும் புதிய படம் ஒன்றும் பூஜை போடப்பட்டுள்ளது. படத்தின் பெயர் 'விவரமான ஆளு.' எதிலே விவரமான ஆளு என்று கேட்காதீர்கள். படம் திரைக்கு வந்தபின்னர்தானே கதை தெரியும்.

பார்த்திபனுக்கு இரு ஜோடிகள். கவுசல்யா ஒரு ஜோடி. மற்றொரு ஜோடியாக புதுமுகம் தேடுகிறார்கள். பார்த்திபன் சீமைப்பசு.... மன்னிக்கவும்... ரவளியை இதில் சிபாரிசு செய்யவில்லையாம். பார்த்திபனுக்கு என்ன கோபமோ?

# காப்பாற்றிய முத்தம்-சிம்ரானின் அனுபவம்

வி.ஐ.பி. படத்தில் பிரபுதேவாவுக்கு முத்தமழை பொழிந்திருப்பவர் சிம்ரான். முத்தத்தை பற்றி ஒரு விரிவுரையே நிகழ்த்தும் அளவுக்கு தகவல்கள் வைத்திருக்கிறார். அதில் ஒரு துளி இது:

"முத்தம் என்பது எல்லோருக்கும் பிடித்ததுதானே. மிருகங்கள் கூட தங்கள் அன்பை முத்தம் மூலமே தெரிவிக்கின்றன. கை குலுக்குவதுபோல, வணக்கம் சொல்வதுபோல, கடிதம் எழுதுவதுபோல அன்பைப் பரிமாறிக் கொள்ள ஒரு வழி அவ்வளவுதான்!" என்று கூறியுள்ளார் சிம்ரான். அது மட்டுமா கல்லூரிகால சிலிர்ப்பான அனுபவம் ஒன்றையும் அள்ளி விட்டிருக்கிறார் கேளுங்கள்:

"நாங்கள் பத்து மாணவிகள் எங்கள் குண்டுஸ் புரொபசருடன் வேனில் கோவாவுக்கு டூர் போனோம். திரும்பும்போது ஒரு ரெளடி கையில் கத்தியுடன் எங்களை மிரட்டி வேனில் ஏறிக்கொண்டான்.

இதற்குத்தான் கூடயாராவது பாய்ஃப்ரெண்ட்ஸை கூட்டிவந்திருக்கலாம் என்று என் தோழி புலம்பினாள். குண்டுபுரொபசர் பயந்து நடுங்கினார்.

எல்லோரும் தொலைந்தோம் என்று நடுங்கியபோது நான் தைரியமாக அவனை நெருங்கிக் கட்டிப்பிடித்து 'நச்' என்று ஒரு கிஸ் அடித்தேன். அவ்வளவுதான். அவன் புல்லரித்துப் போக கத்தியைத் தட்டிவிட்டேன். அப்புறம் என்ன, பத்துப்பெண்களும் ஒன்று சேர்த்து தர்ம அடிதான்... என்று சொல்லிச் சிலிர்க்கிறார் சிம்ரான்.



படிப்பகம்

www.padippakam.com

# முத்தான முகமல்லவோ



'ஆண்டொன்று போனால் வயதொன்று போகும்!' எவராலும்-எக்காரணத்தைக் கொண்டும் இதனைத் தடுக்கமுடியாது. எமது உடலில் வயதினால் ஏற்படக்கூடிய மாற்றங்களையும் தவிர்க்க முடியாது. ஆனால் சில மாற்றங்கள் ஏற்படாமல் ஒத்திப் போடலாம்.

இள மங்கையரின் உடலில் பருவத்தையொட்டி ஏற்படும் மாற்றங்கள் பரவசமூட்டுவனவே. ஆனால் திருமணமாகுமுன்னரோ அதன் பின்னரோ-குறிப்பாக முகத்தில் தோன்றும் மாற்றங்கள் வரவேற்கத்தக்கனவல்ல.

வழுவழுப்பான பட்டுப்போன்ற முகத்தில் எங்காவது ஒரு சின்னப்பரு தோன்றிவிட்டால் அதைப்போல் (மன) வேதனை தரக்கூடிய ஓர் அம்சம் இருக்கவே முடியாது. சில இளம் பெண்கள் அந்தப் பருவினால் குடியே மூழ்கிப் போய்விட்டதாக ஏங்கத் தொடங்கி விடுவார்கள். கையில் ஒரு கண்ணாடியை ஏந்திய வண்ணம் தன் முகத்தைப் பார்த்துப் பார்த்து விம்முவார்கள்.

முகப்பருவை மட்டும் ஒரு விரலால் மறைத்த வண்ணம் கண்ணாடியில் முகத்தைப் பார்த்து, முகத்தில் எதுவுமே இல்லாமல் பழைய மொழுமொழுவென்ற- மிருதுவான தன்மையே இருக்கிறது என்று தமக்குத்தாமே (தன்னையே ஏமாற்றி) தேற்றிக் கொள்ளும் பருவ மங்கையரை நம் இல்லங்களிலும் சந்திக்கிறோம். 'முகம் பாழாய்ப் போய் விட்டதே' என்ற கவலையே அவர்களை மென்மேலும் மன நோயாளிகளாக்கி விடுகிறது.

வயதுக் கோளாறினால் ஏற்படும் மற்றுமொரு மாற்றம் முகத்திலும் மேலும் பல்வேறு இடங்களிலும் தோன்றும் சுருக்கங்கள். முதல் சுருக்கத்தை முகத்தில் கண்டதும் பெண் அதிர்ச்சி அடைகிறாள். முகப்பரு தோன்றாமலிருக்க தன் முகத்தை உடன் சினேகிதிகளிடம் காட்டி பரிகாரம் தேடுவோர், முகத்தில் ஒரு சிறு சுருக்கம் ஏற்பட்டாலும் அதனை சினேகிதிகளிடம் காட்ட முன்வரமாட்டார்.

முகப்பரு, முகச்சுருக்கங்கள் போன்றவற்றுக்கு கடையில் வாங்கும் களிம்புகளைப் பயன்படுத்துவது எதிர்பாராத விளைவுகளையே தரக்கூடும். முதற் பருவோ முதல் சுருக்கமோ ஏற்பட்டால் அதனைப் பொருட்படுத்தாமல் விட்டு விடுவதே நன்மை பயக்கக்கூடியது. இவை பற்றிக் கவலைப் படுவதனால் மென்மேலும் பருக்களும் சுருக்கங்களும் தோன்ற ஆரம்பித்துவிடும்.

களிம்புகளைப் பூசும்போது முகச் சருமத்திலுள்ள இயல்பான மென்தன்மை நீங்கி சொரசொரப்புத் தன்மை அதிகரிக்கிறது. வெறுமனே அளவான வெந்நீரில் அடிக்கடி முகத்தைக் கழுவி, துப்புரவான மிருதுவான பருத்தித் துணியால் துடைத்துக் கொள்ளுங்கள். உங்கள் சருமத்துக்குப் பொருத்தமான பௌடரைப் பயன்படுத்துங்கள்.

முகத்துக்கு மஞ்சள் பூசுவதும் தொற்றுகளிலிருந்து காப்பளிக்கும்.

முகப்பரு உள்ளவர்கள் வேறு ஒருவர் பயன்படுத்தும் துவாயை- எக்காரணங் கொண்டும் பாவிக்கலாகாது; அதேபோல் நீங்கள் பாவிக்கும் துவாயை ஏனையோர் பாவிக்க அனுமதிக்கலாகாது. ஒரு தடவை பாவித்த டவலை கொதிநீரில் அமுக்கிப் பிழிந்து வெய்யிலில் காயவைத்துத்தான் பாவிக்க வேண்டும்.

வயது கூடும்போது முகத்தில் சுருக்கங்கள் தோன்றுவது இயல்பு. ஆனால் வயதுக் காரணம் இன்றிச் சுருக்கங்கள் தோன்றுவதற்கு மிகப் பிரதானமான காரணம் கவலையாகும். 'அகத்தின் அழகு முகத்தில் தெரியும்' என்பார்கள்.

மிக இளவயதிலேயே வயோதிபத் தோற்றத்தை சில பெண்கள் பெற்று விடுவதற்கும் கவலைதான் காரணம்.

முகத்திலும் உடலுறுப்புக்களிலும் காலத்தால் ஏற்படும் சுருக்கங்களை நீக்க தேகப் பயிற்சியைப் போல் வேறு எதுவும் கை தராது என்கிறார், சென்னை நகரில் அழகு நிலையங்கள் பலவற்றை நடத்திவரும் அழகியல் நிபுணரான திருமதி ரமா ராமசாமி.

காலையில் எழுந்ததும் படுக்கையில் இருந்து கொண்டே தமது இரு உள்ளங்கைகளையும் நாடியின் இரு புறங்களிலும் அழுத்திய வண்ணம் கைகளை கண்களின் கீழ்ப்புறம் வரை கொண்டு செல்லவேண்டும். நெற்றியிலும் விரல்களால் அழுத்திக் கொண்டு விரல்களை இடம் வலமாகவும் வலம் இடமாகவும் நகர்த்த வேண்டும்.

தினசரி 5 முதல் 10 நிமிடம் வரை செய்து வரவேண்டும். காலையிலும் மாலையிலும்கூட இம்முறையை அனுசரிக்கலாம்.

## சின்னச் சின்ன யோசனைகள்



★ பிரசவத்தின்போது பெண்கள் அதிக அளவிலான இரத்தத்தை இழந்துவிடுகிறார்கள். இந்த இழப்பினை ஈடு செய்வதற்கேற்ற வகையில் இக்காலத்தில் இயல்பாகவே பெண்களிடம் 50 சதவீதம் இரத்தம் அதிகமாகச் சுரக்கிறது.

★ குழந்தை பிறந்தவுடன் பெரும்பாலும் 20 அங்குல நீளமாக இருக்கும். 'நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமும்' என்பது போல் குழந்தை முதலாவது ஆண்டு பிறந்த நாளைக் கொண்டாடும்போது அதன் நீளம் 30 அங்குலமாக இருக்கும். இரண்டாம் ஆண்டு முடியும்போது 35 அங்குலமாகக் காணப்படும்.வளர்ச்சி வேகம் அதன் பிறகு குறைகிறது. ஆண்டொன்றுக்கு ஆக 2 அங்குலம் தான் வளர்கிறது. 12ஆவது வயதில் 60 அங்குலம் (5அடி) வளர்ந்து விடுகிறார்கள். 10 வயதுக்கும் 16 வயதுக்குமிடையில் ஆண் குழந்தைகளைப் பார்க்கிலும் பெண்களின் வளர்ச்சி சற்று அதிகரிக்கும். அதன் பிறகு ஆண்கள் கிடுகிடென்று வளர்கிறார்கள்.

★ இப்பொழுதெல்லாம் அடுப்படியில் இருந்து சமையல் செய்யும் பழக்கமில்லை. நின்ற வண்ணமே சமையல் செய்வதற்கு வசதியாக அடுப்பை உயரமாக வைத்து விடுகிறார்கள்.

நின்ற நிலையில் சமையல் செய்வது சுலபமாகத் தோன்றினாலும் கீழே அமர்ந்த வண்ணம் தரை மட்டத்திலுள்ள அடுப்பில் சமைப்பது தான் உண்மையில் பெண்களுக்கு உடல் உபாதை தருவதில்லை.

பல மணிநேரம் நிற்பதனால் கால், இடுப்பு போன்றவற்றில் நோ ஏற்படும். கைகளிலும் கூடப் பிடிப்பு ஏற்படவாய்ப்புண்டு. இதனால் ஒரே பாணியில் நிற்காமல், கால்களுக்கு மாறி மாறி அழுத்தம் கொடுப்பதே நல்லது. வலது காலை விறைப்பாக நிலத்தில் ஊன்றிக் கொண்டு இடது காலைத் தளர்த்தலாம். சற்று நேரத்தில் வலதுகாலை இலகுவாக்கி இடது காலை ஊன்றி நிற்கலாம். அவ்வப்போது தொடை, ஆடுதசை, பாதம், கால் விரல்கள் ஆகியவற்றை இரு கைகளாலும் அழுத்தித் தேய்த்துப் பிடித்து விடுங்கள். இதனால் கால்களில் நோவு ஏற்படாமல் காத்துக் கொள்ளலாம்.

★ பச்சை அரிசியைப் பார்க்கிலும் புழுங்கல் அரிசியில் புரதம் செறிந்து காணப்படும். விட்டமின்களும் அதிகம் உண்டு. இயந்திரத்தின் மூலம் அரைத்தெடுக்கும் அரிசியை விட கைக்குத்தரிசியே சிறந்தது. தவிடு நீக்காத அரிசிக்கு அதிக சக்தி உண்டு.

## உடையும் உற்சாகமும்



'ஆள்பாதி ஆடைபாதி' என்பார்கள். உண்மையில் ஒருவருக்குப் பொருத்தமான உடையினை அவர் அணிந்து கொள்ளும் போது அவருடைய தோற்றம் பிறருடைய பார்வைக்கும் மகிழ்ச்சியைத் தருகிறது. அதேபோல் அந்த உடையை உடுத்தியிருப்பவருக்கும் தனி உற்சாகம் பிறக்கிறது.

பொதுவாகவே எமது மனதுக்குப் பிடித்தமான வர்ணத்தில் புடவையையும் அதற்கேற்ற பொருத்தமான சட்டையையும் அணிந்தவுடன் எம்மை அறியாமலேயே எம்மிடம் ஒரு வகை குதூகலம் புகுந்து விடுகிறது.

துணிமணிகளை கடைகளில் சென்று தெரிவு செய்து வாங்கும்போது எம் மனதுக்குப் பிடித்தமானவற்றையே வாங்குகிறோம். அவ்வாறிருந்தும் அவை எல்லாமே எம் மனதுக்குப் பூரண திருப்தியை அளிப்பதில்லை. அவற்றிலும் ஏதோ ஒரு குறிப்பிட்ட வர்ணப் புடவையையும் சட்டையையும் எப்போதும் அணிந்துகொள்ள மாட்டோமா? என்றோர் ஏக்கம் தோன்றும். அதே உடையினை அணியும்போதெல்லாம் எம்மிடம் பெருமகிழ்வும் பூரிப்புணர்வும் தோன்றுவதை அவதானிக்கலாம்.

சின்னஞ்சிறு குழந்தைகள் கூட- வீட்டில் பற்பல வர்ணத்தில் பற்பல அமைப்புகளில் அவர்களுக்கான ஆடை அணிகள் இருந்தாலும் சில குறிப்பிட்டவற்றையே தங்களுக்கு அணிய வேண்டும் என்று அடம் பிடிக்கின்றன. நேற்று அணிந்த அதே உடை இன்று அழுக்காக இருந்தபோதிலும், அதனையே தனக்கு அணிய வேண்டும் என்று சண்டை போடுவார்கள்.

நாம், எமக்கு எத்தகைய ஆடை அணிகள் பொலிவும் உறுதியும் உற்சாகமும் தருகின்றன என்பதனை எமது அன்றாட அனுபவத்தில் அவதானித்து, அத்தகையவற்றையே தெரிவு செய்து வைத்துக் கொண்டால் எப்போதும் உற்சாகமாகவே இருக்கலாமல்லவா?

## சூரியக்கதிர்த் தாக்குதல்

முகத்திலும் உடலின் ஏனைய பகுதிகளிலும் சருமத்தில் சுருக்கங்கள் தோன்ற மற்றும் இரு முக்கியமான காரணங்கள் உள்ளன.

20 வயதானவுடன் முகச் சுருக்கங்கள் நேரடியான சூரிய ஒளியினால் தோன்றுகின்றன. கதிரவனின் கதிர் வீச்சு சருமத்தின் மேல் போர்வையை ஊடுருவி உட்சருமத்தைத் தாக்குகின்றன. பின்னர் தோலிலுள்ள உயிரணுக்களைத் தாக்கி அழிக்கின்றன. சருமத்துக்கு ஆதாரமான சில நார்த்தன்மை வாய்ந்த அம்சங்கள் தேய்மானம் அடைவதனால் ஆங்காங்கே சுருக்கங்களும் நிற மாற்றங்களும் ஏற்படுகின்றன.



சூரியனுடைய நேரடிக் கதிர்வீச்சு முகத்தில் படாவண்ணம் பாதுகாப்பதன் மூலம் இத்தகைய முகச் சுருக்கங்களைத் தவிர்க்கலாம் என்று இங்கிலாந்திலுள்ள லிஸ்டர் மருத்துவமனை ஆய்வாளர் டாக்டர் சுசான் மேயூ கூறுகிறார்.

பொதுவாக உதயத்தைத் தொடர்ந்து ஓரிரு மணிநேரமும் மாலையில் கதிரவன் மறைவதற்கு ஓரிரு மணிநேரம் முன்னதாகவும் கதிரவனின் கதிர்வீச்சு உடலில் படுவதனால் அபாயமெதுவுமில்லை. சில நன்மைகள் ஏற்படுவதற்கு வாய்ப்புண்டு. ஆனால் மதியவேளைக் கதிர் வீச்சைக் கூடுமானவரை தவிர்ப்பதே நல்லது.

அன்றாட உணவில் விட்டமின் 'A','C' மற்றும் 'E' ஆகியவை பொதிந்த பதார்த்தங்களைச் சேர்ப்பதன் மூலம் கதிரொளியால் மட்டுமல்ல, பொதுவாக வயோதிபத் தோற்றம் எட்டிப் பார்க்காமல் சில காலமாவது எட்டத்தில் வைத்துக்கொள்ள முடியும்.

## பட்டுக் கூந்தலுக்கு



தங்களுடைய தலைமுடி எப்போதும் ஒளி பொருந்தியதாகவும், பட்டுப்போலும் மென்மையாக இருக்க வேண்டும் என்று விரும்பாத பெண்களே இரார். பொதுவாக சிகையை அழகுபடுத்த ஷம்போக்களும், கண்டிஷனர்களும்தான் உதவும் என்பதற்கில்லை. நாம் உண்ணும் உணவும் தலை முடியை என்றும் சீராக வைத்திருக்க உதவும்.

பொதுவாக பதப்படுத்தப்பட்டு பேணிகளில் அடைக்கப்பட்டு வரும் சார்டின் மற்றும் சல்மன் மீன் வகைகளை உணவில் சேர்த்து வந்தால் தலை முடியிலுள்ள பிசு பிசுப்பு நீங்கி ஒவ்வொரு மயிரும் தனித்தனியாக வளரும். அடர்த்தியாகவும் மயிர் வளரும்.

சீனி சேர்க்கப்படும் தித்திப்பான பதார்த்தங்கள் கேசத்தைப் பாதிக்கின்றன. கரட், முட்டை வெள்ளைக்கரு, பச்சைக்காய்கறி, தானியவகைகள் போன்றவற்றை உணவில் அதிகமாகச் சேர்ப்பதனால் கேசம் ஒளி பெறுகிறது.

படுக்கைக்குச் செல்லும் போது தலை முடியை இறுக்கமாகக் கட்டாமல் கூடுமான வரை தொய்வாகவிடுவது நல்லது. இரவு வேளைகளில் கேசத்துக்கு எண்ணெய் தடவி சீவுவதைத் தவிர்க்க வேண்டும்.

## தூங்கு பாப்பா தூங்கு



ஓடியாடி விளையாடும் குழந்தைகளுக்குத் தூக்கம் மிக மிக அவசியம். சராசரியாக நல்ல தூக்கம் என்பது மனிதர்களுக்கு 9 மணிநேரம் தேவைப்படுகையில் குழந்தைகளுக்கு 11 மணி முதல் 12 மணி நேரம் வரை அவசியமாகின்றது.

இரவில் நன்றாகத் தூங்கும் குழந்தைகள் பகலில் அதிகப்படியான உற்சாகத்துடன் திகழ்கின்றன.

பொதுவாக, குழந்தைகளுக்குச் சாப்பாட்டைக் கொடுத்தவுடன் படுக்கைக்கு அழைத்துச் செல்லக்கூடாது. படுக்கைக்கு செல்வதற்கு அரைமணிநேரம் முன்னதாகவோ, அல்லது குறைந்தது 15 நிமிடத்திற்கு முன்னதாகவோ உணவை ஊட்டிவிட வேண்டும். அதே போல் இரவில் குழந்தைகளுக்கு மூக்கு முட்ட உணவு கொடுப்பதும் தவறு. மற்ற வேளைகளில் கொடுப்பதில் நான்கில் மூன்று பங்கு கொடுப்பதே சரி.

குழந்தை படுக்கைக்குச் செல்ல முன் பால் கொடுத்துத் தூங்க வையுங்கள். நன்றாகத் தூக்கம் வரும்.

படுக்கைக்குச் செல்லும் குழந்தையிடம் விளையாடவோ, பேசவோ செய்யாதீர்கள். இதனால் குழந்தைக்குத் தூக்கம் வராது. அருகில் இருந்தவாறு தட்டிக் கொடுத்துத் தூங்க வைக்க வேண்டும். அல்லது அருகே பேசாமல் அமர்ந்து கொள்ள வேண்டும். அதே போல் அதிகாலையில் குழந்தையை எழுப்பும் போது திடும் என்று எழுப்பாதீர்கள். மெதுவாக எழுப்புங்கள்.

தூக்கம் என்பது மூளைக்கும் உடலுக்கும் ஓய்வு தருகின்ற வேலை. தேவையான அளவுக்கு அவைகள் ஓய்வு எடுத்தாலே மீண்டும் சிரமமின்றி ஓடத் தொடங்கும்.

## லேடீஸ் ஸ்பெஷல்

### கொஞ்சம் – கொஞ்சம்

பருவமடைந்த பெண்களுக்கு பிரதி மாதமும் வீட்டு விலக்கு ஏற்படும் காலம் பெரும் சோதனையான காலம்தான். இக்காலத்தில் ஏற்படும் வயிற்று நோ போன்ற உபாதைகளைத் தணிக்க, மாதவிடாய் வரவிருக்கும் காலத்துக்குச் சில நாட்கள் முன்னதாகவே முழுமையான உணவினை உண்பதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

கூடுமானவரை சிறிது சிறிதாக உணவைப் பங்கிட்டு இடைக்கிடையே உண்ணலாம். சுலபமாகச் சமிபாடடையக் கூடிய இடியப்பம், இட்லி, தோசை ஆகியவற்றை கொஞ்சம் கொஞ்சமாக உண்ணலாம்.

எண்ணெயில் பொரிக்காமல், பதார்த்தங்களை வேக வைத்து உண்ண வேண்டும். பழங்கள், பருப்பு வகைகள், பயறு போன்ற விதைகள் ஆகியவற்றையும் உண்ணலாம். இவ்வகை உணவு முறைகளைக் கடைப்பிடித்து வந்தால் மாதாமாதம் வந்து துன்பப் படுத்தும் உபாதைகளிலிருந்து மீள வாய்ப்புண்டு.


# பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

**மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்**



★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** CH

பெயர்:.........................

முகவரி:.........................

.........................

கையொப்பம்:.........................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: **13-09-1997**

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.


## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?
## வாழைச்சேனை வாசகிக்கு அதிஷ்டம்!

இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்.

**பி. கல்யாணி,**
**28, கருணைபுரம், வாழைச்சேனை.**

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக.வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

## பரிசு பெற்றவர்



முரசின் பட்டுச்சேலைப் பரிசுப் போட்டியில் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகளில் ஒருவர் இவர்தான்:
**திருமதி மேரி அலன் எட்வட்**
**29/4,நாகஸ்தன்ன வீதி,**
**ஹப்புகஸ்பிட்டிய, கண்டி.**



படிப்பகம்

www.padippakam.com

## திசையறியாத் திக்கில்


மனம் தொலைந்தவள்
மலர் வனத்தில் ஒரு வண்ணப்பறவை
இமை சிறகடித்து விழியசைவில் எனை அழைத்து
பிரபஞ்ச நினைவிழந்து எனை மயக்கி
இதயக் கொப்பில் உட்கார்ந்தபோது
உல்லாசம் சொல்லாமல் உட்புகுந்தது!
•••
இணை இல்லாத சொந்தம் ஒன்று
எனில் விழுந்தது!
கனத்த மனம் காற்றில்
நினைவெல்லாம் தேன் ஊற்றில்!
கனவு பல விழிக்குள், உலவுவதோ
சுகந்தக் காற்றில்!
•••
சொல் எல்லாம் கவிதை
சொல்ல இனி உவமையும் இல்லை!
கங்குல் நீக்க வரும் கதிரவன் விழியாகி
செங்கமல வாய் திறந்து
காற்றெல்லாம் தேன் கலந்து
கருங்கூந்தல் இடை தொட
இறுமாந்து நடை வர, படை கொண்ட தேகம்!
பவனி வந்த வேகம்– மனப் போர்க்களத்தில்
எண்ணப் போராட்டம் சிருங்கார சுகந்தம்!
•••
எங்கும் யௌவனக் கோலங்கள். பூக்களின் ஸ்பரிசங்கள்
பூவுலகம் மறந்து மோன நிலை; மனதில் திடீர் சலசலப்பு,
இதயக் கொப்பில் ஏற்பட்ட முறிவு அது.
•••
வண்ணப் பறவை சிறகடித்து தன் எண்ணம்போல் பறந்தது.
திசை தெரியா திக்கில் உயிர் கரைய விழி உதிர:
முள் வனத்தில் உடல் நெருட மறைந்த திசையில்
மனம் தொலைந்து எனை நான் தேடுகின்றேன்:
அந்த திசை தெரியாத திக்கில்!

ஜெயந்தி ஜெய்சங்கர், கொழும்பு-13.

## ஒட்டடை தட்ட ஒரு கவிதை!

எல்லாமே பழசாகிட்டு...!
நவீனம் என்ற சொல்லும்தான்!
இன்று பிறந்த–
குழந்தையின் மூளையிலும்
சாதி ஒட்டடை
▫▫
இந்த சாதி, மத, மொழி
யெல்லாம்
எமக்கு–
ஆபரணமாய் இருந்து
அழகுபடுத்தியதைவிட
அசிங்கப்படுத்தியதுதானே
அதிகம்!
அமைதிப்படுத்தியதைவிட
அடித்துக் கொள்ள
வைத்ததுதானே அதிகம்!
காப்பாற்றியதைவிட–
நிர்க்கதியாக்கியதுதானே
அதிகம்!
▫▫
சாதிக் கை விலங்கை உடைத்து
சமயக் கால் கட்டை அவிழ்த்து
மொழிக்கண்கட்டை விலக்கி
இருள் வட்டத்திலிருந்து
ஒளி வட்டத்திற்கு வருவோம்!
▫▫
பூதாகாரமாய்
வளர்ந்திருக்கும்
இவைகளை உடைத்து
எமக்குள் இருக்கும்
இடைவெளிகளை நிறைத்து
பாலம் அமைப்போம்!
▫▫
அண்ணனானாலும்
தம்பியானாலும்
எல்லோரும்–
ஈழமாதாவின் பிள்ளைகளென்பதை
மனதில் செதுக்குவோம்!
▫▫
ஆயுதக் கலாசாரத்திற் கெதிராய்
சமாதான–
கலாசாரமொன்றை சமைப்போம்!
▫▫
தேசியக் கொடியிலிருக்கும்
சிங்கத்தின் கரத்திலிருந்து
வாளை உருவிவிட்டு
வெண்புறாவை வரைவோம்!
▫▫
'மகாவலி'யை திசை திருப்பி
இயற்கையையே
மாற்றியமைத்த நாம்,
எம் சிந்தனைகளை திசை திருப்பி
பயனுடையதாக்குவோம்!
▫▫
மகா சங்கத்திற்குப் பெரிதாய்
ஒரு–
மக்கள் சங்கம் அமைப்போம்!
▫▫
இந்த மேல்சாதி, கீழ்சாதி
சிங்களம், தமிழ்
பௌத்தம், ஹிந்து, முஸ்லிம்
என்ற சொற்களெல்லாம்
செயலிழந்து போகட்டும்!

எஸ். நளீம்.



டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் முதலாவது விக்கெட் இணைப்பாட்ட சாதனை 413. 1955–56ல் இந்தியாவுக்கு, நியூஸிலாந்து அணியினர் சுற்றுப்பயணம் செய்தனர். அப்போது சென்னையில் நடைபெற்ற 5வது டெஸ்ட் போட்டியில் இந்தச் சாதனை நிகழ்த்தப்பட்டது. இந்தியாவின் விநு மன்கட்டும் (231), பங்கஜ் ரோயும் (173) இந்தச் சாதனையை ஏற்படுத்தினார்கள். இந்தச் சாதனை இன்னமும் முறியடிக்கப்படவில்லை. சாதனை மன்னர்கள் இருவரும் வெற்றியுடன் திரும்பும் காட்சிதான் இது. கண்ணாடியுடன் காணப்படுபவர் பங்கஜ் ரோய். மற்றவர் விநுமன்கட்.

## உனக்கு தெரியுமா....?

அலை மெல்ல
எழும்;
ஆடும் அடங்கும்!
**
நீ என்று
வருவாய்?
**
உன் நினைவுகள்
மனதினுள்
மத்தாப்பூவாய் வெடிக்கும்!
**
ஏன் இப்படிச்
செய்தாய்?
**
இன்னும் உன்
நினைவு
தொண்டையில் குத்திய
மீன் முள்ளாய்
உறுத்தும்!
**
நாயின் வெளித்தள்ளிய
நாக்காக
உன்னைச் சுமந்த
மனம்
முகம்காட்டி திரியும்
**
எப்போது நாம்
சந்திக்கப் போகிறோம்?
**
காற்றில்
கால் தடக்கி
தலைகீழாய்
வீழ்ந்ததும் உண்டு.
**
வீழ்ந்த போதெல்லாம்
வலியைத் துடைத்து
எழுந்து நிற்கிறேன்.
என் காதல்
வீழ்ந்து விட்டது
என்று
எவராவது
சொல்வாரோ என்ற
பயத்தில்!
**

சுபா வரன்–
கண்டி.

## தேன் கிண்ணம்

## அந்த நாள் ஞாபகம்

டெஸ்ட் கிரிக்கெட்டில் இரண்டாவது விக்கெட் இணைப்பாட்ட முதல் உலக சாதனையாக இருந்தது 451. 1934ல் இங்கிலாந்துக்கு சுற்றுப்பயணம் செய்தது அவுஸ்திரேலியா. ஓவல் மைதானத்தில் நடைபெற்ற 5வது டெஸ்ட் போட்டியில் இந்தச் சாதனை நிகழ்த்தப்பட்டது. அவுஸ்திரேலியாவின் டொன் பிரட்மனும் (244), பில் பொன்ஸ்ஃபோர்ட்டும் (266) இந்தச் சாதனையை நிகழ்த்தினார்கள். கிரிக்கெட் உலகின் பிதாமகர் என்று அழைக்கப்படுபவர் டொன் பிரட்மன். உலகெங்கும் இவர்மீது பைத்தியமாக ரசிகர்கள் இருந்தனர். தங்கள் பிள்ளைகளுக்கும் பிரட்மன் என்றே பெயர் சூட்டினார்கள். முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவின் ஆலோசகரது பெயரும் பிரட்மன் என்பது குறிப்பிடத் தக்கது. படத்தில் இருப்பவர்கள் டொன் பிரட்மன் (இடது புறம்) பில் பொன்ஸ் ஃபோர்ட். (கண்சிமிட்டுகிறார் யாருக்கு?) பிரட்மன் ஜோடியின் சாதனை அண்மையில் இலங்கையின் சனத் ஜயசூரிய, (340) றொஷான் மகாநாம (225) ஜோடியினால் (576) முறியடிக்கப் பட்டது.



## கவிதைத் துளிகள்

**ஆங்கிலம்**
தமிழர்கள்
பொது இடங்களில்
பேசும் மொழி!

**தமிழ்**
கிரிக்கெட்
வர்ணனையில்,
பான
இடைவேளையின்போது
பயன்படுத்தப்படும்
மொழி!

**அவமானம்**
நெரிசல் மிக்க
பஸ்ஸில்
நண்பனைக் கண்டதும்
சிங்களத்தில் பேசும்போது
ஏற்படுவது!

**தமிழ் வர்ணனையாளர்**
கிரிக்கெட் வீரர்கள்
அவுட்டானால் மட்டும்
அவசரத்தில்
இரண்டுவரி
பேசுபவர்!

**கனடா**
மாப்பிள்ளைகள்
இருக்கும் இடம்!

**காதல்**
கனவுக்குள்–ஒரு
கனவு!

**கல்யாணம்**
சிறுக்காக
ஒரு ஜென்மம்!

எம். சுரேஷ்–கொழும்பு-15.

## மனம்

கோபுரம் போல்
ஒரு பட்ட
பனை மரம்!
அதன் உச்சியில்
உல்லாசமாய்
இரு கிளிகள்!
நான் நிற்கவில்லை:
விரைகின்றேன்:
பறப்பதற்கு
எனக்குச் சிறகில்லை:
மறப்பதற்கு
மனமு மில்லை.

க. நாகராசா–நுணாவில்.

## சுட்டுப்போடு.....!

உடுப்பைப் போல்
முறுக்கிப் பிழி
அப்போது சொட்டும்!
•••
ஒரு இருட்டறைக்குள்
முகமூடிக்குள்
விட்டுப் பயங்காட்டு!
•••
இன்னும் திமிர்
எப்படி முளைக்கின்றது?
நுனியைக் கிள்ளு!
கிளைகளையும்
சயனைட் கத்தியால்
சீவு!
வேர்களின் மீது
சுடு நீரை ஊற்று!
சுவாசம் செல்லாமல்
கழுத்தை நெரி!
•••
அடி வருடிகளையும்
வெப்பத்தில் போட்டு
வாட்டியெடு!
அவைகளின்
முளைக் காம்புகளில்
அசிற் ஊற்று!
•••
ஏறக்குறைய
இப்போது
சடப்பொருள்
நிலைக்குக்
கொண்டு வந்தாச்சு.
•••
அரைக்கம்பக்
கொடிகளை
முழுமைப்படுத்து!
ஒரு சாம்ராஜ்யம்
சாம்பலாகியதன்
ஞாபகார்த்தமாக,
அல்லது
வெல்லப்பட்டதாக!
•••



மாரிமுத்து யோகராஜன்–
அக்கரைப்பற்று–08.

## இந்த வாரம் உங்கள் பலன்

(07.09.1997 தொடக்கம் 13.09.1997 வரை)

சோதிட மாமணி
'தில்லை'

### நவக்கிரக சஞ்சாரம்

சிம்மம் - சூரியன், புதன், இராகு.
துலாம் - செவ்வாய், வெள்ளி.
மகரம் - வியாழன்.
கும்பம் - கேது.
மீனம் - சனி.

★ சந்திரன்- துலாம், விருட்சிகம், தனு ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

### மீனம்:

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- முயற்சி மேன்மை, கடன் சுமை. | பி.ப. 1 மணி |
| திங்கள்- தொழில் மந்தம், காரிய நஷ்டம். | மு.ப. 10 மணி |
| செவ்வாய்- வெளியிட வாழ்க்கை, மனக் கலக்கம். | பி.ப. 2 மணி |
| புதன்- வீண்குறை கேட்டல், அந்நியர் நட்பு. | பகல் 11 மணி |
| வியாழன்- தொழில் கஷ்டம், பண முடங்கல். | பி.ப. 3 மணி |
| வெள்ளி- புதிய முயற்சி, அந்நியர் உதவி. | பி.ப. 2 மணி |
| சனி- பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | பகல் 11 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-4

### மேடம்:

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்) -

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பெரியோர் நன்மை, மன மகிழ்ச்சி. | பகல் 11 மணி |
| திங்கள்- வீண்குறை கேட்டல், அந்நியர் உதவி. | மு.ப. 10 மணி |
| செவ்வாய்- துயர் நீங்கும், உயர்ந்த நிலை. | பி.ப. 2 மணி |
| புதன்- வெளியிட வாழ்க்கை, பணக் கஷ்டம். | பகல் 11 மணி |
| வியாழன்- காரிய சித்தி, பொருள் வரவு. | பி.ப. 2 மணி |
| வெள்ளி- இனசன நன்மை, பலவித பேறு. | பி.ப. 1 மணி |
| சனி- தொழில் கஷ்டம், பிரயாண மிகுதி. | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

### இடபம்:

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பொருள் வரவு, காரியானுகூலம். | பி.ப. 2 மணி |
| திங்கள்- இனசன நன்மை, மன மகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| செவ்வாய்- துயர் நீங்கும், முயற்சி பலிதம். | பி.ப. 3 மணி |
| புதன்- வீண்குறை கேட்டல், அந்நியர் நட்பு. | பகல் 11 மணி |
| வியாழன்- பெரியோர் உதவி, கடன் தொல்லை. | பி.ப. 2 மணி |
| வெள்ளி- தொழில் சிறப்பு, பொருள் வரவு. | பகல் 12 மணி |
| சனி- பயனுள்ள செயல், கௌரவம். | பகல் 11 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-2

### மிதுனம்:

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் மந்தம், காரியத் தடை. | பி.ப. 1 மணி |
| திங்கள்- உயர்ந்த நிலை, மனக்குறை நீங்கும். | பகல் 12 மணி |
| செவ்வாய்- தொழில் கஷ்டம், பொருள் விரயம். | பி.ப. 2 மணி |
| புதன்- இனசன நன்மை, மனக் கலக்கம். | பகல் 12 மணி |
| வியாழன்- வீண் பிரயாணம், செலவு மிகுதி. | பி.ப. 2 மணி |
| வெள்ளி- தொழில் கஷ்டம், பணச் செலவு. | மு.ப. 10 மணி |
| சனி- உயர்ந்த நட்பு, மன மகிழ்ச்சி. | பி.ப. 3 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-4

### கும்பம்:

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, மனக்குறை நீங்கும். | மு.ப. 10 மணி |
| திங்கள்- பலவித பேறு, தொழில் நன்மை. | பி.ப. 2 மணி |
| செவ்வாய்- வீண் முயற்சி, உயர்ந்த நிலை. | பி.ப. 1 மணி |
| புதன்- பெரியோர் நட்பு, கௌரவம். | பகல் 11 மணி |
| வியாழன்- இனசன நன்மை, மன மகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| வெள்ளி- தொழில் நன்மை, பொருள் வரவு. | பி.ப. 2 மணி |
| சனி- முயற்சி பலிதம், பண வரவு. | பகல் 11 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-5

### கர்க்கடகம்:

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | பகல் 11 மணி |
| திங்கள்- பிரயாண மிகுதி, உயர்ந்த நட்பு. | பி.ப. 2 மணி |
| செவ்வாய்- கடன் சுமை, மனக் கலக்கம். | பகல் 11 மணி |
| புதன்- வெளியிடப் பயணம், காரியானுகூலம். | மு.ப. 10 மணி |
| வியாழன்- தொழில் கஷ்டம், மனக்குறை நீங்கும். | பி.ப. 2 மணி |
| வெள்ளி- பலவித கஷ்டம், மனக் கலக்கம். | பகல் 11 மணி |
| சனி- அந்நியர் சகவாசம், காரியக்கேடு. | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-4

### மகரம்:

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பெரியோர் நட்பு, பணக் கஷ்டம். | பி.ப. 2 மணி |
| திங்கள்- தொழில் உயர்ச்சி, இனசன நன்மை. | பகல் 11 மணி |
| செவ்வாய்- பெரியோர் நட்பு, கௌரவம். | பி.ப. 2 மணி |
| புதன் - தொழில் மந்தம், செலவு மிகுதி. | மு.ப. 10 மணி |
| வியாழன்- அந்நியர் சகவாசம், கௌரவக் குறைவு. | பி.ப. 2 மணி |
| வெள்ளி- வீண்குறை கேட்டல், தொழில் மந்தம். | மு.ப. 10 மணி |
| சனி- தொழில் சிறப்பு, பண வரவு. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-7

### சிம்மம்:

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- துயர் நீங்கும், குடும்ப சுகம். | மு.ப. 10 மணி |
| திங்கள்- பயனுள்ள செயல், காரிய நன்மை. | பி.ப. 1 மணி |
| செவ்வாய்- பெரியோர் நட்பு, மன மகிழ்ச்சி. | மு.ப. 10 மணி |
| புதன்- தொழில் கஷ்டம், மனக்கிலேசம். | பி.ப. 2 மணி |
| வியாழன்- உயர்ந்த நிலை, பிரயாண மிகுதி. | பகல் 11 மணி |
| வெள்ளி- தொழில் விருத்தி, பணக் கஷ்டம். | பி.ப. 2 மணி |
| சனி- பெரியோர் சுகம், உயர்ந்த நட்பு. | பகல் 11 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-2

### தனு:

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பிரயாண மிகுதி, உயர்ந்த நிலை. | பகல் 11 மணி |
| திங்கள்- தொழில் நன்மை, பண வரவு. | பி.ப. 1 மணி |
| செவ்வாய்- கடன் தொல்லை, பெரியோர் பகை. | மு.ப. 10 மணி |
| புதன்- இனசன நன்மை, தொழில் விருத்தி. | பகல் 11 மணி |
| வியாழன்- பிரயாணக் கஷ்டம், செலவு மிகுதி. | மு.ப. 9 மணி |
| வெள்ளி- தொழில் நன்மை, பண வரவு. | பி.ப. 2 மணி |
| சனி- முயற்சி பலிதம், தொழில் மேன்மை. | பி.ப. 1 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-2

### விருட்சிகம்:

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் உயர்ச்சி, உயர்ந்த நிலை. | பி.ப. 3 மணி |
| திங்கள்- வெளியிட வாழ்க்கை, அந்நியர் நட்பு. | மு.ப. 10 மணி |
| செவ்வாய்- புதிய முயற்சி, பொருள் வரவு. | பி.ப. 1 மணி |
| புதன்- பெரியோர் நட்பு, தொழில் மேன்மை. | மு.ப. 10 மணி |
| வியாழன்- துயர் நீங்கும், தொழில் சிறப்பு. | பி.ப. 2 மணி |
| வெள்ளி- இனசன நன்மை, மன மகிழ்ச்சி. | பி.ப. 1 மணி |
| சனி- வெளியிடப் பயணம், அந்நியர் உதவி. | பகல் 11 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-5

### துலாம்:

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் மந்தம், பணக் கஷ்டம். | பி.ப. 3 மணி |
| திங்கள்- உயர்ந்த நட்பு, பண வரவு. | பகல் 12 மணி |
| செவ்வாய்- வீண் முயற்சி, தொழில் கஷ்டம். | பி.ப. 1 மணி |
| புதன்- காரியானுகூலம், மனக்குறை நீங்கும். | மு.ப. 10 மணி |
| வியாழன்- வெளியிட வாழ்க்கை, பிரயாண மிகுதி. | பி.ப. 2 மணி |
| வெள்ளி- அந்நியர் உதவி, பலவித நன்மை. | பி.ப. 1 மணி |
| சனி- தொழில் கஷ்டம், பணச் செலவு. | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

### கன்னி:

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- மனக் கலக்கம், பணக் கஷ்டம். | பி.ப. 2 மணி |
| திங்கள்- தொழில் மந்தம், பொருள் விரயம். | பகல் 11 மணி |
| செவ்வாய்- பயனுள்ள செயல், பெரியோர் நட்பு. | மு.ப. 10 மணி |
| புதன்- இனசன நன்மை, காரியானுகூலம். | மு.ப. 10 மணி |
| வியாழன்- அந்நியர் உதவி, பொருள் வரவு. | பி.ப. 2 மணி |
| வெள்ளி- தொழில் கஷ்டம், மனக்கிலேசம். | மு.ப. 10 மணி |
| சனி- பயனற்ற செயல், கௌரவக் குறைவு. | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6



படிப்பகம்

www.padippakam.com





ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் படைக்க வந்தோம்
எட்டும் அறிவினில் ஆணுக்கு இங்கே பெண்
இளைப்பில்லை காணென்று கும்மியடி!
- சுப்பிரமணிய பாரதியார்.

முரசு சிறுகதை

# இதுவும் நன்மைக்கே!

ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டிற்குக் கப்பல் ஒன்று சென்று கொண்டிருந்தது. நடுக்கடலில் அது போய்க்கொண்டிருந்த போது, திடீரென ஏற்பட்ட சூறாவளியால் கப்பல் கவிழ்ந்து விட்டது. அந்தக் கப்பலில் இருந்தவர்களில் ஒருவன் மட்டும் எப்படியோ நீந்திக் கரை வந்து சேர்ந்தான்.

அது ஒரு மனிதர்களற்ற தீவு. அந்தத் தீவிலேயே அவன் தங்க முடிவு செய்தான். மழை, வெயிலில் இருந்து தப்பிப்பதற்காக, இலைகள், தடிகளைக் கொண்டு குடில் ஒன்றை அமைத்தான்.

அவன் அந்தத் தீவில் வேட்டையாடி தனது உணவை உண்பான். அவன் தினமும்,

"தெய்வமே! ஏதாவது ஒரு கப்பல் இந்தப் பக்கமாக வந்து என்னை ஏற்றிக் கொண்டு போய் என்னுடைய சொந்த நாட்டில் சேர்த்து விடாதா?" என்று பிரார்த்தனை செய்வான். அவன் கண்கள் எப்போதும் கடலைப் பார்த்த வண்ணமே இருந்தன.

ஒருநாள்–

அவன் வழக்கம் போல உணவுக்கென்று வேட்டைக்குச் சென்று விட்டுக் குடிலுக்குத் திரும்பி வந்தான். அவன் குடில் தீப்பற்றி எரிந்து சாம்பலாகிக் கொண்டிருந்தது.

அவன் குடிலுக்குள் நெருப்பை மூட்டி உணவு சமைத்த பின், அந்த நெருப்பை சரியாக அணைக்கவில்லை. அந்த நெருப்புத்தான் குடிலைத் தீக்கிரையாக்கிவிட்டது.



இதைப் பார்த்து மிகவும் துயரப்பட்ட அவன்,


"தெய்வமே! இத்தனை நாளும் என்னை என் நாட்டில் சேர்த்துவிடு, என்று பிரார்த்தனை செய்து வந்தேன். நீயோ, நான் தங்கியிருந்த குடிலையும் இல்லாமல் செய்து விட்டாயே!" என்று கண்ணீர் விட்டு அழுதான்.

அப்போது "ஐயா" என்று அழைப்பது கேட்டுத் திரும்பிப் பார்த்தான் அவன். அங்கே ஒரு கப்பல் தலைவனும் வேறு சிலரும் நின்று கொண்டிருந்தனர். தூரத்தில் ஒரு கப்பலும், கடற்கரையில் ஒரு படகும் நிற்பது தெரிந்தது.

கப்பல் தலைவன் அவனைப் பார்த்து, "நான் இந்த வழியாக எத்தனையோ தடவைகள் கப்பலில் பயணம் செய்திருக்கிறேன். ஆனால் இந்தத் தீவில் யாரும் வசிப்பார்கள் என்று எண்ணவில்லை. ஆனால் இன்று இந்தத் தீவில் பெரும் நெருப்பு எரிவதைப் பார்த்தேன். யாரோ இந்தத் தீவில் அகப்பட்டுக் கொண்டு தவிக்க வேண்டும் என்று நினைத்து, கப்பலை நடுக்கடலில் நிறுத்திவிட்டுப் படகில் ஏறி வந்தேன். என் எண்ணம் சரிதான். முதலில் படகில் ஏறுங்கள், கப்பலை அடையலாம்," என்று சொன்னார்.

'குடிசை தீப்பற்றிக் கொண்டதைக் குறித்துக் கடவுளை நொந்து கொண்டேனே, இது நன்மையாகத்தானே முடிந்தது. கடவுளே என்னை மன்னித்துவிடு' என்று மனதிற்குள் சொல்லிக்கொண்டு, மிக்க மகிழ்ச்சியோடு படகில் ஏறிப்புறப்பட்டான் அவன்.

## அதிசயம் – ஆனால் உண்மை!



**சஹாராவைக் கடக்கும் இரும்புப் பாதை:**
கஸ்பியன் கடலில் இருந்து பாரசீக உட் கடல் வரை 895 மைல் நீண்டுள்ள இந்தப் பாதை 15 கோடி பவுன் செலவில் 10 ஆண்டுகளில் கட்டப்பட்டது. இப்பாதையில் மொத்தம் 4,102 பாலங்களும், 224 குகைகளும், ஓரிடத்தில் 900 அடி உயர 6 பாலங்களும் 4 குகைகளும் உள்ளன.

**முதல் கழுத்துப்பட்டி:**



3500 ஆண்டுகளுக்கு முன் கிரேக்க நாட்டில் கிரேட்டன் பெண்மணியின் சிலை அமைந்திருந்தது. இச்சிலையின் கழுத்திலே அழகான முறையில் முடிச்சிடப்பட்ட கழுத்துப்பட்டி (TIE) செதுக்கப்பட்டுள்ளது. உலகிலேயே முதன் முறையாக அணியப்பட்ட கழுத்துப்பட்டி இது தான்.

**நெருப்பு மழை:**
1833ம் ஆண்டு நவம்பர் 13ல் வட அமெரிக்காவின் மீது விண்வெளியிலே 2 இலட்சம் எரிகொள்ளிகள் ஒரே நேரத்தில் தோன்றி, வானம் ஒளிமயமாகப் பிரகாசித்தது. ஆனால் ஒரு எரிகொள்ளியும் நிலத்தில் விழவில்லை.



## வாரம் ஒரு நாடு

### லிச்டென்ஸ்டெய்ன்




| | |
|---|---|
| தலைநகர் | - வடுஸ். |
| பரப்பு | - 160 சதுரகிலோமீட்டர். |
| மக்கள் தொகை | - 30,000. |
| மொழி | - ஜெர்மனி. |
| எழுத்தறிவு | - 100% |
| சமயம் | - கிறிஸ்தவம். |
| நாணயம் | - சுவிஸ் ஃபிராங்க். |
| தனிநபர் வருமானம் | - 29797 டொலர். |

**அமைவிடம்:**
லிச்டென்ஸ்டெய்ன், ரைன் ஆறு உற்பத்தியாகும் பகுதியில் அமைந்த சிறிய நாடு. ஒஸ்ரியாவுக்கும், சுவிற்ஸர்லாந்திற்கும் இடையே இது அமைந்திருக்கிறது.

**வரலாறு:**
சுவிற்ஸர்லாந்திடமிருந்து 1866ல் சுதந்திரமடைந்தது. பரம்பரையாக மன்னராட்சி நடைபெற்று வருகிறது. மன்னரே பிரதமரை நியமிக்கிறார். ராஜியக் கிரியங்களை சுவிற்ஸர்லாந்து அரசே கவனித்து வருகிறது.

**பொருளாதாரம்:**
இயந்திரங்கள், துணிப் பொருட்கள் முக்கிய உற்பத்திகள். கால்நடை வளர்ப்பு முக்கிய தொழில். விவசாயம் குறைந்து தொழில் வளர்ச்சி அதிகரித்து வருகிறது.

## வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 13.09.1997.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 209
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 207

**பரிசுக்குரியவர்:**
சுதாதரன் நுபேந்தன்,
கார்மேல் பாத்திமா கல்லூரி, கல்முனை.


**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| செல்வி வி. பிரதீபா, இந்து மகளிர் கல்லூரி, கொழும்பு. | பி. ஜெயப்பிரகாஷ், சென். யோன் பொஸ்கோ கல்லூரி, ஹட்டன். |
| மதிவதனி பரமசிவம், த.ம.வித்தியாலயம், டில்லரி ப-கணக்கு, டிக்கோயா. | ஏ.எம். ஸாமிலா, பு/எருக்கலம்பிட்டி, மு.ம.வி., பாலாவி. |
| ஆர். றினாஸ் அஹமட், மின்ஹாத் கனிஷ்ட வித்., யோனகபுர, திக்குவெல்ல. | எம். தினேஷ்குமார், ஆர்.சி. வித்தியாலயம், அம்பிட்டிய. |
| தர்ஷன் ஸ்ரீகாந்தகுமார், இந்து கல்லூரி, மாத்தளை. | பாலசூரியம் பத்மப்பிரியா, க/மு. மகா வித்தியாலயம், பாண்டிருப்பு-01. |
| செல்வன் தங்கவேல் சாந்தகுமார், டிக்கோயா த.ம.வி., டிக்கோயா. | செல்வி ஃபாத்திமா ஃபய்ஹா ஃபாரீஸ், கேம்பிரிட்ஜ் சர்வதேச பாடசாலை, மாத்தளை. |

## மாற்றுப் பெயர்கள்

* 'ஃபிரான்ஸின் விடிவெள்ளி' என அழைக்கப்படுபவர்–
ஆர்க் நாட்டு ஜோன்.
* 'இழிபிறப்பாளர்களின் துணைவி' என அழைக்கப்படுபவர்–
அன்னை தெரேசா.
* 'அங்கிள் ஹோ' என அழைக்கப்படுபவர்–
ஹோ சி மின்.
* 'குருதேவ்' என அழைக்கப்படுபவர்–
ரவீந்திரநாத் தாகூர்.
* 'எல்லைக் காந்தி' என அழைக்கப்படுபவர்–
கான் அப்துல் கபார்கான்.
* 'கவிக்குயில்' என அழைக்கப்படுபவர்–
சரோஜினி நாயுடு.
* 'குருதி கொட்டிய வாளேந்திய மன்னன்' என அழைக்கப்படுபவர்–
பிஸ்மார்க்.
* 'விளக்கேந்திய பெருமாட்டி' என அழைக்கப்படுபவர்–
ஃபுளோரன்ஸ் நைட்டிங்கேல்.

## புஷ்பராகம் (TOPAZ)



• **புஷ்பராகம் என்றால் என்ன?**
இது ஒரு கடினமான தாது. நவரத்தினங்களில் ஒன்றாக இது கருதப்படுகிறது.

• **இதற்கு 'ரொப்பாஸ்' (TOPAZ) என்ற பெயர் எப்படி வந்தது?**
செங்கடலுக்கு அருகில் ரொப்பாஸியஸ் என்ற தீவு உள்ளது. அங்கு ஒருமுறை உணவுக்காக, கிழங்குகளைத் தேடி நிலத்தை தோண்டிய போது இந்தக் கற்கள் கிடைத்தன. அதனால் இதற்கு ரொப்பாஸ் என்ற பெயர் வந்தது.

• **புஷ்பராகம் எங்கே கிடைக்கிறது?**
உலகின் பல இடங்களில் புஷ்பராகம் கிடைக்கிறது. குறிப்பாக நமீபியா, பிரேஸில், நைஜீரியா, பாகிஸ்தான், அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளில் அதிகம் கிடைக்கின்றது.

• **மிகவும் விலை உயர்ந்த புஷ்பராகம் எங்கே கிடைக்கின்றது?**
பிரேஸில் நாட்டில் கிடைக்கும் புஷ்பராகம்தான் உலகிலேயே மிகவும் விலை உயர்ந்தது.

• **இதற்குக் காரணம் என்ன?**
பிரேஸிலில் இருந்து பெறப்படும் புஷ்பராகம்தான் மிகவும் சிறந்தவை. இங்கு காணப்படும் ஒருவகை புஷ்பராகத்தின் பெயர் 'இம்பீரியல் ரொப்பாஸ்.' ஒரு காலத்தில் ரஷ்யாவில் உள்ள இராஜகுடும்பத்தினர் மட்டுமே, பிரேஸிலில் இருந்து கிடைக்கும் அந்த வகை புஷ்பராகத்தை அணிந்தனர்.

## இந்து சமுத்திரம்

உலகின் நான்கு சமுத்திரங்களில் பசிபிக், அட்லான்டிக் ஆகிய சமுத்திரங்களுக்கு அடுத்தபடியாக மூன்றாவது இடத்தில் இருப்பது இந்து சமுத்திரம் ஆகும்.

இந்து சமுத்திரத்தின் பரப்பு 7 கோடியே 40 இலட்சம் சதுரகிலோமீட்டர். செங்கடல்,



பாரசீக வளைகுடா, அந்தமான் கடல், வங்காள விரிகுடா, அரபிக் கடல் ஆகியவற்றை இது தன்னுள் கொண்டுள்ளது. உலகின் மொத்த நீர்ப்பரப்பில் 20 சதவீதம் இதில் உள்ளது.

ஆசியா, ஆபிரிக்கா, அன்டார்ட்டிக்கா ஆகிய மூன்று கண்டங்களை இதன் நீர் தொடுகின்றது. இந்த மூன்று கண்டங்களிலும் இதன் நீர் தொடும் பெரிய நாடு இந்தியா. எனவே தான் இதற்கு இந்து சமுத்திரம் (INDIAN OCEAN) என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது.

## சீல்கள்



குளிர்ப்பிரதேசத்தின் கடற்பகுதிகளில் அதிகம் காணப்படுபவை சீல்கள். இவற்றின் பாதங்கள் துடுப்புப் போன்றவை. குளிர் நீர்தான் இவை வசிப்பதற்கு ஏற்ற கடற்பகுதி. சீல்கள் பெரும்பகுதி நேரத்தை கடற்பகுதிகளில் கழித்தாலும் இளைப்பாறவும், இனப்பெருக்கம் செய்யவும் கரைக்கு வரும்.

சீல்களில் மட்டும் 24 வகையான இனங்கள் உண்டு. எனினும் இவற்றை காதுடைய சீல், காதில்லாத சீல், வால்ரஸ் என்ற மூன்று பிரிவுக்குள் கொண்டு வரலாம்.

சீல்கள் நீர் வாழ் விலங்குகள் என்றாலும், திமிங்கிலங்கள் போன்று இவற்றிற்கு முதுகுப்புறத் துடுப்புக்களோ, வால் துடுப்புக்களோ கிடையாது.

பெங்குவின் பறவைகளும், மீன், நண்டு போன்றவையும் தான் சீல்களின் முக்கிய உணவு. பாலூட்டி இனத்தைச் சேர்ந்த சீல்கள் கூட்டம் கூட்டமாகவே வாழும். ஒரு கூட்டத்தில் 3 முதல் 20 வரையிலான பெண் சீல்களுக்கு மத்தியில் ஒரேயொரு ஆண் சீல் மட்டுமே இருக்கும்.

சீல்கள் ஜப்பானில் உள்ள பெருங்கடலிலும், கலிஃபோர்னியாவில் உள்ள கடலிலும் அதிகம் காணப்படுகின்றன.

## அரிசி உற்பத்தி

அரிசி உற்பத்தியில் உலகிலேயே முதலிடம் வகிக்கும் நாடு சீனா. இரண்டாவது இடத்தில் இந்தியாவும், மூன்றாவது இடத்தில் இந்தோனேசியாவும் இதற்கடுத்து உள்ளன. வங்களாதேஷ், வியட்னாம், தாய்லாந்து, ஜப்பான் ஆகிய நாடுகளும் அரிசி உற்பத்தியில் முன்னணி வகிக்கின்றன.

அதிகமாக அரிசி உற்பத்தி செய்யும் நாடாக சீனா இருந்தபோதிலும், அரிசியை இறக்குமதி செய்வதிலும் சீனாவே முதலிடத்தில் இருக்கின்றது. தாய்லாந்து நாடு தனது உற்பத்தியில் 20 சதவீத அரிசியை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து அரிசி ஏற்றுமதியில் முன்னணி வகிக்கிறது.

உலகில் தற்போது 50 நாடுகள் அரிசியை உற்பத்தி செய்கின்றன.



படிப்பகம்

www.padippakam.com




# உடைந்த இரவு

**க்ரைம் சக்கரவர்த்தி ராஜேஸ்குமார்**

பாஸ்கரும் மைத்ரேயியும் கலக்கமாய் ஒருத்தரை யொருத்தர் பார்த்துக் கொண்டார்கள்.

"பாஸ்கர்..."

"ம்...."

"வசமாக வந்து மாட்டிக்கிட்டோம். ஸ்ட்ரெச்சர் கொண்டு வரப்போன ஆளை இன்னும் காணோமே...?"

"நான் உள்ள போய் பார்த்துட்டு வரட்டுமா?"

"வேண்டாம்.... எப்படியும் வந்துடுவான்?"

மைத்ரேயி தன் மணிக்கட்டில் இருந்த வாட்சைப் பார்த்தாள். நேரம் 12.35.

மேலும் ஒரு ஐந்து நிமிஷம் கரைந்திருந்தபோது ஸ்ட்ரெச்சரைத் தள்ளிக் கொண்டு இரண்டு ஆர்டர்லிகள் வர பின்னால் அந்த ஆள் தவிப்பாய் வந்து கொண்டிருந்தான்.

பாஸ்கர் நிம்மதி பெருமூச்சொன்றை விட்டான்.

"வந்துட்டான்."

"பாஸ்கர்...! அவனுக்குப் பின்னாடி பாருங்க." மைத்ரேயி சொல்ல பார்த்தான் பாஸ்கர்.

ஒரு பொலிஸ் கான்ஸ்டபிள்.

"விஷம் குடிச்சது யாரய்யா...?"

"என் பெண்டாட்டி ஸார்..."

"எதுக்காக விஷம் குடிச்சா...?"

"தெரியல்ல ஸார்..."

"அதெப்படி தெரியாமே போகும்...? வரதட்சணை பிரச்சனையா...?"

"அதெல்லாம் ஒண்ணும் கிடையாது ஸார்..."

"மாமியார் மருமக சண்டையா..?"

"எனக்கு அப்பா அம்மா கிடையாது ஸார்..."

"பின்னே விஷம் குடிக்கிற அளவுக்கு என்னய்யா தகராறு?"

"தெரியல்ல ஸார்..."

"என்னத்தைக் குடிச்சா...?"

"டிக் ட்வெண்டி ஸார்..."

"லெட்டர் ஏதாவது எழுதி வெச்சிருக்காளா?"

"இல்ல.... ஸார்..."

"நீ இப்படியெல்லாம் கேட்டா ஒழுங்கா பதில் சொல்ல மாட்டே... ஸ்டேஷனுக்கு கொண்டு போய் லாக்கப்புல தள்ளி ரெண்டு காலுக்கும் லாடம் அடிச்சாத்தான் உண்மை வெளியே வரும்...."

காரை நெருங்கினார்கள்.

ஆடர்லிகள் அந்தப் பெண்ணை காரினின்றும் ஸ்ட்ரெச்சருக்கு மாற்றிக் கொண்டிருக்க கான்ஸ்டபிள் கேட்டார்,

"கார் யாரோடது...?"

மைத்ரேயி வெளியே முகத்தைக் காட்டாமல் "என்னோடது" என்றாள்.

"உங்க பேரு....?"

"மைத்ரேயி...."

"இது தற்கொலை கேஸ்தானா...?"

பாஸ்கர் குறுக்கிட்டு சொன்னான், "இத பாருங்க கான்ஸ்டபிள்! அவங்க யார்ன்னே எங்களுக்குத் தெரியாது. வழியில நிறுத்தி லிஃப்ட் கேட்டாங்க. ஒரு மனிதாபிமானத்தோடு நிறுத்தி உதவி செஞ்சோம். நாங்க இப்போ அவசரமா ஒரு இடத்துக்கு புறப்பட்டு போயிட்டிருக்கிறோம்... எங்களை விசாரணை அது இதுன்னு சொல்லி நிறுத்தி வெச்சுடாதீங்க...."

"அதெப்படி ஸார்... இவங்க யார்ன்னே தெரியாமே உதவி பண்ணியிருக்கீங்க... நாளைக்கு இது தற்கொலை இல்லை... கொலைன்னு தெரிய வந்தா... கேஸ் டீல் பண்றதுக்கு விட்னஸ் வேண்டாமா....?"

"இதைப்பற்றி விசாரிக்க வேண்டியது அவங்ககிட்டத்தான்.."

"தெரியும் ஸார்.... இருந்தாலும்... போலிஸ் ட்யூட்டின்னு ஒண்ணு இருக்கே... எதுக்கும் உங்க கார் நம்பரையும் அட்ரஸை யும் குடுத்துட்டு போங்க..."

பாஸ்கர் தன்னுடைய அட்ரசைக் கொடுக்க கான்ஸ்டபிள் அதை தன்னுடைய சிறிய பாக்கெட் நோட்டில் குறித்துக் கொண்டான்.

"இப்ப நாங்க போகலாமா...?"

கான்ஸ்டபிள் பால் பாயிண்ட் பேனாவை சட்டைப் பையில் குத்திக் கொண்டே கேட்டார்,

"நீங்க ரெண்டு பேரும் ஹஸ்பெண்ட் அன்ட் ஒய்ப்பா ஸார்...?"

"ஆ.... ஆமா..."

"இந்த ராத்திரி நேரத்துல எங்கே ஸார் போயிட்டிருக்கீங்க?"

"அது வந்து ஒரு சினிமாவுக்குப் போனோம்... படம் பிடிக்கலை... பாதியிலேயே எந்திரிச்சு வந்துட்டோம்..."

"கிளம்புங்க ஸார்... இந்தப் பொண்ணு உண்மையாகவே தற்கொலை பண்ணிக்கிற முயற்சியில் ஈடுபட்டிருந்தா உங்களை போலிஸ் ஸ்டேஷன் வரைக்கும் கூப்பிட்டு தொந்தரவு படுத்தமாட்டோம்... அது ஏதாவது கொலை முயற்சி விவகாரமாய் இருந்தா... கோர்ட்டு வரைக்கும் நீங்க வர வேண்டியிருக்கும்..." கான்ஸ்டபிள் சொல்லிவிட்டு ஹாஸ்பிட்டலை நோக்கிப் போக மைத்ரேயி வியர்த்த முகமாய் காரை நகர்த்தினாள்.

★★★

கார் ஹாஸ்பிட்டலை விட்டு வெளியே வந்து போக்குவரத்து இறந்துபோன சாலையில் வேகம் எடுத்தது.

"பாஸ்கர்... வேண்டாத விவகாரம் ஒண்ணுல மாட்டிக்கிட்டோம்...."

"பயப்படாதே... மைத்ரேயி...! அது தற்கொலைக் கேஸ்தான்... பிரச்சனை பெரிசாகாது..,"

"இருந்தாலும்... இது ஒரு உறுத்தல் தானே...? எந்த நேரத்துக்கு பொலிஸ்காரன் வந்து வாசல்ல நிப்பானோன்னு பயந்துட்டே இருக்கணும். அதுவும் என் கணவர் வீட்ல இருக்கும்போது பொலிஸ் வந்துட்டா... என்ன பதிலைச் சொல்லி சமாளிக்கிறது...?"

"இப்பயிருந்தே மனசைப் போட்டுக் குழப்பிக்காதே மைத்ரேயி. எந்த பிரச்சனையை ஃபேஸ் பண்ணினாலும் சரி...நமக்கு வேண்டியது ுதைரியம்."

"பாஸ்கர்..."

"ம்..."

"நாம இப்போ முட்டுக்காடு போய் பட்டாபியோட உடம்பை டிஸ்போஸ் பண்றதுக்கு முடியுமா?"

"ஏன் முடியாது...?"

"ஒன்றரை மணிக்குள்ளே.... நான் வீட்டுக்கு திரும்பணும். சினிமாவுக்கு போயிருக்கிற வையாபுரி மாமாவும் அத்தையும் வந்துடுவாங்க..."

"பயப்படாதே! ஒரு மணி நேரத்துக்குள்ளே திரும்பிடலாம். காரை மட்டும் கொஞ்சம் வேகமா ஓட்டு போதும்...."

"இப்ப அறுபதுல போயிட்டிருக்கேன்..."

"போதாது...! இன்னும் கொஞ்சம் வேகத்தைக் கூட்டு."

மைத்ரேயியின் ஸ்லிப்பர் அணிந்த கால் ஆக்ஸிலேட்டரை மிதிக்க கார் இறக்கைகளைக் கட்டிக் கொண்டது.

கார் நகர் எல்லையைக் கடந்து முட்டுக்காடு போகும் பாதையைப் பிடித்தது.

**சென்றவாரம்**

பட்டாபியின் உடலை இருவரும் தூக்கிவந்து கார் டிக்கியில் திணித்தார்கள். முட்டுக்காட்டில் சவுக்குத் தோப்பிலுள்ள பாறைக் கிணறொன்றில் உடலைப் போட்டுவிடத் திட்டம் தீட்டியிருந்தான் பாஸ்கர்.

அவ்வளவு தூரம் சென்று பட்டாபி உடலை டிஸ்போஸ் பண்ணுவதற்கு மைத்ரேமி உடன்படவில்லை. ஒருவாறு பாஸ்கரின் தூண்டுதலால் காரை வேகமாகச் செலுத்தினாள் மைத்ரேமி. நடுறோட்டில் நின்று காரை மறிக்கிறான் ஒருவன். விஷம் குடித்து உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கும் தன் மனைவியை ஏற்றி வந்த ஆட்டோ ரிப்பேரானதால், ஜீ.ஹெச். வரை கொண்டு சென்று விட்டு விடும்படி கெஞ்சுகிறான் அந்த இளைஞன்.

விஷம் குடித்த மனைவியை ஏற்றிக்கொண்டு வண்டி ஜீ.ஹெச்சிற்கு விரைகிறது. மணி இரவு 12.15.

**இனி...**



மைத்ரேயி கேட்டாள். "முட்டுக்காட்டில் எத்தனை பாசிக் கிணறு இருக்கு பாஸ்கர்...?"

"ஏழெட்டு இருக்கும்..."

"பாடியைக் கிணத்துக்குள்ளே போட்டா அது ரெண்டு நாள்ல மேலாக வந்து மிதக்க ஆரம்பிச்சுடுமே...?"

"பாடியை அப்படியேவா போட்டுடப் போறோம்... நல்ல கனமான கல்லாப் பார்த்து பாடியோட இடுப்பில கட்டித்தான் கிணத்துக்குள்ளே போடப்போறோம்..."

"கயிறு...?"

"கயிறு இல்லேன்னா... என்ன...? முட்டுக்காட்டுல காட்டுக்கொடி நிறைய இருக்கு. காய்ஞ்சு போன கொடி ஒவ்வொன்றும் தாம்புக் கயிறு மாதிரி ஸ்ட்ராங்க்... கல்லைக் கட்டிப் போட்டா... நாள் எத்தனையானாலும் சரி... பாடி வெளியே வராது..."

பாஸ்கர் சொல்லிக் கொண்டிருக்கும் போதே.

காரின் வேகம் குறைந்தது.

"என்ன மைத்ரேயி?"

"முன்னாடி பாருங்க..."

பார்த்தான்.

எதிரே சாலையில் கொட்டியிருந்த இருட்டில் வாகனங்கள் வரிசையாய் நின்றிருந்தன.

"என்ன... இந்த மிட்நைட் நேரத்துல ட்ராஃபிக் ஜாம்...?"

மைத்ரேயி சலித்துக் கொண்டாள். "இன்னிக்கு நமக்கு நேரமே சரியில்லை... பாஸ்கர்."

காரை ஒரு லாரிக்குப் பின்னால் கொண்டுபோய் நிறுத்தினாள்.

பாஸ்கர் கீழே இறங்கினான்.

"இரு... மைத்ரேயி! நான்போய் விசாரிச்சுட்டு வர்றேன்."

பாஸ்கர் இருட்டில் மெதுவாய் நடந்து போய் முன்பக்கம் நின்றிருந்த லாரியை நெருங்கி காபினுக்குள் உட்கார்ந்து, பீடி குடித்துக் கொண்டிருந்த ட்ரைவரிடம் கேட்டான்.

"ஏன் வண்டியெல்லாம் நின்னுட்டிருக்கு...?"

அந்த ட்ரைவர் அசுவாரசியமாய் பாஸ்கரின் மேல் பார்வையை திருப்பியபடி சொன்னான்,

"அரை கிலோமீட்டர் தூரத்துக்கு அப்பாலே ரெண்டு லாரியும் நேர்க்கு நேர் மோதிடுச்சாம். அதுல ஒண்ணு பெட்ரோல் டாங்க்கர் லாரி. பத்திகிட்டு எரியுதாம்... தீயணைக்கிற எஞ்சின் போயிருக்கு.... எப்ப கிளீயராகும்னு தெரியாது."

பாஸ்கர் காருக்குத் திரும்பினான்.

மைத்ரேயி ஆர்வமாய்க் கேட்டாள்.

"என்ன பாஸ்கர்...?"

ஏறி உட்கார்ந்தான்.

"காரைத் திருப்பு..."

"ஏன்...?"

"ஒரு டேங்க்கர் லாரியும், லாரியும் நேருக்கு நேர் மோதி ஆக்ஸிடெண்ட், பத்திக்கிட்டு... எரியுதாம்... ரோடு நாளைக்குக் காலையிலவரைக்கும் க்ளீயர் ஆகாது. காரை ரிவர்ஸ் எடு..."

"எங்கே போறது...?"

"போய்க்கிட்டே யோசிக்கலாம்..."

"பாஸ்கர்! நேரம் போயிட்டே இருக்கு... நான் வீட்டுக்குப் போகலைன்னா பிரச்சனை யாயிடும்..."

"அப்படின்னா ஒரு காரியம் பண்ணுவோம்."

"என்ன...?"

"இப்ப நேரா உன் வீட்டுக்குப் போவோம்."

"போய்...?"

"உன்னை வீட்ல ட்ராப் பண்ணிட்டு நான் கார் எடுத்துட்டு போய் பட்டாபியோட பாடியை ஏதாவது ஒரு பக்கமா கொண்டு போய் டிஸ்போஸ் பண்ணிட்டு வந்துடறேன்..."

"காரை எத்தனை மணிக்கு வீட்டுக்கு கொண்டு வருவீங்க...?"

"எப்படியும் ரெண்டு மணி நேரத்துக்குள் பாடியை டிஸ்போஸ் பண்ணிட்டு வந்து, ஹார்ன் கொடுக்கிறேன்... நீ தூங்காமே விழித்திருந்து கதவைத் திறந்து விட்டா போதும்...."

மைத்ரேயி யோசித்தாள்.

"என்ன நான் சொல்றது சரியா?"

"சரிதான்... ஆனா....?"

"என்ன ஆனா...."

"நீங்க காரைக்கொண்டு வரும் போது வையாபுரி மாமா பார்க்காமே இருக்கணும்."

"அவர் பார்க்காமே இருக்கணும் அவ்வளவுதானே?"

"ஆமா..."

"அதுக்கு ஒரு வழி இருக்கு..."


"என்ன...?"

"நீ காரை எடு... சொல்றேன்...."


கார் கிளம்பியது.

**(தொடர்ந்து வரும்)**


## பேனா நண்பர் அரங்கம்




பெயர்: ஏ. அன்ரனி,
வயது: 25
முகவரி: பெரிய நொச்சிக்குளம், நேரியகுளம், வவுனியா.
பொழுது போக்கு: பேனா நட்பு, பத்திரிகை.




பெயர்: எம். இர்ஷாத்,
வயது: 26
முகவரி: 349, மறக்காவத்தை, பேருவளை.
பொழுதுபோக்கு: கிரிக்கெட்.




பெயர்: என். நாதன்,
வயுது: 20
முகவரி: P.O.BOX-5510 JEDDAH-21432, K.S.A.
பொழுது போக்கு: உதைபந்து.



பெயர்: ரி. சசிரேகா,
வயது: 10
முகவரி: 39/77, நெல்சன் லேன், கொழும்பு-13.
பொழுது போக்கு: வானொலி, தொலைக்காட்சி.



பெயர்: எஸ். மஃறூக்,
வயது: 28
முகவரி: 21, காட்டுப்பள்ளி வீதி, ஏறாவூர்-3.
பொழுது போக்கு: வழமையானவை.



பெயர்: எம். றியாஸ்,
வயது: 20
முகவரி: P.O.BOX-55640, SABAHIYA, KUWAIT.
பொழுதுபோக்கு: நண்பர்கள் தொடர்பு.

பெயர்: ஆர். ஆயத்துல்லாஹ்,
வயது: 20
முகவரி: வி.சி.ரோட், வாழைச்சேனை-5.
பொழுதுபோக்கு: கரம் விளையாடுதல்.

பெயர்: ஐ. அப்துல் சலாம்,
வயது: 25
முகவரி: 32/3, ஆலங்குடா, ஏத்தாலை, புத்தளம்.
பொழுதுபோக்கு: வாமையானவை.

பெயர்: எஸ். செழியன்,
வயது: 20
முகவரி: சாகாம வீதி, அக்கரைபற்று.
பொழுது போக்கு: பத்திரிகை, வானொலி.

பெயர்: கே. ஹென்றி குருஸ்,
வயது: 22
முகவரி: 10ம் கட்டை, பதுளை வீதி, பசறை.
பொழுது போக்கு: படம் வரைதல்.

பெயர்: எஸ். ஜனாதரன்,
வயது: 24
முகவரி: REST. KREVZ 9524 ZUZWIL SWITZERLAND.
பொழுது போக்கு: வழமையானவை.

பெயர்: எஸ். முகமட் ஜாபிர்,
வயது: 25
முகவரி: கட்டையாறு வீதி, கிண்ணியா-02.
பொழுது போக்கு: நண்பர்களுடன் அரட்டை.



படிப்பகம்

www.padippakam.com

# கனவு மெய்ப்பட வேண்டும்

## அத்தியாயம் 27

சுமதி பள்ளியாசிரியரின் மகள். அவர் சுமதிக்கு தந்தையாகவும் தோழனாகவும் இருந்து அன்புடன் ஆளாக்குகிறார். சுமதி கணேசனை காதலிக்கிறாள். இருவரும் திருமணம் செய்கின்றனர். கணேசனைவிட சுமதிக்கு நல்லவேலை, நல்ல சம்பளம். அதனால் கணேசன் தாழ்வு மனப்பான்மை கொள்கிறான். வக்கிரமான அவனது மறுபக்கம் சுமதிக்கு அதிர்ச்சி தருகிறது. சுமதியை கணேசன் கொடுமைப்படுத்துகிறான். வீட்டை விட்டு அடித்துவிரட்டுகிறான். சுமதி தனியாகச் செல்கிறாள். ஒரு மிருகத்துடன் வாழ முடியாத நிலையில் விவாகரத்து கோரும் முடிவுக்கு வருகிறாள்.

வசந்தி இரவுச் சாப்பாட்டுக்கு வேலைக்காரப் பெண்ணுக்கு யோசனை சொல்லி விட்டு, சுமதியுடன் வந்து அமர்ந்து கொண்டாள். "அப்புறம்? விவாகரத்து வழக்கு எந்த அளவில் இருக்கிறது?"

"நடந்து கொண்டிருக்கிறது. நீதி மன்றம் நம்புகிற அளவுக்கு காரணங்களை சிருஷ்டித்துக் கொண்டு, மண்டையை உடைத்துக் கொண்டிருக்கிறோம். என்ன நீதி? என்ன தர்மம்? அளவில்லாத கொடுமைகளை அந்த மனிதன் கொடுத்தான் என்றுதான் அவனைப் பிரிந்தேன். அவனைப் பிரிந்து நான் சுதந்திரமாவதற்கு இந்த வக்கீல்களிடமும், வழக்கு மன்றங்களிலும் மாட்டிக் கொண்டு நான் சித்ரவதைப் படுகிறேன். எங்கள் இரண்டு பேருக்கும் ஒத்துவரவில்லை பிரிந்து கொள்கிறோம் என்று விண்ணப்பித்துக் கொண்ட பிறகு நீதிமன்றம் இப்படி யோசித்துக் கொண்டிருக்க என்ன நியாயம் என்றே எனக்கு விளங்கவில்லை. இந்த தேசத்தில் எதுதான் ஒழுங்காக இருக்கிறது."

வசந்தி யோசித்துக் கொண்டிருந்து விட்டுச் சொன்னாள்,

"அதனால்தான், நாங்கள் சட்டத்தின் நிழலுக்கு ஒதுங்க விரும்பவில்லை. கல்யாணத்தைச் சட்டத்தின் அங்கீகாரத்தோடு நடத்திக் கொண்டால்தானே, கல்யாண ரத்தையும் அதன் அங்கீகாரத்தோடு நடத்த வேண்டியிருக்கும்?"

பீட்டர் எட்டு மணி போல வந்து சேர்ந்தான்.

"என்ன செய்து கொண்டு இருக்கிறீர்கள், இப்போது?" என்றாள் சுமதி, அவனைப் பார்த்து.

"ஜீவனோபாயம் கருதி நான் செய்யும் வேலையைப் பற்றி நீங்கள் ஒன்றும் கேட்கவில்லை என்று கருதுகிறேன். அது பற்றி உங்களுக்கே தெரியும். தனிப்பட்ட முறையில், ஆராய்ச்சி ஒன்றை மேற்கொண்டிருக்கிறேன். அரசு கேந்திரங்கள் என்று சொல்லப்படும் அரசாங்க அதிகாரிகளின் அலுவலகங்கள், பொலிஸ் நிலையங்கள் மற்றும் நீதிமன்றங்களில் சாதாரண மனிதன் என்பவன் எப்படியெல்லாம் கீழாக, மரியாதையின்றி, அவமானப்படுத்தப்படுகிறான் என்பதையே விஷயமாகக் கொண்டு ஒரு புத்தகம் எழுதிக் கொண்டிருக்கிறேன். ஐ.ஏ.எஸ். மற்றும் அதை ஒட்டிய அதிகாரிகள் எவனும் சாதாரண மனிதனை மரியாதையாக நடத்துவதில்லை. அவன் உட்கார ஆசனம் தருவதில்லை. இந்த அதிகாரிகள் பலருக்கும் தமிழே தெரியாது. வேறு மாநிலத்தைச் சேர்ந்தவனாக இருப்பான். நம் குறைபாடு அவனுக்குத் தெரிய நியாயம் இல்லை. கம்பீரமாக உடுத்திய ஆங்கிலம் தெரிந்தவர்கள், சுலபமாகக் காரியம் சாதித்துக் கொள்கிறார்கள். கிராமத்தில், கோமணம் கட்டிக் கொண்டு உழுகிற மனிதன் சென்னையில் ஒரு அரச அலுவலகத்துள் புகுந்து ஏதேனும் நியாயமான காரியம் சாதித்துக்கொள்ள முடியும் என்று நம்புகிறீர்களா? அவ்வாறு நிகழும் நாள்தான், உண்மையில் நாம் சுதந்திரம் பெற்ற நாளாகக் கருதவேண்டும். இதுதான் என் புத்தகத்தின் கரு."

சுமதி மன மகிழ்ச்சி அடைந்தாள்.

"உருப்படியான புத்தகம். செய்யுங்கள். இன்னும் நிறைய பண்டித முட்டாள்கள் சங்க இலக்கியத்தில் வெள்ளைப் பூண்டு, பழந்தமிழ் இலக்கியங்களில் சட்டிப்பானை என்றெல்லாம் தான் ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிறார்கள். சமகால மனிதனின் நிலை குறித்து மிகச் சிலபேரே ஆராய்வதாகத் தெரிகிறது. நல்ல பணி செய்யுங்கள்."

"இந்தியா சுதந்திரமடைந்தாலும், வெள்ளைக்கார மனோபாவம் இன்னும் இந்த நாட்டை விட்டுச் சென்றுவிட்டதாகச் சொல்ல முடியாது. அவனவனும் மற்றவனுக்கு எஜமானாக இருக்கவே விரும்புகிறார்கள். அவனவனும் தனக்களிக்கப் பட்ட பணியைப் பூரணமாகச் செய்வது என்று வந்து விட்டால், நாடு சுபிட்சமடையும்."

"அடிப்படை விஷயமே அதுதான். சமூக மாற்றம் அப்படித்தான் நேர முடியும்."

பீட்டரோடும், வசந்தியோடும் பேசிய போதுதான் சுமதிக்கு அந்த யோசனை மனதில் பளிச்சிட்டது. நாம் ஒரு இயக்கம் கண்டால் என்ன என்கிற யோசனை. 'சராசரி மனிதர்களின் சங்கம்' என்று அந்த அமைப்புக்குப் பெயர் வைக்கலாம் என்றாள் சுமதி. மறு யோசனையில் 'மனிதர்கள்' என்ற பேரே இருக்கட்டும் என்று முடிவாகியது. "மனிதர்கள் அமைப்பு என்ன செய்யப் போகிறது?" என்றாள் வசந்தி.

"அரசு அலுவலகங்கள், பொலிஸ் நிலையங்கள், நீதி மன்றங்கள் ஆகியவற்றின் உதவியைப் பெற வேண்டியுள்ள ஒரு சாதாரண மனிதனுக்குத் துணைசெய்யும் அமைப்பு இது என்று கொள்ளலாம். ஜீவனற்ற, செயற்கை அமைதியுடன் கூடிய, மனிதாபிமானம் அற்ற உயர் அதிகாரிகளின் அலுவலகங்களின் நடை பாதைகளில் கையில் விண்ணப்பக் கடிதங்களோடும், முகத்தில் கவலையோடும் நின்று காத்திருக்கிற மனிதர்களைத் தேடிச் செல்வது. அந்த விண்ணப்பப் படிவத்தைப் பெற்று, அந்தக் குறிப்பிட்ட அதிகாரிகளிடம் நேரே சென்று பேசி, கோரிக்கைக்குப் பதில் கேட்பது. பொலிஸ்காரர்கள் எப்போதுமே மக்கள் விரோதிகள். சாதாரண மக்கள் பொலிசின் பிடிக்குள் சிக்கிக் கொள்ளும்போது அவர்களைக் காத்தல், நீதி வேண்டி நெடுந்தவம் செய்யும் பொதுமக்களுக்கு இயன்றவரை உடனடியாக நீதி கிடைக்க உதவுதல்."

சுமதி சொன்னாள்,

"மிக உதவிகரமான அமைப்பு. சரி, ஆளுக்கு ஒரு பகுதியை எடுத்துக்கொள்வோம். நான் குடும்ப நீதி மன்றங்களை என் பகுதியாக எடுத்துக் கொள்கிறேன். இந்தவாரம் என் ஓய்வு நேரம் முழுவதையும், அந்தப் பகுதியை ஆராயவும், முடிந்தால் நீதிபதி, நீதி இலாகா ஆகியவற்றுடன் பேசுகிறேன். பீட்டர்! நீங்கள் பொலிஸ் ஸ்டேஷன்களைச் சுற்றிப் பாருங்கள். வசந்தி, நீங்கள் அரசு அலுவலகங்களைச் சென்று பாருங்கள். வாரம் தோறும் நாம் சந்திப்போம். கலந்து உரையாடுவோம். நம் படிப்பு, நம் அலுவலக அந்தஸ்து ஆகிய அனைத்தையும் சாதாரண மனிதர்க்குப் பயன்படுத்துவோம்."

"ஆமாம். சுமதி, உங்கள் முன்னாள் கணவர் கணேசன், குடித்துவிட்டு உங்கள் வீட்டு முன் வந்து கலாட்டா பண்ணினாராமே?"

"ஆமாம்."

சுமதி பெருமூச்சு விட்டாள்.

"எனக்கு இப்போதெல்லாம் ஆபீஸ் போவதுகூட வெறுப்பாக இருக்கிறது? எவனைப் பார்த்தாலும் என்னை மனுஷியாகப் பார்ப்பதில்லை. ஒரு சதைப் பிண்டமாகவே பார்க்கிறான். என்னோட உடம்புதான் அவனுக்குப் பொருளாக இருக்கிறது. என்ன அவமானம்? கொஞ்ச நாளாக, வேலையையே விட்டுவிடலாம் என்று கூடத் தோன்றுகிறது...."

சுமதியிடமிருந்து ஆழ்ந்த கவலையும் பெருமூச்சும் வெளிப்பட்டது. பீட்டர் சொன்னான்,

"கேள்விப்பட்டிருப்பீர்களே! மூட்டைப் பூச்சிக்கு பயந்து வீட்டைக் கொளுத்துவது என்று: அது மாதிரி பேசுகிறீர்கள். ஒன்று சொல்கிறேன், செய்வீர்களா? எவனாவது உங்களிடம் வரம்பு மீறினால், ஓங்கி அறையுங்கள். அப்புறம் பாருங்கள். உங்கள் நிலைமையே ஊரில் மாறிவிடும்...."

அவன் யோசனையைச் செயல்படுத்தும் வாய்ப்பு அடுத்த வாரமே அவளுக்குக் கிடைத்தது.

அன்பு, அருள், ஈகை, கொடை இன் சொல்யாவும் இங்கு பெண்ணோடு தொடர்புடைய சொற்களாகவேதான் இருக்கின்றன. அடிப்படையில் மனித குலம் பெற்றிருக்க வேண்டிய பண்புகள் இவை. அதாவது ஆண்களும், பெண்களும் இணைந்த மனித குலம். அன்பு முதலாகிய அந்தக் குணங்கள், பெண்களுக்குச் சேலை ரவிக்கை, ஆண்களுக்கு வேஷ்டி சட்டை என்பது மாதிரி பெண்களுக்கேற்பப் பிரித்து வைக்கப்பட்டிருப்பதால்தான் சமூகத்தில் பல சிக்கல்களை ஏற்படுத்திவிட்டிருக்கின்றன. பெண்கள் வெறும் சதைப் பிண்டமாகக் கருதப்படும் ஒரு சமூகத்தில், அவர்கள், கோபக்காரர்களாக, கலகம் செய்பவர்களாகத் தோற்றம் கொள்ளவேண்டும். மாட்டுக்குக் கொம்பு. புலிக்கு நகம். பெண்களுக்கு இந்தக் கோபம்."

"கோபம், அன்பு மாதிரி அல்லது அருள் மாதிரி ஒரு குணம் ஆகுமா? அது ஒரு வகையான மனநோய் அல்லவா? அந்த நெருப்பு சார்ந்தவரை எரிக்காதா?"

"ஆம், அது நெருப்புத்தான்; மனநோய் தான். ஒரு சின்னக் கதை. ஒரு பாம்பு ஒரு துறவியிடம் வந்து, தன்னை எல்லோரும் துன்புறுத்துகிறார்கள். சிறுவர்கள் கல்லெறிகிறார்கள், பெரியவர்கள் கொல்ல முனைகிறார்கள் என்றதாம். அந்தத் துறவி, நீ என்ன வகையாக உன் எதிர்ப்பைத் தெரிவிக்கிறாய் என்றார். நான் சும்மாதான், சாதுவாக இருக்கிறேன் என்றதாம். சும்மா சாதுவாக இருப்பவரைச்சீண்டிப் பார்ப்பது உலகத்தார்கள் இயல்புதான். உனக்கு யாராவது துன்பம் விளைவித்தால் கடிக்காதே, சும்மா சீறு. அது போதும் என்றாராம். பாம்பு அதைச் செயல்படுத்தியவுடன், அதற்கு நேர்ந்த துன்பங்கள் அகன்றதாம். ஆகவே மனதில் குரோதம் இல்லாமல் நீ கோபப்படுகிற மாதிரி நடி. இந்த நடிப்பு, காலிகளிடமிருந்து உன்னைக் காப்பாற்றும். அன்பு,அருள் என்று எல்லோரின் மேலும் விழுந்து சிரித்துப் பழகுகிறாய். உன்னைப் போன்ற தனியாக இருக்கும் பெண்களின் மேல் அபவாதம் பிறக்கும். அபவாதம் எந்த நல்ல பெண்ணின் மீதும் பிறக்கும். சீதைக்குப் பிறக்கவில்லையா? எனினும் கூடுமானவரை அதற்கு இடம் கொடுக்காமல், நம் பக்கத்து முயற்சிகளில் நாம் சரியாக இருப்பது முக்கியம்."



சுமதி தனக்குள்ளேயே பேசிப்பேசி ஒரு முடிவுக்கு வந்திருந்தாள். அன்று காலை ஒரு நூல் வெளியீட்டின் போது பாரு என்கிற பெண் விடுதலைக்காரி ஒருத்தியைச் சந்திக்க நேர்ந்தது. விடைபெறும் வரை பாரு சுமதியை அருகில் வைத்துப் பேசினாள். கடைசியாக பாரு எழுந்து நின்று சுமதியை பார்த்துச் சொன்னாள்.

"அப்போ நான் வருகிறேன். நான் சொன்னது ஞாபகம் இருக்கட்டும். ஒட்டு மொத்தமாக ஆண்கள் அயோக்கியர்கள் தாம். எந்த நேரத்திலும் நம் மீது கையை வைக்கக் காத்திருப்பவர்கள் தான். தவிரவும், நீங்கள் அழகாக வேறு இருக்கிறீர்கள். புத்திசாலியாகவும் இருக்கிறீர்கள். தகரத்தில் ஆணி வைத்துக் கிழித்த மாதிரி பிசிறு தட்டும் என் குரலைப் போன்றதன்று உங்கள் குரல். உங்கள் குரலும், பேசும் பாஷையும், உபயோகிக்கும் சொற்களும் மிக அழகியன. ஆகவே நீங்கள் மிக ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்."

பாரு போன பிறகும், அந்த இடத்துக் காற்று பழுது பட்டுப் போய் நீலம் பாரித்துக் கிடந்தது.

தனியே வாழநேரும் பொருளாதாரத்தாலும், கல்வியாலும், பண்பாட்டு நாகரிகத்தாலும் மேம்பட்ட பெண்களுக்குத் தமிழகத் தலைநகரில் வாய்க்கும் பிரச்சனைகள் இரண்டு. ஒன்று ஆண்கள் வேலியற்ற காவலற்ற மாமரத்தில் கல்லெறிந்து காய் பறிக்க நினைக்கிற ஆண்கள். இரண்டாவது போலி சமூக சேவை, பெண் விடுதலை பேசுகிற பெண்கள். இரண்டு பேருமே, நல்ல பெண்களுக்கு வாய்த்த எதிரிகளே ஆவார்கள்.

பாரு அக்னிஹோத்ரி சாம்பசிவ ஐயர் என்கிற முழுப் பெயர் கொண்ட பாரு போன்றவர்கள், பெண்களைப்

**பிரபஞ்சன்**

போலவே இருப்பார்கள. சமூகம் பெண்களுக்கு விதித்திருக்கிற சகல கட்டுக்களையும் உடைத்து நொறுக்குவதற்காகவே தாம் அவதாரம் எடுத்து வந்திருப்பதாகச் சொல்லிக் கொள்பவர்கள். தங்களை அடக்கி ஆண்டு கொண்டிருக்கும் பெண் விரோத ஆண்களை எதிர்க்க, உடனடியாக அவர்கள் செய்யும் முதல் காரியம்-ஆண்களைப் போலவே கிராப் வைத்துக் கொள்வது. சட்டையும், அழுக்கு ஜீன்சும் அணிந்து கொண்டு, அதிர்ச்சி ஊட்ட என்றே அடிக்கடி சிகரெட் பிடிப்பது, நாலு வார்த்தைக்கு ஒரு முறை 'ஃபக்' என்பது போன்ற கொச்சை வார்த்தைகளைப் பயன்படுத்துவது போன்ற காரியங்களாலேயே 'பெண் விடுதலை'யை ஸ்தாபித்து விடலாம் என்று கற்பனை செய்து கொண்டிருந்தார்கள் அவர்கள். அது பற்றி உருப்படியான எதையும் பெண்களுக்கு ஆதரவாக அவர்கள் செயல் படுத்தியது இல்லை. **(தொடர்ந்து வரும்)**

---

"படிக்கிற வயதில் பாதிப் படிப்பு போச்சு..
வாழுற வயதில் அரைவாசி வயது போச்சு..
மண்டையில் முடியும் போச்சு...!"

# அன்புள்ள அம்மாவிற்கு...



அம்மா இக்கடிதத்தை கொஞ்சம் பொறுமையோடு உணர்ந்து வாசித்துப் பாருங்கள்!

ஒன்றுக்கு ஐந்து பெண் சகோதரங்களுடன் கஷ்டப்பட்ட குடும்பத்தில், அதுவும் மூத்தவனாக பிறந்ததையிட்டு வருந்துகின்றேன் என்று சொல்வதைவிட, வதைக்கப்படுகின்றேன் என்பது தான் உண்மை. எனது சின்ன வயதில் அப்பாவை இழந்ததினால் அந்த வயதில் வந்த சுமை இந்த வயதிலும் இறங்கவில்லை. படிப்பை பாதியில் நிறுத்திவிட்டு தோட்டத்தில் இறங்கி மண்வெட்டி பிடித்த காலத்தில் என் பிஞ்சு விரல்களுக்கு வாயிருந்திருந்தால் அழுதிருக்கும். அப்படியான கஷ்டத்தை நான் ஏற்றபடியால்தான் நான் இன்று சுவிசில்.

அம்மா நீங்கள் யாழ்ப்பாணம் சீராக இருந்தபோது "காணி வீடு வாங்க வேண்டும் பெட்டயள பெத்தனான் தேவை தானே?" என்று சொன்னீங்க. ஓம் என்று பணம் அனுப்பி வைச்சேன்.

பிறகு இடம் பெயர்வு காரணமாக வவுனியா வந்து "இப்ப எல்லாச்சனமும் இங்கு தான் இருக்கினம். யாழ்ப்பாணம் மாதிரித்தான் வவுனியா வந்திட்டுது. எல்லாரும் விழுந்து விழுந்து வீடுவாங்கினம். எப்படியாவது நாங்களும் றேட் ஏறமுதல் வாங்கவேணும். காசு அனுப்பி வை!" என்றீங்க. மாறிச்சாறி அனுப்பி வைச்சேன்.

பின்பு சனங்கள் கொழும்பு வாறதைப் பாத்துப் போட்டு சாட்டொன்று போட்டீங்க, "கண்ணுக்கு குளிர்ச்சியாய் பெட்டைகள் வளர்ந்து நிக்கிறாளவ. படக்கூடாதவர்களின் கண்ணில பட்டால் கோழி அமர்த்தி பிடிக்கிற மாதிரிப்பிடிச்சுப் போடுவாங்கள். இஞ்ச வச்சிருக்கிறது அவ்வளவு நல்லாயில்ல; நாங்கள் கொழும்புக்கு வரப்போறம். இஞ்ச எல்லாருக்கும் பாஸ் எடுக்கிறது கஷ்டம். மற்றது இஞ்சால மாறி மாறி காசும் கட்ட வேண்டும். அப்பத்தான் கொழும்பு வரலாம். எதுக்கும் கெதியா பணத்தை அனுப்பிவை!" என்றீர்கள். அனுப்பினன்.

கொஞ்சக்காலம் கொழும்பில் வந்து பட்டபாடு கொஞ்சமா நெஞ்சமா? அப்பாடி "ரீ.வி வாங்கணும் டெக் வாங்கணும், பெட்டயள் கொம்பியூட்டர் வகுப்புக்குப் போறாளவ, வீட்டு வாடக கட்டவேணும். காசு அனுப்பு!" சுணங்கினால் அங்கு இருந்து ரேலிபோன் வரும் எனக்கு. படுத்த பாயில விடியக்கால 4 மணிக்கு மனுசன் வேலமுடிஞ்சு வந்து கொஞ்சநேரம் அப்பத்தான் படுத்திருப்பன்.

**ச. குறிஞ்சிக்குமரன்–சுவிஸ்**

தட்டு தடுமாறி றிசீவரை எடுத்து "ஹலோ" என்றால் "நான் அம்மா கதைக்கிறனப்பு, காசனிப்பிவிடு!" இது தான். சில நேரம் நான் பயந்து போறதும் உண்டு. கொழும்பு ரெலிபோன் விடியக்காலேல வந்தால் ஆரும் மண்டையப் போட்டினமாக்கும் எண்டு.

இப்படியே கொழும்பில இருந்து, கனடா, ஜெர்மன், சுவிஸ் என்று கொழும்பில் உள்ள கலியாண புறோக்கர்மாரை பிடிச்சு பெட்டைகளை அனுப்ப அனுப்ப நானும் 4 பேரிட்ட பல்லுக்காட்டியும், வட்டிக்கும், குட்டிக்கும் எடுத்து உங்களின் ஆசைப்படி எனது கடமையை நிறைவேற்றி வைச்சேன். அப்பாடா இப்பத்தான் எனக்கு நிம்மதி என்று பெரு மூச்சுவிட்டா அதுவும் முழுசா வெளியில வருகிதில்ல. என்னெண்டு கேட்டால் "வெளிநாட்டுக்கு வந்து பேரப் பிள்ளைகளைப் பார்க்கவேணும் என்ன எப்ப கூப்பிடபோகிறாய்?" என்று.

அம்மா நீங்கள் ஆசைப்படுவதில் தப்பில்லை. எல்லோருக்கும் எல்லாவிதமான ஆசைகளும் இருக்கத்தான் செய்யும். ஆனால் பேராசை தான் கூடாது. நீங்கள் எப்பையாவது உங்களின் மனதில் யோசித்தீர்களா? உங்களின் மூத்த பெடி சுவிசில இருக்கு; ஒரு பெண் பார்த்து அனுப்புவம் என்று.

என்ர வாழ்க்கையில படிக்கிற வயதில் பாதிப் படிப்புப் போச்சு,

வாழ்ற வயதில் அரை வாசி வயது போச்சு,

மண்டையில் முடியும் போச்சு.

நான் என்ன பட்ட மரமா உணர்ச்சியில்லாமல் வாழ்வதற்கு? அல்லது தியாகியா, சன்னியாசியா, வாழ்க்கையை தியாகம் செய்வதற்கு?

ஆனால் என்னிடம் எல்லாம் போச்சே என்று சொன்னேனே தவிர ஒன்று மட்டும் போகவில்ல; அது தான் என் உயிர்.

நான் எவ்வளவு காலம் சுவிசில் இருந்தாலும் எனது கண்கள் கடைசியாகப் பார்ப்பது எனது அம்மாவின் முகமாகத் தான் இருக்க வேண்டும். எனது உயிர் பிரியேக்க.



படிப்பகம்

www.padippakam.com

**'கேளடி கண்மணி', 'ஆசை' போன்ற வெற்றிப்படங்களை இயக்கியவர் வசந்த். அவர் எழுதிய குட்டிக்கதை. திரையுலக சுவாரசியங்களில் சிறு துளிதான் இக்கதை.**



# உல்டா



## இயக்குநர் வசந்த்

டிஸ்கஷன் ஹாலில் உதவி இயக்குநர்கள் காத்திருந்தார்கள். அப்போது ரிலீசாகி ஓடிக்கொண்டிருக்கும் படங்களைப் பற்றிக் காரசாரமாக விவாதித்தார்கள்.

கையில் சிகரெட்டுடன் டைரக்டர் ஜீவகன் உள்ளே வந்தார். அனைவரும் எழுந்து வணக்கம் சொன்னார்கள்.

டைரக்டர் சிகரெட்டை ஆஷ்ட்ரேயில் வைத்து நசுக்கி விட்டுத் தலையணையை மடியில் வைத்துக் கட்டிலில் உட்கார்ந்தார்.

"என்னய்யா நேத்து ஏதும் பேசினீங்களா?"

"பேசினோம் சார்... க்ளைமாக்ஸ்தான் கொஞ்சம் இடிக்குது!"

"சரி அத விடு! மோகன்... ரத்தினத்துக்குப் ஃபோன் பண்ணயா? எப்ப வர்றாராம்?"

"இப்பத்தான் அவர் பேசினாரு சார். பத்து நிமிஷத்தில் வாராறாம்."

ரத்தினம் பிரபல கதாசிரியர்.

அவரது கதையில் வெளிவந்த நான்கு படங்கள் நன்றாக ஓடியிருக்கின்றன. இப்போது ரத்தினத்திடம் கதை கேட்கத்தான் டைரக்டர் ஜீவகன் காத்திருக்கிறார்.

டைரக்டர் இன்னொரு சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டார்.

காலிங்பெல் அடித்தது.

ஒரு உதவி இயக்குநர் எழுந்து போய்க் கதவைத் திறந்தார்.

நெற்றியில் சந்தனமும் குங்குமமும் சரி விகிதத்தில் உட்கார்ந்திருக்க சிரித்துக் கொண்டே ரத்தினம் உள்ளே வந்தார்.

கொஞ்சநேரத்துக்கு முன்தான் வெற்றிலை போட்டிருக்க வேண்டும்: வாயெல்லாம் சிவந்திருந்தது.

டைரக்டர் மடியில் இருந்த தலையணையை எடுத்துக் கீழே வைத்து விட்டு கை குலுக்கிக் கொண்டார்.

உதவி இயக்குநர்களை அவரவர்களின் நிஜப் பெயர்களையும் புனைப் பெயர்களையும் சொல்லி அறிமுகப்படுத்தி வைத்தார்.

ஆபீஸ் பையனை டீ வாங்கிவர அனுப்பி விட்டுக் கதை கேட்கத் தயாரானார்கள்.

ரத்தனம் தொண்டையைச் செருமிச் சரி செய்துகொண்டு கதை சொல்லத் தொடங்கினார்.

"ஃபர்ஸ்ட் ஓபன் பண்ணா சார்...."

எல்லோரும் உன்னிப்பாக கேட்டார்கள். டைரக்டர் இடையிடையே சிகரெட் பற்ற வைத்தார்.

"அவ ஷாக் ஆகி நிக்கிறா.... இண்டர்வெல் சார்!"

டீ வந்தது! அனைவரும் சாப்பிட்டார்கள்.

உதவி இயக்குநர் போய்க் கதவைச் சாத்திவிட்டு வந்து உட்காரவும் ரத்தினம் மீண்டும் கதையைத் தொடங்கினார்.

டைரக்டர் முன்பை விடச் சற்று உன்னிப்பாக கவனித்தார்.

ரத்தினம் கதையைச் சொல்லி முடிக்கவும் அனைவரும் இடுப்பை வளைத்து சோம்பல் முறித்தார்கள்.

டைரக்டர் எழுந்து பாத்ரூம் போய்விட்டு வந்தார்.

"எப்படி சார் இருக்கு?"

ரத்தினம் ஆவலுடன் கேட்டார்.

"ஓ.கே... பட் நான் வேற மாதிரி எதிர்பார்த்தேன்!"

ரத்தினம் மழுப்பலாக சிரித்துக் கொண்டார்.

கொஞ்சம் வெளி விஷயங்கள் பேசினார்கள்.

முன்னணியில் இருக்கும் டைரக்டர்கள், ஹீரோக்களின் சம்பள நிலவரம் பற்றிப் பேசினார்கள்.

ரத்தினம் விடை பெற்றார்.

ரத்தினம் போனவுடன் ஒரு உதவியாளர் அவசரப்பட்டுக் கேட்டு விட்டார்.

"சப்ஜெக்ட் நல்லாத்தான் சார் இருந்துச்சு. இதயே வச்சுக்க முடியாதா சார்?"

டைரக்டர் சிகரெட்டின் கடைசி இழுப்பை இழுத்து புகையை ஊதிக்கொண்டே சிரித்தார்.

"இதத்தான் வச்சிக்கப் போறோம்! 'கதை'ன்னு சொல்லி இந்தாளுப் பேரப் போடறதுக்கு நான் என்ன இளிச்சவாயனா?"

எல்லோருக்கும் கொஞ்சம் புரியாமலும் ஆச்சரியமாகவும் இருந்தது.

"இந்தக் கதைய அப்படியே மாத்துங்கய்யா... லேடீஸ் கேரக்டரெல்லாம் ஜெண்ட்ஸ் கேரக்டரா மாத்துங்க! பீச்ல இருக்கிற சீனெல்லாம் பார்க்ல வையுங்க! இன்னைக்கு ஈவினிங்குள்ள ரெடி பண்ணுங்க!" என்று சொல்லிவிட்டு சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டு டைரக்டர் வெளியில் போய் விட்டார்.


அந்தக் கதையை அப்படியே உல்ட்டா பண்ணி ஷூட்டிங் போனார்கள்; படம் ரிலீசானது. வெளியிட்ட எல்லா தியேட்டர்களிலும் ஹவுஸ்புல்லாக வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருந்தது.

**பின்குறிப்பு:**

கதைத் திருட்டுக் குற்றத்திற்காக அந்தப் படத்தின் இயக்குநர் ஜீவகனைக் 'காப்பி ரைட்' சட்டத்தின் ஐந்து வருடக் கடுங்காவல் தண்டனை விதித்து ஜெயிலில் போட்டு விட்டார்கள். காரணம், ஏற்கனவே வெளியாகி வெற்றிகரமாய் ஓடிக் கொண்டிருக்கும் ஓர் இந்திப் படக் கதையைத் தான் ஆண்களைப் பெண்களாய் மாற்றி உல்ட்டா பண்ணிச் சொல்லியிருக்கிறார் எழுத்தாளர் ரத்தினம். ஜீவகன் அது தெரியாமல் மறு உல்ட்டா செய்ய, அது? ஒரிஜினல் கதையோடு எழுத்துக்கு எழுத்து கார்பன் காப்பியாக அமைந்து விட்டது!

---

# பயணம்



## யாழ். ஞானகணேசன்

"நம மொக்கத்த?" (பெயர் என்ன)

..............................

"நம மொகத்த?" மீண்டும் சீருடையின் கேள்வி இது.

"என்னவாம் தம்பி." வரிசையில் நின்ற வயோதிப மாது கேட்டாள்.

"பெயரே, பொன்னி, .........பொன்னி."

திருமலையில் இருந்து கப்பல் வழியாக யாழ் நோக்கிப் பயணிப்பதற்காக வவுனியாவில் இருந்து அனுப்பப்பட்டு உப்புவெளி கண்ணாடித் தொழிற்சாலை முகாமில் அடைபட்டுள்ளவர்களில் பொன்னி ஆச்சியும் ஒருவர்.

கருமை களவாடப்பட்டு வெண்மை பரிசளிக்கப்பட்ட காய்ந்து சருகாகிய தலைமுடி.. கூன் வீழ்ந்த முதுகைச் சுமக்கும் கைத்தடி.. குழிவீழ்ந்த கண்களை மறைக்கும் பழைய கறுப்பு பிறேம் போட்ட கண்ணாடி.. வெற்றிலை காவிபடிந்த நான்கைந்து பற்கள். உருமாற்றம் பெற்றுள்ள கிழிந்த வெண்நிறப் புடவை. இவற்றையெல்லாம் விட பொன்னியாச்சியிடம் ஏதாவது சொத்திருக்குமா எனப் பார்த்தால் கையில் ஒரு முடிச்சு.

அந்த முடிச்சு ஆச்சியின் கையிலிருந்து ஒரு கணமும் விலகியதில்லை. அதற்குள் இருந்து என்ன புதையல் புலப்படும் என அறியவிரும்பியவர்களும் யாருமில்லை. ஆச்சியைத் தவிர, அந்த முடிச்சைப் பற்றித் தெரிந்தவர்கள் இருவராகத்தான் இருக்கும். ஒன்று ஆண்டவன். மற்றவர் பாதுகாப்புப் படையினர்.

"நீ அதிலை இருந்திருக்கலாம். நான் சாப்பாடு எடுத்துவந்து தந்திருப்பேனே. வயதுபோன நேரத்திலை ஏன் இந்தக் கியூவில் நின்று காயிறாய்?" நான் கேட்டேன்.

ஆச்சி சிரித்தாள். "காயிறது தான். எப்பவானாலும் காயிறதுதான். கருவாட்டுக்கு உதவும் என்றால் காயப்போட்டிருப்பாங்கள். அது சரிவராது என்றதாலைதான் எரிக்கிறாங்கள்."

"ஆச்சி, பிள்ளையள் எங்கே?"

"இல்லையடா தம்பி."

"உறவுகள்....."

"அப்பப்ப வந்தவையெல்லாம் இப்போ வாறதில்லை."

"யாழ்ப்பாணத்திலை யாரிடம் போறியள்?"

ஆச்சி மீண்டும் காவிபடிந்த பற்கள் தெரியச் சிரித்தாள்.

"எனக்கென்று வீடுவாசல் இருக்கு. எனக்கென்று சுடலை இருக்கு. என்ரை மண் இருக்கு இதையெல்லாம் விட முடியுமோ?"

★★★

இன்று காலை, மணி நான்காக இருக்கும். இந்த முகாமின் பிரதான மண்டபத்தில் அலறல். வீழ்ந்தடித்து ஓடினேன். பொன்னியாச்சிதான், பொன்னியாச்சியே தான் சந்தேகமில்லை. தன்நெஞ்சைப் பொத்தியபடி சுவாசத்திற்காய் மிகவும் சிரமப் பட்டுக்கொண்டிருந்தாள்.

"தண்ணீ.... தண்ணீர்." நா வறட்சியால் வலுவிழந்திருந்தது.

ஒரு கோப்பையில் தண்ணீரை நீட்டினேன்.

"கப்பல் எப்பவாம்?"

ஆச்சியின் கனவுகள் சிறிதுசிறிதாக கலையத் தொடங்குவதை என்னால் ஊகிக்க முடிந்தது. உடனேயே வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டாள்.

வைத்தியசாலையின் வைத்திய அதிகாரியின் கருத்தின்படி ஆச்சியின் உறவினருக்கு உடனேயே அவசரச் செய்தி அனுப்புவதற்காய் ஆச்சியின்பொதியைக் கிளறினேன். மூன்று படப்பிரதிகள். ஆச்சியின் பிள்ளைகள்க இருக்குமோ? இல்லை உறவினர்களுடையதோ? எதற்கும் ஆச்சியிடமே கேட்டுத் தெரிந்து கொள்வதற்காய் விரைவாக வீதியில் இறங்கிய நான், வழியில் வந்து கொண்டிருந்த ஓட்டோவை மறித்து ஏறிக்கொண்டேன்.

வைத்தியசாலை வாயிலையடைந்ததும், படப்பிரதிகளை கையில் எடுத்த வண்ணம் ஆச்சியின் படுக்கையை நோக்கி ஓடினேன்.

என்னை இடைவழியில் மறித்த வைத்தியர் சொன்னார். "தம்பி, பிரேதத்தை பிரேத அறைக்குள்ளை போடச் சொல்லியிட்டேன். விரைவாய் உறவினரோடை வந்து எடுத்துக்கொண்டுபோம்."

கையில் இருந்த படப்பிரதிகள் நழுவிக் காலில் மிதிபட்டன. என்னால் என்னதான் செய்யமுடியும்? ஆச்சியின் பிணம் திருமலை தளவைத்தியசாலையின் ஒரு புறத்தில் தகனம் செய்யப்படும்.

---

# கல்லுக்குள் ஈரம்



## காந்தி அருணாசலம் – கனடா

> 'இந்த கிழத்துக்கு உந்த வாய்க்குள்ளேயே ஏதாவது வியாதி வந்தால்தான் ஊர்தப்பும்...'

ஒடிய பருத்த உருவம். மாநிறம். அந்த ஐம்பது வயதிலும் துருதுருவென்று அவசரமான நடை. மற்றவர்களின் மனம் புண்படுமே என்ற எண்ணமில்லாமல் யாரையும் எடுத்தெறிந்து பேசும் ஒரு அலட்சியமான துடுக்குத்தனம். இவையெல்லாம் 'வாய்க்காரி" என்று ஊர் கொடுத்த பட்டத்திற்கு வலுவான சாட்சிகளாக முண்டு கொடுக்க, அரக்கப் பரக்க வந்து கொண்டிருந்தாள் செல்லாச்சி.

திருமணம் செய்து ஒரு வருடத்திலேயே கணவன் மண்டையைப் போட்டுவிட, அந்த இளமையான இருபது வயதிலிருந்து தனிக் கட்டை..வீட்டின் பின்புறமிருந்த தோட்டத்தில் தனக்கு இயன்றளவு பயிர் நட்டு, யாருடைய தயவுமில்லாமல் தன் வயிற்றைக் கழுவிக் கொண்டிருக்கும் தனிக்கட்டை.

செல்லாச்சியின் ஒழுக்கம் எப்படிப் பிரசித்தமோ அப்படி அவளின் வாயும் அந்த ஊரில் வெகு பிரசித்தம். ஊரில் நல்லது கெட்டது எதற்கும் அழைப்பில்லாமலேயே போய் முன் நின்று நடத்துவாள். எங்காவது பிழையைக் கண்டுவிட்டால் நேருக்கு நேர் அவர்களை உரத்த குரலில் கிழித்துவிடுவாள். அதனால் எல்லோருக்கும் அவளைக் கண்டால் உள்ளூர ஒரு கலக்கம் தான்.

பெரியவர்கள் எப்படி இருந்தாலும் சிறுவர்களுக்கு செல்லாச்சியைக் கண்டால் பாசம் அதிகம். அவள் சாப்பிடும்போது பெரிய சட்டியொன்றுள் சாப்பாட்டைக் குழைத்து அவளிடம் வரும் பிள்ளைகளுக்கு உருண்டையாக்கிக் கையில் கொடுத்தே சாப்பிடுவாள். போதாக்குறைக்கு அவ்விட நாய், பூனை, கோழி, காகம் என்று சுற்றிவர நிற்பதாலோ என்னவோ அவளிடம் தனிமை என்ற ஏக்கம் ஏற்பட்டதே கிடையாது.

செல்லாச்சியின் வீட்டுக்கு இரண்டு வீடு தள்ளி ஒரு பெண்ணின் அழுகுரல் திடீரென்று கேட்டதாலேயே அவள் சேலையைத் தூக்கிச் செருகியபடி அவசரமாக வந்து கொண்டிருந்தாள்.

உள்ளே நுழைந்தபோது அந்த வீட்டுப் பெண் கெளரி தலையிலடித்துக் கத்திக் கொண்டிருந்தாள். பலமாதமாகப் படுக்கையில் உருக் குலைந்திருந்த அவள் தாய் உயிரற்ற கட்டையாகக் கிடந்தாள்.

"சரிதான்போடி இவளே, இருக்கேக்கை அந்த உயிர் வதைபடாமல் ஒரு வாய் சோறு போடத் துப்பில்லை. பெரிசா இப்ப அழுது மாய்மாலம் பண்ணிக் காட்டுறாள்," என்று சூடாக வாய் கூறினாலும் கை பரபர வென்று உடனடியாகச் செய்ய வேண்டிய வேலைகளைக் கவனித்துக் கொண்டிருந்தது.

சத்தம்போட்டு அயலவர்களைக் கூப்பிட்டு 'வாங்கில் எடுப்பித்து பிணத்தின் காற் பெருவிரல்களைச் சேர்த்துக் கட்டி, மூக்குக்கு துணி வைத்துக், கண் இமைகளை மூடிச் சேலையை ஒழுங்காக்கிப் படுக்க வைத்தாள்.

எல்லாம்முடிய,பக்கத்திலிருந்து இறந்து போனவளை அவளது மகளோ மருமகனோ பார்க்கவில்லை என்பதை ஒப்பாரி மூலம் தலையிலும் நெஞ்சிலும் அடித்து உரத்த குரலில் வசைபாடத் தொடங்கினாள்.

கெளரிக்குப் பற்றிக் கொண்டு வந்தது. 'இந்தச் சனியன் பிடிச்ச கிழத்துக்கு உந்த வாயக்குள்ளேயே ஏதாவது வியாதி வந்தால் தான் இந்த ஊர் தப்பும்' என்று மனதுக்குள் முணுமுணுத்ததுடன் அடங்கிவிட்டாள். வெளியே சொன்னால் தாக்குதல் இருமடங்காக இருக்கும் என்பது அவளுக்குத் தெரிந்ததுதானே?

ஒப்பாரி முடிந்த கையுடன் கெளரியின் அருகில் வந்த செல்லாச்சி "ஏன்டி பிள்ளை, உன்ரை மனுசனும் முடாக்குடியன். உனக்கும் செலவழிக்கத் தெரியுமே ஒழிய ஒரு சதம் சேர்த்து வைக்கத் தெரியாது. கொம்மான்ரை கடைசிச் செலவுக்கு ஏதும் வைச்சிருக்கிறியே?" என்று காதுக்குள் கிசுகிசுத்தாள்.

"இல்லை, நேற்று என்ரை காப்பை அடைவு வைச்சு மூவாயிரம் தரச்சொல்லிக் கேட்டு, வட்டிக்குக் கொடுக்கிற மாணிக்கம், காப்பு நிறை காணாதென்று இரண்டாயிரம் தான் அனுப்பினவன். அதுதான் என்ன செய்யிறதெண்டு தெரியேல்லை," என்று கையைப் பிசைந்தாள் கெளரி.

"சரி...சரி... என்னட்டை இரண்டாயிரம் ரூபா கிடக்கு தாறன். எனக்கு வட்டி வேண்டாம். ஆனால் உன்ரை மனுசன் தோட்டத்திலை கிடக்கிற வெங்காயம் விற்றவுடனே காசு என்ரை கைக்கு வரோணும்," என்று கறாராகச் சொல்லிவிட்டு வீட்டுக்குப் போய் காசைக் கொண்டு வந்து இரகசியமாகக் கெளரியின் கைக்குள் திணித்தாள்.

கெளரிக்கு செல்லாச்சியின் வாயால் அவளைக் கண்டால் பிடிப்பதில்லை. என்றாலும் பக்கத்து வீட்டுத் தோழி சந்திரா செல்லாச்சியைப் பற்றி ஓயாமல் புழுகுவாள். அவளுடைய கல்யாணத்திலன்று மாப்பிள்ளை பக்கத்தில் யாரோ, பெண்ணுக்குப் போட்ட நகை காணாதென்று நிறை பார்க்க வெளிக்கிட்டார்களாம். செல்லாச்சிக்குப் பொறுக்க வில்லை.

"ஏண்டா கையாலாகாதவர்களே, பெண்ணையும் தூக்கித் தராசில் வைத்து நிறை பார்த்து எடுங்கோவன்!" என்று சத்தம் போட்டதுமல்லாமல் தனது கையில் போட்டிருந்த ஒரு சோடி தங்க வளையல்களையும் கொடுத்து ஒரு மாதிரிக் கல்யாணத்தை ஒப்பேற்றி விட்டுத் தான் வெளியேறினாள் என்பதை சந்திரா சுவாரஸ்யத்துடன் அடிக்கடி சொல்வாள்.

ஊரில் பலர் சொன்னாலும் ஏற்றுக் கொள்ள முடியாதிருந்த செல்லாச்சியின் செயலை இன்று தான் கெளரியால் இனங் காண முடிந்தது.

"எழும்படி மேனை. சும்மா சத்தம் போட்டுக் குழறினர்ப் போலை என்ன? ஒரு சீவன் உயிரோடை இருக்கேக்கை பார்க்கோணும். சரி, சரி, உனக்கும் உன்ரை புருசன் குடிச்சுப்போட்டுத் தாற மிச்சக் காசிலை பொடியனை எப்பிடிப் பார்க்கிறது, அம்மாவை எப்படிப் பார்க்கிறது? உவன் என்ன இண்டைக்கும் குடிச்சுப் போட்டுத் தான் கிடக்கிறானோ? இண்டைக்கு அவனை நாக்கைப் பிடுங்கிக் கொண்டு சாகிற மாதிரி கேள்வி கேக்கிறன். அதுக்குப் பிறகாவது திருந்துறானோ பாப்பம்!" என்ற படி செல்லாச்சி தேநீரைக் கையில் தரவும் கெளரி அதை மடமடவென்று குடித்தாள். இப்போ அவளுக்குச் செல்லாச்சி மேல் வெறுப்புத் துளியும் இருக்கவில்லை. மாறாக பிரமிப்புக் கலந்த பாசம் மனதில் உருவாகிக் கொண்டிருந்தது.



படிப்பகம்

# விலகினால் படரும்

## இலக்கிய நயம்

தருவது ~ ரசிகன்

"அடி கண்ணே!
வானத்தில் என்ன காலம்?"

"நிலாக் காலம்?"

"அடி பெண்ணே!
உன் வதனத்தில் என்ன காலம்?

"உங்கள் உதடுகளின்
உலாக் காலம்!"

"அடி கள்ளி!
உள்ளத்தில் என்ன காலம்?"

"உறங்க முடியாத
கனாக் காலம்!"

"அடி கண்ணே!
கள்ளத்தில் இனிப்பது என்ன காலம்?"

"நீங்கள் உறங்க விடாத
இராக்காலம்!

"அடி பெண்ணே!
நாங்கள் காணாமல் போவது என்ன காலம்?"

"முத்தச் சத்தத்தில், மோக சித்தத்தில்
முற்றும் துறந்துவிடும் மோகன காலம்!"

"அடி கள்ளி!
மொத்தத்தில் இது என்ன காலம்?"

"முத்து முத்தான காலம்-எமக்கு
பித்துப் பிடிக்கின்ற காலம்
இதுதான் இதுதான் காதல் காலம்!"

வினாக்கள் தொடுத்தவன்-விரைந்த
விடைகளால் இன்பத்தில்
கரைந்து போனான்.

கையிரண்டால் ஏந்திக் கொண்டு-அவளின்
மைவிழிக்குள் நீந்திக் கொண்டு
மஞ்சத்தை நோக்கிப் போனான்-அதிலே
அஞ்சுகத்தாளை புரட்டி விட்டான்.

புரண்டதால் துகில் விலகி
திரண்டதாம் எழில்கள் காட்ட
உருண்டன விழிகள் அங்கே
திரண்டன மோகம் யாவும்!

இடையினைக் கரம் தழுவ
உடையினை தடை என்றெண்ணி
விரல்களும் விடை கொடுக்க
தடுத்திட முடியா தீயில்
பஞ்சும்தான் விரும்பி விழும்!
சுடுகின்ற தீயும் சுகமே
சுடப்பட்ட காயம் சுகமே
கட்டுக்குள் யாவும் அவிழ
கட்டுக்கள் புதிதாய் இறுகும்.

முத்துக்கள் வியர்வை அங்கே
முத்தங்கள் தாளம் அங்கே
குற்றங்கள் ஏதும் இல்லை
கூடுங்கள் கோடி சுகமே

கூரென நிமிர்ந்த தனத்தில்
ஏரென முகமும் ஊர,
காரென விரிந்த கூந்தல்
காடென நினைத்து விரல் அலைய
ஆரமுதினை கொடுத்த இதழ்கள்
ஆடென மீண்டும் அழைக்கும்!



மூங்கில் நிகராம் தோளினிலே
தாங்கி ஊஞ்சல் ஆடியவன்
வீங்கி உயர்ந்த கனிகளிலே
ஏங்கிக் கிடந்தான் தனை மறந்து.

கருப்பம் சாற்று மொழியாலே
விருப்பம் ஒன்று அவள் சொன்னாள்:
"என்றும் ஒன்றாய் நாமிருவர்
இன்பத் தமிழ்போல் இனிதாக
நன்றாய் வாழ்வோம் நன்றாக!"

அவனும் சொன்னான்
மறுமொழியை;
"தமிழும் சுவையும் போலாகி
நகமும் சதையும் என்றாகி
வாழ்வோம் அஞ்சாய் அஞ்சுகமே!"

கண்டாள் உவகை உள்ளத்தில்
கட்டிக்கொண்டாள் கரத்தாலே!

"தாமரைக் குளத்தில் குதித்தேனா?
மொட்டுக்கள் ஆடக் கண்டேனா?"
வானரம் போல மனம் தாவ
வாலிப மனதில் ஆச்சரியம்.

மஞ்சத்தில் விரிந்த புத்தகத்தை
துஞ்சாது படித்தன நான்கு கண்கள்.
மிஞ்சாது என்னெய் விளக்கணைந்தும்
அஞ்சாது இருளில் கதை படித்திட்டார்.

புல்லினம் கூவிபொழுது புலர
பொல்லாச் சினம் மனதில் உயர
மெல்லிடை பற்றிக் கிடந்திட்டான்.
"விடிந்தது பொழுது; விலகும் பிள்ளாய்
முடிந்தது பாதி: தொடரும் மீதி
போதும் இப்போ, போம் அப்பால்!"

"உதடு போ என்று கூறும்
உள்ளம் வா என்று கூறும்
கபடம் வேண்டாம் பொறுபிள்ளாய்"
குறும்பாய்கூறி தடுத்திட்டான்.

"பூசை வேளையிலே கரடிவரும்
கதிரவன் ஏன்தான் வந்தானோ?
ஆசைக் கடலில் குளித்தோரை
காயச் செய்ய வந்தானோ?"
இருவர் மனதிலும் ஒரே எண்ணம்.

கழற்றிவைத்த கால் கொலுசை
இடையால் இறக்கிவைத்த மேகலையை
விடை கொடுத்த அணிகலனை
மெல்ல எடுத்தவள் அணிந்து கொண்டாள்.

"கொலுசை ஏன்தான் கழற்றி வைத்தாய்
சிலம்பொலி இசையை ஏன் தடுத்தாய்?"

கிண்கிணி இசையாய்
அவள் சிரித்தாள்.

"சத்தமில்லாமல் யுத்தத்தில்
சகலரு மறியும் ஒலி எதற்கு?
சித்தத்தில் உமக்கு புத்தியில்லை!"

"வளையல் ஓசை கேட்டிருக்கும்
வாலிப யுத்தம் புரிந்திருக்கும்
வளைய நின்று கேலிசெய்து
வளையச் செய்வர் தோழிகளே!"
புன்னகை வடியச் சொன்னானே.

"அய்யோ.. ஆமாம்
அது மெய்தானே.
வெளியே போக என்னவழி,
வழியில் நிற்பர் தோழிகளே!"
வெட்கிச் சிவந்து அவள் கேட்டாள்.

"வழி ஒன்று
உண்டு கண்ணே சொல்லட்டுமா?"

"என்ன வழி,
மாறுவேடம் நான் பூணட்டுமா?"
வேடிக்கையாய் தொடுத்தாள் வினா.

"எந்த வேடம் பூண்டாலும்
உந்தன் அழகு உருக்காட்டும்"
பீடிகையாய் சொன்னான் விடை.

"என்ன வழியோ
உடன் சொல்க!"

"ஒரே வழி,
வெளியே போகாதிருந்துவிடு!"

வந்தது கோபம் செல்லக் கோபம்
ஓங்கி மார்பில் குத்தியவள்
ஓடியே போனாள் வெளியாலே.

நினைத்தது நடந்தது நேரெதிரில்
நகைத்தனர் தோழியர் பேரொலியாய்.

"மேனியில் பாரடி பசலை நிறம்
தொட்டதும் ஓடும் பசலை நிறம்-அணைப்பை
விட்டதும் சூழும் பசலை நிறம்
கேணியில் நிரை அள்ளுகையில்
விலகும் பாசி அது போல
அணைக்கையில் விலகி, பின்னர்
தனிமையில் பசலை படர்ந்து விடும்"

'எப்படி இவர்கள்
கண்டறிந்தார்?'
தோழியர்மீது ஆச்சரியம்.

தோழியர் சொன்னது பழைய கதை
குறுந்தொகை இலக்கிய பாடல் கதை.
இதே அந்த பாடல் இது;

"ஊர் உண் கேணி உள்துறைத் தொக்க
பாசி அற்றே பசலை-காதலர்
தொடு வழித் தொடுவழி நீங்கி
விடுவழி விடுவழிப் பரத்தலானே..."

ஸ்போர்ட்ஸ்

# "சனத் ஆட்டம் பிரமாதம்!"

## ஸ்ரீகாந்த் சூட்டும் புகழாரம்

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் அதிரடி வீரரும், முன்னாள் கப்டனுமான ஸ்ரீகாந்த் இலங்கை அணிவீரர், சனத் ஜெயசூரியாவை புகழுகிறார். அவரது பேட்டியிலிருந்து:



**கேள்வி:** சக்கைபோடு போட்டுக் கொண்டிருக்கும் ஜெயசூரியாவின் ஆட்டம் பற்றி..

**ஸ்ரீகாந்த்:** ஒரே வார்த்தையில் சொல்லுறதுன்னா அது பயங்கரம்... பயங்கரம்! அவரோட அந்த பவர் நினைச்சுப் பார்க்க முடியாதது. இன்னொரு விஷயம் அவர் சும்மா சுத்தறார்னு சிலர் விபரம் புரியாம சொல்றாங்க. அப்படிச் சுத்தினா தொடர்ந்து நல்ல ஸ்கோர் அடிக்க முடியாது. ஒவ்வொரு பந்தின் தன்மைக்கும் ஏற்றாற் போல அருமையாக ஆடுகிறார். பந்தை அவர் எதிர்கொள்ளும் போது அவரோட கண்ணைப் பாருங்க... படுதுல்லியமாகக் கவனிக்கிறார். எல்லாத்துக்கும் மேல மனசுல அசாத்திய தைரியம். சுதந்திர தினக் கோப்பைப் போட்டி ஒன்றில் 140 ரன் அடிச்சபோது அவருடைய பேட்டிங்கை உன்னிப்பா கவனிச்சேன். பிரமாதமாக ஆடினார். நின்னு ஆடணும்... அதே சமயம் தேவையில்லாம ஜவ்வா நிக்காம அடிச்சு ஆடணுங்கற எண்ணம் அவருக்கு அழுத்தமா இருக்கு.

**கேள்வி:** இந்திய அணி அண்மைக்காலமாக ஏன் இவ்வளவு மோசமாக ஆடுகிறது? டெண்டுல்கரின் தலைமை சரியில்லையா?

**ஸ்ரீகாந்த்:** முதலாவது நம்ம ஊர்ல பிட்ச் சுத்தமா சரியில்லை. சர்வதேச தரத்துக்கு எந்த பிட்சும் இல்லை. எல்லாம் படு ஸ்லோ. அடுத்தது புதுசா வந்திருக்கிற பந்து வீச்சாளர்களும் சர்வதேச தரத்திற்கு இல்லை. உழைத்துப் போடுகிறார்கள் என்பது வேறு விஷயம். பத்துப் பதினைந்து ஓவர்கள் போட்டாலே சோர்ந்து விடுகிறார்கள். கபிலுக்குப் பிறகு ஸ்ரீநாத் சிறந்த வேகப்பந்து வீச்சாளராக உருவெடுத்தார். இப்போது அவரும் விளையாட முடியாத நிலை. ஆக, இருக்கும் இந்தப் பந்து வீச்சாளர்களை வைத்துக் கொண்டு எப்படி நம்மால் வெற்றிகளைப் பெற முடியும்? பேட்டிங்கில் முன்பு கவாஸ்கரையும், விஸ்வநாத்தையும் போல இப்போது அஸாரையும், டெண்டுல்கரையும் பலமாக நம்பியிருக்கிறோம். இவ்வளவு குறைபாடுகளை வைத்துக் கொண்டு டெண்டுல்கர் மட்டும் என்ன மாஜிக் செய்துவிடமுடியும்? ஆனால் ஒண்ணு.. நமது டீம் ஒரு மாற்றத்திற்குள்ளாகியிருக்கிறது. பழையவர்கள் போய் புதியவர்கள் வந்துள்ளார்கள். சரியாக எல்லாம் செட்டிலாகும் வரை இந்தத் தோல்விகளைத் தவிர்க்க முடியாது.

**கேள்வி:** பெட்டிங் (BETTING)தான் நம் ஆட்டத்தைக் கெடுத்துள்ளதா?

**ஸ்ரீகாந்த்:** அது பற்றியெல்லாம் எனக்குத் தெரியாது.

# கடிபின்பின் மோதல்

சிலமாதங்களுக்கு முன் நடந்த குத்துச்சண்டைப் போட்டியில் ஹோலிஃபீல்டின் காதைக் கடித்துத் துண்டாக்கினார் மைக் டைசன். இதனால் டைசன் குத்துச்சண்டைப் போட்டிகளில் கலந்து கொள்ளத் தடை விதிக்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சிக்குப் பின்னர் ஹோலிஃபீல்டின் புகழ் உலகெங்கும் பரவத் தொடங்கிவிட்டது. அவருடன் மோதுவதற்குப் பல குத்துச்சண்டை வீரர்கள் போட்டியிட்டனர். இம்மாதம் 8ம் திகதி ஹோலிஃபீல்டுடன் மைக்கல் மோரர் என்னும் குத்துச்சண்டை வீரர் மோதும் போட்டி ஒன்று நடக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தப் போட்டியில் கலந்து கொள்ளும் ஹோலிஃபீல்டிற்கு சுமார் 130 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

மைக் டைசனால் காது கடிபட்ட பின்னர் ஹோலிஃபீல்ட் கலந்து கொள்ளும் முதல் குத்துச்சண்டைப் போட்டி என்பதால் ரசிகர்கள் இந்தப் போட்டியை ஆவலுடன் எதிர்பார்க்கிறார்கள்.

# சிந்தியா பதில்கள்

★ 'ஒரே தேசம், ஒரே மக்கள்' என்கிறார்களே! நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?

ஆர்.விஜயகுமார், வந்தளை.

'ஒன்றே குலம், ஒருவனே தேவன்' என்றார் திருமூலர். அப்படிச் சொல்லியிருந்தால் நன்றாய் இருந்திருக்கும். மதசார்பற்ற நாடாக மாற்றப்போகிறார்கள் என்ற மகிழ்ச்சியாவது ஏற்பட்டிருக்கும்!

★★★

★ டியர் சிந்தியா! அனில் கும்ளேயை இந்திய அணியில் இருந்து நீக்கிவிட்டார்களே?

என்.ரஞ்சனி, இரத்தினபுரி.

அநியாயம் என்று பதறுமளவுக்கு அவரது பந்துவீச்சு சமீப ஆட்டங்களில் சோபிக்கவில்லையே. வெங்கடேஷ் பிரசாத்தை நீக்கியதுதான் சரியில்லை என்பேன். எப்படியோ, இவை தற்காலிக நீக்கங்கள் மட்டும்தான்.

★★★

★ விஜயபால மெண்டிசின் குடியுரிமையைப் பறிக்கப் போகிறார்களாமே: அரசியல் பழிவாங்கல்தானே?

ஜெ.வில்பிறட், மன்னார்.

ஐக்கிய தேசியக் கட்சி செய்த தவறுகளையெல்லாம் மீண்டும் செய்வதில் ஒரு வசதியிருக்கிறது, உடனே உதாரணம் காட்டிவிடலாம் பாருங்கள். அதனால்தான் பழைய தப்புக்களை தப்பாமல் தப்பாகத் தொடர்கிறார்கள். அதில் ஒன்றுதான் இதுவும். பிரேரணையைக் கொண்டுவரப் போகிறவர் பிரதமர் ஸ்ரீமாவோ அம்மையார். நெஞ்சம் மறப்பதில்லை!

★★★

★ "விடுதலைப் புலிகளுடன் புதிய பேச்சுவார்த்தையை ஆரம்பிக்கவேண்டும்" என்று ரணில் கூறியிருப்பதன் காரணம் என்னவோ?

கே.தயான், கொழும்பு-06.

நடக்காது என்றால் நடக்கட்டும் என்பதும், நடக்கும் என்றால் நடக்கக்கூடாது என்பதும்தான் இங்கு எதிர்க்கட்சி என்பதின் இலக்கணம். ரணில் இலக்கணம் தெரிந்தவர். ஆனால் புத்திமான். போரை நிறுத்துமாறு கோரவில்லை பார்த்தீர்களா? தீர்வும் சொல்லவில்லை. போரையும் எதிர்க்கவில்லை. காலத்தேரை இழுப்பதில்தான் ரணிலாருக்கும் கரிசனம்.

★★★

★ வீரப்பன் நிலை இனி என்ன?

சி.செல்வராஜ், வவுனியா.

வேட்டைக்காரன்!

★★★

★ புளியங்குளத்தை படையினரால் கைப்பற்ற முடியாமல் இருப்பதன் காரணம் என்ன சிந்தியா?

எல்.உதுமான், கொழும்பு-10.

அது 'புலி'யங்குலம்! புரியவில்லையா? அங்குலத்துக்கு அங்குலம் புலிகளின் எதிர்ப்பு உள்ள பகுதி என்பதால் புளியங்குளம் புலியங்குலமாகத் தெரிகிறதாம்.

★★★

★ வாழ்க்கையில் வெற்றியை எட்டிப்பிடிக்க தேவையானது என்ன?

பி.சாரங்கன், மட்டக்களப்பு.

தேவையானவை என்னவென்று கேளுங்கள்! வெற்றியை எட்டும் இரகசியம் எட்டுக்குள் இருக்கிறது. சொன்னவர் ஜேம்ஸ் அல்லன் என்னும் அறிஞர்.

1) மனதில் உறுதி, 2) நேர்மை, 3) ஒழுக்கம், 4) சிக்கனம், 5) தாழ்ந்தவரிடம் அனுதாபம், 6) குடும்பத்தாருடன் ஒற்றுமை 7) நண்பர்களுடன் பாரபட்சமின்மை, 8) தன்னம்பிக்கை.

★★★

★ பெற்றோரை மதிக்காத பிள்ளைகள் பற்றி என்ன சொல்கிறீர்?

கு.பரமநாதன், கல்லடி.

சுவாமி விவேகானந்தர் கூறியிருக்கிறார்: "நீ உன் பிள்ளைகளிடம் எவ்வாறு மரியாதையை எதிர்பார்க்கிறாயோ, அதுபோல் நீ உன் பெற்றோரிடம் நடந்துகொள்!"

★★★

★ உலகில் மிக அழகான பெண் யார் சொல்லுங்கள் பார்க்கலாம்?

செல்வி என்.சுஜாதா, ஆரையம்பதி.

உண்மையான அழகான பெண்மணி அன்னை தெரேசா. உருவாக்கப்பட்ட அழகி டயானா. அப்பப்பா... பிரிட்டன் மட்டுமா அழுகிறது? பிரபஞ்சமே மூக்கைச் சிந்திக் கொண்டிருக்கிறது!

★★★



← பாரிசில் டயானா-மோப்பம் பிடித்தது கமரா.



செல்வி ஃபிளெர் டோடி அல் ஃபயட்டின் மற்றொரு காதலி. இவருக்கு சரியான போட்டி டயானா. →

★ சிந்தியா! இடக்காகவே பேசிக் கொண்டிருப்பவர்களை சமாளிப்பது எப்படி?

ம.தேவராணி, சிலாபம்.

டாக்டர் சாமுவேல் ஜோன்சன் பெரிய அறிஞர். ஆங்கில இலக்கியத்தில் பல சாதனைகள் படைத்தவர். முதன்முதலாக ஆங்கில அகராதியையும் தயாரித்தவர்.

ஒருநாள் தனது நண்பரான பாஸ்வெலுடன் பேசிக்கொண்டிருந்தார். அவரிடம் அகராதி தயாரிப்பு முயற்சி பற்றி விளக்கினார் சாமுவேல் ஜோன்சன்.

பாஸ்வெல் கிண்டலாக ஜோன்சனை நோக்கி:

"ஒரு மொழிக்கான அகராதி தயாரிப்பதனால் மனித சமுதாயத்துக்கு அப்படியொன்றும் பெரிய நன்மை ஏற்பட்டுவிடாது. அதைவிட நல்ல சமையல்காரரால் சமூகத்துக்கு எவ்வளவோ நன்மை உண்டு. வாய்க்கு ருசியாக சமைத்தாவது போடுவார்கள்" என்றார்.

தனக்கு வந்த கோபத்தை அடக்கியவாறு ஜோன்சன் சொன்னார்:

"இந்த நகரத்தில் உள்ள எந்த நாயைக் கேட்டாலும் உமது கருத்தைத்தான் சொல்லும். ஏனென்றால் நாய்கள் அனைத்துமே சமையற்காரரை நம்பித்தான் உயிர்வாழ வேண்டியிருக்கிறது!"

★★★

★ கனடா 'சகாரா' கிண்ணப்போட்டியில் இந்திய, பாகிஸ்தான் கிரிக்கெட் அணிகளில் கிண்ணத்துடன் திரும்பப்போவது எந்த அணி?

வீ.முஸம்மில், புதியகாத்தான்குடி.

அநேகமாக பாகிஸ்தான்!

★★★

★ சர்வாதிகாரிகளை மக்கள் மதிப்பார்களா?

எஸ்.என்.மர்லின், திருமலை.

ஒரு நாட்டில் சர்வாதிகாரியின் ஆட்சி கொடிகட்டிப் பறந்தது. மகா கொடுங்கோலன். பஞ்சம், பசி, பட்டினி தலைவிரித்தாடியது. ஒரு ரொட்டித் துண்டுக்குக்கூட நீண்ட கியூ நின்றது. அந்தக் கியூவிலே காத்திருந்த ஒருத்தருக்கு மகாமகா எரிச்சல். அந்த எரிச்சல் தீவிரமானதும், அந்தக் கொடுங்கோலனை கொன்றுவிடலாம் என்ற தீர்மானத்துக்கு வந்தார்.

ரொட்டிக் கியூவைவிட்டு விலகி ஒரு துப்பாக்கியுடன் சர்வாதிகாரியைக் கொல்ல அரண்மனை நோக்கிப் போனார்.

போனவர் அதே வேகத்திலேயே திரும்பி வந்து முன்னர் நின்ற ரொட்டித் துண்டுக் கியூவிலேயே நின்றார்.

"என்ன, சர்வாதிகாரியைக் கொல்லவில்லையா?" என்று அவருடன் கியூவிலே நின்றவர்கள் கேட்டனர்.

அதற்கு அவர் சொன்னார்:

"அட போப்பா! சர்வாதிகாரியைக் கொல்ல வேண்டும் என்று போனால், அதற்காக ஏற்கனவே இதைவிட ஒரு பெரிய கியூவே அங்கே நின்று கொண்டிருக்கிறது."

★★★

★ சிறையில் என்ன செய்கிறார் ஆசாமி பிரேமானந்தா?

செல்வி க.நித்யா, கொழும்பு-09.

காவியுடைக்குப் பதிலாக சிறை ஆடை. சடா முடிக்குப் பதிலாக கிட்டத்தட்ட மொட்டை. துணிச்சலான தீர்ப்புக் கொடுத்த நீதிபதி திருமதி பானுமதியை முழுத் தமிழகமுமே பாராட்டுகிறது.

www.padippakam.com

# இராமாயணம் அங்கம் 98

# வெறுங்கையோடு மீண்டு போனான்

இராஜகுமாரன்

இராமபிரானுடைய கோதண்டத்திலிருந்து கிளம்பி தன் அங்கங்களில் தைத்த கணைகள் கொடுத்த வேதனையைப் பார்க்கிலும் அவருடைய வாயிலிருந்து பிறந்து வந்து உள்ளத்தை ஊடுருவிய கணைகள் இராவணனை மிகவும் வேதனைப்படுத்தின. இந்தப் பூமியில் பிறந்து வளர்ந்து, உரிய கல்வி கேள்விகளைப் பெற்று, இலங்காபுரியின் இணையிலா மன்னனாகி, போர்க்களங்கள் பல கண்டு, அத்தனையிலும் அமோக வெற்றிகொண்டு, மூவுலகங்களையும் வென்று, ஐயிரண்டு திசை முகத்தும் தன் புகழை வைத்தோனான இலங்கேஸ்வரன் இதுவரை எவரிடமும் இத்தகைய சொல்லைக் கேட்டவனில்லை. வாலியிடம் மட்டுமே- அவனுடைய தெய்வீக பலம் தெரியாமல்- ஒரேயொரு தடவை தோல்வி கண்டான்.

எல்லாம் வல்ல இறைவன் உறையும் திருக்கைலாய மலையைப் பெயர்த்த போதும் சிவபிரான் கூட இராவணனைச் சினக்காமல், அதனையும் ஒரு விளையாட்டாகவே கருதினார். பிரம்மதேவனும் மகாவிஷ்ணுவும்கூட- இராவணன் பல அக்கிரமங்களைச் செய்த போதும்- அவனைத் தண்டிக்காமல் விட்டுவிட்டனர். ஆனால் இன்று இராவணன் மாபெரும் தண்டனைக்குள்- அதுவும் அரக்கர்களால்- 'கேவலம் நரர்' என்று வர்ணிக்கப்படும் மனிதனிடம் அகப்பட்டுத் திண்டாட நேர்ந்துவிட்டது.

தர்ம நெறிகளுக்குக் கட்டுப்படாமல் தான்தோன்றித்தனமாக நடக்கும் எவரும் தக்க தண்டனை பெற்றேயாக வேண்டும். இதனைச் சாதாரண பாமர மக்களே அறிவார்கள். இராவணனோ அரக்கப் பேரினத்தின் தலைவன்; நீதி நெறி முறைகளை, தர்மம் அதர்மம் ஆகியவற்றை நன்கு தெரிந்தவன்; அறவழி நின்று தன் குடி மக்களைக் காக்கும் பண்பியல்புகளை நன்கறிந்தவன் எல்லாவற்றுக்கும் மேலாக சிவபிரானின் அன்பைப் பெற்றவன்.

இணையிலா வீரனாக இருந்தமையினால் தனது வீரத்தை விபரீத விளையாட்டில் வீணடித்தான். தன்னிகரில்லாத் தலைவன் என்ற பெயரைப் பெற்றமையினால் தலைக்கனம் அதிகரித்தது. அபரிமிதமான அறிவாற்றலைப் பெற்றமையினால் அவ்வறிவை அதர்ம சிந்தனையில் செலவிட்டு அழிவுப்பாதைக்கு வழி வகுத்தான். அன்பு செலுத்தி தன் மக்களை அரவணைப்பதை விடுத்து துன்பியல் வழிகளில் அவர்களைச் செல்லத்தூண்டி விட்டான்.

## தட்டிக்கேட்க எவருமில்லை

இணையில்லாப் பக்தியாலும் தவ வலிமையினாலும் இறைவனிடம் பெற்ற வரங்களால் மமதை கொண்டான். தான் எத்தகைய துன்மார்க்கத்தைக் கடைப்பிடித்தாலும் அதனைத் தட்டிக் கேட்க அத்தெய்வத்துக்கே தகுதி இல்லை என்று கருதிவிட்டான். சாகா வரம் பெற்றமையினால், தான் எவ்வளவு தூரம் தரம்கெட்டு நடந்தாலும் தடுத்து நிறுத்த எவருக்கும் தகைமை இல்லை என்று கணக்குப் பண்ணிக் கொண்டான்.

இராவணனைப் போன்று அதே அரக்க இனத் தோன்றல்கள் பலர் தெய்வீக வரங்களை- இறவாவரங்களைப் பெற்றிருந்தும் தானென்ற அகந்தையும் மமதையும் கொண்டு அதர்மங்களையும் அக்கிரமங்களையும் புரிந்து அழிவைத் தேடிக்கொண்டார்கள். இதனால் தான் அரக்கர் என்றால் கொடுமையின்- அதர்மத்தின் உறைவிடம் என்ற அவப்பெயரை அழியா வரமாக அவ்வினம் பெற்றுவிட்டது.

இன்றும் எம் சமுதாயத்தில் இத்தகைய மனிதர்களை நாம் காணக் கூடியதாக இருக்கிறது. சமூகத்தில் ஏதோ ஒரு வகையில் உயர்ச்சி கண்டவர்கள், அதன்மூலம் பேரும் புகழும் பொருளும் பெற்று, வாழ்க்கை வசதிகளை அடைந்ததும், தம்மை மீறிய எவருமே இல்லை என்ற நிலையில் தலைகீழாக நடக்க ஆரம்பித்துவிடுகின்றனர். எவ்வாறு உயர்ந்தார்களோ அதைவிட படுவேகமாக மண்ணில் வீழ்ந்து தேடுவாரற்ற நிலையினை அடைந்து விடுகின்றனர்.

## கொற்றத்தைச் சீரழிக்கும் கூற்று

பிறன் மனை நினைத்தல் பஞ்சமா பாதகங்களில் ஒன்று என்ற உண்மையினை நன்கு தெரிந்திருந்த இராவணன், சீதாப் பிராட்டியாரைக் கவர்ந்து சென்று சிறை வைத்தான். அவரை எவ்வகையிலும் அடைந்து விடவேண்டும் என்ற துர் எண்ணம் அவனைத் துன்புறுத்தியது. எத்தனையோ நல்ல காரியங்களை அவன் தன் வாழ்நாளில் செய்திருப்பினும் பிராட்டியாரைக் கவர்ந்த குற்றம் அவனுடைய கொற்றத்தையே சீரழிக்கும் கூற்றாகி விட்டது.

போர்க்களத்தில் சகலவற்றையும் இழந்த நிலையில், கண்களைத் தரையில் புகுத்தி கூனிக்குறுகி நின்ற இராவணனை அதே கணத்தில்- ஒரே பாணத்தால் இராமபிரானால் வீழ்த்தியிருக்க முடியும். ஆனால் நல்லற முணர்ந்த பெருமான் அப்போர்க்களத்திலும்- தன் எதிரியிடமும்- பண்பு நெறி கோணாமல், "இன்று போய் நாளை வாராய்!" என்றியம்புகிறார். 'நரன் என்று அரக்கர் கோனால் பலமுறை இழிந்துரைக்கப்பட்ட ஒரு மனிதரிடம் இத்தகைய மனிதாபிமானமா?' என்று எண்ணியதும் இராவணன் வெட்கித் தலை குனிந்தான்; எனினும் தான் கொண்ட வக்கிரத்தனமான பிடிவாதத்தை விட்டதாகத் தெரியவில்லை.

அந்நிலையிலும் இராவணனைப் பார்த்து இராமபிரான், "நீ சிறை வைத்திருக்கும் சீதையை விடுவித்து விடு! நல்லறங்களினதும் ஒழுக்கங்களினதும் உறைவிடமான உன் தம்பி விபீடணனிடம் அரசை ஒப்படைத்து விட்டு அவனுக்கு ஏவல் செய்து வாழ விரும்பினால் நீ தப்பித்துக்கொள்ளலாம். இல்லையேல் மீண்டும் போரிட வா! ஆனால் அதர்மங்கள் பலவற்றைப் புரிந்தவனான உன்னால் போரில் வெற்றிபெறவே முடியாது," என்றார்.

ஆள் ஐயா உனக்கு அமைந்தன '
மாருதம் அறைந்த
பூளை யாயின கண்டனை; இன்று போய்
போர்க்கு
நாளை வா என நல்கினன் நாகு
இளங்கமுகின்
வாளை தாவுறு கோசல நாடுடை வள்ளல்.
(யுத்த காண்டம்-1212)

**பொருள்:**

பாக்கு மரத்தின் மீது, அருகேயுள்ள நீர் நிலையில் துள்ளிப் பாயும் தன்மை வாய்ந்த வாளை மீன்கள் நிறைந்திருக்கும் அத்தகைய நீர்வளம் கொண்ட கோசல நாட்டுக்குரிய வள்ளலான இராமபிரான், இராவணனைப் பார்த்து, "மூவுலகங்களையும் ஆள்கின்றவனே! உன்னுடன் வந்த படைகள் அனைத்தும் பெருங்காற்றால் சீரழிக்கப்பட்ட பூண்டுகளைப் போலாகியதைக் கண்டாய். உன்னால் இந்நிலையில் என்னுடன் போர் புரிய முடியாது. ஆகவே இப்பொழுது உனது அரண்மனை சென்று உனது படைகளையும் படைக்கலங்களையும் திரட்டிக் கொண்டு மீண்டும் நாளை போர்முனைக்கு வருவாயாக!" என்றார்.



## கம்பர் கவி நயம்

கம்பர் பெருமான் வடித்துத் தந்துள்ள செய்யுள்களில் சொற்கட்டும் பொருட் செறிவும் வர்ணனைப் பொலிவும் மலிந்து காணப்படுகின்றன. கவிச்சக்கரவர்த்தியின் பாடல்கள் ஒவ்வொன்றும் சிறப்புப் பெற்றிலங்குகின்றன. ஒவ்வொரு பாவிலும் ஏதோ ஒரு சுவை தனித்து நின்று துலங்குவதைக் காண்கின்றோம். யுத்த காண்டத்தில் காணப்படும் சில பாடல்கள் உள்ளத்தை ஆக்கிரமித்து நிற்கின்றன.

இராவணன் எல்லாவற்றையும் இழந்தவனாக இலங்கை புகுந்த காட்சியை கம்பர் பெருமான் தத்ரூபமாக வரைந்து காட்டுகிறார்:

வாரணம் பொருத மார்பும்
வரையினை எடுத்த தோளும்
நாரத முனிவற்கு ஏற்ப
நயம்பட உரைத்த நாவும்
தார் அணி மவுலி பத்தும்
சங்கரன் கொடுத்த வாளும்
வீரமும் களத்தே போக்கி
வெறுங் கையோடு மீண்டு போனான்.
(யுத்த காண்டம்-1213)

**பொருள்:**

எட்டுத் திக்குகளையும் தாங்கி நிற்கின்ற யானைகளுடன் பொருதியமையினால் ஏற்பட்ட பல காயங்களைக் கொண்ட மார்பு, திருக்கைலை மலையைப் பெயர்த்தெடுத்த தோள்கள், இசையில் வல்லுநரான நாரத முனிவரால் புகழப் பட்ட இசை ஞானம் பொருந்திய நாவு, மாலைகளை அணிந்த பத்துத் தலைகள், சங்கரனான சிவபிரான் கொடுத்த வாள் ஆகிய அத்தனை சிறப்புக்களையும் போர்க்களத்திலே போட்டு விட்டு வெறும் கையோடு தனியனாக தனது அரண்மனையை அடைந்தான்.

அது மட்டுமல்லாமல், எப்போரிலும் தோல்வி கண்டிராத தேவர்களை வென்று, மூன்று உலகங்களையும் தன்னடிப்படுத்தி ஆட்சி செய்யும் வல்லமை பொருந்தியவன் இராவணன்.

இப்பொழுது பெரும்பழியானது தொடர்ந்து வர, கைகளைத் தொங்க விட்டபடி கால் நடையாக நடந்து இலங்கை மாநகருள் புகுந்தான். தோல்வியால் தொங்கிய தலையை நிமிர்த்தி எத்திக்கினையும் பார்க்கவில்லை அவன்.

தன்னுடைய புதல்வர்களையோ பெருங் கடல்போல்- கட்டளைக்காகக் காத்து நின்ற படைகளையோ ஏறெடுத்தும் அவன் பார்க்கவில்லை. தன் வாழ்க்கைத் துணையான மண்டோதரியையோ ஏனைய மங்கையரையோ நிமிர்ந்து பாராமல் நில மடந்தையை மட்டுமே பார்த்த வண்ணம் தன் அரண்மனைக்குள் சென்றான்.

(தொடர்ந்து வரும்)

### இராமாயணப் போட்டி: 96

**சரியானவிடை:-** மார்பினைக் கையால் குத்தித் தாக்கினார்கள்.

1. அ. ஜெயராதா, மில்கோ, கொட்டகலை.
2. வி. கீர்த்தி, மூன்றுமுறிப்பு, வவுனியா.
3. அ. வைதேகி, 24/1 அப்பொன்ஸ் அவனியூ, தெகிவளை.
4. இரா. ஹரிதாசன், இல.88 செட்டியார் தெரு, கொழும்பு-11.
5. செல்வி ஜி. மலர்விழி, பெல்மதுல்ல S.P.C., இல-6. R.D., காவத்தை.

**போட்டி இல. 98** கேள்வி:- இராவணனுக்கு வாள் கொடுத்தவர் யார்?

செப்டம்பர் 13 க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

**இராமாயணப் போட்டி- இல.98, தினமுரசு வாரமலர், த.பெ.இல- 1772, கொழும்பு.**

# சபைக்கு வந்த பானை

காதிலை பூ கந்தசாமி

*அரச சபை கூடியிருக்கிறது. மன்னரும்,அமைச்சர்களும் அமர்ந்திருக்கிறார்கள். சேவகர்கள் பானையொன்றைக் கொண்டு வந்து சபை நடுவே வைக்கிறார்கள். சபையோரான தமிழ்க்கட்சிப் பிரதிநிதிகள் தம்மை மறந்து கரகோசம் செய்கிறார்கள்.*

**பிரதிநிதி இல-1:-** வந்தது பானையொன்று. இருக்குது புதையல் ஒன்று. தந்ததுக்கு நன்றி சொல்லி வந்தது பாடல் ஒன்று.

**ஏனையோர் பிரதிநிதிகள்:** (ஒரே குரலில்) பாடுங்கோ. பாடுங்கோ.

**பிரதிநிதி இல-1:-** வெட்கமாக இருக்கிறது பாட.

**ஏனைய பிரதிநிதிகள்:** ஐயா பெரியவரே! முன்பு இப்படி எத்தனை பாட்டுகளை எடுத்துவிட்டிருக்கிறீர்கள். இப்போது மட்டும் வெட்கப்படலாமோ ஐயா. நீங்கள் பார்க்காத பானைகளா? பாடாத பாட்டுக்களா? பாடுங்கோ. நாங்கள் ஆட வேண்டுமானால் நீங்கள் பாடவேண்டும்!

**பிரதிநிதி இல-1:-**

பாடாத பாட்டெல்லாம் பாடவந்தேன்
ஆடாத ஆட்டமெல்லாம் ஆடி வந்தேன்
காணாத பானையைக் கண்டுவிட்டேன்
மானமா வெட்கமா நமக்கு என்ன?
தந்தனா தந்தனா தந்தனன்னா
காணாத புதையலை கண்டுவிட்டேன்!

**மன்னர்:-** (மாறாத புன்னகையுடன்) சபாஷ் சரியான பாட்டு!

**அமைச்சர்:-** ஒருவர் மட்டும்தானே பாடுகிறார். ஏனையோர் உதடுகள் பாடமறுக்கின்றனவே! அது ஏன் ஏன் ஏன்? உதடு இருந்தும் பாடாதோர் இங்கு இருந்தென்ன இலாபம்? நீங்கள் பாடினால் என்ன, பாடாவிட்டால் என்ன நாங்கள் பானையை பாரில் உள்ளோர் முன்னால் பாரீர் பாரீர் என்று காட்டத் தான் போகிறோம்.

(தமிழ்க்கட்சிப் பிரமுகர்கள் முகங்களில் அதிர்ச்சி படையெடுக்கிறது. தமக்குள் குசு குசுத்துவிட்டு ஒரே குரலில் பாடத் தொடங்குகிறார்கள்.)

அரோகரா பானைக்கு அரோகரா
எங்களுக்கும் புதையல் வரும்
புதையல் வந்தால் தேர்தல் வரும்
தேர்தல் வந்தால் வெற்றி வரும்
வெற்றி வந்தால் பதவி வரும்
எங்களுக்கும் வாழ்வு வரும்
வாழ்வு வந்தால் வசதி வரும்
அரோகரா எல்லாத்துக்கும்
அரோகரா

கொள்கைக்கு அரோகரா
கூட்டுக்கு அரோகரா
வோட்டுப் போட்டோருக்கும் அரோகரா

சலுகைக்கு சலாம் போடுவோம்- நீங்க
சொல்வதற்கும் ஆமாம் போடுவோம்
அரோகரா சர்வமும் அரோகரா!

**மன்னர்:-** ஆஹா... அற்புதமான பாடல். அதற்கு தகுந்தாற் போன்ற ஆடல்! மெச்சினேன். துஞ்சினீர். ஆயினும் நன்கு கெஞ்சினீர். என்ன சலுகை வேண்டும் கேளுங்கள்.

**அமைச்சர்:-** மன்னிக்கவேண்டும். அற்புதமான பாடலுக்கு தாங்கள் சலுகை வழங்கினால் மகிழ்வதும் நான்தான்! தவறான பாடலுக்கு தாராளமாக சலுகை வழங்கினால் துயர் அடைவதும் நான்தான்.

**பிரதிநிதிகள்:** ஒஹோ நீங்கள்தான் இங்கேரு இன் வன்னோ? ஏனய்யா குறுக்கே புகுந்து தடுக்கிறீர்?

**அமைச்சர்:-** உங்கள் பாடலின் பொருட் கனம் போதவில்லை.

**பிரதிநிதிகள்:-** ஐயா அமைச்சரே! நாங்கள் பானையின் கனம் பார்த்தோமா? பானைக்குள் என்ன இருக்கிறது என்று தான் பார்த்தோமா? பார்க்காமல் பாடும் எமக்கு பார்த்தும் பாராமல் அள்ளித் தருவதுதானே முறை. இதில் ஏன் பார்க்கிறீர் நிறை? சரி போகட்டும், எங்கள் தகுதிக்கு என்ன கொடுக்கத் தோன்றுகிறதோ அதைமட்டும் கொடுங்கள். டோண்ட் டிலே. வேறு யாராவது பங்குக்கு வந்து தொலைக்கப் போகிறார்கள்.

**அமைச்சர்:-** மன்னிக்கவேண்டும்

**பிரதிநிதி:-** மறுபடியும் மன்னிப்பா? நாங்கள் யார் ஐயா உங்களை மன்னிக்க? எங்களைத்தான் எல்லோரும் மன்னிக்க வேண்டும்.

**மன்னர்:-** அமைச்சரே! இவர்களைப் பார்த்தால் பாவமாக இல்லையா? பரவாயில்லை, நாம் என்ன நாட்டையா கொடுக்கப்போகிறோம். அல்லது ஒரு ரோட்டைத்தான் கொடுக்கப் போகிறோமா? சலுகைதானே கொடுக்கப் போகிறோம், கொடுக்கலாம், அதனால் என்ன பாதகம்?

**அமைச்சர்:-** பாதகம் இல்லாதிருக்கலாம், நமக்கு அதனால் சாதகம் வேண்டாமா?

**மன்னர்:-** நல்லது; எந்தச் சோழியன் குடுமி சும்மா ஆடியிருக்கிறது? நமக்கொரு சாதகம் இல்லாமல் நாம் ஏன் காரியம் செய்யப்போகிறோம். குட் பொயின்ற். அமைச்சரே! உம் விருப்பம் செப்பும்.

**அமைச்சர்:-** பானையைப் பற்றி மட்டும் பாடினால் போதாது. யானையைப் பற்றியும் பாடவேண்டும்!

**பிரதிநிதிகள்:-** எங்களை பூனையாக இருக்கச் சொல்லிவிட்டு யானையைப் பற்றிப் பாடச் சொல்கிறீர்களே நியாயமா?

**அமைச்சர்:-** பானையை உடைக்க நினைக்கிறது யானை. கையில் எடுங்கள் வேலை.

**பிரதிநிதி இல-1:-** நல்ல யோசனை! இளமைத்துடிப்பு இருந்திருந்தால் நானும் எடுத்திருப்பேன் வேலை! ஒருநாள்கூட வில், வேல் எதனையும் தொட்டதில்லை நாங்கள். அதனால் இங்குள்ள முன்னாள் போராளிகள் தூக்கட்டும் வேலை. சாயட்டும் யானை. இது ஓஃப் த றெக்கோட். வெளியே சொல்லாதீர்கள் நாளை!

**பிரதிநிதிகள்:-** மாட்டிவிடுகிறார் எம்மை! பானையை உடைக்க தும்பிக்கையை நீட்டப்போவதில்லை என்று சொல்லியிருக்கிறது யானை. உங்களுக்கில்லையா நம்பிக்கை?

**அமைச்சர்:-** தும்பிக்கையால் தூக்கி உடைத்தால் ஊர் உலகம் கண்டுவிடும் என்பதால், காலின் கீழ் போட்டு உடைக்க நினைக்கிறது யானை! அதைத் தடுக்க வேண்டியது உங்கள் கடமை!

**பிரதிநிதிகள்:-** உங்களுக்கு மட்டும் ஒரு கடமையும் இல்லையா ஐயா? முறைக்காதீர்கள்... சும்மா ஒரு பேச்சுக்கு சொன்னோம்... ஹி.ஹி.ஹி.

**அமைச்சர்:-** இறுதியாக என்ன சொல்கிறீர்கள்? பாடுகிறீர்களா? ஓடுகிறீர்களா?

**பிரதிநிதிகள்:-** இனி எங்கே ஓடுவது? பாடித் தொலைக்கிறோம்.

ஒரு புறம் பானை
மறுபுறம் யானை
இரண்டுக்கும் நடுவே
நாமெல்லாம் பூனை!
மூடிய பானை
முறைக்குது யானை
நாமென்ன செய்வோம்?
பானைக்குள் என்ன
நாமதை அறியோம்!

**பிரதிநிதி இல-1:-** உஷ் உஷ் உஷ்... குழப்பாதீர்கள்.

பற்பல ரகமாய் இருக்குது புதையல்
பானைக்குள்தான் எல்லாம் இருக்குது
இளமையில் துள்ளி பானையை உடைத்து
முதுமையில் என்போல் வாடாதீர் பிள்ளாய்
போற்றி போற்றி பானை போற்றி
ஏற்றிப் பாடுவீர் பானையின் புகழை
டன்டனக்கா டன்டனக்கா
கண்டபானை கலக்கல் பானை

டன்டனக்கா டன்டனக்கா
குனிந்து கொட்டு கும்மி கொட்டு
பானை பானை சோக்குப் பானை.

**பிரதிநிதிகள்:-** பானைக்குள் எப்போது நாங்கள் பார்ப்பது?



**பிரதிநிதி இல-1:-** அவசரப்படாதீர் அசட்டுப் பிள்ளைகாள். பார்க்கச் சொன்னால் பார்த்தால் போதும்?

**பிரதிநிதிகள்:-** என்ன இது சபையில் இருந்த மன்னர் எங்கே? சுவைபட பேசிய அமைச்சர் எங்கே? பாட்டுக்கு நல்ல பரிசு எங்கே? தங்கள் பாட்டுக்கு போயே விட்டனர்?

**சேவகன்:-** மன்னரும், அமைச்சர்களும் உள்ளே ஒரு முக்கிய நிகழ்வை கண்டு கொண்டிருக்கிறார்கள்.

**பிரதிநிதிகள்:-** பானையை விட முக்கியம் என்ன?

**சேவகன்:-** தொலைக்காட்சியில் கிரிக்கெட் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். (பிரதிநிதிகள் உள்ளே எட்டிப்பார்க்கிறார்கள். மன்னரும், அமைச்சர்களும் கண்களை மூடிக்கொண்டு நிஷ்டையில் இருக்கிறார்கள்.)

**பிரதிநிதிகள்:-** சேவகா! இவர்கள் கண்களை மூடிக்கொண்டு கிரிக்கெட் ஆட்டத்தை காண்பது விந்தையாக இருக்கிறதே! இதன் மர்மம் என்னவோ?

**சேவகன்:-** ஜெயசூரியா உலக சாதனை செய்யவேண்டும் என்று பிரார்த்தித்துக் கொண்டிருக்கிறார்கள். உள்ளூரில் விலையேற்றும் அவசியம் ஏற்பட்டிருக்கிறதாம்.

**பிரதிநிதிகள்:-** அப்படியானால் பானையின் கதி?

**சேவகன்:-** சேனை போய்ச்சேர வேண்டிய இடத்துக்குப் போய்ச் சேர்ந்தபின்னர் தான் பானையின் கதி தீர்மானிக்கப் படுமாம்.

**பிரதிநிதிகள்:-** அதுவரை எங்கள் கதி?

**சேவகன்:-** சுதி தவறாமல் தொடர்ந்து துதி பாடிக் கொண்டிருக்க வேண்டியதுதான்.

(பிரதிநிதிகள் சிலையாகி நிற்கிறார்கள்.)



படிப்பகம்

www.padippakam.com





பெண்களின் அழகோ இரகசியம்! அதை
எங்களது வண்ண நகைகள்மின்னிப்பேசுகின்றன.
கிளை:
105. காலி வீதி வெள்ளவத்தை.கொழு-06 580230
3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு. கொழும்பு
436331


# ஆரம்பம் இன்று ஆரம்பம்








SRI KALYANY JEWELLS
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு
மின்னிடும் பொன்னகை பேரழகு
5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு. கொழும்பு
323657



← கூடுக்குள் முட்டைக்குள் இருந்து வெளிவந்த பறவைக்குஞ்சு வெளியுலகை விநோதமாகப் பார்க்கிறது. காத்திருந்த கமராக்காரர் சுடச்சுட கிளிக் பண்ணிவிட்டார். இந்தப் பறவைக் குஞ்சு குயில் இனத்தைச் சேர்ந்த பசும்பறவை. இவை ஆபிரிக்க நாடுகளில்தான் பெரும்பாலும் காணப்படுகின்றன.

பசும்பறவைகள் குஞ்சு பொரிக்க தனியான கூடுகளை கட்டுவதில்லை. படு சோம்பேறிகள். தங்களைப் போன்ற சாயல் உடைய பறவைகளின் கூடுகளுக்குள் புகுந்து முட்டைகளை போட்டுவிட்டுப் போய்விடுகின்றன. கூடுகட்டிய பறவைக்கு இந்த சமாச்சாரம் தெரியாது. தனது முட்டை என்று தப்பாக நினைத்துக் கொண்டிருக்கும்.

முட்டைக்குள் இருந்து வெளிவந்த பசும் பறவைக் குஞ்சுகள் தனது குஞ்சுகள் அல்ல என்பதும் உடனடியாகத் தெரியாதாம். ஏனைய குஞ்சுகளைவிட அதிகமாக சாப்பிட்டு படுவேகமாக வளரத் தொடங்குவதை வைத்தே விஷயம் புரிந்து கூட்டைவிட்டு விரட்டியடிக்கும். ஆனால் பசும்பறவைக் குஞ்சுகள் கூட்டைவிட்டுப் போக மறுத்து அடம்பிடிக்குமாம். இடம் கண்ட இடத்தில் மடம் கட்டும் பழக்கம் பசும் பறவைகளுக்கும் இருக்கிறது பார்த்தீர்களா!

பசும் பறவைகளுக்கு பசியும் அதிகம். முளைத்த உடனேயே வாயைப் பிளந்து நிற்பதைப் பாருங்களேன்!

## தொல் பொருள்



↑ ஜமெய்க்கா நாட்டின் மத்திய மலைக்காடுகளில் காணப்படும் குகைகளை அமெரிக்க இயற்கை வரலாற்று நூதனசாலையைச் சேர்ந்த ஆய்வாளர்கள் ஆராயச் சென்றனர். பல அபூர்வ ஜந்துக்களின் எலும்புகளை அவர்கள் கண்டெடுத்தனர். அவர்களின் கண்டுபிடிப்பில் மிக அபூர்வமாகத் தென்பட்டது இந்தத் தந்தம். வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலே வாழ்ந்து மரபழிந்துபோன ஒரு வகைக்குரங்கின் தந்தம் இதுவென நிபுணர்கள் கூறுகிறார்கள். கடந்த வருடம்தான் இது கண்டுபிடிக்கப்பட்டது.

இந்தத் தாடைக்குரிய குரங்கினம் ஆபிரிக்க நாடுகள் எவற்றிலும் காணப்படாத போதும், இந்தத் தாடை எலும்பு எவ்வாறு ஜமெய்க்காவுக்கு வந்து சேர்ந்தது என்பது பெரும்புதிராக இருப்பதாக ஆய்வாளர்கள் அதிசயப்படுகின்றனர். மிகப் பத்திரமாக பாதுகாத்து வருகிறார்கள்.

## சமபந்தி



→ எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே. பூனைகளுக்கும் அது பொருந்தும் தெரியுமா?! பாருங்கள் என்ன சமர்த்தாக தங்களுக்குரிய பாத்திரங்களில் பாலைக் குடிக்கின்றன. பூனைகள் குட்டிகளாக இருக்கும்போது தாயின் முலையில் பால் குடிக்கையில் போட்டி போடுவதில்லை. பிறந்த இரு வாரமான குட்டிகள் கண்திறக்காத நிலையில்கூட தனக்குரிய முலை எதுவென்று தெரிந்து அதில்தான் பால் குடிக்குமாம். தவறுதலாகக்கூட பிறிதொரு முலையில் பால் குடிப்பதில்லையாம். வீட்டில் வளர்க்கப்படும் பூனைக்குட்டிகளும் அநேகமானவை தமக்காக ஒதுக்கப்பட்ட தனிப்பாத்திரத்தில்தான் பால் குடிக்கின்றன. வேறு பாத்திரத்தில் வைத்தால் குடிக்காமல் பட்டினியாகவே இருந்துவிடுகின்றன. வளர்ந்த பின்னர்தான் திருட்டுத்தனம் வருகிறதாம். எந்தப் பாத்திரத்தில் கிடைத்தாலும் ஓ.கே.



## காணாமல் போனது

படு பயங்கரமான நீரோட்டம் அது. ஒரு நொடியில் மூன்று இலட்சத்து 17 ஆயிரம் கன அடி நீரை இழுத்துச் சென்றுவிடும். அந்த மூர்க்கம்கூட இந்தப் பாலம் முன்னால் காணாமல் போனது. அதனை எதிர்த்து தாக்குப்பிடிக்கக் கூடியவகையில் இப் பாலத்தை கட்டியிருக்கிறார்கள். இப்பாலம் இருப்பது ஐஸ்லாந்து

↑ நாட்டிலுள்ள வட்நோஜோக்குல் என்ற இடத்தில். இதனை கட்டி முடிக்க 15 கோடி அமெரிக்க டொலர்கள் செலவானதாம். கிட்டத்தட்ட தொளாயிரம் கோடி ரூபாய்கள். போக்குவரத்துக்கு அங்கே பாலம் கட்டுகிறார்கள். இங்கே..? சும்மா போங்கய்யா நமக்கு ஷெல் வாங்கவே செல்வம் போதவில்லை என்கிறீர்களா? அதுவும் சரிதான்.

## பாரம்பரியம்



→ தமிழக முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் உயிர்த்தோழி சசிகலாவை நடமாடும் நகைக் கடை என்று அழைத்தார்கள் என்பது தெரிந்த சங்கதி. அப்படியானால் இங்குள்ள இரண்டுபேரும் நடமாடும் வளையல் கடையா? என்று நீங்கள் கேட்கக்கூடும்.

ஆனால் இவர்கள் வளையல்களை இப்படி டசின்கணக்காக அணிந்திருப்பது பகட்டுக்காக அல்ல, பழக்கவழக்கத்தால்!

பர்மா நாட்டின் கிழக்கிலுள்ள லொயிக்கௌ பிரதேசத்தில் பாடௌங் என்று அழைக்கப்படும் பழங்குடி மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

பாடௌங் இனப் பெண்களுக்கு கழுத்து, கால்கள், கைகளில் எல்லாம் உலோகத்தாலான காப்புக்கள் போட்டுக் கொள்வது பாரம்பரிய பழக்கம். இவர்கள் அணிந்திருப்பது எல்லாம் வெண்கல வளையல்கள். சிறு பெண்களாக இருக்கும் போதே அணியத்தொடங்கி விடுகின்றனர்.

சிறு வயதில் இருந்தே கழுத்தில் வளையல்கள் அணிவதால் கழுத்து நெட்டையாவதில்லை. இன்னொரு நம்பிக்கையும் இந்தப் பழக்கம் தொடரக் காரணமாக இருக்கிறது. கிழக்குப் பர்மிய காடுகளில் புலிகளின் நடமாட்டம் அதிகமாம். இத்தகைய வெண்கல வளையங்களை அணியும் பெண்களை புலிகள் அணுக மாட்டாது என்பது பண்டைய நம்பிக்கையாம்.

## முதலாவது பிறந்த நாள் வாழ்த்து



### செல்வி அபிரா 01.09.1997

கனடாவில் வசிக்கும் சிவக்குமார் - அகிலவேணி தம்பதியினரின் செல்வப் புதல்வி அபிரா தனது முதலாவது பிறந்த தினத்தை 01.09.1997 அன்று 70-1 W, BRIDLE TOWN CIRCLE, M.W.2 GD, SCABCROUGH இல்லத்தில் குதூகலமாகக் கொண்டாடினார்.

இவரை கனடாவில் வசிக்கும் அப்பா, அம்மா, அம்மம்மா, அப்பம்மா, பெரியப்பாமார், மாமாமார், அன்ரிமார், மாமி,மச்சான், மச்சாள், சித்தப்பா ஆகியோர் பல்கலையும் கற்றுப் பல்லாண்டு சிறப்புடன் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

தகவல் -திருக்கோணமலை அன்ரி.



இப்பத்திரிகை கொழும்பு ... தினமுரசு பதிப்பகத்தாரால் ... செப்டம்பர் 07 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
படிப்பகம்

www.padippakam.com


# இராமாயணம் அங்கம் 99

இராமபிரான், இராவணனுடைய ஆயுதங்களை உடைத்தும் தேர்களைச் செயலிழக்கச் செய்தும் அவனுடைய நால்வகைச் சேனைகளை அழித்தும், அவனை நிராயுதபாணியாக்கியமையினால் வானர சேனையில் பெருமகிழ்ச்சி அலைபோல் பொங்கி எழுந்தது. 'இதோ அடுத்த ஒரு பாணத்தால் இராவணனுடைய பத்துத் தலைகளும் அறுபட்டு அவன் பூமியில் சரியப்போகிறான்.' என்று எண்ணிக் குதூகலமடைந்திருந்தனர். ஆனால் இராமபிரான், செயலற்று புவிமீது கண்புதைத்து வெட்கி நின்ற இராவணனை, "இன்று போய் நாளை வாராய்!" என்று கூறித் திருப்பி அனுப்பியமை அவர்களுக்குப் பெரும் ஏமாற்றத்தையே தந்தது.

'இராவணனின் கொடுமைகள் இன்றே அழிந்துவிடும்' என்றும் 'சமாதானம் ஏற்பட்டு

## கும்பகர்ணன் துயிலெழுதல்

விடும்' என்றும் கருதியிருந்த வானரவீரர்கள் பலருக்குச் சலிப்பேற்பட்டது உண்மையே! இராவணன் போர்க்களத்திலிருந்து மீண்டதும் வானர வீரர்கள் தமக்குள் வாதப் பிரதிவாதங்களை நடத்தலாயினர். இராமபிரான் செய்தது சரியே என்று ஒரு குழுவினரும், அவ்வாறு அவனைத் தப்பிச் செல்லவிட்டது தகாது என்று மற்றொரு குழுவினருமாகச் சேர்ந்து அன்றிரவு முழுவதும் விவாதித்தனர்.



### ஆஞ்சநேயரின் அறிவுரை

இருதரப்பினருக்குமிடையே மத்தியஸ்தம் செய்து வைக்கும் பொறுப்பினை ஆஞ்சநேயர் ஏற்றார். அரசியல் தெளிவும் தர்மசிந்தனையும் சத்தியமும் நீதியுமே இராமபிரானுடைய ஆயுதங்கள் என்றும் எடுத்துரைத்தார். போர்க்களத்தில் நிராயுதபாணியாகிவிட்ட ஒருவனைத் தாக்குவது தர்மமாகாது என்று கூறினார்.

**இராஜகுமாரன்**

பல நீதி நெறி முறைகளை வானர வீரர்களுக்கு எடுத்துக்கூறி தர்மமே வெல்லும் என்று உறுதி அளித்து விவாதங்களுக்கு முற்றுப்புள்ளி வைத்தார்.

வானரப் படைகள் மட்டுமல்லாமல் வானில் நின்ற வண்ணம் இலங்கைப் போர்க்களத்தைப் பார்த்துக் கொண்டிருந்த தேவர்களும் திகைப்படைந்து காணப்பட்டனர். 'இராவணனின் கொட்டம் அடங்கிவிட்டது. அவன் இன்றோடு அழிந்தொழிந்தான்' என்று உணர்ச்சி பொங்கக் காணப்பட்டனர். நிராயுதபாணியான இராவணனை "இன்று போய் நாளை வாராய்!" என்று இராமபிரான் கூறி அனுப்பியது தேவர்களுக்குக் கட்டோடு பிடிக்கவில்லை. அரக்கர்க்கரசனை கொன்று போட இருந்த ஓர் அருமையான சந்தர்ப்பம் நழுவிவிட்டதே என்ற வேதனை அவர்களை வாட்டியது.

●★●

இராவணனுடைய உள்ளம் கொந்தளிக்கும் கடலைப்போலவும் கொடிய சூறாவளியைப் போலவும் செந்தீ கக்கும் எரிமலையைப் போலவும் குமுறிக் கொண்டிருந்தது. தனது தனி மாளிகைக்குள் சென்று ஓர் ஆசனத்தில் அமர்ந்தான். மன அமைதி கிட்டவில்லை. அருகிருந்த மஞ்சத்தில் படுத்திருந்தான். பஞ்சணை முள்ளாய்க் குத்தியது. எழுந்து முன்னும் பின்னும் உலாவினான். இப்படி பல நாளிகைகள் கழிந்தன. மீண்டும் ஆசனத்தில் அமர்ந்து கையொலி எழுப்பி சேவகனை அழைத்தான். எட்டுத்திக்கும் விரைந்து செல்லத்தக்க தூதுவர்களை அழைத்துவருமாறு பணித்தான்.

சேவகன் காற்றைவிட வேகமாகச் சென்று எட்டுத் தூதுவர்களை கையோடு அழைத்து வந்தான். அவர்களும் தங்கள் தலைவன் முன் வந்து தாள் தொட்டு வணங்கி ஆணைக்காகக் காத்திருந்தனர்.

வந்த தூதர்களில் மனகதி, வாயுவேகன், மருத்தன் மற்றும் மாமேகன் ஆகிய மிகத் திறமைசாலிகளானோரும் வேறுபலரும் இருந்தனர். இவர்களைப் பார்த்த இராவணன்,

**ஏழ் பெருங் கடலும் சூழ்ந்த**
**ஏழ் பெரும் தீவும் என் இல்**
**பாழி அம் பொருப்பும் கீழ்பால்**
**அடுத்த பாதாளத் துள்ளும்**
**ஆழி அம்கிரியின் மேலும்**
**அரக்கர் ஆனவரை எல்லாம்**
**தாழ்வு இலிர் கொணர்திர் என்றான்**
**அவர் அது தலைமேல் கொண்டார்.**

(யுத்த காண்டம்-1220)

பொருள்:

"ஏழு பெருங் கடல்களால் சூழப் பெற்ற ஏழு பெரும் தீவுகளிலும், எண்ணுதற்கரிய மாபெரும் மலைகளின் மீதும் கீழே இருக்கின்ற பாதாள உலகங்களிலும் சக்கரவாள மலையின் மேலும் இருக்கின்ற அரக்க வீரர்கள் அனைவரையும் உடனடியாக இங்கே அழைத்து வருவீர்களாக" என்று இராவணன் அவர்களுக்குக் கட்டளையிட்டான். அக்கட்டளையை தூதர்கள் தலைமேல் ஏற்றுக் கொண்டனர்.

### மாலியவான் வருகை

தூதர்கள் சென்றதும் மாளிகையிலுள்ள மஞ்சத்தில் இராவணன் தனது உடலைக் கிடத்தினான், அவனுடைய பெரிய பாட்டனாரான மாலியவான் அங்கு வந்து சேர்ந்தார். வயோதிபப் பருவத்தினரான அவர் இராவணனிடம் வரும் போதெல்லாம் நல்லறங்களையே போதிப்பார். நாம் செய்யும் காரியங்களில் நல்லது கெட்டது எவை என்பவற்றையெல்லாம் எடுத்துக்கூறுவது அவருடைய வழக்கம், எப்போதும் சீதாப் பிராட்டியார் மீது தன் உள்ளத்தைப் பதித்துவிட்டுத் தடுமாறிய இராவணனிடம், பிராட்டியாரை மீண்டும் இராமபிரானிடம் கொண்டு போய்ச் சேர்த்துவிட்டால் எந்தவிதத் தொல்லையும் இல்லாமல் நிம்மதியாக இருக்கலாம் என்று தான் மாலியவான் இராவணனிடம் கூறுவார். இது இராவணனின் காதுகளில் விஷம் பாய்ச்சும். இதனால் மாலியவான் வருகையை இராவணன் வெறுத்தான், பல தடவைகளில் அவர் மீது சீறிப்பாய்ந்து சினத்ததுமுண்டு. இருப்பினும் தன் முன்னோர்களில் இன்றும் உயிருடன் இருக்கும் ஒருவர் என்பதனால் தன்னை அடக்கிக் கொள்வான் இராவணன். இப்பொழுதும் மாலியவானின் வருகை இராவணனுக்கு வெறுப்பையே தந்தது. கண்களை இறுக மூடிய வண்ணம் படுத் திருந்தான்.

இராவணனை குழந்தையாக இருக்கும் போதே தூக்கி வளர்த்தவரான அப்பெரியாருக்கு இராவணனின் சுபாவம் நன்கு தெரியும். அவனுடைய மஞ்சத்தின் அருகிலிருந்த ஓர் ஆசனத்தில் அமர்ந்து கொண்டார். குறிப்பறிந்து இராவணனுடைய ஆற்றலையெல்லாம் விரிவாக வர்ணித்துவிட்டு, போர்க்களத்தில் என்ன நடந்தது என்று இராவணனிடமே மாலியவான் கேட்டார். இராவணன் அன்று போர்க்களத்தில் நடைபெற்ற சம்பவங்களை ஒன்றுவிடாமல் கூறலானான். சுக்கிரீவன், ஆஞ்சநேயர், இலக்குமணன் மற்றும் இராமபிரான் ஆகியோருடன் தான் பொருத நேர்ந்ததைக் கூறினான். ஒவ்வொருவரிடமும் போர்க்களத்தில் தான்பட்டு அனுபவித்த துன்பங்களை விபரித்தான். அவரவர்களிடம் தனிப்பட்ட வகையில் காணக்கிடைத்த வீரச் செயல்களையும் ஒளிவு மறைவின்றி எடுத்துரைத்தான்.

இத்தனையையும் ஆறுதலாகக் கேட்டுக் கொண்டிருந்த மாலியவான், "இராமபிரானுடைய வலிமையை முன்னரே நான் உன்னிடத்தில் பல தடவைகள் எடுத்துரைத்தேன். தேவாம்சம் பொருந்திய அவ்வீரனுடன் நீ விளையாட நினைத்துவிட்டாய். அவன் மனையாளைக் கவர்ந்து வந்து சிறை வைக்கத் துணிந்துவிட்டாய். தர்மம் அவர்கள் பாலுள்ளது. ஆகவே அவர்கள் பால்தான் வெற்றித் தேவதை சார்ந்து நிற்பாள். ஆகவே, முரட்டுத்தனமான உன் பிடிவாதத்தை விடுத்து உடனடியாக சீதாப்பிராட்டியாரை இராமபிரானிடம் அனுப்பி வைத்து சமாதானம் தேட முயல்வாயாக!" என்று கூறினார்.

இராவணன் கோபத்தால் துடித்தான். அவன் வாய்திறப்பதற்கு முன்னர்- மாலியவான் தன் கருத்துக்களைக் கூறிக்கொண்டிருக்கும் போதே- அம்மண்டபத்தினுள் நுழைந்த மாயாஜால வித்தைகள் தெரிந்த அரக்கர் படைத் தளபதிகளில் ஒருவனான மகோதரன், மாலியவான் மீது சீறிப் பாய்ந்தான். "எப்படியோ போர் தொடங்கிவிட்டது. எண்ணற்ற அரக்கர் படை வீரர்களைப் பலி கொடுத்துவிட்டோம். எக் காரணம் கொண்டும் பின் வாங்குவது நடவாத காரியம்! போரில் வெற்றியும் தோல்வியும் சகஜம். ஆகவே இந்த வயதான பெரியவரின் வார்த்தைகளை விடுத்து, நாளை போர்க்களத்துக்கு மன்னரின் தம்பியான மாவீரர் கும்பகர்ணனைப் பெரும் படையுடன் அனுப்பி வைப்போம். கும்பகர்ணன் மூச்சுவிட்டாலே ஒரே தடவையில் பல்லாயிரம் வானரங்கள் வானில் வீசப்படுவர். ஆகவே கும்பகர்ணனை துயிலெழுப்புவதற்கு உடனடியாக ஆணை பிறப்பிக்குமாறு தாழ்மையாகக் கேட்டுக் கொள்கிறேன்!" என்று ஆவேசம் கொண்டவனைப் போல் பேசி முடித்தான்.

### "கும்பகர்ணனை எழுப்புங்கள்!"

அடுத்த நாள் போர்க்களத்துக்கு கும்பகர்ணனை அனுப்புவது என்ற யோசனை இராவணனுக்கு ஏற்புடையதாகவே இருந்தது. தூதர்களை அனுப்பி கும்பகர்ணனை துயிலெழுப்பி வருமாறு இராவணன் கட்டளையிட்டான்.

நூறு வீரர்கள் சேர்ந்து, நிறை தூக்கத்தில் கிடந்த மாமிசமலையான கும்பகர்ணனை எழுப்புதற்கு பெரு முயற்சி எடுத்தனர். அவன் விடும் மூச்சினால் இழுபட்டும் தூரத்தள்ளப்பட்டும் அவர்கள் விழுந்து உடலெங்கும் காயங்களைப் பெற்றதுதான் மிச்சம்.

சங்கு, சேகண்டி, பறை, குழல், தாரை, தப்பட்டை ஆகிய வாத்தியங்களை கும்பகர்ணனின் காதுகளின் ஓரத்தில் வைத்து பேரோலி எழுப்பினர். எதுவித பலனும் கிடைக்கவில்லை. ஈற்றில் யானைகள், குதிரைகள் போன்றவற்றைக் கொண்டு வந்து அவனை அங்குமிங்கும் உருட்டியும் பயனற்றுப் போய்விட்டது. அன்றிரவு முழுவதும் இம் முயற்சிகள் நடைபெற்றது. இறுதியில் பலவகை புலால் உணவுகளைச் சமைத்து அவற்றின் மணம் அவன் மூச்சினுள் நுழையச் செய்த போதுதான் கும்பகர்ணன் கண் விழித்தான்.

(தொடர்ந்து வரும்)

### இராமாயணப் போட்டி: 97

**சரியானவிடை:-** பிரம்ம தேவனால் கொடுக்கப்பட்டது.

1. எஸ்.சுபாஸ்கர், 24,முருகன் இடம், கொழும்பு-6.
2. எம்.ஜே.பிரியந்தி, பனில்கந்த, உல்லிந்துவாவ, தெனியாய.
3. குணரெட்ணம் லக்ஷாயினி, தபாலக வீதி, கொக்கட்டிச்சோலை.
4. சுலோசனா தர்மரட்ணம், சவுதம், தமிழ், மகா வித்தியாலயம், தெமோதரை.
5. ஃபஸ்மினா நிலாம், முக்தர் மன்சில், ஜனகபுர, டிக்வெல்ல.

**போட்டி இல. 99** கேள்வி:- இராவணனுக்கும் கும்பகர்ணனுக்கும் என்ன உறவு?

செப்டம்பர் 20 க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

**இராமாயணப் போட்டி–இல.99, தினமுரசு வாரமலர், த.பெ.இல–1772, கொழும்பு.**

# ஜெயிலுக்குள் பிரேம்ஸ்

**காதிலால பூ கந்தசாமி**

**இரண்டு ஆயுள் தண்டனைகள் பெற்று சிறைக்குள் கம்பி எண்ணும் பிரேமானந்தாவை செந்தில் சந்திக்கிறார். நாமும் காதைக் கொடுப்போமா?**

செந்தில்: இந்தாப்பா, இங்கே பிரேமானந்தா எங்கேப்பா இருக்கிறாரு?

பிரேமானந்தா: அடடே.. வா ராஜா. அசப்பில் என்னை மாதிரியே இருக்கியே? எங்கே இவ்வளவு தூரம்? என்ன விஷயமா பார்க்கவந்தே?

செ: அதை சாமிகிட்டேதான் சொல்லணும். நீ யாருப்பா, சாமிக்கு தெரிந்தவரா? அல்லது சாமியின் பக்தகோடியா?

பிரே: என்னை நன்றாகப் பார் ராஜா.

செ: தலையிலே மொட்டை. முகத்திலே குட்டை. மேனியிலே வெள்ளைச் சட்டை. பார்த்தா பக்காத் திருடன் மாதிரியே இருக்கே. என்ன எங்கேயாவது பிக்பொக்கட் அடிச்சிட்டு உள்ளே வந்துட்டியா?

பிரே: இல்லே ராஜா. நான்..

செ: புரிஞ்சுபோச்சப்பா. கள்ளச் சாராயம் காய்ச்சி மாட்டிக்கிட்டே, அப்படித்தானே, பரவாயில்லப்பா நம்ம பொலிஸ்காரங்களும் அப்பப்ப உருப்படியான காரியங்களும் பண்ணுறாங்களா? சபாஷ்.

பிரே: பொலிஸ்காரர்களை ரொம்பவும் புகழாதே ராஜா.

செ: எப்போதாவது ஒருக்காதான் இப்படி தப்பித் தவறி உன்னைமாதிரி உண்மையான திருடங்களை பிடிக்கிறாங்க. அதையும் பாராட்டாமப்போனா நியாயமா சொல்லு?

பிரே: என்னைத் திருடன் என்னே முடிவு பண்ணிட்டியா ராஜா?

செ: அதான் முகத்திலேயே எழுதி ஒட்டியிருக்கே, பக்காத் திருடன். பலே திருடன். உன்னைமாதிரி திருட்டு பசங்கள ஜெயில்ல போட்டு தண்டமா சாப்பாடும் போட்டுக் கொண்டிருந்தா நம்ம நாட்டு பொருளாதாரத்துக்குத்தான் டேஞ்சர். நடுரோட்டிலே வச்சு கையைக் காலை நறுக்கிப்போட்டாத்தான் சரிப்பட்டுவருமப்பா.

பிரே: பொறு ராஜா. என் விழிகளைப் பார் ராஜா. ஒளி தெரிகிறதா பார் ராஜா.

செ: விழியா இது, திருட்டு முழி! ஒதுங்கப்பா, நான் பிரேமானந்தா சாமியை பார்க்கணும். எங்கே இருக்காரு, அதைச் சொல்லு முதல்ல?

பிரே: ராஜா! நான்தான் ராஜா பிரேமானந்தா.

செ: என்ன... நீ.. நீயா... சே.. நீங்களா? (உற்றுப்பார்க்கிறார்) அட.. ஆமா... ஐயோ சாமி.. இதென்ன கோலம்? நான் காண்பதென்ன கனவா? நனவா? என் முன்னால் நிற்பதென்ன சாமியா? ஆசாமியா? பொம்பி நிற்கும் முடியெங்கே? பூண்டு நிற்கும் காவியெங்கே? வீசியிழுக்கும் வாசனை எங்கே? பிரேம்ஸ் மார்க் புன்னகை எங்கே, இந்தக் கோலத்திலா என் கண்கள் உங்களைக் காணவேண்டும்? இப்படித் தெரிந்திருந்தால் ஒரு கூலிங்கிளாஸ் போட்டு வந்திப்பேனே, ஓ.. மை.. கோட், ஓ..மை.. காட்.

பிரே: உணர்ச்சிவசப்படாதே ராஜா. சாந்தி, சாந்தி..

செ: யாருங்க சாந்தி, ஜெயிலையும் ஆசிரமம் ஆக்கிட்டிங்களா? கில்லாடிங்க நீங்க. (செல்லமாய் வயிற்றில் குத்துகிறார்)

பிரே: நான் அமைதியைச் சொன்னேன் ராஜா.

செ: ஏங்க, அமைதியைச் சொல்லக்கூட ஒரு பொண்ணுபேருதான் பிடிச்சு வைச்சிருக்கீங்க. நீங்க என்ன கன்னிராசியா சாமி? உங்களுக்கு கன்னிராசி, திவ்வியாவுக்கு காளை ராசி.

பிரே: ஏன் ராஜா என் வயிற்றெரிச்சலை கிளப்புறே? உனக்கு பாரதியார் பாடல் ஒண்ணு சொல்லட்டுமா ராஜா.

கச்சணிந்த கொங்கை மாந்தர்
கணைகள் வீசும் போதிலும்
அச்சமில்லை அச்சமில்லை
அச்சமென்பதில்லையே

செ: பாரதியாரு பயங்கரமா சைட் அடிச்சிருப்பார் போலிருக்கு. அவங்க முறைச்சிருப்பாங்க போலிருக்கு. நீங்க சொல்லுறது நிஜம்தான் சாமி, அச்சமில்லாமல் போனதால்தானே அந்த ஆட்டம் ஆடியிருக்கீங்க.

பிரே: (மொட்டைத்தலையை தடவிக்கொள்கிறார்) அவங்க என் முடியிலே கைவைச்சாங்க, நீ என் மடியிலே கைவைக்கிறியே ராஜா. என்னைப் பார்க்க ஏன் வந்தே ராஜா?

செ: அவசரமா ஒரு லிங்கம் தேவைப்பட்டுச்சு சாமி. உங்க நினைப்பு வந்துடுச்சு. பொடி நடையா வந்துட்டேன்.

பிரே: ஐயோ ராஜா, லிங்கம் லிங்கமா எடுத்துக் குடுத்துக்கிட்டிருந்தேன் பாரு, உயிர்த்தோழிகளுக்குக்கூட சுடச் சுட எடுத்துக் கொடுத்தேம்பா. அப்போ நீ வரலையே, இப்ப வந்து நிக்கிறியே, நான் எங்கே போவேன், என்ன பண்ணுவேன்..

செ: ஏன் சாமி தலையில காடு மாதிரி முடி இருந்தாத்தான் கையை உயர்த்த உயர்த்த மோதிரம், வாட்சு, செயின் எண்ணு வந்து கொண்டிருக்குமா சாமி? முடிக்குள்ளே என்ன சுப்பர் மார்க்கெட்டா வைச்சிருந்தீங்க? ஏன் சாமி, உங்க சுப்பர் மார்க்கெட்டில ஒரு மாருதிக் காரோ, ஹொண்டா மோட்ட பைக்கோ பதுக்கி வைச்சு எடுத்துக் கொடுத்திருந்தா கின்னஸ் புத்தகத்திலேயே போட்டிருப்பாங்கல்ல. சான்ஸை தவறவிட்டுட்டீங்களே சாமி!

பிரே: காலைவாரி விட்டுட்டியே ராஜா. ஏன் ராஜா, வீரப்பனுக்குக்கூட மன்னிப்புக் கொடுக்கலாம் என்கிறாங்க, எனக்கு மட்டும் ஜெயில் கொடுத்துட்டாங்களே, இது நியாயமா ராஜா?

செ: வீரப்பன் சந்தன மரத்தைத்தான் வெட்டினாரு, நீங்க சுந்தரப் பெண்ணுங்களை கட்டிக் கொண்டீங்க. அவரு தந்தம்தான் கடத்தினாரு, நீங்க சிஷ்யைகள் கூட பந்தம் வச்சுக்கிட்டீங்க. அவரு சண்டை போட்டுக்கிட்டு பிரபலமானாரு, நீங்க காவித் துண்டைப் போட்டுக்கிட்டு பிரபலமானீங்க. அவரு மீசையை மட்டும் தான் வளர்த்தாரு, நீங்க ஆசையைத்தான் வளர்த்துக்கிட்டீங்க. அவரு கண்ணி வெடி தான் வைச்சாரு, நீங்க கன்னிகளோட யல்ல சகவாசம் வைச்சுக்கிட்டீங்க. எல்லாமே டிஃபரண்ட்டா இருக்கே சாமி.

பிரே: போதும் ராஜா! வெந்த புண்ணில வேலைப் பாய்ச்சாதே!

செ: திவ்வியா மாதாஜி எங்கே சாமி? ரொம்ப திவ்வியமா இருப்பாங்களாமே.

பிரே: ஏன் ராஜா கேட்குறே?

செ: நம்ம தொழில்ல எக்கச்சக்கமான போட்டி சாமி. நமக்கும் சான்ஸ் கம்மியாகிட்டே போகுது.

பிரே: ஏன் ராஜா கவுண்டமணி இனி உன்னை உதைக்கமாட்டேன் எண்ணு சொல்லிப்புட்டாரா?

செ: அதை ஏன் கேட்குறீங்க சாமி, என்னை உதைச்ச ராசி பாருங்க, இப்போ புதுசா வாற காமெடியன் எல்லாம் அவருகிட்டப் போய் அண்ணே உதையுங்கண்ணே எண்ணு கியூவில நிக்கிறாங்க.

பிரே: யார் யாரை உதைக்கணும் எண்ணு ஒரு விவஸ்தையே இல்லாமல் போச்சுதா ராஜா?

செ: ஆமாம் சாமி, இப்பெல்லாம் கவுண்டமணி யாரை உதைச்சாலும் ஜனங்க சிரிக்க ஆரம்பிச்சுட்டாங்க. தப்பு என்மேலதான். என்னை மட்டும்தான் உதைக்கணும் எண்ணு அவருகிட்ட பட்டா எழுதி வாங்கிருயிக்கணும்.

பிரே: ஆமாம் ராஜா, நானும் எங்கூட கூட்டுவைச்சிருந்த அரசியல்வாதிகளிட்ட எழுதி வாங்கியிருக்கணும். ஆசிரமத்துக்கு வந்தவங்க எங்கூட மட்டும்தான் கூட்டு வைச்சிருந்தாங்க எண்ணா நினைக்குறே? (மர்மமாகப் புன்னகைக்கிறார்)

செ: என்ன சாமி புதிர் போடுறீங்க?

பிரே: வேண்டாம் ராஜா, அத மட்டும் கேட்காதே. என் உயிருக்கே உலைவைச்சுடுவாறுக.

செ: விடுங்க சாமி, என் தொழில்ல டல் அடிக்க ஆரம்பிச்சதாலதான் திவ்வியா வோட விலாசம் கேட்டேன். தனியா தொழில் தொடங்கி உங்களமாதிரி ஓஹோ எண்ணு வளரணும்.



பிரே: அதுக்கு வித்தை தெரியணுமே ராஜா.

செ: வித்தை கத்துக்கத்தானே சாமி திவ்யாவோட விலாசம் கேட்கிறேன். புரியாத சாமியா இருக்கீங்களே.

பிரே: (ஏதோ நினைவில் மூழ்கிவிட்டு பாடுகிறார்)

அவள் பறந்து போனாளே
அவள் மறந்து போனாளே
டொலர் டொலராய் கறந்து போனாளே
அந்தப் பணத்துக்கு கணக்கில்லை
இந்தச் சாமிக்கு துணையில்லை
அவள் மறந்து போனாளே
ஃபொரினுக்கு பறந்து போனாளே?

செ: சாமி கலங்காதீங்க சாமி. அடுத்த திட்டம் என்ன சாமி?

பிரே: அப்பீல் பண்ணப்போறேன் ராஜா. சுப்ரீம் கோட்டு எதுக்கிருக்கு?

செ: சுப்ரீம் கோட்டும் நீங்கதான், சூப்பர் பவரும் நீங்கதான் எண்ணு ஆடினீங்க, இப்ப சுப்ரீம் கோட்டை நம்பி இருக்கீங்க!

ஆசையிலே சில நாள்-பெரும்
அவதியிலே சில நாள்
காதலிலே சிலநாள்-மனக்
கவலையிலே சில நாள்
வாழ்வதுவோ சில நாள்- இதில்
வாடுவதேன் பல நாள்?

சுப்ரீம் கோட்டும் உங்களை காப்பாற்ற முடியாது சாமி. முடியாது. அந்தச் சிந்தனையில இருக்காதீங்க.

சென்றதெல்லாம் வருமோ? அதைச்
சிந்தனைதான் தருமோ
வந்ததை யார் தடுத்தார்-இனி
வருவதை யார் மறுப்பார்?

பிரே: செந்திலு, ராஜா! இப்பதான் ராஜா நான் உண்மையாவே ஞானியாகிட்டேன். எப்படின்னு கேட்கிறியா ராஜா?

தொட்டிலுக்கு அன்னை
கட்டிலுக்குக் கன்னி
பட்டினிக்குத் தீனி
கெட்ட பின்பு ஞானி
ஹா ஹா ஹா-
நான் கெட்டபின்பு ஞானி.
ஹா ஹா ஹா



படிப்பகம்

Regd. as a News Paper at the G.P.O.(QD/43/NEWS/97)




அருள் ஜுவலர்ஸ்

ARUL JEWELLERS

பெண்களின் அழகோ இரகசியம்! அதை எங்களது வண்ண நகைகள்மின்னிப்பேசுகின்றன.

கிளை: 105. காலி வீதி.வெள்ளவத்தை.கொழு-06 580230

3 SEA STREET, COLOMBO 11
3 செட்டியார் தெரு, கொழும்பு 11

436331


# முடிவும் தொடக்கமும்








ஸ்ரீ கல்யாணி ஜுவல்ஸ்

SRI KALYANY JEWELLS

புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு

5 SEA STREET; COLOMBO 11
5 செட்டியார் தெரு, கொழும்பு 11

323657


➡ ஆறுதலாக யோசித்துப்பார்த்தால் டயானாவுக்கு கிடைத்துள்ள புகழும், பிரபலமும் ஆச்சரியமாகத்தான் இருக்கிறது.

உலக மக்களுக்காகவோ, அல்லது பிரிட்டிஷ் மக்களுக்கோ டயானா செய்த சேவைதான் என்ன? நாள் ஒன்றுக்கு பல இலட்சம் ரூபாய்கள் செலவு. ஒருநாள் அணிந்த உடையை மறுநாள் அணிவதில்லை. ஒரே நாளில்கூட புதிய புதிய ஆடைகள். அணிகலன்கள். வருடாந்த செலவு மட்டும் பல கோடி ரூபாய்கள்.

டயானா நினைத்திருந்தால் அன்னை தெரேசாவைவிட ஆயிரம் மடங்கு ஏழைகளுக்கு சேவை செய்திருக்கலாம். மருத்துவ மனைகளை நிறுவியிருக்கலாம். ஒரு தடவை தொழுநோயாளர்களைச் சென்று பார்த்தது பெரிய செய்தி. ஆனால் அன்னை தெரேசா இந்த தள்ளாத வயதிலும் தொழுநோயாளரையும், அநாதைகளையும் பராமரித்துவருவதைவிட, ஒரு அழகான பெண் தொழுநோயாளரை பார்க்கச் சென்றதுதான் செய்தியாளர்களைக் கவர்ந்தது. அத்தோடு டயானாவும் அவர்களை மறந்துவிட்டார்.

கண்ணிவெடி எதிர்ப்பு விடயத்திலும்கூட டயானாவை வைத்து பிரசாரம் செய்தால் மக்களின் கவனத்தைப் பெறும் என்பதால் டயானாவை இணங்கவைத்து எதிர் பிரசாரத்தில் ஈடுபடுத்தினார்கள். அதனை ஒரு பொழுது போக்காக செய்துவிட்டு அடுத்த வாரமே உல்லாசப் பயணம் சென்றுவிட்டார் டயானா.

பணம் படைத்தவர்கள் எப்போதாவது ஏழைகளுக்கு அன்னதானம் போடுவது போன்ற ஸ்டைலில்தான் டயானாவின் சேவைகளும் இருந்தன. டயானா வாழ்ந்த காலம் 36 ஆண்டுகள். இந்த 36 ஆண்டுகளில் டயானா பொதுச்சேவைக்கு செலவிட்ட மொத்த நேரத்தைக் கணக்கிட்டால் 36 நாட்கள்கூட இருக்காது என்பது உங்களுக்கு ஆச்சரியம் தரலாம். ஆனால் அதுதான் உண்மை. பின்னர் ஏன் இத்தனை மரியாதை? இத்தனை சோகம்? இத்தனை பிரபலம்? செய்தி உலகம் உயிர்கொடுத்து உருவாக்கிய தேவதைதான் டயானா. பிரிட்டிஷ் குடும்ப மருமகள் என்ற தகுதியும், டயானாவின் வசீகரமும், பிரிட்டிஷ் குடும்ப இரகசியங்களை அறிய மக்களுக்கு இருந்த ஆர்வமும் இளவரசி டயானாவை ஒரு தேவதையாக சிருஷ்டிக்க உதவின. நடிகை மர்லின் மன்றோ, கென்னடியின் மனைவி ஜாக்குலின் என்று செய்தி உலகுக்கு தீனிபோட்ட தேவதைகள் பலர் இருந்தனர். அவர்கள் காலத்தைவிட டயானா காலத்தில் செய்தி தொடர்பு ஊடகங்கள் பெற்ற வளர்ச்சியும் டயானாவின் பிரபலத்துக்கு பெரிதும் காரணமாகின.

கவர்ச்சி, கிசு கிசு, காதல்கதைகள் என்பவற்றை கழித்துவிட்டு பார்த்தால் டயானா பூச்சியமாகிவிடுவார். அவற்றை தவிர்த்துவிட்டு டயானா பற்றி நீங்கள் வேறு என்ன அறிந்துள்ளீர்கள் என்று யோசித்துப் பாருங்கள். பூச்சியம்தானே! அழகில்லாத ஒரு பிரிட்டிஷ் குடும்ப மருமகளாக டயானா இருந்திருந்தால் அக் குடும்பத்தின் ஏனைய மருமகள்கள்போல முக்கியத்துவம் இல்லாமல் போயிருப்பார். இளவரசர் ஆண்ட்ருவின் முன்னாள் மனைவி சாரா கூட சில சமூக சேவைகள் செய்துவருகிறார். எனினும் அவர் டயானா போல் அழகியல்ல.

பிரிட்டிஷ் அரச குடும்பத்தில் டயானாவை அடுத்து பரபரப்பு செய்திகளுக்கு செய்தி உலகம் நம்பியிருப்பது இளவரசர் வில்லியம்சை. கவர்ச்சிகரமான இளைஞரான வில்லியம்ஸ் இதுவரை வெளிரேகூட ஒழுங்காக தலை காட்டியதில்லை. மக்களுக்கும் ஒன்றும் செய்ததில்லை. ஆனாலும் பிரிட்டனில் நடந்த ஒரு கருத்துக் கணிப்பில் தங்களை கவர்ந்த ஆண் வில்லியம்ஸ் என்று பெரும்பாலான இளம்பெண்கள் அடித்துச் சொல்லியிருக்கிறார்கள்.

இளவரசர் வில்லியம்ஸ்மீதுதான் இனி கமரா வெளிச்சங்கள் படையெடுக்கும்.

# செம்மை



⬆ செக்கச் செவேலென்று காணப்படும் இந்தரக நண்டுகளின் பின்னால் ருசிகரமான தகவல்கள் இருக்கின்றன.

இந்து சமுத்திரத்தில் உள்ள கிறிஸ்மஸ் தீவுகளின் கடற்கரைக்கு வருடத்துக்கு ஒருமுறை செம் நண்டுகள் படை எடுக்கின்றன. அங்குள்ள மேட்டு நிலப்பாறைகளில் வசிக்கும் இந்த நண்டுகள் பருவ மழைக்காலத்தில்தான் படையெடுப்பை நடத்துகின்றன. கிட்டத்தட்ட இருவாரங்கள் பயணம் செய்து கடற்கரையை நாடுகின்றன. கடற்கரை மணலைக் கண்டதும் குசியாகி அதில் புரண்டுவிட்டு, பின்னர் கடல்நீரில் மூழ்கி எழுகின்றன. அதுதான் நண்டுக் குளியலுங்கோ.

குளியல் முடிந்ததும் மிக சிரத்தையாக ஆண் நண்டும் பெண் நண்டும் சோடி சேர்கின்றன. காரியம் முடிந்ததும் ஆண் நண்டுகள் தங்கள் மேட்டு நிலப்பாறைகளை நோக்கி கிளம்பிவிடுகின்றன. பாவம் பெண் நண்டுகள் மட்டும் சினையைத் தாங்கி கடற்கரை மணலில் முட்டையிட்டுவிட்டு செல்வதற்காக அங்கு பத்துநாட்கள் தரித்திருக்க வேண்டும். பின்னர்தான் அவை தங்கள் இருப்பிடத்திற்கு செல்ல முடியும்.

கடலில் நீர்பெருகி மணலில் புதைந்துகிடக்கும் முட்டைகளில் நீர் பட்டதும் குஞ்சு பொரிக்கும். இக்காட்சியைக் காணும்வரைதான் தாய் நண்டுகள் கடற்கரையில் தாமதிக்கின்றன. குஞ்சுகள் முட்டையை விட்டு வெளிவந்ததும் தாய் நண்டுள், தங்கள் ஆண் துணைவர்கள் சென்ற திசையில் திரும்பிவிடுகின்றன.

குஞ்சுகள் 25 நாட்கள்வரை கடற்கரையில் திரிந்துவிட்டு தங்கள் பெற்றோர் போன அதே பாதையில் புறப்படுகின்றன. இதே நண்டுகள் அடுத்த வருட பருவமழை ஆரம்பமானதும் சோடி சேர்ந்து இனவிருத்திக்காக மீண்டும் கடற்கரை வருகின்றன.

ஒவ்வொரு நண்டும் சராசரி ஒரு இலட்சம் முட்டைகளை இடுகின்றன. பயங்கரமான இனப்பெருக்கம். நண்டுக் குஞ்சுகள் கடற்கரையில் நடமாடித் திரியும்போது அவற்றை உணவாகக் கொள்ள வேறு பிராணிகளும் போட்டி போடுவதுண்டு. இருப்பினும் பெரும்பாலானவை மீண்டும் தங்கள் பெற்றார் நண்டுகள் போய்ச் சேர்ந்த இடத்துக்கே போய்விடுகின்றன.

# தண்டனை



➡ ஒரு மனிதனை கிரேனில் கட்டி தொங்கவிட்டிருக்கிறார்களே. இதென்ன அநியாயம்? என்றா நினைக்கிறீர்கள். இவன் மனிதனே அல்ல. மாபாவி. நான்கு மாதங்களுக்குள் ஒன்பது இளம் பெண்களை கடத்திச் சென்று பாலியல் வல்லுறவு கொண்டிருக்கிறான். பின்னர் அப்பெண்களை கழுத்தை திருகி கொலை செய்திருக்கிறான். ஈரான் நாட்டின் தலைநகரான டெஹ்ரானில் தான் இந்தப் பகிரங்கத் தூக்குத்தண்டனை விதிக்கப்பட்டது. இரத்தக் காட்டேரி என்று பட்டம் சூட்டி தூக்கில் போட்டனர். இவனுக்கு 28 வயது.

தூக்கில் போட முன்னர் பலியான பெண்களின் உறவினர்களால் மொத்தம் 214 கசையடிகள் கொடுக்கப்பட்டன. செம சாத்து! ஆயிரக்கணக்கான மக்கள் இக்காட்சியை நேரில் கண்டனர்.

யார் முகத்திலும் சோகத்தின் நிழல்கூட எட்டிப்பார்க்கவில்லை. சபாஷ் சரியான தண்டனை. ■

# வாழ்க வளமுடன்



யதுசன் - 06.08.97  விதுசன் - 07.09.97

சாவகச்சேரி மீசாலை தெற்கைப் பிறப்பிடமாகவும், கனடா டொரென்டோவில் வசிப்பவர்களுமான ஜெயகுமார்-துஷ்யந்தி தம்பதியினரின் செல்வப் புதல்வர்கள் **யதுசன்** தனது இரண்டாவது பிறந்த நாளை 06.08.97 இலும் **விதுசன்** தனது முதலாவது பிறந்த நாளை 07.09.97 இலும் டொரன்டோவில் உள்ள இல்லத்தில் கொண்டாடினார்கள்.

இவர்களை அன்பு அப்பா, அம்மா, மீசாலையில் இருக்கும் அப்பப்பா, அப்பம்மா, பூட்டிமார், மாமா, அத்தை, நிரோஜன் மச்சான்தர்சி மச்சாள், ஃபிரான்சில் இருக்கும் பெரியப்பா, பெரியம்மா, பிரஷா அக்கா, கஜன் அண்ணா, பிரிந்தன், இத்தாலி சித்தப்பா, சித்தி, கார்த்திகன் தம்பி, கனடாவில் இருக்கும் அம்மம்மா, சித்தப்பா, சித்திமார், மாமாமார், மாமிமார் அன்ரா அத்தைமார், தம்பிமார், தான்யா மச்சாள், மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் மாரியம்மன் அருளால் பல்கலையும் பெற்றுச் சீரும் சிறப்புடன் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றனர்.

தகவல்: எஸ்.கே. நடராசலிங்கம் (அப்பப்பா), மீசாலை தெற்கு.

# இனிமை



➡ மஞ்சள் மேனி. தலையில் மட்டும் தொப்பி போட்டது போல் கறுப்பு நிறம். இந்தப் பறவையின் பெயர்: 'காஞ்சனப் புள்'. இதன் குரல் படு அசத்தல். இசை போல குரல் ஒலிக்குமாம். இதன் குரல் இனிமை கேட்போரை மயக்கும் சக்தி கொண்டதாம். தென் ஆபிரிக்காவின் வடகிழக்கே உள்ள குருகர் தேசிய வனத்தில் இதேபோல வித்தியாச ரகப் பறவைகள் ஏராளமாக உள்ளன. ■